# அதற்கொரு நேரமுண்டு



ரமணிசந்திரன்

# அதற்கொரு நேரமுண்டு

ரமணிசந்திரன்

அருணோதயம்

3, கௌடியாமடம் சாலை

இராயப்பேட்டை :: சென்னை-600 014.

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : அதற்கொரு நேரமுண்டு |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : ஏப்ரல், 1998 |
| இரண்டாம் பதிப்பு | : செப்டம்பர், 1999 |
| மூன்றாம் பதிப்பு | : டிசம்பர், 2000 |
| நான்காம் பதிப்பு | : ஏப்ரல், 2002 |
| ஐந்தாம் பதிப்பு | : டிசம்பர், 2003 |
| ஆறாம் பதிப்பு | : மே, 2005 |
| ஏழாம் பதிப்பு | : ஜனவரி, 2007 |
| எட்டாம் பதிப்பு | : மே, 2009 |
| ஒன்பதாம் பதிபபு | : டிசம்பர், 2010 |
| பத்தாம் பதிப்பு | : ஏப்ரல், 2012 |
| பதினொன்றாம் பதிப்பு | : நவம்பர், 2013 |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 256 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை - 14.

# பதிப்புரை

திருமதி ரமணிசந்திரன் எழுத்துக்களை மிகுந்த ஈடுபாட்டோடு படிக்கும் வாசகர்கள், வாசகிகள் தமிழ் பேசும் உலகெல்லாம் பல்லாயிரக் கணக்கிலே பெருகி வருகிறார்கள்.

தினமும் ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன.

அதிலே மலேசியாவில் உள்ள மதிப்பிற்குரிய வாசகி ஒருவரின் கடிதத்தைக் கீழே தருகிறோம்.

என் கணவர் கேட்பார் ''அப்படி என்னதான் இந்தப் புத்தகத்தில் இருக்கு; இப்படி சிரிச்சுக்கிட்டே படிக்கிறியே'' என்று. பதில் கூறினால் அவருக்குப் புரியாது. திரும்பத் திரும்பப் படிக்க போர் அடிக்கலியானு கேட்பார். எனக்கு ஒரு தரம்கூட போர் அடித்தது இல்லை. இது நிஜம்.''

இவ்வளவு அருமையான புத்தகங்களைத் தரும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்; நன்றியும் கூட.

இப்படிப்பட்ட எண்ணற்ற வாசகிகள், வாசகர்களின் பாராட்டுகளுக்கு எங்கள் நன்றி.

நல்ல நூல்களை வெளியிடுவதிலே எங்களுக்கும் பெரும் மகிழ்ச்சி.

படித்து மகிழுங்கள்.

**அருணோதயம் அருணன்**

## ஒரு வாசகியின் கருத்துரை

அன்பு மனம் கொண்ட திருமதி ரமணிசந்திரன் அவர்களுக்கு என் கோடி வணக்கங்கள்.

உங்கள் பல ஆயிரத்திற்கும் மேலான ரசிகைகளில் நானும் ஒருத்தி. உங்கள் நாவல்கள் எல்லாவற்றையும் படித்துள்ளேன். எதை விடுவது? எல்லாமே அருமை அல்லவா. உங்கள் நாவல்களைப் படிப்பதென்றால் அறுசுவை உண்பது போல் இருக்கும்.

கடல் கடந்து இருந்தாலும், உங்கள் நாவல்களைப் படிக்கும் போது, நீங்கள் என் அருகில் இருக்கிற உணர்வு வருகிறது.

உங்கள் நாவல்களில் அவனும் அவளும், மாலை மயங்குகிற நேரம், ஒரு கல்யாணத்தின் கதை, என் கண்ணில் பாவையன்றோ எத்தனை முறை படித்திருக்கிறேன் தெரியுமா? எத்தனை முறை படித்தாலும் சலிக்கவில்லை.

உங்கள் எழுத்துப்பணி என்றும் தொடரட்டும்.

**திருமதி இன்பராஜ் சத்தியபாமா**
**Jalan Tengku Kelana, 41000 Klang**

# அதற்கொரு நேரமுண்டு

## 1

அவளுடைய அன்னை கற்றுக் கொடுத்திருந்த படி, அன்றையப் பொழுது எல்லோருக்கும் கூடவே தனக்கும் நலம் தரும் நாளாக அமையும்படி இறைவனை வேண்டிக் கொண்டு மனோகரி கண்களைத் திறந்து பார்த்தாள்.

வெளிச்சம் நன்றாகவே பரவத் தொடங்கி விட்ட போதும் அவளைத் தவிர, அந்த ரயில் பெட்டியில் யாரும் விழித்திருந்ததாகவே தெரியவில்லை. நல்லது தான், கூட்டம் சேருமுன் அமைதியாகப் பல் துலக்கி, முகம் கழுவிக் கொண்டு வந்துவிடலாம் என்று, பற்பசை, பிரஷ்சுடன் எழுந்து சென்றாள். அவள் திரும்பி வந்த போது அனேகமாக எல்லாருமே விழித்திருந்தனர்.

எதிர்ப்படுக்கைக்காரப் பெண் பல் துலக்கிவிட்டு வரும்வரை அவளுடைய தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைக் கவனித்துக் கொள்வதாக வாக்களித்து, அவ்வாறே கவனித்துக் கொண்டாள்.

செங்கல்பட்டில் இறங்கி, குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுத்துவிட்டு தனக்கும் அந்த குழந்தையுடைய தாய்க்கும் காபி, சிற்றுண்டி வாங்கிக் கொண்டு வந்தாள்.

திருநெல்வேலியிலிருந்து அவ்வளவு தூரம் வருமுன் இரு பெண்களுக்கும் இடையே ஒருவித நட்பு, ரயில் சிநேகம் உருவாகியிருந்தது.

''நீங்கள் மட்டும் இல்லையென்றால் சென்னை வரை பட்டினியாகவே தான் போய் சேர்ந்திருப்பேன் மனோகரி'' என்றாள் அந்தப் பெண் சுசிலா நன்றியுடன். ''நான் கூடப் பரவாயில்லை, இந்தக் குட்டிச் செல்லம் தான் துடித்துப் போயிருப்பாள், ரொம்ப நன்றி மனோகரி'' என்றாள் மீண்டும்.

''இதை நான் செய்திருக்காவிட்டால் வேறு யாராவது செய்திருப்பார்கள். அத்தோடு இது என்ன மகாப்

பெரிய உதவியா சுசிலா? வெறும் சாப்பாடு, அதுவும் எனக்கு வாங்கியபோதுதானே உங்களுக்கும் சேர்த்து வாங்கி வந்தேன், என்னவோ மலையைப் புரட்டிவிட்ட மாதிரிப் பேசுகிறீர்களே'' என்று தான் செய்ததை சாதாரணமாக்கி உரைத்தாள் மனோகரி.

''அதில்லை மனோகரி எனக்கு வேறு யாரிடமும் உதவி கேட்கப் பிடிக்காது. பெண்கள் அவரவர் வேலையைப் பார்க்கவே திணறுவார்கள். ஆண்களைக் கேட்டால் அதுதான் சாக்கு என்று பக்கத்தில் வந்து உட்காருவார்கள், குழந்தையைக் கொஞ்சுகிற சாக்கில் தொடுவார்கள். வேண்டுமென்றே இல்லாமல், தெரியாமல் கூட கை நம் மேலே பட்டிருக்கலாம். அத்தோடு சின்னக் குழந்தையை வைத்துக் கொண்டு சேலை அங்கே இங்கே ஒதுங்கும், ரொம்ப கஷ்டம் மனோகரி. இவரிடம் சொன்னால், அதிலென்ன இருக்கிறது என்கிறார். 'அடுத்தவர்களை உபயோகித்துக் கொள்ளத் தெரிய வேண்டுமடி, முட்டாள்!' என்பார். இப்படி அடுத்தவர்களைக் கொண்டு காரியம் சாதித்துக் கொள் என்கிறாரே நீங்கள் கூட வாருங்களேன் என்றால், 'ஏண்டி, உனக்கும் உன் மகளுக்கும் நான் என்ன வேலைக்காரனா? இறங்கி ஏறி, இறங்கி ஏறிப் பாலும், பலகாரமும் வாங்கித் தந்து கொண்டு இருப்பதற்கு?' என்பார். 'தான்' என்பது தவிர யோசிப்பதே இல்லை... மனோகரி, நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது, கட்டிக் கொள்ளப்போகிறவருக்கு மற்றவர்கள் முக்கியமாக உங்கள் மகிழ்ச்சி பற்றி அக்கறை இருக்கிறதா என்பதையெல்லாம் அறிந்து

கொண்டு செய்யுங்கள்'' என்றாள் சுசிலா, வெகுவாக சலித்த குரலில்.

என்ன சொல்வது என்று தெரியாமல், மனோகரி பேசாமல் இருந்தாள்.

''பேசாமலே இருந்து விடலாம் ஆனால், அங்கேயிருந்து அவ்வப்போது பீராய்ந்து கொண்டு காலில் கொட்ட வேண்டுமே'' என்றாள் சுசீலா கசப்புடன் ஒரு பெருமூச்சுடன். ''முன்னெல்லாம் நான் அம்மா வீட்டுக்குச் சென்றால் இரண்டு பேரும் அப்படிப் பூரித்துப் போவார்கள். இப்போது என்ன கேட்டு வந்திருக்கிறாளோ என்ற பயம் உள்ளே புகுந்து பேயாட்டம் ஆடும்போது வாய் மட்டும் எப்படிச் சிரித்து விடும்?''

பரிதாபமாக இருந்தது மனோகரிக்கு. தன் மனைவி மக்களைப் பராமரிக்கத் துப்பில்லாதவன் மணம் புரிவானேன்? பிள்ளை பெறுவானேன்?

ஏற்கனவே கொதித்துப் போயிருப்பவளிடம் இதைச் சொல்லி, இன்னும் வெறுப்பேற்றப் பிடிக்காமல், மனதை மறைத்து ஆறுதல் கூறவும் முடியாமல், மனோகரி பேச்சை மாற்றினாள். ''ராதுக் குட்டியுடைய அப்பா என்ன செய்கிறார்?'' என்று அவள் கேட்டதும் சுசீலாவின் ஆத்திரத்துக்குத் தூபம் போட்டது போலத் தான் ஆயிற்று.

''என்ன செய்வார்? எத்துவாளித்தனம்தான் அவரது தொழில். ஏமாந்தவன் எவன் கிடைத்தான் என்று அவன் தலையில் மிளகாய் அரைத்து ஐந்தோ, பத்தோ,

ஐநூறோ, ஆயிரமோ கொண்டு வருவார். அதில் அவரது அலங்காரத்துக்கும், ஓட்டல் செலவுக்கும் போக மீதியைத் தருவார். அடுத்த வரவு எப்போது வரும் என்று நிச்சயம் கிடையாது... எனக்கு ரொம்பவும் அலுத்துவிட்டது! மனோகரி. இந்த ராதுவுக்காகப் பார்க்கிறேன். இல்லையென்றால், என்றைக்கோ போய்ச் சேர்ந்திருப்பேன்!'' என்றாள் சுசீலா, கசப்புடன். உள்ளூரப் பதறி, ''சேச்சே, அப்படிப் பேசக் கூடாது, சுசீலா. கடவுள் கொடுத்த உயிர்,'' என்று தொடங்கியவளை இடைமறித்து, ''அவர்தான் என் கழுத்திலே கல்லாக இந்தக் கணவனையும் என் தலையில் கட்டினார்...'' என்றாள் சுசீலா வெறுப்புடன்.

''எல்லாம் சரியாகி விடும், சுசீலா, சீக்கிரமே உங்கள் கணவர் திருந்திவிடுவார், பாருங்கள்'' என்று தேற்றினாள் மனோகரி.

நம்பிக்கையற்று உதட்டைப் பிதுக்கினாள் சுசீலா. ''ஏமாற்று வேலை என்பது அவரது ரத்தத்தோடு கலந்துவிட்ட ஒன்று, மனோகரி. அதனால் மாறுவது என்பது நடக்கிற காரியமில்லை. ஆனால், இடம், காலம் அறிந்து கொஞ்சம் அடக்கியேனும் வைக்கலாம். அது கூட இல்லையே! அங்கே வந்து என்னை அழைத்துப் போகவில்லையே என்று வருத்தப்பட்டேனே, மனோகரி. போன தடவை அம்மா வீட்டுக்கு வந்து தங்கிய அந்த இரண்டு நாட்களில் அவர் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து விட்டு, நான்தான் அவரிடம் இனி இந்தப் பக்கமே வர வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன்.

என் அண்ணனுடைய நண்பரின் கடை முன்பு அசிங்க மாய் நடந்து, அதை அவன் அண்ணனிடம் சொல்லி, அண்ணன் வீட்டில் வந்து சொல்லி, அண்ணி ஒரு மாதிரிச் சிரித்து... என்னை விடுங்கள். அம்மா, அப்பா வுக்கே அண்ணி முன்னால் எவ்வளவு தலை குனிவு!... நான் யோசித்து முடிவெடுத்து விட்டேன், மனோகரி!''

''என்னவென்று?'' என்று மனோகரி கவலையுடன் கேட்டாள்.

லேசாக முறுவலித்து, ''அரைநாள் ரயில் சிநேகிதம். உங்களுக்கு இருக்கும் அன்பும் அக்கறையும் காலமெல் லாம் காப்பதாகச் சொல்லிக் கல்யாணம் செய்து கொண்ட கணவருக்கு இல்லையே!'' என்றாள் சுசிலா, ஒரு பெரு மூச்சுடன்.

''தப்பான முடிவு ஒன்றும் இல்லை, மனோகரி. இவளுக்கு ஒரு வயது ஆன பிறகு, இவளை ஒரு காப்பகத்தில் விட்டு விட்டு ஏதாவது வேலை பார்க்க வேண்டும் என்று தீர்மானித்து இருக்கிறேன். என் வருமா னம் என்று இருந்தால், இவரிடம் கொஞ்சம் தைரியமாகப் பேச முடியும் அல்லவா? தாங்க முடியாமல் போய் விட்டால், பிரிந்து கூடப் போய் விடலாமே!'' என்று முடித்தவளை வியப்புடன் நோக்கினாள் மனோகரி.

இப்படி ஒவ்வொரு பெண்ணும் துணிந்து விட்டால், பெரும்பான்மை ஆண்கள் பிழை புரியப் பயந்தே திருந்தி விடக்கூடும்! அத்தோடு, தற்கொலையை நாடிச்

செல்லும் பெண்களின் எண்ணிக்கையும் குறை ந்து விடக் கூடும்.

சென்னை, எழும்பூர் ரயில் நிலையத்தில் ரயில் நின்றது. கூட்டம் சற்றுக் குறைந்ததும், குழந்தை, சாமான் களோடு சுசீலா ரயிலை விட்டு இறங்க, மனோகரி உதவி விட்டுத் தயங்கி நின்றாள். ''வருகிறீர்களா, சுசீலா, உங்களை உங்கள் வீட்டில் விட்டு விட்டுப் போகிறேன். என்று மற்றவளை அழைத்தாள்.

''சென்னை உங்களுக்குப் புதிது. நியாயமாகப் பார்த்தால், நான் தான் உங்களைக் கொண்டு விட்டுவிட் டுப் போக வேண்டும்!''

''அப்படி ஒரேடியாகப் புதிது என்று சொல்வதற்கு இல்லை, சுசீலா. இதற்கு முன்பும் இரண்டு தரம் நான் இங்கே வந்திருக்கிறேன். அத்தோடு, எனக்கு சாமான் இந்தத் தோள்பை மட்டும் தான். உங்களுக்குச் சாமான்க ளும் நிறைய. குழந்தை வேறு பார்க்க வேண்டும். உங்கள் வீட்டுக்காரரும் வரக்காணோமே?...அதனால்தான் கேட் டேன்.''

''எல்லாம் வருவார்'' என்றாள் சுசீலா ஏளனமாக. ''அவர் கேட்டனுப்பிய பணமாவது அவரை இழுத்து வந்து விடுமே... அதோ, வருகிறாரே!'' என்று அவள் சுட்டிக் காட்டிய ஆளைப் பார்த்ததும் மனோகரி திகைத் தாள்.

இந்த மனிதனை மனோகரி சந்தித்திருக்கிறாள். இவனால் ஒரு நல்லவனோடு சச்சரவு செய்திருக்கிறாள்.

சச்சரவு செய்து, அவனிடம் பணம் பிடுங்கி இவனிடம் கொடுத்திருக்கிறாள். அந்த நல்லவனின் கோபத்தையும் இந்தக் கேவலமான மனிதனின் கூட்டாளி என்ற கெட்ட பெயரையும் சம்பாதித்து வைத்திருக்கிறாள். அதை நினைக்கும்போதே மனோகரிக்கு உடம்பு எல்லாம் கூசிப் போகும்.

இவனை நம்பிய பாவத்திற்கு, அந்த மனிதனை எங்கே சந்தித்தாலும் அவனிடம் மன்னிப்பு கேட்கிற கடமை வேறு இருக்கிறது. விஷயத்தை தெளிவுபடுத்தி மன்னிப்பும் கேட்டு விட்டால். அதன் பிறகேனும் அந்தக் கார்க்காரன் அவளைத் தவறாக எண்ணமாட்டானில்லையா? எல்லா தொல்லைக்கும் மூலகாரணம் வருகிற ஸ்டைலைப் பார்த்ததும் அவளுக்கு ஆத்திரம் வந்தது.

பாவம்! இருந்திருந்து இவனா இந்த நல்ல பெண்ணின் கணவனாக இருக்க வேண்டும்? கடவுளுக்குக் கண் இல்லை என்பது மெய்தான் போலும்.

அருகில் வரும் வரை, அவன் மனோகரியைக் கண்டு கொண்ட மாதிரியே தெரியவில்லை. அருகில் வந்த பிறகும் கூட, "என்ன, வாங்கி வந்தாயா?" என்று மனைவியிடம் கேட்டானே தவிர அருகில் நின்று கொண்டிருந்த அடுத்த பெண்ணை அவன் கவனிக்கவே இல்லை.

லேசாக வெளிவந்திருந்த இரு பற்களையும் காட்டிச் சிரித்தபடி குழந்தையிடம் ஆசையோ, மனைவி கஷ்ட

மின்றி வந்து சேர்ந்தாளா என்கிற அக்கறையோ இல்லா மல், வந்ததும் வராததுமாக மாமனார் வீட்டில் வாங்கி வரச் சொன்ன பணத்தைப் பற்றியே கணவன் கேட்கவும் சுசீலாவுக்கு முகம் சுருங்கியது.

''எல்லாம் இருக்கிறது. வாங்காமல் இங்கே திரும்பி வந்தால் வரவேற்பு எப்படி இருக்கும் என்பது எனக்குத் தான் நன்றாகத் தெரியுமே'' என்றவள், மனோகரியைக் காட்டி. ''இவர்கள் பெயர் மனோகரி. உங்கள் பெண் படுத்திய பாட்டுக்கு, ரயிலில் இவர்கள் மட்டும் இல்லை யென்றால்.. படாதபாடு பட்டிருப்பேன்!''என்றவள், மனோகரியிடம் திரும்பி,''இவர்தான் என் கணவர், மனோகரி. பெயர் மூர்த்தி.'' என்று இருவருக்கும் அறிமு கம் செய்து வைத்தாள்.

''வணக்கம், வணக்கம்'' என்று ஒப்புக்காக கை கூப்பியவனின் முகத்தில் சலனம் உண்டாயிற்று. ஆனால் என்ன என்று புரியாமல் மூர்த்தி விழிப்பதை உள்ளூரக் கொதிப்புடன் கவனித்து விட்டு, ''உலகம் ரொம்ப சின்ன துதான் இல்லையா மிஸ்டர் மூர்த்தி?''என்று கேட்டாள் மனோகரி.

இதுபோல அவன் எத்தனை எத்தனை முறை செய்திருந்தால் மனோகரியின் முகம் கூட மறந்திருக்கும்!

''வ..வணக்கம்!'' என்றவன். அப்போது தடுமாற வும், ''சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு திருநெல்வேலி யில்.. என்று தொடங்கியவள், சுசீலாவை மனதில்

கொண்டு, வெறுமனே, ''சென்ரல் கபே எதிரே சந்தித்தோமே'' என்று கூறினாள்.

சட்டென அகன்ற மூர்த்தியின் விழிகள் மனோகரியை அவன் அடையாளம் கண்டு கொண்டதை அவளுக்கு அறிவித்தன. முகம்கன்ற, ''ஆ...ங்.. நினைவு இருக்கிறதே, ஆனால் மேடம்; இப்போது நின்று பேச நேரம் இல்லை. நாங்கள் சீக்கிரமாகப் போனால்தான் பணம் கட்டிய ஆட்டோ பிடிக்க முடியும். இவள் கொண்டு வந்திருக்கும் சாமானுக்குப் பஸ்சில் ஏற்றமாட்டான்'' என்று கிளம்ப முயன்றான் மூர்த்தி.

''பொறுங்கள், உங்கள் விசிட்டிங் கார்டு ஒன்று மனோகரிக்குக் கொடுங்கள். முடிந்தால் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்'' என்று சுசீலா கூற, அவசரமாகச் சட்டைப் பையைத் தடவி விட்டு, ''அடடா! கொண்டு வர மறந்து விட்டேனே! நீங்கள் இருக்கும் இடம் சொல்லுங்கள் மேடம், நான் இன்று மாலையே வந்து என் கார்டு தருகிறேன். நீ வா சுசி நேரமாகிறது, சீக்கிரம், சீக்கிரம்!''என்று மனைவியை விரட்டி இழுத்துக் கொண்டு ஓடியவனைப் பார்க்கையில் மனோகரிக்கு ஏளனமாகவும் கூடவே கொஞ்சம் பரிதாபமாகவும் கூட இருந்தது.

தெரிந்தே தப்பு செய்வானேன்? முகம் பார்த்து நின்று பேச முடியாமல் இப்படி ஓடுவானேன்?

ஆனால், ஐந்தே நிமிடங்களில் இவன் இந்த அவமான உணர்வைத் துடைத்துப் போட்டு விட்டு அன்றாட

வாழ்வில் ஈடுபடத் தொடங்கி விடுவான். ஏமாற்றம் திருட்டு எல்லாவற்றிலும். அவளாலும் இப்படி இருக்க முடிந்தால், ஒருவேளை அந்தத் தினகரிடம் விஷயத்தை விளக்கிக் கூறிவிட்டு அவளால் அவன் அநியாயமாய்ப் பறி கொடுத்த ஆயிரம் ரூபாயையும் திருப்பிக் கொடுக்க முடிந்து விட்டால் ஒரு வேளை பழைய நிம்மதி கிட்டுமா என்னவோ?

ஆயிரம் ரூபாய் என்பது மனோகரியின் நிலைமைக்கு ஓரளவு பெரிய தொகைதான்! ஆனால், புத்தி கொள்முதலுக்கு விலை மதிப்பு ஏது?

ஆனால், இதெல்லாம் அந்தத் தினகரனை அவள் மீண்டும் பார்க்க முடிந்தால் அல்லவோ நடக்கக் கூடும்! முதலில் அவனைப்பார்க்கவேண்டும். அதன் பின் அவனோடு தனியே பேசும் ஒரு வாய்ப்பும் கிடைக்கவேண்டும்! நடக்கிற காரியமா?

நம்பிக்கையற்றுத் தோளைக் குலுக்கினாள் மனோகரி.

ஆனால், அவள் விரும்பிய வண்ணமே, அந்தத் தினகரனைத் தனியே சந்தித்ததோடு, எந்த வித இடையூறும் இன்றி உரையாடவும் வாய்ப்புக் கிடைத்த போதும், இது பற்றி அவளால் ஒரு வார்த்தை கூட அவனிடம் சொல்ல முடியாது போகும் என்று அப்போது அவள் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை.

## 2

பாளையம்கோட்டை ரயில் நிலையத்தை அடுத்த பெருமாள்புரத்தில் மனோகரியின் வீடு. நல்ல பெரிய வீடுதான். மாடியையும், கீழ்த்தளத்து வீட்டின் ஒரு பகுதியையும் வாடகைக்கு விட்டிருந்தனர். கம்பெனி லீஸ். எனவே வாடகை 'செக்'காகத்தான் வரும். செக்கை பாங்கியில் கட்டிவிட்டு அங்கேயே மாதச் செலவுக்குப் பணம் எடுத்து வருவது மனோகரியின் வேலை. வரும் போது தனக்கு வேண்டிய ஹேர் பான்ட், பின், பவுடர் போல் ஏதாவது தேவைப்பட்டிருந்தால் அவைகளையும் வாங்கிக் கொண்டு வருவாள்.

அன்றும் அப்படித்தான் சென்ட்ரல் கஃபேயை அடுத்திருந்த கடை ஒன்றில் சிலது வாங்கிக் கொண்டு வெளியே வந்தபோது அவள் கண்ணில்பட்ட காட்சி அவளை அதிர்ச்சியும் ஆத்திரமும் அடையச் செய்தது.

ஒரு பெரிய கார், அதன் முன் ஒருவன் விழுந்து கிடக்கிறான், அந்தக் கார்தான் அவனை இடித்து தள்ளியி ருக்க வேண்டும் என்பது தெளிவு. காரை ஓட்டியவன் அப்போது என்ன செய்ய வேண்டும்? காரை விட்டு இறங்கி, தன்னால் இடித்துத் தள்ளப்பட்டவன் என்ன நிலையில் இருக்கிறான், பிழைப்பானா, மாட்டானா என்று பார்த்து, அடிபட்டவனுக்குத் தேவையானதைச் செய்வதுதானே அவனது கடமை?

மாறாக, மனசாட்சியோ மனிதப் பண்போ இல்லாமல் காரை 'ரிவர்ஸ்' எடுத்துக் கொண்டு இருந்தான்.

அடிபட்டிருந்தவனை அப்படியே விட்டுவிட்டு அவனைச் சுற்றிக் காரை ஓட்டிக் கொண்டு ஓடி விடப் போகிறான்.

காரோட்டியின் நோக்கம் புரிந்ததும், வினாடிகூடத் தாமதிக்காமல் மனோகரி குறுக்கே பாய்ந்து சென்றாள். 'ரிவர்ஸ்' எடுத்துச் சென்ற கார் மீண்டும் வேகம் எடுக்குமுன் அதன் முன்னே சென்று காரை ஓட்டவிடாமல் வழிமறித்து நின்றாள்.

ஒலியெழுப்பிப் பார்த்து விட்டு, ஆத்திரத்துடன் காரை விட்டு இறங்கி வந்து, ''பைத்தியமா, உனக்கு? வழியை விடு'' என்று அதட்டினான் காரை ஓட்டி வந்த கொடியவன்.

''வழி விடுவதா? முதலில், நீங்கள் இதோ அடித்துப் போட்டிருக்கிறீர்களே, அவருக்கு வேண்டியதைச் செய்து விட்டு அப்புறம் போங்கள். நான் வழி விடுகிறேன்'' என்றாள் அவள் மிடுக்காக.

''என்னது? அடித்துப் போட்டேனா? என் கார் அவன்மேல் படவில்லை...'' ''பின்னே அவர் எப்படி உங்கள் கார் முன் விழுந்தாராம்?'' ''என்னைக் கேட்டால்? மூக்கு முட்டக் குடித்திருப்பான்!'' என்றான் அவன் அலட்சியமாக. ''என்ன ராட்சஷத்தனம்!'' என்று வெடித்தாள் மனோகரி. கூடவே, கீழே விழுந்து கிடந்தவ

னிடமிருந்து வலி தாளாத முனகல் வேறு கேட்கவும், ''மிஸ்டர்,நீங்கள் மனிதர்தானா? காரை வேகமாக ஓட்டி, மோதி ஒருவரைக் காயப்படுத்தவும் செய்து விட்டு, குடித்திருப்பார் என்று கூசாமல் சொல்கிறீர்களே! நீங்க ளெல்லாம் சந்திரகுப்த மௌரியர் காலத்தில் பிறந்திருந் தால் மாறுகால் மாறுகை வாங்கியிருப்பார்கள் தெரி யுமா? இருக்கட்டும். நான் உங்களைச் சும்மாவிடப் போவது இல்லை. இவருக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யாமல் இந்த இடத்தைவிட்டு உங்களை நகர விட மாட்டேன்!'' என்று அறிவித்தாள்.

பெரிதாக சொல்லிவிட்டாளே தவிர, அவளுக்கு உள்ளூர உதைப்புதான். அங்கங்கே ஓரொருவர் திரும் பிப் பார்த்தபடி சென்றார்களே தவிர, யாரும் நின்று உதவுவதாகத் தெரியவில்லை. இவன் ஓங்கி ஓர் அறை அறைந்து அவளையும் பிடித்துத் தள்ளிவிட்டுக் கூடப் போனாலும் போய் விடலாம்.

''நகர விடமாட்டாயா? அதையும் பார்க்கிறேன்! எவ்வளவு நேரம் இப்படி நிற்பாய் என்று பார்க்கலாம். மாறுகால் மாறுகையாமே!'' என்று அந்தக் கார்க்காரனும் சவால் விடவும், மனோகரி திகைத்தாள். மெய்யாகவே, அவளும்தான் எவ்வளவு நேரம் இப்படி நடுத்தெருவில் நிற்க முடியும்? அதைவிட, விழுந்து கிடப்பவனுக்கு அவள் தன் செலவிலேயே ஏதாவது வைத்தியம் பார்க்க லாம். பாவம்! அவன் வேறு முனகிக் கொண்டே கிடக்கி றான்! எங்கே அடிபட்டதோ என்னவோ?

ஆனால் இப்போது வழிவிட்டால் இவனுக்குத் தோற்று ஒதுங்குவது போல இருக்குமே என்று அவள் தயங்கியபோது, அவளுக்கு உதவிபுரிவதைபோலக் காரினுள் இருந்து ஒரு குரல் கேட்டது. ''தினகர், நேரமாகிறதே இன்னமும் கால் மணிநேரத்தில் நாம் அங்கே போய்ச் சேர வேண்டும்!'' என்று அங்கலாய்த்தது அந்த ஆண்குரல்.

''ஆ...மாம் எல்லாம் உன்னால் வந்தது. என்னதான் மணமகன் என்றாலும் அலங்காரத்துக்கு இவ்வளவு நேரமா எடுத்துக் கொள்வது? இப்போது...''என்று எரிச்சலுடன் மனோகரியை நோக்கினான் முதல்வன். ஒரு வினாடி யோசித்துவிட்டு, முகம் இறுக, ''ஓகே! இன்று உனக்கு ரொம்பவும் லக்கி நாள் என்று நினைக்கிறேன்'' என்றவன், பாண்ட் பாக்கெட்டிலிருந்து பர்சை எடுத்து இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து அவளிடம் நீட்டினான். ''இதை வைத்து...''

பணத்தை வாங்காமல், அவன் பேச்சை இடைமறித்து, ''பணத்தை கொடுத்துவிட்டு ஓடப் பார்க்கிறீர்களே! உங்களுக்கு வெட்கமாக இல்லை?'' என்றாள் அவள் ஏளனமாக.

''இருக்கிறது. ஆனால் அதுபற்றித் தெரிய உனக்கும் அது இருக்க வேண்டும்'' என்றான் அவன் அடக்கிய சினத்துடன்.

''இங்கேயே நின்று, நீங்கள் இருவருமாய் என்ன செய்து விடுவீர்கள் என்று கடைசிவரை பார்க்கத்தான்

எனக்கும் ஆசை. ஆனால் என்ன செய்வது? ஒருவர் எதற்காக என்ன செய்கிறார் என்பதை அவர் நிலையில் இருந்து பார்த்தால்தான் புரிகிறது. எவ்வளவோ கொள்கை கோட்பாடு என்று பிடிவாதமாக இருப்பவர் கள் கூட, கொள்கைக்கு விரோதமாக ஏதேதோ செய்யத் தான் வேண்டியதாகி விடுகிறது. இதை வைத்துக் கொள்'' என்று பணத்தை அவள் கையில் திணித்தான். ''இதை வாங்கிப் போய், அவனோடு பங்கு போட்டுக் கொள்'' என்று கூறியபடி அவளை நகர்த்தி நிறுத்த முனைந்தான்.

அவன் கைபடாமல் அனிச்சையாய் உடல் விலக, ''பங்கு? என்ன பங்கு?'' என்று அவள் திகைப்புற்றுக் கேட்கும் போதே, காரில் ஏறி காரைக் கிளப்பினான் அவன். ''ஆமாம் பங்குதான் அவனுடைய கூட்டாளி தானே நீ? எத்தனை முறை இப்படிப் பணம் பறித்திருப் பீர்கள்? ஆனால் ஜாக்கிரதை! பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பது நினைவிருக்கட்டும்!'' என்றவன் அதற்கு மேல் நில்லாமல் காரை விரைந்து ஓட்டியபடி சென்றுவிட்டான்.

சே! எவ்வளவு கேவலமாக அவளை எடை போட்டு விட்டான் என்று முகம் குன்றியவளுக்கு இன் னும் ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

கீழே விழுந்து கிடந்தவன் அவசரமாக எழுந்து வந்து 'ரொம்ப தாங்ஸ் பொண்ணு' என்றபடி அவளது கையில் இருந்த இரு நோட்டுகளையும் லாவகமாகப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான்!

கடைசியில் அந்தக் கார்க் காரன் தினகரனா அவன் பெயர், அவன் சொன்னதுதான் உண்மை! என்ன மடத்தனம்! எவ்வளவு அவமானம்!

அன்றையச் சம்பவத்தை எண்ணி எண்ணி எத்தனையோ முறை மனோகரி மனம் கூசியிருக்கிறாள். அப்படி அவளைக் கூசவைத்த மூர்த்தி, அவளிடமிருந்து நின்று பேச மனமின்றி ஓடுவதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை! சொறிநாய் போல அவனிடம் பேச அவளுக்கு விருப்பமில்லைதான்.

திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சுசீலா செல்வதைப் பார்த்தபடி நிற்கையில் மனோகரியின் மனதில் பழைய சம்பவம் படம் போல ஓடியது. அவளை ஒருவன் எவ்வளவு கேவலமாக நினைத்தான் என்ற நினைவு அப்போதும் அவள் முகத்தைக் கன்றிவைத்தது.

அவளும் ரயில் நிலையத்தை விட்டுச் செல்ல வேண்டியவள்தான். ஆனால் கூடவே சென்று சுசீலாவின் சங்கடத்தை அதிகப்படுத்த அவளுக்கு விருப்பமில்லை. எப்படியும் அவள் பிழைத்துக் கொள்வாள் என்ற நம்பிக்கையும் இருக்கவே, அவளைப் பற்றிய கவலையை விடுத்துத் தன்னில் மனதைச் செலுத்தலானாள்.

சுசீலா குடும்பம் கண்ணுக்கு மறைந்ததும் கிளம்பிய மனோகரிக்கு, அப்போதும் வேகமாக நடக்கத் தோன்றவில்லை. மனதில் ஆர்வம் இருந்தால் அல்லவோ நடையில் வேகம் பிறக்கும்? இத்தனைக்கும் செல்வது என்னவோ, சொந்தத் தாய்மாமா வீட்டுக்குத்தான்.

இன்று வருவதாக தன் மாமாவுக்கும், அத்தைக்கும் ஒரு வாரம் முன்பாகவே மனோகரி எழுதியிருந்தாள். எனவே, வருவது தெரியாது என்று சொல்ல முடியாது.

கடிதத்தை படித்துவிட்டு, வினாயகமே விழுந்தடித் துக் கொண்டு ரயில் நிலையத்துக்கு வருவார் என்று மனோகரி எதிர்பார்க்கவில்லைதான். ஆனாலும் உள்ளே ஒரு மூலையில் ஏதோ உறுத்தியது.

''முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம் இன்சொலினதே அறம்'' என்று வள்ளுவர் எழுதியிருப் பது போலெல்லாம் மாமன் வீட்டார் தன்னிடம் நடந்து கொள்ளவேண்டும் என்று மனோகரி எதிர்பார்க்க வில்லை. இந்த இயந்திர யுகத்தில் யார் வீட்டிலும் அது நடக்கக் கூடியதும் அல்ல.

மாமாவின் வீட்டுக்குப் போனால், உள்ளே வராதே என்று மனோகரியை அங்கே யாரும் சொல்லமாட்டார் கள்தான்.

ஆனாலும், அவருடன் கூடப் பிறந்த ஒரே தங்கையு டைய ஒரே மகளை வரவேற்பதில் மாமா வினாயகம் இன்னும் கொஞ்சம் அக்கறை காட்டியிருக்க வேண்டும் என்று தான் மனோகரிக்குத் தோன்றியது.

பாதி தூரம் பஸ்சில் பயணம் செய்து, மீதி தூரத்தை ஆட்டோவில் கடந்து (ஆட்டோ கூட இல்லை என்றால் அத்தையிடம் சற்றும் மரியாதை இராது என்று, பயணத் தின் கடைசிப் பகுதிக்கு மனோகரி ஆட்டோ பிடித்திருந்

தாள்) வினாயகத்தின் வீட்டை மனோகரி அடைந்த போது, அவர் வெளியே செல்லத் தயாராகி விட்டிருந்தார்.

''மனோகரியா? வாம்மா. நேர்முகப் பேட்டியா? என்ன கம்பெனி. அம்மா சவுக்கியமா?'' என்றதோடு தன் குசல விசாரிப்புகளை முடித்துக் கொண்டு ''எனக்கு நேரமாகிறது. வரட்டுமா?'' என்று அவர் தன் அலுவலைப் பார்க்கக் கிளம்பிவிட்டார்.

உள்ளே சென்றால் தில்லை நாயகி அத்தை எதிர்ப் பட்டாள். ''இன்றைக்கு மதியமா பேட்டி? என்னது? மூன்று மணிக்கு மேலா? அப்படியானால் நாளைதான் கிளம்ப முடியும் இல்லையா? உள்ளே போய் பார். மோனிகா அவள் அறையில் கிடப்பாள். போய்ப் பேசிக் கொண்டு இரு. எனக்கு மோனி திருமண விஷயமாக நிறைய 'ஷாப்பிங்' வேலை இருக்கிறது'' என்று சொல்லி விட்டுப் போய்க் கொண்டே இருந்தார். வெளியூரில் இருந்து, ஏறத்தாழ பதினோரு மணி நேரம் பயணம் செய்து வந்திருப்பாள். குளி, சாப்பிடு என்று ஒரு வார்த்தை வாய் உபசாரமாகச் சொல்லத் தோன்றவில்லையே!

ஓரளவு இதை எதிர்பார்த்து காலை உணவை முடித்துக் கொண்டே மனோகரி வந்திருந்த போதும் உள்ளூர ஏன் வந்தோம் என்ற வருத்தம் தோன்றி வளரலாயிற்று.

எப்போதுமே தில்லை நாயகி உருகுகிற ரகம் இல்லை என்றாலும், ஏழெட்டு ஆண்டுகள் முன்பு வரை இவள் இப்படி இல்லை. ஓரளவு உரிய மரியாதையும் உபசாரமும் கிடைக்கும். ஆனால் அப்போது, மனோகரி யுடைய தந்தை லிங்கம் உயிருடன் இருந்தார். நிறைய சம்பாதித்துக் கொண்டும் இருந்தார். இரு குடும்பங்க ளுமே ஓரளவு சமநிலையிலும் இருந்தன. லிங்கம் இறந்த போது, மனைவிக்கும், மகளுக்கும் சோறு துணிக்குப் பஞ்சம் வைக்கவில்லை என்றாலும் சொத்து, பத்து என்று அவர் பெரியதாக வைத்து விட்டுப் போகவில்லை. ஒட்டிக் கொள்வார்களோ என்று பயந்தோ என்னவோ இப்படிப் பட்டும் படாமலுமான பேச்சு நாயகியிடமி ருந்து வரத் தொடங்கியது அப்போதுதான். பிறகு மாமா தொழிலில் உயர உயர அதுவே நிலைத்துப் போயிற்று.

குற்றம்பார்க்கில் சுற்றம் இல்லை என்று கற்பகம் இதைப் பெரிதாக எடுத்துப் பேசி விரோதித்துக் கொள் ளாததால் தாமரை இலைத் தண்ணீர் போல இந்த உறவு பட்டும் படாமல் ஆனால் விட்டுப் பிரியாமல் இருந்தது.

இப்போதுகூட இந்த இரண்டு பகல், ஓர் இரவு மாமா வீட்டில் தங்க மனோகரிக்கு அவ்வளவாக விருப் பம் யில்லைதான். ஆனால், சரியாகத் தெரியாத ஊரில் மகள் தனியே ஓட்டலில் தங்குவது கற்பகத்துக்குப் பிடிக்கவில்லை. ''ஓட்டலில் தங்குவது போலவே நினைத் துக் கொள். அவ்வளவுதானே? மாமா வீடு அங்கே

இருக்கும்போது வெளியே தங்குவது மாமாவை அவமா ரியாதை செய்வது போல ஆகும்'' என்று தாயார் முடிவாகச் சொல்லிவிட்டபின் மனோகரியாலும் அதை மீற முடியவில்லை. அன்றுவரை அன்னை சொல் மீறி அவளுக்குப் பழக்கமும் இல்லை. அர்த்தமற்ற உத்தரவு கள் இடுவது அவளுடைய அன்னையின் வழக்கமும் இல்லை!

மோனியின் திருமணமா? யார் அந்த மோனி என்று யோசித்தபடியே, மனோகரி தன் மாமன் மகளை நாடி மாடிப்படி ஏறலானாள்.

தடதடவென்ற ஓசையுடன் இரண்டிரண்டு படியாக ஏறிவந்த அழுக்கான ஜீன்ஸ் அணிந்த கால்கள் இரண்டு, அவளைத் தாண்டியதும் நின்று திரும்பின.

''ஐ! மனோகரியா? பயங்கரமாய் வளர்ந்துவிட் டாயே!'' என்றான் மாமன் மகன், அழகேசன் கணகளை அகலவிரித்து.

''நீ கூடத்தான்! நீ என்னைவிட உயர்ந்து விட்டாயே அழகேசா!'' என்றாள் மனோகரி முறுவலித்து.

''பிரமாதம்!'' என்றான் அழகேசன். ''இப்படிச் சிரிக்க என் அருமைத் தங்கைக்குக் கொஞ்சம் கற்றுக் கொடு. அவள் சிரிப்பு கேட்கவும் சகிக்கவில்லை, பார்க்க வும் நன்றாயில்லை. அத்தோடு இப்போது என் பெயர், அழகேசன் இல்லை. மாற்றியாயிற்று. வெறும் 'கேஷ்' என்றான் பெருமையாக.

''கேஷ்?'' லேசாகப் புருவம் நெளித்து, மூக்கைச் சுருக்கினாள் மனோகரி. ''பணமா? பெயரிலேயே பணத்தைக் கொண்டு வந்துவிட்டாயா?'' என்றாள் கிண்டலாக.

''என்ன செய்வது பெயரின் முன்பாதியைச் சுருக்கி 'அழகு' என்றால் 'அழுக்கு' என்று கூப்பிடுகிற மாதிரி இருக்கிறதே! ஒரு நல்ல பெயர் வைக்கத் தெரியவில்லை இந்த அம்மா அப்பாவுக்கு. என்னமோ, தாத்தா வைத்தார்கள், பாட்டி வைத்தார்கள் என்று இல்லாதவர்களைத் திட்டிக் கொண்டு...ம்ம்...நீ என்ன மீனாட்சி... சாரி, மோனியை வாழ்த்த வந்தாயா?''

''எதற்...ஓ, ஏதோ மோனி திருமண விஷயமாக என்று அத்தை சொல்லிக் கொண்டு இருந்தார்கள். மீனாட்சிக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறதா?''

''ஆமாம் ஆமாம்! அன்றிலிருந்து அம்மையாருக்குத் தலையில் கொம்பு முளைக்காத குறைதான். தரையில் கால் பரவவில்லை! இன்னும் ஓர் எச்சரிக்கை அவள் மோனி.''

''ம்கூம்? அதென்ன திடீர் மாற்றங்கள், மோனி, கேஷ் என்று? மீனாட்சி, அழகேசனும் நல்ல பெயர்கள் தானே? நம் தாத்தா பாட்டி பெயர்கள்!'' என்று சிரித்தமுகமாய் வினவினாள் மனோகரி.

பெரிதாகத் தலையில் அடித்துக் கொண்டான் அழகேசன். ''மனோகரி, நீ இப்போது எந்தயுகத்தில் இருக்கிறாய்? திரேதாயுகம்? அம்மா, இன்றைக்கு எத்தனை

கமிட்டிகளில் மெம்பர் தெரியுமா? ஏதோ ஒன்றிரண்டில் தலைவி, உபதலைவிகூட. சக அங்கத்தினர்கள் 'ரவிக்' கும், ஃப்ராக்'குமாக வந்து 'கிச்பூச்' என்ற பேசும்போது, மீனாட்சி அழகேசூ...என்று பட்டிக்காட்டுத்தனமாகவா பிள்ளைகளைக் கூப்பிடுவார்கள்? மோனி, கேஷ் என் றால் எவ்வளவு நாகரீகமாக இருக்கும், சொல்லு? அப்பா கூட் இப்போது அம்மாவுக்கு 'வின்'தான். அம்மாவுக்கு மட்டும்தான் முழுப் பெயர். ஏன் தெரியுமா? நாயகியை சுருக்கினால் என்னவரும்?...நாய்!...'' சொல்லிக் கொண்டே வந்த அழகேசன் சட்டெனச் சிரிக்க, மனோக ரியும் சேர்ந்து சிரித்தாள்.

எப்போதுமே நல்ல நண்பர்களான, அத்தை மக னும், மாமன் மகளுமாகச் சிரித்து ஓய்ந்ததும், வேலை இருப்பதாகச் சொல்லிக் கிளம்பினான் அழகேசன். கிளம் பிய அவசரத்தில் எடுத்துப் போக மறந்துவிட்ட பர்சுக்கா கவே திரும்பி வந்ததாகச் சொன்னவன், மாலை சந்திக்க லாம் என்று கூறி விடை பெற்றுச் சென்றான்.

அழகேசன் அளவுக்கு இல்லை என்றாலும், மீனாட் சிக்கும் தன் அத்தை மகளைக் காண மகிழ்ச்சிதான் என்பது அவளது பேச்சில் தெரிந்தது. பழச்சாறு கூட கொண்டு வரப்பட்டது.

திருமணம் பற்றி மனோகரி, தன் மாமா மகளை வாழ்த்தினாள்.

ஆனால், பெருமையோடு சிரித்தபடி, மீனாட்சி அவளுடைய வருங்காலக் கணவரின் புகைப் படத்தை எடுத்துக் காட்டியபோது மனோகரிக்கு மயக்கம் போடாத குறைதான்.

ஏனெனில் அந்த வண்ணப் படத்தில், வசீகரமாக முறுவலித்துக் கொண்டிருந்தவன் தினகரன்! உலகம் மிக வும் சின்னதுதான் போலும்!

ஆனால் ஒன்று, இனி இவனிடம் உண்மையை விளக்கிவிட்டு, அவனது பணத்தையும் திருப்பிக் கொடுத் துவிட்டு நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணமிடும் போதே, எதையோ பெரிதாக இழந்துவிட்டது போன்ற ஒரு வேதனையை மனோகரி உள்ளூர உணர்ந்தாள்.

## 3

அவளுடைய வருங்காலக் கணவன் பற்றிப் பெருமை பேச ஆள் கிடைக்காமல் மீனாட்சி தவித்துக் கொண்டிருந்தது போல் மனோகரிக்குத் தோன்றியது.

பொதுவாக அந்த வீட்டில் அத்தை நாயகியின் பேச்சு தவிர வேறு யார் எது சொன்னாலும் யாரும் காது கொடுத்துக் கேட்பது கிடையாது என்பது மனோகரி அறிந்த உண்மை. மற்றபடி யார் என்ன சொன்னாலும் அவரவர் காரியத்தை மட்டும் பார்த்துக் கொண்டு போய்க் கொண்டே இருப்பார்கள்.

எனவே, இப்போது கிடைத்தது ஒரு காது என்று தினகரனைப் பற்றிப் பின்னிப் பின்னிப் பேசிப் பேசி, மனோகரிக்குக் காது புளிக்கச் செய்து விட்டாள் மீனாட்சி... தினகரனைப் பற்றிய பேச்சு மனோகரிக்குப் புளித்துப் போனது என்று ஒரேயடியாகக் கூறவும் முடியாது. அவனைப் பற்றி அறிய அவளுக்கு ஆவல்தான். ஆனால் அவனோடான தன் எதிர் காலம் பற்றிய மீனாட்சியின் பேச்சுதான், இவள் சற்று வாயை மூட மாட்டாளா என்று மனோகரி எண்ணும்படி செய்தது.

தினகரன் தொழிலில் மகா மகா கெட்டிக்காரனாம். விரைவிலேயே தமிழ் நாட்டின் ஏன் இந்தியாவின் ''டாப் டென்'' எனக் கூடிய முக்கியமான பத்து பணக்காரர்களில் அவன் ஒருவன் ஆகிவிடப் போகிறானாம். இப்போதே, கீழை நாடுகளில் பினாங்கு, சிங்கப்பூர், பாங்காக், ஹாங் காங் எல்லா இடத்திலும் கிளைகள் திறந்தாயிற்றாம். அவனது திறமைக்கு விரைவிலேயே உலக முழுவதும் அவனது நிறுவனத்தின் கீழ் வந்துவிடுமாம், எல்லா நேரடி நிர்வாகமும். பில் கேட்ஸ் மாதிரி உலகப் பெரும் பணக்காரனாகி விடுவானாம். அப்புறம் வாழ்நாளில் பாதி விமானப் பயணத்தில் தான் கழியப் போகிறதாம்.

''அப்புறம் உன்னோடு எப்போது... உனக்கு எப்படிப் பொழுது போகும்!'' என்று வினவிய மனோகரியை, 'முட்டாளே' என்பது போல நோக்கினாள் அவளுடைய மாமா மகள்.

''அவரோடு நானும்தான் கூடப் போய் விடு வேனே? அப்புறமெல்லாம் முன் கூட்டியே ஏற்பாடு செய்து கொள்ளாமல், என் பெற்றோர் கூட என்னைச் சந்திக்க முடியாது, தெரியுமா? மாதத்திற்கு இரண்டு நாட்கள், நாங்கள் இந்தியாவில் இருந்தால் அதிசயம்!'' என்று பெருமையடித்தாள் அவள்.

ரசிக்காதது போலத் தோளைக் குலுக்கினாள் மனோ கரி. 'ஆசைப்பட்ட நேரம் மகளைப் பார்க்க முடியாமல் பெற்றோர் தவிக்க நேர்வது... அது எனக்குச் சரியாகத் தெரியவில்லை, மோனி. ஆனால் இன்னொன்று யோசித் தாயா? அவர் வெளிநாடு செல்லப் போவது தொழில் நிமித்தமாக. உன்னைக் கூடவே கூட்டிப் போய் என்ன பயன், சொல்லு? அவர் உன்னைப் பார்ப்பாரா, தொழி லைப் பார்ப்பாரா? தொழிலுக்காகவே போய் விட்டு அதைப் பாராமல் இருக்க முடியாது. நீ ரொம்பவும் போரடித்து போவாயோ என்று எனக்குத் தோன்றுகிறது!''

''நீ இன்னமும் பெருமாள்புரம் என்.ஜி.ஓ காலனிக் குள்ளேயே இருக்கிறாய், மனோ. தினா தொழிலைப் பார்க்கும் போது, நான் அங்கங்கே உள்ள பெரிய பெரிய 'ஷாப்பிங் சென்டர்களைச் சுற்றி ஆசைப்பட்டதெல்லாம் வாங்குவேன். லண்டனில் ஆட்டோபர்லிங்டன், பாரீசில், டிசைனர் உடைகள்...'' என்று மீனாட்சி கண்களில் கனவு மிதக்க, இருக்கிறாள்.

என்னவோ, இன்னமும் மனோகரிக்கு இந்த வாழ்வு சொர்க்கமாகத் தோன்ற மறுத்தது. ''நினைத்ததை எல்லாம் வாங்குவது நன்றாய்த்தான் இருக்கும்... ஆனால் அப்படி எவ்வளவு வாங்க முடியும்? எத்தனை நாள் வாங்குவாய்? வாங்கியதை என்ன செய்வாய்? அத்தோடு அங்கெல்லாம் தொழில் பேச்சுக்களை, மதிய இரவு உணவின் போது பேசுவதாகப் படங்களில் பார்த்திருக்கிறேன். சித்திரம் சித்திரம் என்று சுவரை விட்டு விடாதே பணம், பகட்டை விட குடும்ப வாழ்வு முக்கியம்'' என்று மாமாமகளுக்கு எடுத்துச் சொன்னாள்.

''உனக்கு இதெல்லாம் புரியாது மனோ. ஜாக்குலின் கென்னடியிடம் ஷூ இரண்டாயிரம் ஜோடி இருந்ததாம். அப்படி நானும் சேர்ப்பேன். ஷாப்பிங் போகாத நேரத்தில் அங்கங்கே ஊர் சுற்றிப் பார்ப்பேன். அழகழகாய் ஆடைகள்! நகைகள்! அங்கங்கே சுற்றுலா மையங்கள் எத்தனை இருக்கும்! என்னென்ன அழகிய காட்சிகள்! அவர் சம்பாதிக்கிற வேலையைப் பார்த்தால், நான் செலவழிக்கிற வேலையையும் சந்தோஷமாயிருக்கிற வழியையும் பார்த்து விட்டுப் போகிறேன்!''

இரண்டாயிரம் ஜோடிச் செருப்புகள் சேர்க்கப் போகிறாளா? என்னதான் மாற்றி மாற்றி அணிவது என்றாலும் பத்தோ இருபதோ போதாதா? அழகிய காட்சிகளைக் கணவன் அருகில் இல்லாமல் தனியே நின்று பார்த்தால் ரசிக்குமா என்ன? சொன்னால், 'உனக்குப் புரியாது பட்டிக்காடு' என்பாள்.

ஆனால், மனைவி செலவழிக்கிற வேலை, சந்தோஷமாக இருக்கிற வழியை நாடும் போது, கணவன் மட்டும் கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொண்டு இருப்பதென்றால், அதில் நியாயம் இருப்பதாக மனோகரிக்குத் தோன்றவில்லை.

''அப்படி அவர் என்ன தொழில் மீனா செய்கிறார், உலக முழுவதும் கிளைகள் திறக்கப் போவதாகச் சொன்னாயே?'' என்று கேட்ட மனோகரியை ஆத்திரமாக உறுத்தாள் மோனி.

''என்ன மீனா? நான் இப்போது தப்பாக என்ன கேட்டு விட்டேன்? முறைக்கிறாயே!'' என்று மனோகரி குழப்பவும், ''திரும்பவும் மீனாவா?'' என்று கோபமாகக் கேட்டாள் மீனாட்சி.

''வெளிநாட்டுக்கெல்லாம் போய்ச் சுற்றப் போகிறேன், மீனா கீனா என்றால் எனக்கு எரிச்சல் வராதா? இப்போது என் பெயர் மோனி என்பதை இனியேனும் மறக்காதே!'' என்றாள் சினக்குரலிலேயே.

என்ன பைத்தியக்காரத்தனம் என்று உள்ளூர வியந்த படியே சம்மதமாய்த் தலையாட்டினாள் மனோகரி. ''இப்போது சொல்லு, மிஸ்டர் தினகரனின் தொழில் என்ன?''

''அது...அது...அது வந்து யார்யாருக்கு என்னனென்ன தேவையோ அதெல்லாம் கொடுப்பது...''

''எப்படிக் கொடுப்பார்? மந்திரத்தில் மாங்காய் வருகிற மாதிரி, மிஸ்டர் தினகரன் சொடக்கு போட்டதும்

யாருக்கு என்னென்ன வேண்டுமோ அதெல்லாம் வந்து கொட்டிவிடுமா?'' என்று மனோகரி கிண்டலாய் சிரிக்கவும் மீனாட்சி அசடு வழிந்தாள்.

''போடி, நீ ரொம்ப மோசம். இப்படியெல்லாம் கேட்டால் நான் என்ன சொல்லட்டும்?'' என்று சிணுங்கி விட்டு, முகம் மலர, ''எப்படியோ? நிறைய சம்பாதிக்கிறார். அது போதாதா நமக்கு? என்று திருப்திப்பட்டாள்.

அத்தையைப் போலவே இவளும் பணத்துக்கு அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்துப் பழகி விட்டாளே என்று உள்ளூர லேசாக வருந்தியபடி, ''உனக்குப் போதும் என்றால் எனக்கும் சரிதான். ஆனால் கடத்தல் அது இது என்று ஏதாவது தப்புத் தொழில் இல்லை என்கிற அளவிலாவது உறுதிப்படுத்திக் கொள்'' என்றாள் மற்றவளிடம் உரக்க. ''பணம் சம்பாதிக்கிறார் என்று நினைத்து ஒரேடியாக மாட்டிக் கொண்டு விடக்கூடாது பார்'' என்று சொல்லும் போதே இராது, இந்தத் தினகரனின் வருமானம் தப்பான வழியில் ஈட்டுவதாக இராது என்றது அவள் மனம்.

''அது அப்பா போய்ப் பார்த்துத் தெரிந்து வந்து விட்டார். கவலைப்படாதே.. என் குடும்ப வாழ்வு பற்றியும் கவலைப் படாதே, மனோ. தினகரன் எப்போதுமே ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிறவர். போனமாதம் கூடப்பார், திருநெல்வேலிவரை ஒரு திருமணத்திற்கு அவர் செல்ல வேண்டியிருந்தது. தொழில் தொடர்பாக

சில லயன்ஸ் கிளப் அங்கத்தினர்கள், இவருக்கு ஏதோ பாராட்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருந்தார்களாம். பெண்ணுடைய தந்தை ஒரு அங்கத்தினராம். அங்கே வைத்தே பாராட்டு விழாவை முடித்துக் கொண்டு வந்து விட்டார். எப்படி ஐடியா?'' என்று விழுந்து விழுந்து சிரித்தாள். ''தொழிலோடு குடும்ப வாழ்வையும் நன்றாகப் பார்த்துக் கொள்வார்.''

இவள் அண்ணன் சொன்னது சரிதான். இவள் கொஞ்சம் நன்றாகச் சிரிக்கக் கற்றுக் கொள்வது தான் நல்லது என்று எண்ணினாள் மனோகரி. ஆனால் திரு நெல்வேலி பேச்சு அவள் மனதை வாடவைத்தது. தொண்டையைக் கனைத்துக் கொண்டு ''பேட்டிக்குக் கிளம்ப வேண்டும் மீ... மோனி'' என்று ஒருவாறு தன்னை விடுவித்துக் கொண்டு, கிளம்பிப் போய் பேட்டியை முடித்துக் கொண்டு திரும்பி வந்தால், மீனாட்சி மீண்டும் வருங்காலப் பெருமை அடிக்கத் தயாராக இருந்தாள். தினகரனின் புகழ், அல்லது தன் புகழ், தன் எதிர்காலக் கனவுகள்! இவை தவிர, மற்றவர்களைப் பற்றி நினைக்கக்கூட அவளால் முடியவில்லை என்றே மனோகரிக்குத் தோன்றியது. ஆனால், இவளது சொந்த விஷயம் பற்றி மற்றவர்களுக்கும் இதே ஆர்வம் இருக்கும் என்று இவள் எப்படி எதிர் பார்க்கிறாள் என்று உள்ளூர எரிச்சல் பட்டாள் மனோகரி.

அதுவும், பேட்டி எப்படி இருந்தது என்று ஒரு வார்த்தைகூட கேட்கவில்லை இவள்!

அய்யோ, ஆளைவிடு என்று சொல்லிவிடலாமா என்று வாயைத் திறந்தவள் ஒரு திகைப்புடன் வாயை மூடிக் கொண்டாள். அந்தத் தினகரனைப் பற்றி அறிந்து கொள்வதில் தனக்கு ஓர் ஈர்ப்பு இருப்பதை உணர்ந்த போது மனோகரிக்கு அது கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது.

இது தனக்கு நல்லதில்லை என்று உணருகிற அளவு அவளுக்கு அறிவு இருந்தது. ஆனால் அந்த ஈர்ப்பின் சக்தி அவளது அறிவுத் திறனை மிஞ்சியதாக இருக்கவே, மீனாட்சியாகச் சொன்னதற்கு மேல் தானாகவும் கேள்வி கள் கேட்டு தினகரனைப் பற்றிய விவரங்களைச் சேகரித் தாள். ஒரு, தேனீ தேனைச் சேகரித்து பத்திரப் படுத்துவது போல, தினகரனைப் பற்றி அறிந்தவற்றை நினைவுப் பெட்டகத்தில் பத்திரப் படுத்திக் கொண்டாள்.

தினகரனுடையது வாழ்ந்து கெட்ட குடும்பம். அவ னுடைய தாத்தாவுடைய தந்தை காலத்தில் பல கோயில்க ளுக்கு யானை வாங்கிக் கொடுத்தாராம். அவ்வளவு வலிமை! தினகரனுடைய தாத்தா எடுத்து வைத்த தூக்கு தல் தவறான எட்டு. இங்கிருந்த நிலபுலன்களை விற்றுக் காசாக்கிக் கொண்டு பிள்ளையும் தானுமாக இலங்கைக்கு வியாபாரம் செய்யப் போனர்கள். வெறும் கையோடு திரும்பி வந்தார்கள். அந்த அடியிலிருந்து அவர்கள் முழுமையாக மீளவே இல்லை. மீட்சி பற்றி மகனிடம் அடிக்கடி கூறுவார் பெற்றவர்.

மீள வேண்டும், மீண்டாக வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொன்னபோதும், அதன் வழிமுறைகளை அவர் மகனுக்குக் கற்றுக் கொடுக்கவில்லை. அவருக்கே தெரியாத வித்தை போலும்.

ஆனால், உயர்ந்த, எல்லாரும் மதிக்கும்படியான எளிமை அடைந்து விட வேண்டும் என்கிற எண்ணம் மட்டும் தினகரனின் மனதில் அழுத்தமாகப் பதிந்து போயிற்று. அதே உறுதி அவன் மனதில் கனலாக எரிந்து கொண்டே இருக்கவே, சர்வசதா அதற்கான வழி முறைகளையும் அவன் ஆராய்ந்து கொண்டே இருந்தவன், படிப்பில் கெட்டிக்காரனாக இருந்த போதும், பொறியியல், மருத்துவம் என்று படிக்கப் போகவில்லை. மாறாக, வணிகத் துறையைத் தேர்ந்தெடுத்து, வாங்கல், விற்றல், நிதி நிலையைக் கையாள்வது பற்றிக் கற்றுத் தேர்ந்தான்.

தாயார் சேர்த்து வைத்திருந்த பணத்தை மூலதனமாகக் கொண்டு படிக்கிற காலத்திலேயே தினகரன் தொழிலைத் தொடங்கி விட்டான்! அந்தப் பணத்துக்குச் சிறு அளவில்தான் முடிந்தது. ஆனால் அதிலேயே நல்ல லாபம் கிடைத்தது. பெரிய வெற்றிதான் என்றாலும், அவனது இலக்கோடு ஒப்பிடும்போது, இது யானைப் பசிக்குச் சோளப் பொரிதான். மகன் மீது இருந்த நம்பிக் கையால் மிச்சம் மீதி இருந்த நிலத்தைத் தந்தையும், தாலி தவிர மற்ற தங்கத்தைத் தாயும் கொடுத்தனர்.இன்னோர் ஏற்றம் கிடைத்தது. இன்னமும் பெரிய அளவில் செய்ய நினைத்து, முதல் பணத்துக்காக இரண்டு 'ஸ்லீப்பிங்

பார்ட்னர்'களைச் சேர்த்துக் கொண்டான். இந்த அளவு இன்று வளர்ந்து நிற்கிறான்!

பெருமையோடு முடித்தாள் மோனி.

தினகரன் மட்டும் அங்கே இருந்திருந்தால் மனோகரி அவனது கை பற்றி குலுக்கிப் பாராட்டியிருப்பாள். அவ்வளவு மதிப்பு அவன் மீது அவளுக்கு உண்டாயிற்று.

''தினகரனுடைய பெற்றோர் பார்க்க எப்படி இருக்கிறார்கள் மோனி!'' என்று மனோகரி ஆர்வத்தோடு விசாரித்தாள்.

''யார் பார்த்தார்கள்!'' என்று அசட்டையாக அவள் தோளைக் குலுக்கவும், திகைத்தாள்.

''பின்னே?''

''தினா, நல்ல நிலைமைக்கு வரத் தொடங்கிய போதே அவர் அப்பா இறந்து போனார். அந்தம்மா அதிலிருந்து வீட்டை விட்டு வெளியே போவது இல்லை. என்னை அழைத்துப்போய் அந்தக் கிழவியின் காலைத் தொட்டுக் கும்பிட வைக்க வேண்டும் என்று தினாவுக்கு ஆசை! நல்ல வேளையாக அவருக்கு அதற்கு நேரமே கிடைக்கவில்லை'' என்று மீண்டும் அவள் தோளைக் குலுக்கினாள்.

''சேச்சே! என்ன! மோனி இது! எப்படியும் தினகரனுடைய தாயார்! அவர்களுக்கு வேறு பிள்ளைகள்

இல்லை. அவர்களுக்கு வாழ்வின் ஆதாரமே தினகரன் தானே? அத்தோடு, தொழிலில் இவர் வளர அடிப்படைக் காரணம் அவர்கள்தானே?'' என்று சிறு கண்டனக் குரலில் மனோகரி உரைத்தாள்.

''அதற்காகத்தான் பெங்களூரில் வீடு, வாங்கிக் கொடுத்திருக்கிறார். நிறைய பணம் வேறு அந்தம்மா பெயரில் பாங்கில் டெப்பாசிட் செய்திருக்கிறார். இதற்கு மேல் அந்தக் கிழவிக்கு என்ன வேண்டுமாம்? பட்டிக் காடு மாதிரி, மாமியாருக்குக் கால் கை அமுக்கி விடுகிற மடத்தனம் எல்லாம் என்னால் ஆகாதம்மா! சொல்லப் போனால், தினகரிடம் எனக்குப் பிடிக்காத அம்சமே இந்த அம்மா பைத்தியம்தான். எவ்வளவோ உயர்ந்த நிலையில் இருந்தவர்கள், நிலை தாழ்ந்த போது ஒரு முணு முணுப்பும் இல்லாமல் சகித்தாளாம்! வேறு என்ன செய்வாள்? வெளியே போய்ப் பிச்சை எடுப்பதற்கு இது மேல் என்று சும்மா இருந்திருப்பாள். நகை கொடுத்து எத்தனை மடங்காகத் திரும்பி வந்திருக்கிறது! அதை யோசியாமல், அம்மா என்றாலே உருகுகிறார். திரும ணம் ஆனதும் முதல் வேலையாக இந்த உருக்கத்தை மாற்றியாக வேண்டும்!...

சொல்லிக் கொண்டே போன மீனாட்சி, மனோகரி யின் முகத்தைப் பார்த்து விட்டுத் தலையைச் சிலுப்பி னாள். ''என்னால் இப்படித்தான் இருக்க முடியும்; இப்ப டித்தான் இருப்பேன், எனக்கு என் கணவர் மட்டும்தான் வேண்டும். கூடவே ஒரு பட்டாளத்தைக் கட்டி மேய்க்க

நான் தயாரில்லை. அப்படிக் கட்டி மேய்ப்பதில் பயன் இருப்பதாகவும் தெரியவில்லை. ஏன், அத்தையையே எடுத்துக் கொள்ளேன், உன் தாத்தா பாட்டி, அத்தைமார் எல்லோரையும் வருந்தி வருந்தி உபசரிக்கத்தான் செய் தார்கள். மாமா இறந்த பின் அவர்களில் யாராவது பொறுப்பேற்றுக் கொண்டார்களா? இல்லையே! கல் விழுந்த காக்கைக் கூட்டமாய்ப் பறந்தோடிப் போய் விட்டார்களே!'' என்றபோது, அதற்கு மேல் மனோகரி யால் ஒன்றும் சொல்ல முடியாது போயிற்று.

ஏனெனில் அவள் சொன்னது அவ்வளவும் உண்மை! பிற்பாடு, பெண் குழந்தையின் பொறுப்பு தலையில் விழுந்து விடுமோ என்று உறவினர் எல்லோ ரும் ஓடி விட்டார்கள் என்றும் அவள் கேள்விப்பட்டிருந் தாள். ஆனால், யாரோ ஒருவர் பிழை செய்தார்கள் என்பதால், பிழையையே நியாயமாக்கிப் பின்பற்று வதா? பாதிக்கப்பட்ட அன்னையே அதைச் செய்த தில்லை. செய்யும்படி மகளிடம் ஓதியதும் இல்லை. சொன்னால் இவள் ஒத்துக் கொள்ளப் போவதில்லை என்பதை உணர்ந்து ''சரி சரி. அதைவிடு, உன் ஆள் பற்றிச் சொல்லு, என்று பேச்சை மாற்றினாள் அவள்.

'வாழைப்பழம் வேண்டாம் என்கிற குரங்கு உண் டா?' என்பார்களே அதுபோல, மீனாட்சி மகிழ்ச்சியோடு தன் புராணத்தைத் தொடர்ந்தாள். நாலு மாதங்களுக்கு முன்பாக தினகரனைச் சந்தித்தது, அவனது வளர்ச்சி பற்றிக் கேள்விப்பட்டது, பிறகு, அவர்கள் அவன் செல்லு

மிடங்களில் சென்று சந்தித்தது, நிச்சயத்தன்று அவன் கையாலே வைரமோதிரம் போட்டது என்று நிறையச் சொன்னாள். இன்னமும், இந்த மோதிரத்தின் 'செட்' ஆகத் திருமணத்தின்போது கழுத்தணி, காதணியோடு வளையலும் வைரத்தில் பரிசளிக்கப் போவதாகச் சொன்னதாகவும்... சில்வண்டின் ரீங்காரம் போல மீனாட்சியின் குரல் மனோகரியின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

கடைசியாக, இரவில் அதிக நேரம் விழித்திருந்தால் இமை தடித்துப் போய்ப் பார்க்க அசிங்கமாக இருக்கும் என்பது நினைவுக்கு வந்த பிறகுதான் மீனாட்சி பேச்சை நிறுத்தி உறங்கப் போனாள்.

காலை உணவு அருந்தும் வரையும் கூட இதே நிலைதான். அதன் பிறகு எல்லாம் மாறிப் போயிற்று.

அந்த வீட்டில் ஹாலில் உள்ள டி.வி.அனேகமாக முழு நேரமுமே ஓடிக் கொண்டே இருக்கும். காலை உணவு முடிந்து, காபி அருந்திக் கொண்டிருக்கும்போது நேர்ந்த அமைதியில் டி.வி. செய்தி காதில் விழுந்தது... ''ஆளானவர்களில் முக்கியமானவர், வளர்ந்து வரும் தொழில் அதிபர் தினகரன் ஒருவர்'' என்று செய்தி அறிவிப்பாளரின் குரல் கேட்கவும் விழுந்தடித்துக் கொண்டு எல்லோரும் அடுத்திருந்த ஹாலுக்கு ஓடினர்.

தினகரனின் படம் டி.வி. திரையில் ஒரு வினாடி தெரிந்தது. பெரிய காயங்கள் இல்லாவிட்டாலும் உள்ளே

அடிபட்டதின் விளைவாக, தினகரனின் பார்வை நரம்பு கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படு கிறது...

அதற்கு மேல் டி.வி.யில் சொன்னது யார் காதிலும் விழுந்ததாகவே தெரியவில்லை. அவ்வளவு தூரம் அதிர்ந்து போயிருந்தனர்.

## 4

ஒருவாறு அதிர்ச்சியிலிருந்து மீண்டு, மாமா மகளின் கையைப் பற்றி, ''கிளம்பு மீனா!'' என்றாள் மனோகரி அவசரமாக.

மெல்லக் கையை விடுவித்துக் கொண்டு, ''எங்கே?'' என்றாள் மீனாட்சி.

''இதென்ன, இப்படிக் கேட்கிறாய் மீனாட்சி? மருத் துவமனைக்குத்தான். தினகரன் எந்த மருத்துவமனையில் இருக்கிறார் என்று கண்டுபிடித்து அங்கே போக வேண் டாமா?'' என்று மனோகரி மீண்டும் அவசரப்பட்டாள்.

''எதற்கு?'' என்று மீண்டும் ஒற்றை வார்த்தையாக மீனாட்சி கேட்கவும், மற்றவள் ஒன்றும் புரியாமல் திகைத் துப் போனாள்.

''அப்படியென்றால் என்ன அர்த்தம் மீனா? தினக ரன் அடிபட்டுக் கிடக்கிறார் என்றால், நீ அவர் அருகில் இருக்க வேண்டாமா?''

''அப்படி அவர் கையைப் பிடித்துக் கொண்டு அருகில் அமர்ந்திருக்க நான் என்ன அவருக்கு நர்சா?'' என்று மீனாட்சி ஒரு மாதிரிக் குரலில் கேட்கவும் மனோ கரி பிரமித்துப் போனாள்.

''நீ.... நீ... என்ன சொல்லுகிறாய்?!'' என்று தடுமா றினாள்.

''செய்தியில் சொன்னதை நீ கவனிக்கவில்லையா? பார்வை நரம்புகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்ட னவாம். பொருள் என்ன என்று புரிகிறதா? இனி ஒரு காலத்திலும் அவருக்குப் பார்வை திரும்பப் போவது இல்லை. கண்ணில் அடிபட்டிருந்தால் எடுத்துப் போட்டு விட்டு மாற்றுக் கண் பொருத்திக் கொள்ளலாம். ஆனால் நரம்புகள் பழுதுபட்டு விட்டால் பிறகு அவ்வளவுதான்! பார்வை திரும்பாது!''

''பாவம்! அவருக்கு எப்படியிருக்கும்? இந்த நேரத் தில் நீ அவருடன் இருந்தால் அதுவே பாதித் துன்பம் குறைவது போல இராதா?'' என்று தினகரனுக்காக உருகினாள் மனோகரி.

''அவருக்கு எப்படி இருக்கும் என்பது தெரிய அவரைத்தான் கேட்க வேண்டும்! முதலில் எனக்கு எப்படி இருக்கும் என்றுயோசி. பெரிய பணக்காரியாய், விமானத்தில் கூட முதல் வகுப்பில் அங்கும் இங்கும் பறக்கப் போவதாகக் கனவு கண்டிருந்தேன்! கடைசியில் பார்த்தால், கொஞ்சமும் பொறுப்பில்லாமல் எங்கேயோ

போய் இடித்துக் கொண்டு என் கனவுகளை எல்லாம் அழித்துக் காற்றில் பறக்க விட்டுவிட்டாரே! எனக்கு எவ்வளவு பெரிய இழப்பு? இதை எண்ணி எனக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்? என் துன்பம் யோசிக்காமல், அங்கே போய் அவருக்குக் கண்ணீர் துடைத்துவிடச் சொல்லுகிறாயே. அதுவும் என் துன்பத்தின் காரணம் அவராக இருக்கையில்!'' என்று மீனாட்சி கோபம் காட்டினாள்.

''கூடக் கொஞ்சம் மனிதத் தன்மையோடு பேசு, மீனா'' என்றாள் மனோகரி தாங்க மாட்டாமல்.

'செய்யலாம். ஆனால் மனிதத்தன்மையில் பென்ஸ் கார் கிடைக்குமா? குறைந்தபட்சமாய் ஒரு வைர நெக்லஸ்? எனக்கு இவைதான் வேண்டும்''என்றாள் மீனாட்சி பிடிவாதமான குரலில்.

''அப்படிச் சொல்லடி, என் கண்ணு!'' என்று மகளை மெச்சிக் கொண்டாள் தில்லைநாயகி. ''உள்ளூர எனக்குப் பயம். இந்தப் பெண் பிடிவாதக்காரி ஆயிற்றே! காதல் கீதல் என்று வசனம் பேசத் தொடங்கிவிட்டால் என்ன செய்வது என்று உள்ளூரப் பயந்தேன். நல்லவேளை! கடவுள் காப்பாற்றி விட்டார்! பின்னே பாரேன்! இந்த விபத்து, இவர்களுக்குக் கல்யாணம் ஆனபிறகு நடந்திருந்தால் என்ன கதி ஆயிருக்கும்! யார் செய்த புண்ணியமோ, ஏதோ நமக்கு நல்ல நேரம் என்று நினைக்கிறேன்'' என்று அவள் ஆறுதல் பட்டுக் கொண்டதைக் கேட்க மனோகரிக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது.

அங்கே ஒருவனின் எதிர்காலம் அழிந்து கொண்டு இருக்கையிலே, அவனுக்கு ஆறுதல் கூறக் கூட மனம் இல்லாமல் ஓடுகிறார்களே! நல்லவேளையாம்! கடவுள் காப்பாற்றினாராம்! நல்ல நேரமாம்! அங்கே, தன்னந்தனியாக அந்தத் தினகரன் என்ன பாடுபடுகிறானோ? அவனுடைய தாயாருக்கேனும் கூறினார்களோ என்னவோ? வீட்டை விட்டு வெளியே வராத அந்தப் பெண்மணி என்ன பாடுபடுகிறார்களோ?

அவள் மட்டும்தான் இந்த ரீதியில் சிந்தித்தாள் என்று இல்லை என்பது அழகேசனின் பேச்சில் தெரிந்தது. ''மெய்யாகவே கடவுள் காப்பாற்றித்தான் இருக்கிறார், அம்மா! நல்ல வேளையாகத்தான் திருமணம் நடக்குமுன் இந்த விபத்து நேர்ந்தும் இருக்கிறது. கல்யாணத்துக்குப் பிறகு மட்டும் இந்த விபத்து நேர்ந்திருந்தால்... அய்யய்யோ நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது. சும்மாவே இருக்கும் வேதனையோடு, மனைவி மாமியாரின் சுயரூபங்களை அறிய நேரும்போது அந்த மனிதர் என்ன பாடுபட வேண்டி இருந்திருக்கும்? பாவம்! எந்தப் பிறவியில் என்ன புண்ணியம் செய்தாரோ, தினகரன் தப்பித்தார்!'' என்று அவன் பெரிதாகக் கையை விரித்துக் காட்டவும், ''திமிராடா'' என்று அவனை அடிக்கக் கையை ஓங்கினாள் தில்லைநாயகி.

''ஏய், ஏய் வேண்டாம் தில்லை, ஆண் பிள்ளை, வயது இருபத்து நாலு ஆகிவிட்டது. அவன் கேலியும் கிண்டலுமாகப் பேசுவது, நீ அறியாததா? விடு. இந்த

வருமான வரி தொடர்பாக உன்னைச் சில கையெழுத்துப் போடச் சொல்லியிருந்தேனே.. அதைப் பார்க்கலாம் வா'' என்று மனைவியை அழைத்துக் கொண்டு வினாயகம் அங்கிருந்து அகன்றார்.

தங்கையின் கண்களில் கனவைக் கண்டு ''என்னவோ மோனி, உன் வாழ்வு, உன் விருப்பம்''என்று தோளைக் குலுக்கி விட்டுப் போனான் அழகேசன்.

சிறு அமைதிக்குப் பின் ''சொல்லுகிறேன் என்று ஆத்திரப்படாமல், சற்று யோசித்துப் பார் மோனி. கண்ணையும் இழந்து, கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்ணையும் இழப்பது என்றால் எவ்வளவு வேதனையாக இருக்கும்? நினைக்கவே பரிதாபமாய் இல்லையா?'' என்று கெஞ்சுதலாகத் தன் மாமா மகளிடம் மனோகரி கேட்டாள்.

''இருக்கலாம். ஆனால், அவருக்காகப் பரிதாபப் பட்டால், பிறகு என் கதையல்லவா பரிதாபத்துக்கு இடமாகிப் போகும்!'' என்று தயவு தாட்சண்யமே இல்லாமல் அலட்சியமாகப் பதிலளித்தாள் மீனாட்சி.

கொஞ்சம் சிந்தி மீ... மோனி. தினகரன் இவ்வளவு நாள் சம்பாதித்த பணம் இருக்கும்... அதுவும் குறைவாகவா இருக்கும்? அவளுடைய அம்மாவுக்கே பங்களூரில் வீடு, நிறையப் பணம் என்று கொடுத்திருப்பதாகச் சொன்னாயே! அவரும் வைத்திருப்பார் அல்லவா? உனக்கு **மாமா** வேறு கொடுப்பார்... எல்லாம் வைத்து

வளமாகவே வாழலாமே!'' என்று மீனாட்சிக்கு ஆசை காட்டிப் பேசியபோது மனோகரிக்கு அழுகை வந்து விடும்போல இருந்தது. தினகரனுக்கு இப்போது எப்படி யிருக்கும், எப்படி இருக்கும் என்று அவள் மனம் கிடந்து தவியாய்த் தவித்தது.

இவள் அங்கே சென்று இதமாக இரண்டொரு வார்த்தை பேசினால் கூட அவருக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்குமே! கொஞ்சம் பணத்தாசையும் பகட்டு மோகமும் இருந்தாலும் மாமன் மகள் நல்லவள். என்று நினைத்தாளே! இவளுக்குக் கொஞ்சமும் இரக்கம் இல்லையே. இவளும் இல்லை என்றால் அங்கே அவன் இனித் தனக்கு ஒன்றுமே இல்லை என்று உயிரை வெறுத்து விடக் கூடாதே என்று என்னென்னமோ எண் ணிக் கலங்கினாள்.

ஆனால் மீனாட்சிக்கு அதுபோலெல்லாம் ஒன்றுமே தோன்றாமல், அவள் தன்னிலேயே நின்றாள். அவளது மனச்சாட்சியைத் தட்டி எழுப்ப முயன்ற மனோகரி மீது கோபமும் கொண்டவளாக, ''உன் பெருமாள்புரம் லெவ லுக்கு அதுவே வளமாகத் தான் தோன்றும் மனோ. ஆனால் நான் வளம் என்று நினைப்பதே வேறு. எனக்குக் குறைந்தபட்சமாய் மாதம் ஒரு வைர நகை வேண்டும். வெளிநாட்டுப் பயணம் போக வேண்டும். அணிகிற ஆடைக்கு பொருந்துகிற நிறத்தில் எல்லாம் கார் இருக்க வேண்டும். இதையெல்லாம் இனித் தினகரனால் எனக் குத் தர இயலாது. இன்றைக்கு சிறு இரக்கத்துக்கு இடம்

கொடுத்தேன் என்றால் பிறகு இருவர் வாழ்வுமே நரக மாகி விடும். புரிகிறதா? தயவு பண்ணி ஆளை விடு'' என்று திரும்பிச் சென்று சாப்பாட்டு மேஜை முன் அமர்ந்தாள் அவள். ஆறிவிட்டிருந்த காஃபியைத் தொட்டுப் பார்த்துவிட்டு வேறு கொண்டு வருமாறு சமையல் ஆளுக்கு உத்திரவிட்டு விட்டு அருகிலிருந்த் பத்திரிகை ஒன்றை எடுத்து அலட்சியமாகப் புரட்டலானாள்.

இனி இவளிடம் என்ன சொல்லியும் பயன் கிடையாது என்பது புரிந்துவிட, செய்வது அறியாமல் மனோகரி திகைத்து நின்றாள். அங்கே தினகரன் தன்னந்தனியே துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறான், அதைத் தடுக்க, அவனது வேதனையைக் குறைக்க அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

மீனாட்சிக்குக் காபியைக் கொணர்ந்து வைத்த சமையல்காரி, ''அம்மா, உங்களுக்கு? உங்களுக்கும் இதைக் கொட்டி விட்டு வேறு புதிது போட்டுக் கொண்டு வரட்டுமா?'' என்று மனோகரியிடம் கேட்டாள்.

காப்பி பற்றிய நினைப்பையே மறந்துவிட்டிருந்த மனோகரி, அவள் வேற்றுமொழி பேசுகிற மாதிரி மலங்க மலங்க விழித்துக் கொண்டு நிற்கையில், ஹாலில் டெலிஃபோன் மணி...

வழக்கம் போல போனை எடுத்துப் பேசி விட்டு வந்த எடுபிடிப் பையன், மீனாட்சியிடம், ''உங்களுக்குத் தான் அம்மா. எங்கியோ செக்கந்திராபாத்தாமே! அங்கே

ஏதோ மருத்துவமனையிலிருந்து உங்களைக் கூப்பிடுகிறாங்கம்மா'' என்று தகவல் உரைத்தான்.

கையில் இருந்த கா∴பியில், நிதானமாக ஒரு மிடறு விழுங்கிவிட்டு, ''இப்போது பேச முடியாதாம் என்று சொல்லிவிடு''என்று கட்டளையிட்டாள்.

எடுபிடிப் பையன் டெலி∴போன் அருகில் செல்வதைச் சில கணங்கள் செயலற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மனோகரி, அவன் ரிசீவரை எடுக்க கை நீட்டியதும், ''ஒரு நிமிடம்!'' என்று அவனைத் தடுத்து விட்டு, தானே போனை எடுத்துப் பேசினாள்.

எங்கே, என்ன என்று கேட்டு அருகில் இருந்த 'பாட்' ஒன்றில் குறித்துக் கொண்டு, ரிசீவரைக் கீழே வைத்தாள்.

மெல்லத் திரும்பி மீனாட்சியிடம் வந்த போது மனோகரியின் கண்கள் கலங்கியிருந்தன. ''ம்... மோனி... டெலி∴போன் செகந்திராபாத்தில் இருந்து. அங்கேதான் தினகரன் இருக்கிறாராம். உன்னைத் தேடுகிறாராம். மோனி... கொஞ்சம் கொஞ்சம் மோசமான நிலைமைதானாம் மோனி. அவர்தான் உன் நம்பர் கொடுத்துச் சொல்லச் சொன்னாராம். நீ... அங்கே போனால்.. அவருக்கு குணமாகும் வாய்ப்பு அதிகமாம். ப்ளீஸ் மீனா! தயவு பண்ணி அங்கே போய் அவரைக் காப்பாற்று'' என்று இறைஞ்சியபோது மனோகரியின் விழிகளிலிருந்து, இரு பெரிய நீர்மணிகள் உருவாகி, கன்னங்களின் மீது உருண்டு இறங்கலாயின.

''முடியாது!'' என்று காலியாகி விட்டிருந்த காபி கப்பைத் தட்டென்று மேசைமேல் வைத்தாள் மீனாட்சி. ''இனி எனக்கும் அவருக்கும் ஒன்றும் இல்லை'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

''அதையும் கூட அவரிடம் நேரில் தெரிவிப்பது தானே நாகரீகம். அங்கே போய், அவர் கொஞ்சம் குணமானதும் நேரம் பார்த்து..''

''மண்ணாங்கட்டி!'' என்று வெடித்தாள் மீனாட்சி. ''நான் சொன்னது எதுவும் உன் மரமண்டையில் கொஞ்சம் கூட ஏறவில்லையா? இனி எனக்கும் அவருக்கும் இடையே எதுவும் இல்லை என்று சொன்னேன். தினகரனுக்கு என்ன ஆனாலும் அதுபற்றி எனக்கு அக்கறை இல்லை. அவர் இருந்தாலோ, செத்தாலோ...'' ''மீனாட்சி!'' என்று அலறிவிட்டாள் மனோகரி. வேலையாள் திகைப்புற்று நோக்கவும், குரலைத் தணித்து, ''கண்ட வார்த்தை சொல்லாதே, மோனி என்னால் தாங்க முடியவில்லை!'' என்றாள் வேதனையோடு.

தன் அத்தை மகளை ஒரு மாதிரி நோக்கிவிட்டு, மீனாட்சி சொன்னாள்: ''அப்படி உனக்குத் தாளவில்லை என்றால், ஒன்று செய். எனக்குப் பதிலாக நீ செகந்திராபாத்துக்குப் போ. அங்கே போய் அவர் மனம் நோகாமல் ஆறுதல் சொல்லு. போ, அங்கே நீ அவரைத் திருமணம் செய்து கொண்டாலும் எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லையம்மா!'' என்று உதட்டைப் பிதுக்கிக் கையை விரித்தாள் அவள்.

''அவர் உன்னைத் தேடும்போது, நான் போய் என்ன பயன்...'' என்று ஆத்திரப்பட்டபோதும், ஊள்ளூ ரச் செய்தால் என்ன என்று மனோகரிக்குத் தோன்றியது. மீனாட்சிக்குக் காய்ச்சல், அதனால் உங்களிடம் சேதி சொல்லி உதவி செய்வதற்காகஎன்னை அனுப்பினாள் என்று இதமாக ஏதேனும் பேசிப் பணிவிடை செய்வது, பிறகு தினகரனுக்கு உடம்பிலும் மனதிலும் கொஞ்சம் பலம் வந்த பிறகு மெல்ல உண்மையை சொல்லிவிட்டு வெளியேறி விடுவது! இதில் தப்பேதும் இல்லையே!

மனோகரி யோசிப்பதைப் பார்த்ததும், மீனாட்சிக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று. நம்ப முடியாத சிரிப்பு டன், ''ஏய் மனோ! என்னடி? மெய்யாகவே தினகரனி டம் போகப் போகிறாயா? பைத்தியம்! ஏதோ அவரோடு பழகியதற்கு ஒரு வைர மோதிரம் லாபம் என்று முடிக்கா மல்.. அசடு அசடு. அங்கே போய் நீ எங்கே தங்குவாய்? செலவுக்கு என்ன செய்வாய்? அத்தையிடம் என்ன சொல்லுவாய்? ஒன்றுமே யோசிக்காமல் என்னதிது கிறுக் குத்தனம்?'' என்று, அத்தை மகளை யதார்த்த நிலைக்குக் கொண்டுவர முயன்றாள்.

ஏறத்தாழ ஆறு மாதங்களாக, இதே தினகரனுக்குக் கொடுப்பதற்காகவே பர்சில் தூங்கிக் கொண்டிருக்கும் ஆயிரம் ரூபாய் மனோகரிக்கு நினைவு வந்தது. கூடவே, வழிச் செலவுக்குக் கொண்டு வந்த மீதி ஐநூறு! இது பெரிய தொகை அல்லதான். உணவு, இருப்பிடம் எல் லாம் வெளியே பார்ப்பது என்றால், என்னதான் சிக்கன மாக இருந்தாலும் பத்து நாள் தாங்காதுதான். ஆனால்,

அதையெல்லாம் மனோகரி இப்போது நினைக்கத் தயா ராக இல்லை.

''மிஞ்சி மிஞ்சி நாலைந்து நாட்கள். மிஸ்டர் தினகர னுக்குக் கொஞ்சம் குணமானதும் திரும்பி விடுவேன்!'' என்றுரைத்துவிட்டு ரயில் நேரத்தை டெலிஃபோனில் விசாரித்து அறிந்து கொண்டு மனோகரி செகந்திராபாத் துக்குக் கிளம்பி விட்டாள். முக்கிய வேலையாக, செகந்தி ராபாத் வரை சென்று வருவதாகவும், கவலைப்படாதிருக் குமாறும் சுருக்கமாகத் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதிக் கையோடு எடுத்துப்போய் ரயில் நிலையத்திலேயே போஸ்ட் செய்துவிட்டு ரயில் ஏறினாள்.

அவளால் முடிந்திருந்தால் விமானத்தில் கூடச் சென் றிருப்பாள்! இல்லாத கொடுமை! படுக்கைக்கு முன்பதிவு செய்யக் கூட அவகாசம் இல்லாமல் அவள் நடைபாதை யில் ஒடுங்கி உட்கார்ந்தபடியே பயணத்தை முடிக்க வேண்டியிருந்தது. மீனாட்சி சொன்னது போலப் பைத்தி யக்காரத்தனம்தானோ என்று கூட ஒருதரம் அவளுக்குத் தோன்றியது. ஒரே ஒரு தரம்தான் அப்படி அவள் நினைத்தது. அதற்குள்ளாக, இவள் செல்லும் போது அங்கே தினகரன் நல்லபடியாக... உயிரோடு, அவள் சொல்வது புரிகிற நிலையில் இருக்க வேண்டுமே என்று தோன்றவும் அதற்குமேல் அவளது சொந்த இன்னல்கள் அவளுக்கு மறந்து போயின.

மருத்துவ மனையையோ, அங்கே தினகரனின் அறையையோ கண்டுபிடிப்பது மனோகரிக்கு சிரமமாக இருக்கவில்லை.

கதவைத் தட்டிவிட்டு, அனுமதி கிடைத்ததும் திறந்து கொண்டு உள்ளே காலடி எடுத்து வைத்த மனோகரி படுக்கையில் கிடந்தவனைத் தவிப்புடன் பார்வையால் ஆராய்ந்தவாறே ''நா...ன்'' என்று தன்னை அறிமுகம் செய்து கொள்ளத் தொடங்கினாள். ''முதலில் உள்ளே வாருங்கள், மிஸ்டர் தினகரன், யார் வந்திருக்கிறார்கள் தெரிகிறதா? உங்கள் மோனி, இதோ!'' என்று உற்சாகத்து டன் உரைத்தபடி மனோகரியைக் கைப்பற்றி அழைத்துச் சென்றாள் அங்கிருந்த நர்ஸ்.

தலைமுழுவதும் நெற்றி கண் வரையும் ஆங் காங்கே, கைகள் உடம்பிலும் கட்டுகளுடன் கிடந்த தினகரனின் தலை, அவள் வந்த பக்கமாகத் திரும்பியது.

கட்டுப் போட்டிருந்த போதும் வலியைப் பொருட்ப டுத்தாமல், அவனது வலது கரம் உயர்ந்து துழாவுவதைக் கண்ட மனோகரி, தன்னை அறியாமல் தன் கையை அவன் கையில் வைத்தாள். பிடி இறுக, ''மெய்யாகவே வந்து விட்டாயா மோனி'' கண்பார்வை போனதோடு எல்லாமே போய்விட்டதோ என்று கலங்கிப் போனேன்! என்னம்மா அழுகிறாயா? வேண்டாம் கண்ணம்மா.. இப்போதுதான் நீ வந்து விட்டாயே. இனி எனக்கு என்ன குறை. சொல்லு!'' என்றான் கம்மிய குரலில்.

சொல்லு என்பது போல நர்சின் சைகையைப் புரிந்து கொண்டு...'ஆ...ஆமாம்...குறையே கிடையாது'' என்றபோது மனோகரிக்கும் குரல் எழும்ப மறுத்தது.

# 5

ஆள் மாறாட்டம் என்பது சிறைக்கு அனுப்பக் கூடிய அளவுக்குப் பெரிய குற்றம் என்பது மனோகரிக்கு நன்றாகவே தெரியும்! தெரிந்தும் அவள் அதைச் செய் தாள்... செய்ய நேர்ந்தது.

கண்களில் கவலையை அப்பிக் கொண்டு கலக்கத்து டன் வந்து நின்ற பெண், நோயாளியின் வருங்கால மனைவியாகத் தான் இருக்க வேண்டும் என்று அந்த நர்ஸ் எண்ணியது இயல்புதான். ஒரு நோயாளியின் மனமும், அதன் மூலம் உடலும் தேற ஒரு வாய்ப்பு கிடைத்தது என்று அவள் உற்சாகத்துடன், ஓடி வந்து, அந்த 'வருங்கால மனைவி'யைத் தினகரனிடம் அவசர மாக அழைத்துச் சென்றதும் அப்படித்தான்.

தான் யார் என்கிற உண்மையைச் சொல்லும் குறைந்த பட்சமாய் அந்த நர்சிடமாவது வெளியிடக் கூடிய வாய்ப்பு மனோகரிக்கு கிடைத்தது அந்த நேரத்தில் தான்.

தினகரன் அதிர்ந்து போய்விடக் கூடாது என்று தயக்கம் இருந்திருந்தாலும், அந்த நர்சிடம், உதட்டின் மேல் விரல் வைத்துக் காட்டி, நான் மோனிகா அல்ல; அவளுடைய உறவினள். மோனிகாவுக்குப் பதிலாகத் தினகரனுக்கு உதவியாய் இருக்க வேண்டும் என்று வந்ததாக அவள் நிஜத்தை தெரியப்படுத்தியிருக்க வேண் டும்.

ஆனால், உடல் முழுவதும் கட்டுகளோடு தினகரன் கிடந்த விதமும், 'மோனி வந்திருக்கிறாள்' என்ற வார்த்

தைகளைக் கேட்டதும் அவனது தலை 'விறுக்'கென்று திரும்பிய வேகமுமாக அவளது வாயை அடைத்து விட்டிருக்க வேண்டும்!

இவ்வளவு ஆவலாக எதிர்பார்க்கிறவனிடம், உன் மோனி வரவில்லை! வருவதாகவும் இல்லை என்னும் உண்மையை எப்படி வெளியிடுவது? மீனாட்சி மாதிரி, இதயத்துக்குப் பதிலாக, இங்கே இரும்பை வைத்துக் கொண்டு இருக்கிறவர்களால் ஒருவேளை அது இயலக் கூடும். மாறாக, அங்கே மலரை வைத்துக் கொண்டு வாழும் மனோகரிக்கு அது முடியாததுதான்.

இதெல்லாம் அந்த விநாடியில் ஏன் வாய்மூடி மவுனமாக இருந்தோம் என்று யோசித்து அலசி ஆராய்ந்து மனோகரி கண்டுபிடித்த காரணங்கள். ஆனால் அந்த வினாடியில் அவளுக்குத்தான் மோனி காவா இல்லையா என்பது பற்றிய நினைவே வரவில்லை.

உடலின் பெரும் பாகத்தைப் போர்வையும், மீதி யைக் கட்டுகளும் மறைக்கக் கிடந்த அவனது நிலைமை எப்படி இருக்கிறதோ என்கிற கவலையும், நிலைமை கொஞ்சம் மோசம்தான் என்று டெலிஃபோனில் சொன் னார்களே, அதிலிருந்து மீண்டு அவன் பிழைக்க வேண் டுமே என்ற ஏக்கமும்தான் அவளது நெஞ்சில் முட்டிக் கொண்டு இருந்தது.

எனவே, நர்சோடு சேர்ந்து கட்டிலருகே விரைந்த வள் அவனது கை ஏந்தலாக உயரவும் தன்னை அறியாது கை கொடுத்தவள், அவனது கைப்பிடியில் தன்னை மறந்து போனாள்.

அவள் இல்லையென்றால் எல்லாமே போய்விட்டதாகவும், அவள் வந்து விட்டதால் குறைவே இல்லை என்றும் தினகரன் சொன்னது மனோகரியின் நெஞ்சைப் பிளந்தது. இத்தகைய அன்பைப் புரிந்து கொள்ளும் மனம் அந்தப் பாவி மீனாட்சிக்கு இல்லையே!

வந்தவள் தன் இதயம் கவர்ந்த 'மோனி'அல்ல என்று அறியும்போது அவள்தான் உலகம் என்று கருதும் இந்த மனிதர் என்னஆவார்.

ஆனால், இதையெல்லாம் எண்ணிக் குழம்பிக் கொண்டிருக்க வழியின்றி, மனோகரியைப் பற்றியிருந்த தினகரனின் கை திடுமெனப் பற்றிலிருந்து வலுவிழந்தது தெரிந்தது.

திடுக்கிட்டுப்போய் தினகரனின் முகத்தைப் பார்த்தாள். அங்கிருந்த கட்டுகளின் நடுவில் தெரிந்த முகம் தலையோடு தொய்ந்து சரிந்தது.

அவ்வளவுதான்; மனோகரி நடுநடுங்கிப் போனாள்.

''நர்ஸ், பாருங்களேன்! கடவுளே! அவருக்கு ஏதோ, என்னமோ ஆகிவிட்டது போலத் தோன்றுகிறதே! அய்யோம்மா கடைசியில் நான் அவருக்கு எமனாகித் தான் வந்தேன் போல இருக்கிறதே!'' என்று பதறித் துடித்தாள்.

அதற்குள்ளாக நோயாளியின் கையைப் பற்றி, நாடி பார்த்துக் கொண்டிருந்த நர்ஸ், ''மோனி...! என்ன இது, அறியாத ஜனம் போல? அவருக்கு ஒன்றும் இல்லை!

இந்த விபத்தினால், அவருக்கு எவ்வளவோ ரத்தம் சேதமாகியிருக்கிறது; உடலில் எத்தனையோ பாதிப்புகள்! இன்னொருவராக இருந்தால் ஆ... ஊ... என்று அலறியிருப்பார்கள். மிஸ்டர் தினகரன், மனதையும் உடம்பையும் கட்டுப்படுத்திப் பழகியவர் என்று நினைக்கிறேன். அதனால் சத்தமின்றி பொறுத்துக் கொள்கிறார்,'' என்று சொல்லிக் கொண்டே போனவளைப் பொறுமையிழந்து மனோகரி இடைமறித்தாள்.

''சிஸ்டர், நன்றாகப் பேசிக் கொண்டு இருந்தவர் திடீரென மயக்கம் போட்டு விட்டாரே! அவருக்கு ஒன்றும் இல்லை என்றால் ஏன் இப்படி?'' என்று பயம் அகலாமல் வினவினாள்.

''அதைத்தான் சொல்ல வருகிறேன். உடலையும் மனதையும் மிஸ்டர் தினகரன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதிலும், இந்த விபத்தின் விளைவு பற்றி உள்ளூர அவருக்குப் பல இறுக்கங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. பெரிய கவலை கண்ணைப் பற்றியது. அத்தோடு, வெளியே தொழில் பற்றிய இறுக்கம், உள்ளே வேறு காதல் என்ன ஆகும், கல்யாணம் என்ன ஆகும்... இத்யாதி நீங்கள் வருவீர்களா, மாட்டீர்களா என்றிருந்தது. மாறித் திடீரென அந்த இறுக்கம் தளர்ந்ததும், இறுக்கம் அவிழ்ந்த வேகத்தில், சக்தியிழந்து குழந்தை மாதிரி உறங்கிவிட்டார்! அவ்வளவே! சொல்லப் போனால் மருந்தின் உதவியின்றி அவர் தானாகத் தூங்குவது இதுதான் முதல் தடவை. தூங்கி எழுந்தால் அவரது உடல்நிலை எவ்வளவோ முன்னேறியிருக்கும். அதனால்

வீணாக கவலைப்படாதீர்கள்; பயம் அடைய வேண்டாம்'' என்று நர்ஸ் கூறவும் மனோகரி ஓரளவு அமைதி அடைந்தாள்.

ஆனாலும் உள்ளூரக் கலக்கம்தான். இவள் வேறு ஒப்பாரி வைத்து விடக் கூடாதே என்று நர்ஸ் மறைக்கிறாளோ என்று அச்சம்தான். எனவே, தினகரனையே கவனித்தபடி, அந்த அறையில் ஓர் ஓரமாகப் போடப்பட்டிருந்த திவானில் சென்று அமர்ந்தாள்.

தினகரனின் கை பற்றி பல்ஸ் பார்த்த நர்ஸ் திருப்தி அடைந்தவள் போன்று, அவனது கையை அவனுக்கு வசதியாக இருக்கும் வண்ணம் படுக்கையில் வைத்து நோயாளி திரும்பியதில் சற்றுக் கலைந்திருந்த போர்வையை சீர் செய்துவிட்டு, மனோகரியின் அருகே வந்து அமர்ந்தாள்.

''என் பெயர் கல்பனா. இங்கே பகல் 'ட்யூட்டி'. நேற்று மிஸ்டர் தினகரன் தவித்ததைப் பார்த்துவிட்டு, அவரது டயரியில் நம்பர் பார்த்து உங்களுக்கு நான்தான் டெலிஃபோன் செய்தேன். கண் இல்லை என்று நீங்கள் அவரை வெறுத்து விடக் கூடும் என்று மிஸ்டர் தினகரனுக்கு சந்தேகம் என்று நினைக்கிறேன். மயக்கத்தில் அதுமாதிரி அவர் புலம்பவும் எனக்கு மனது பொறுக்கவில்லை. இந்த விபத்தே, திருமணம் ஆன பிறகு நேர்ந்திருந்தால் கூடச் சேர்ந்து வைத்தியத்துக்கு அலைந்திருக்க மாட்டீர்களா? இப்போது மட்டும் என்ன என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் இரவுவரை வரவில்லை என்றதும் எனக்கும் நம்பிக்கை விட்டுப் போயிருந்தது..''

''ரயில் இப்போது தானே வந்தது?!'' என்றாள் மனோகரி, கல்பனாவைப் பின்பற்றி மெல்லிய குரலி லேயே கிசுகிசுப்பாக.

விசித்திரமாய் நோக்கிவிட்டு, ''ரயிலில் வருவா னேன்? ஏதாவது ஒரு விமானத்தைப் பிடித்து வரவேண் டியதுதானே. எங்களைப் போல நீங்கள் காசுக்குக் கணக் குப் பார்க்க வேண்டுமா, என்ன?'' என்று கல்பனா கேட்ட பிறகுதான் மீனாட்சியாக இங்கே அமர்ந்திருப்பது மனோகரிக்கு நினைவு வந்தது.

அப்போதுகூட அவள் உண்மையைச் சொல்லியி ருக்கலாம். ஆனால் அதுபற்றி எண்ணிக்கூடப் பாராமல்.. ''அது... அது... வந்து அம்மா அப்பாவுக்கு நான் இப்படி... திருமணம் ஆகுமுன் இப்படிப்பட்ட நிலைமை யில் இவரிடம் வருவது பிடிக்கவில்லை.. கை... கைச் செலவுப் பணத்தில் இதற்கு மேல் எங்கே போவது?'' என்று சிரமப்பட்டு யோசித்து ஏதேதோ சொல்லி, அவ ளது ரயில் பயணம் விந்தையல்ல, இயல்புதான் என்று நிலைநாட்டி முடித்தாள்.

''ஓகோ!'' என்ற நர்ஸ், ''நல்ல வேளை நீங்க, உங்கள் பெற்றோரைப் போல இல்லை!'' என்று பாராட்டி னாள். ''ஆனால், அவர்களையும் குற்றம் சொல்ல முடி யாது. கண் அனேகமாகப் போய்விட்ட நிலையில் எதிர்காலம், ஆரோக்கியம் எல்லாமே என்னஆகுமோ என்ற நிலையில் உள்ள ஒருவரோடு மகளது வாழ்வைப் பிணைக்க அவர்கள் தயங்குவது நியாயம்தான்'' என்று கல்பனா தொடர்ந்து உரைக்கவும், அப்படியானால் மீனாட்சியையும் ஒரேயடியாகக் குற்றம் கூற முடியாது என்று உள்ளூர மனோகரியும் சொல்லிக் கொண்டாள்.

கூடவே, தினகரனின் ஆரோக்கியம் பற்றிய நர்சின் பேச்சை விட்டு விடாமல் பற்றி, ''தினகரனுக்கு இப் போது எப்படி இருக்கிறது சிஸ்டர்? விபத்தினால் அவ ருக்கு நேர்ந்திருக்கும் பாதிப்புகள், அவற்றின் சிகிச்சை கள்... தயவு பண்ணிச் சொல்லுங்கள் கல்பனா'' என்றாள் கெஞ்சலாக.

மனோகரி கேட்ட விவரங்களை முழுமையாகத் தர, நர்ஸ் கல்பனாவுக்கு முதலில் அவ்வளவாக விருப்பம் இல்லை.

முதல் காரணம், ஒரு நோயாளியின் நோய் பற்றிய விவரங்களை அடுத்தவர்களிடம் சொல்லக் கூடாது என் பது, தினகரனுக்கும் இந்தப் பெண்ணுக்கும் திருமணம் ஆகியிருந்தால் அவள், அறிந்து கொள்ளும் உரிமை படைத்த மனைவி! இப்போது, எப்படியும் அன்னியள் தானே?

அடுத்து, இது விபத்து, போலீஸ் கேஸ், இதில், கல்பனா ஏதாவது சொல்லப் போய், அதைத் தினகரனு டைய வருங்கால மனைவி இசகுபிசகாய் வாயை விட்டு வைத்தாளானால், அது நர்ஸ் கல்பனாவை மிகவும் பாதிக்கும்!

இறுதியாக ஒரு மனித உடம்பைப் பொறுத்தவரை யில் இப்படித்தான் என்று உறுதியாக எதையும் சொல்ல முடியாது. பார்வைக்கு பலசாலி போலத் தோன்றுவான். உள்ளே ஒன்றும் இராது. ஒரு தட்டில் விழுந்து விடுவான். யானை மிதித்தும் பிழைத்து விடுவான், புல் தடுக்கியே இறந்தும் போவான். 'தூங்கையிலே வாங்குகிற மூச்சு, அது திசைமாறிப் போனாலும் போச்சு' என்று சொல்வார்

கள். அதற்கேற்ப, இப்படித்தான் என்று சொல்ல முடியாத படி சிக்கலான அமைப்பைக் கொண்டது நம் உடம்பு.

சும்மா இருக்கும் உடம்புக்கே இப்படி! இன்னமும் விபத்தில் சிக்கி, இத்தனை காயங்களுடன் கிடப்பவனைப் பற்றி என்னவென்று இந்தப் பெண்ணுக்கு எடுத்துச் சொல்வது!

பொதுவாக மனித உடம்பு உயிர் பிழைத்து நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கான முயற்சிகளைத் தானாகவே செய்வதுதான். தினகரனும் பிழைத்து விடும் பிடிவாதத்துடன் போராடத்தான் செய்தான்.

ஆனால் உயிர் என்பது மனிதன் கையில் இல்லையே! ஒருவன் நோயாளியாக இருந்தாலும், நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவராக இருந்தாலும், உயிரை உடம்போடு ஒட்டவைக்கும் வலிமை இந்த இருவருக்கும் கிடையாதே! அதை அந்தக் கடவுள் அல்லவா முடிவு செய்ய வேண்டும்!

தினகரனையே நோக்கியவாறு, நர்சின் பதிலுக்காகக் காத்திருந்த மனோகரி, கல்பனாவிடமிருந்து சற்று நேரம் பதில் வராது போகவும் பயந்து விட்டாள். ''என்ன சிஸ்டர், அவர் நிலைமை ரொம்பவும் மோசமா? நீங்கள் டெலிஃபோனில், கொஞ்சம் சீரியஸ் என்றுதானே சொன்னீர்கள்? நீங்கள் செய்யும் சிகிச்சை எதுவும் பலனளிக்கவில்லையா, அதுதான் இப்படி அசைவே இல்லாமல் படுத்திருக்கிறாரா?'' என்று அவள் கலங்கித் தவிக்கவும் கல்பனா ஒரு முடிவுக்கு வந்தாள்.

உடனடியாகத் தினகரனுக்கு எந்தவித அபாயமும் இல்லை என்பதை வலியுறுத்தி விட்டு, விபத்து, அதைத்

தொடர்ந்த சிகிச்சை விவரங்களைச் சுருக்கமாக விவரித் தாள்.

எதிர்பாராத வண்ணம் பக்கவாட்டிலிருந்து வேக மாக வந்த வண்டி ஒன்று தினகரனின் காரோடு மோதி விபத்து நேர்ந்ததையும், மற்ற அடிகளோடு முன்புறக் கண்ணாடிச் சிதறல்கள் கண்களில் உட்புறம் வரை பாய்ந்து விட்டதையும் சொன்னாள்.

''இன்னொருவர் என்றால் பிழைப்பது கூட அரிது தான். மோதிக் கொண்ட காரில் இருந்த சில பேர் இறந்து போனார்கள். ஆனால் தினகரன் நல்ல திடகாத்திரமான உடல் உள்ளவர் என்பதாலும், மண்டை ஓட்டில் அடிபடா ததாலும் அவர் பிழைத்திருப்பதையும் பற்றி உணர்ந்தாள். இன்னமும் மதில்மேல் பூனை நிலைமைதான் மோனிகா. சாதாரணமாக என்றால் இவரை இன்டென்சிவ்கேர் யூனிட்டில் தான் வைத்திருப்பார்கள். ஆனால் இவரை விட மோசமான நிலையில் நிறையப் பேர் அங்கே அத்தனை படுக்கையிலுமாக இருப்பதாலும், முதலில் இவருக்கு இன்னும் கொஞ்சம் நினைவிருந்து இப்படிச் செய்யும்படி கூறிப் பணமும் இருப்பதைக் காட்டியதா லும்தான் இங்கே இவரை இருக்க வைத்தார்கள். ஆனால் எந்த நிமிடமும் நிலைமை சீர்கேடு அடையக் கூடும் என்பதால்தான் அருகிலேயே இருந்து கவனித்து, உட னடி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வதற்காக நான் இங் கேயே இருக்கிறேன்'' என்றவள், மனோகரியின் கண்க ளில் பீதியைக் காணவும், ''சீர்கேடு அடைய வேண்டும் என்பது இல்லை மோனிகா, குணமும் ஆகலாம். இன்று காலை வரை எனக்குக் கூட உள்ளூர சந்தேகம்தான்.

ஆனால், உங்களை அவர் உணர்ந்ததும், இந்த இயல்பான உறக்கமும், அவர் பிழைத்து விடுவார் என்ற நம்பிக்கையை எனக்குத் தந்திருக்கின்றன'' என்று முடித்து முறுவலித்தாள்.

என்னை உணர்வதா? மீனாட்சியை எப்படித் தினகரன் என்னில் உணர முடியும் என்று உள்ளூரக் கலங்கினாள் மனோகரி.

ஏதாவது ஒரு புலன் செயலிழந்தால் அதை ஈடுகட்டும் விதமாக மற்ற புலன்கள் அதிக சக்தி பெற்றுவிடும் என்பார்கள். ஆனால் இவனுக்கு, மீனாட்சிக்கும் மனோகரிக்கும் உள்ள வேறுபாடு தெரியவில்லையே?

மோனி என்ற சொல்லே போதுமானதாய் இருந்ததா? அல்லது பிரித்துணரும் அளவுக்கு இன்னமும் அவனது புலன்கள் கூர்மை பெறவில்லையா?

காரணம் பின்னதாக இருந்தால் அந்த அளவுக்கு அவனது உடல் நலம் தேறிய பின் நிலைமை என்ன ஆகும்?

இந்தக் குழப்பம் பற்றி எதையும் கல்பனாவிடம் பகிர்ந்து கொள்ள முடியாமல், ''ஒருவேளை... ஒரு வேளை நான் இங்கிருந்து செல்ல நேர்ந்தால்..அது தினகரனைப் பாதிக்குமா சிஸ்டர்?'' என்று உள்ள நிலைமை அறிய மனோகரி முயற்சித்தாள். பாதிப்பில்லை என்று தெரிந்தால் இப்போதே இந்த நர்சிடம் உண்மையைப் பகிர்ந்து விட்டு விலகிப் போய் விடலாமே!

''நிச்சயமாய்!'' என்று அடித்துச் சொன்னாள் கல்பனா. நீங்கள் வந்து விட்டது தெரிந்த பிறகு அவரது முன்னேற்றம் பற்றி நான் முதலிலேயே சொல்லவில்லை? பிறகு ஏன்.. ஏன் மோனி அப்படி இடையில் விட்டுவிட்டுப் போய்விடலாம் என்று வேறு ஐடியா வைத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டபோது அவளது குரலில் கடுமை பரவியிருந்தது. ''அதற்கு நீங்கள் வராமலே இருந்திருக்கலாம் வந்து இப்படி ஒரு பொய்யாசை காட்டாமலே இருந்திருக்கலாமே!''

''ஐயோ அப்படியில்லை, கல்பனா! என்... என் பெற்றோர் பற்றிச் சொன்னேன் இல்லையா? ஒரேயடியாய் அவர்களை முறித்துக் கொள்வதா என்று..'' என்று சமாளிக்க முயன்றவளைக் கல்பனா இடைவெட்டி, ''அதனால் அவர்கள் உயிருக்கு ஒன்றும் ஆபத்து வந்து விடாதில்லையா? தினகரன் விஷயம் அப்படியல்ல. அதனால் முதலில் அவரைக் கவனியுங்கள்'' என்று கண்டிப்புடனேயே கூறவும், ''கட்டாயம்!'' என்று உற்சாகம் காட்டியே ஒத்துக் கொண்டாள் மனோகரி.

தூக்கம் கலைந்து 'மோனி' என்று அழைப்புடனேயே தினகரன் விழிப்புற்றபோது, தன் முடிவு சரியே என்று எண்ணவும் செய்தாள்.

அன்று முழுவதும் அவளது கையைப் பற்றியிருந்ததே தினகரனுக்குப் போதுமானதாக இருந்தது.

ஆனால், மறுதினம் அவளது கை விரல்களை வருடியபடி அவன் கேட்ட கேள்வி, அவளை அதிர வைத்தது.

# 6

**தூ**க்கம் கலைந்த தினகரன் அவளை அழைத்தது மட்டுமின்றி முன் போலவே கையையும் ஏந்தவும், மனோகரியும் ஓடிச் சென்று அவனது கையைப் பற்றிக் கொண்டாள்.

''இதில் உட்கார்ந்து கொள்ளுங்கள், மோனிகா'' என்று கல்பனா ஒரு நாற்காலியை அவள் புறம் நகர்த்தவும், பிடித்த கை விடாமலே அதில் அமர்ந்தாள்.

அதற்குள் தினகரன் ஏதோ முயன்று பேசவும் அதைக் கவனித்துக் கேட்டாள்.

''இருக்கிறாயா, மோனி!'' என்று ஓர் ஆறுதல் பெருமூச்சு விட்டவன், தொடர்ந்து, ''நீ வந்தது, பேசியது எல்லாம் இந்த மயக்கத்திலோ, தூக்கத்திலோ ஏற்பட்ட பிரமையோ, நீ வரவே இல்லையோ என்று நினைத்துப் பயந்து விட்டேன்!'' என்று அவன் எழும்பாத குரலில் சற்று சிரமப்பட்டு உரைக்கவும், மனோகரியின் மனம் அப்படியே உருகிப் போய் விட்டது.

தன் இரு கைகளையும் கொண்டு, அவனது பெரிய கையைப் பொத்தி லேசாக அழுத்தினாள். ''நான் இ... இங்கேயே தான் இருக்கிறேன். நீங்கள் விரும்பும் வரை இங்கேயேதான் இருப்பேன்!'' என்றாள் மெல்லிய குரலில்.

''அப்படியானால் வாழ்நாள் முழுவதும் என் அருகிலேயேதான் இருந்தாக வேண்டும்!'' என்று முறுவலித்த தினகரனின் உதடுகள், உடனேயே சுருங்கின.

சில வினாடிகள் அப்படியே இருந்தவன், ''ஏதோ மிகவும் முக்கியமாய் ஒன்று செய்ய வேண்டியிருக்கிறது, மோனி! என்னவென்று நினைவு வரமாட்டேன் என்கிறதே!'' என்றான் குழப்பமும் கலக்கமுமாக.

''முதலில் நன்றாக ஓய்வு எடுங்கள் தினகரன். உடம்பு சீக்கிரம் குணமாகும். குணமாகி விட்டால் எல்லாமே நினைவு வரும்'' என்றபடி சிரிஞ்சில் ஏதோ மருந்தை இழுத்தபடி கல்பனா அருகில் வந்தாள்.

''பொறுங்கள் நர்ஸ்!'' என்றான் தினகரன் அவசரமாக. ''அதற்குள் என்னைத் தூங்க வைத்து விடாதீர்கள். நான் சற்று யோசிக்க வேண்டும்... ப்ளீஸ்...''

சற்று தயங்கி, ''உங்களுக்கு வலிக்கிறதில்லையா? அதனால்தான்...'' என்றாள் நர்ஸ்.

''பரவாயில்லை! நான் சகித்துக் கொள்வேன். நான் செய்ய வேண்டியது மிகமிக முக்கியமான விஷயம். அதைச் செய்யாமல் இருப்பது தப்பு... அது என்ன!'' என்று தினகரன் திணறினான்.

அவனது தவிப்பு தாங்காமல் மனோகரி வேகமாக யோசித்தாள். தொழில் தொடர்பை அவன் யோசித்துப் பயனில்லை. அதனால்...

''உங்கள் அம்மா!'' என்று அவள் தனக்குத் தோன்றியதைச் சொல்லவும், ''ஆமாம், ஆமாம்! அம்மாதான்!'' என்றான் அவன் நன்றியோடு. ''அம்மாவுக்குச் சொல்ல... வேண்டும், மோனி. இதமாக மெதுவாக நம்பிக்கை ஊட்டும் விதமாக... இப்போதே தப்பும் தவறுமாக அவர்களுக்கு ஏதேனும் தகவல் கிடைத்து,

கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்களோ என்னவோ?... பயப்பட வேண்டாம் என்று... நீ இருக்கிறாய் என்று... சேர்ந்து வருகிறோம் என்று...

விரும்பியதைச் சொல்லி முடிக்குமுன் அந்த அதிகப் பிரயாசையில் தினகரனுக்கு மூச்சு வாங்கவும் நர்ஸ் குறுக்கிட்டாள். "எல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள், நல்லபடியாகக் குணமாகிற வேலையை மட்டும் பார்த்தீர்கள் என்றால், எல்லோருக்கும் அது நல்லது மிஸ்டர் தினகரன். உங்கள் அம்மாவுக்கும்தான். இதற்கு மேல் பேசாமல் தூங்குங்கள்!" என்று கண்டிப்பான குரலில் கூறியபடி, சிரிஞ்சிலிருந்த மருந்தை, அவனுக்கு இறங்கிக் கொண்டிருந்த டிரிப்பில் செலுத்தினாள் கல்பனா.

"ஆமாம், தினகரன், நான் உங்கள் கூடவே இருந்து, கூட்டி வருவதாகத் தெரிவிக்கிறேன். நீங்கள் வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள்" என்று மனோகரி கூறவும், ஆறுதல் அடைந்த அவன், மருந்தின் வேகமும் சேர்ந்து கொள்ள, மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

மீண்டும் அவனது துயில் கலைந்த போது, மாலையாகி விட்டிருந்தது.

முன்னைவிடத் தெளிவுடன் அவன் பேசிய போது, தினகரனின் குரலும் சற்று பலம் பெற்றிருந்தது. உறங்குமுன் இருந்த அதே நினைவாய்த் தாயார் பற்றி வினவினான்.

அவனுக்கு இதம் தரும் வண்ணமாய், "நீங்கள் விரும்பிய மாதிரியே உங்கள் அம்மாவிடம் தெரிவித்தாயிற்று" என்றாள் மனோகரி.

''அப்படியானால், அம்மா கவலையகன்று இருப் பார்கள். இல்லையா?'' என்று ஆவலாகக் கேட்டவனி டம், ''மகனுக்கு விபத்து என்றால் கவலை இராதா? அதுவும் மருத்துவ மனையில் இருக்கிறீர்கள் எனும் போது? குணமாகிவிடும், விரைவில் வருவோம் என்ற பிறகு கொஞ்சம் அமைதியுற்றிருப்பார்கள் என்று நினைக் கிறேன்'' என்றாள் அவள் அவனுக்கு ஆறுதலாக இருக் கும் வண்ணம்.

உண்மையில் தினகரனுடைய தாயார் தேவகியிடம் இந்த விபத்து விவரம் சொல்வது மனோகரிக்கு மிகவும் கடினமாக இருந்தது.

அவருக்கு ரத்த அழுத்தம் போல ஏதாவது பாதிப்பு கள் இருக்குமோ என்று அவளுக்கு அச்சம். அப்படி ஏதாவது இருந்து மகனின் விபத்து பற்றி கேட்டதும் அவருக்கு ஏதேனும் ஆகி விட்டால்?

தினகரனை வெறும் நோயாளியாக நினையாமல் ஓர் உறவினன் போல, ஓர் உடன் பிறந்தானைப் போலக் கருதி அவனது நலன்களில் அக்கறை காட்டிய கல்பனா விடமே ஆலோசனை கேட்டு அதன்படியே மனோகரி நடந்து கொண்டாள்.

தினகரனிடம் டைரியைப் பார்த்து நம்பர் கண்டு பிடித்து, டெலிஃபோன் நம்பருடன் தொடர்பு கொண் டாள்.

டெலிஃபோனை எடுத்தவரிடம், வீட்டுக்காரியஸ் தரை அழைக்கச் சொன்னால், அவரேதான் காரியஸ்த ராக இருந்தார்.

அவரிடம் சுருக்கமாக விவரத்தைச் சொல்லி தேவகி அம்மாள் அதிர்ச்சியில் மயக்கம் போல எந்த பாதிப்புக்கு ஆளானாலும் உடனடி முதல் உதவிக்கு ஏற்பாடு செய்யும்படி கூறிவிட்டு அதன்பிறகே விபத்து பற்றித் தினகரனுடைய தாயாருக்கு மனோகரி தெரிவித்தாள்.

அலறி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாவிட்டாலும், தேவகி அம்மாள் உள்ளூர அடிபட்டுப் போனதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

கணவனை இழந்து, நாலு சுவருக்குள்ளேயே உலகம் என்று வாழும் பெண்மணிக்கு, மகனுக்கு ஒன்று என்றால் எப்படி தவிப்பாக இருக்கும் என்று உருகிய மனோகரி, அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் விபத்தைப் பற்றி ரொம்ப சாதாரணமாக - சாதாரணம் போலப் பேசினாள்.

''அப்படியானால், நீ ஏனம்மா பாவம், வீட்டை விட்டு அவன் அருகில் வந்து கிடக்கிறாய்?'' என்று தேவகி கேட்கவும், 'பாயின்ட்'டைப் பிடித்து விட்டார்களே என்று சற்றுத் திகைத்து, ''அதில்லை. இவருக்கு விபத்து என்றதும், கொஞ்சம் பயந்து போய் வந்து விட்டேனா, நான் ஹைதராபாத் மிருகக்காட்சி சாலை, நிஜாம் மன்னரின் அரண்மனை எல்லாம் சுற்றிப் பார்த்து விட்டுப் போகலாம் என்று இருக்கிறேன்!'' என்று மனோகரி சமாளிக்க நேர்ந்தது.

''பின்னே, எத்தனை நாட்களில் வீட்டுக்குப் போகப் போகிறாய்?''

''அது... அது...'' என்று தயங்கி விட்டு, ''உங்கள் மகன் போகச் சொன்னதும்!'' என்று உரைத்து விட்டு, சாமர்த்தியமாகப் பதில் கூறியதாகத் தன்னையே தட்டிக் கொடுத்துக் கொண்டாள் மனோகரி.

ஆனால், ''என் மகன் பிறருக்குத் துணை நின்று பழக்கமே தவிர, தான் பிறர் துணை தேடுகிறவன் அல்ல; அதனால் முழு உண்மைகளையும் எனக்குச் சொல்லி விட்டால், அறியாததால், படுகிற இந்த அவதி இராது; உண்மையைக் கூறுகிறாயா, அம்மா! சொல்லு'' என்ற பிறகு அவளால் வேறு எதுவும் சொல்ல முடியவில்லை.

விவரம் அறிந்ததும், ''இப்போதுதான் என் மகன் தன் தொழில் பற்றி மகிழ்ச்சியோடு இருக்கத் தொடங்கியிருந்தான்!'' என்றபோது, அந்தத் தாயின் குரலில் வேதனை மிகுந்திருந்தது.

வினாடி மவுனத்தின் பின், ''தினகரனுக்குத் துணையாக அருகிலேயே இருப்பாயா, அல்லது முதலில் சொன்னது போல மெய்யாகவே ஊர் சுற்றப் போய் விடுவாயா?'' என்று அவர் கேட்கவும் மனோகரிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

பாவம் என்று பார்த்தால் பட்டென்று மண்டையில் குட்டுகிறாரே என்று ஆத்திரம் வந்தபோதும் மனோகரி தன்னை அடக்கிக் கொண்டாள்.

மகனைப் பற்றிய கவலையில் நிலைகுலைந்திருக்கும் நேரம். திருப்பிக் கொடுப்பது சரியல்ல என்று அவள் எண்ணியபோதே, மீண்டும் தேவகியின் குரல் ஒலித்தது. ''கோபித்துக் கொண்டு விடாதே, மோனி. நீ சின்னப் பெண். அறைக்குள்ளேயே கிடப்பது சிரமம்தானே என்று

நினைத்தேன். அப்புறம், அவன் கண் பற்றிச் சொன்னாயே மாற்றுக் கண் வைத்தால் சரியாகி விடாதா? எனக்கும் அவனுக்கும் ரத்தப்பிரிவு ஒன்றேதான். அதனால்...'' என்று நிறுத்தவும் மீண்டும் மனோகரிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''மாற்றுக் கண்ணா? அதற்கு உங்கள் கண்களைக் கொடுப்பதாக ஐடியாவா? உயிரோடு இருப்பவர்களின் கண்களை எடுத்து அடுத்தவர்களுக்கு மகனாகவே இருந்தாலும்கூட மற்றவர்களுக்கு வைக்கச் சட்டத்தில் இடமில்லை...'' என்றவளுக்குச் சட்டென இன்னொன்று தோன்ற, ''அதற்காகத் தற்கொலை செய்து தியாகியாகி விடலாம் என்று எண்ணாதீர்கள். அப்புறம் உங்கள் பிள்ளை மனம் ஒடிந்து போவார்... அது மட்டுமில்லை. அந்த மாதிரி உங்கள் கண்களை ஏற்றால், அதன் பிறகு குற்ற உணர்வின்றி ஒரு கணம் அந்தக் கண்களைக் கொண்டு அவரால் பார்க்க முடியுமா? அதனால் சும்மா முட்... தப்புத் தவறாக ஏதாவது செய்து விடாதீர்கள்?'' என்றாள் அவசர அவசரமாக.

மீண்டும் எதிர் முனையில் சிறு மவுனம் நிலவியது.

''ஹய்யோ... அங்கே இருக்கிறீர்கள்தானே?'' என்று மனோகரி பதட்டத்துடன் வினவ ''இருக்கிறேன். இருக்கிறேன்'' என்றார் தேவகி ஒருமாதிரிக் குரலில்.

ஒரு முடிவுக்கு வந்தவர் போலத் தொடர்ந்து, ''இதோ பாரம்மா, தினகரனுடைய தந்தைக்குப் பிறகு நான் இந்த வீட்டை விட்டு வெளியே சென்றது இல்லை. ஆனால், என் மகனுக்கு ஓர் ஆபத்து என்ற நிலையில் கூட, அதே விரதமாய் நான் இருப்பதற்கில்லை. மெய்யா

கவே அவனுக்கு ஆபத்து என்றால் சொல்லு. நான் வருகிறேன். மற்றபடி, நல்லபடியாக நீங்கள் இருவரும் வரும்வரை, முடிந்த அளவு அவனுக்காகக் கடவுளிடம் வேண்டியபடி இங்கேயே உங்களுக்காகக் காத்திருக்கி றேன்'' என்று முடித்தார்.

ரிசீவரை வைத்து விட்டுத் திரும்பிய மனோகரிக்கு நெற்றியெல்லாம் வியர்த்து விட்டிருந்தது. ஏதோ, மலை யேறி இறங்கி வந்த உணர்வு.

''இந்தப் போடு போடுகிறார்கள், இவர்களைப் போய் ஒன்றும் தெரியாத பழங்காலம் என்பதுபோல், மீனா சொன்னது எவ்வளவு பெரிய தப்பு!'' என்று வாய்விட்டு முணுமுணுத்தவளுக்கு ''யார் அந்த மீனா!'' என்று, அருகில் நின்ற கல்பனா பேச்சு வாக்காய்க் கேட்கவும் மூன்றாம் முறையாகத் தூக்கி வாரிப் போட் டது.

''அவள்.. அவள்...'' என்று சற்றுத் தடுமாறி விட்டு, ''உறவுக்காரப் பெண்...'' என்று சொல்லும்போதே, தினக ரின் முன்னிலையில் இந்த நர்ஸ் மீனா பற்றிப் பேசி விடக்கூடாதே என்ற அச்சம் தோன்றிவிட, ''தினகரு டைய அம்மா பற்றி ஏதோ கேள்விப்பட்டதைச் சொல்லி யிருந்தாள். அவர்களோடு பேசினால் வேறு மாதிரித் தெரிகிறார்கள்...'' என்று ஒருவாறு சமாளித்து வைத்தாள்.

'ரவுண்ட்ஸ்' வந்த டாக்டர், தினகரனைப் பரிசோ தித்து விட்டு ''நல்ல முன்னேற்றம்'' என்றார்.

இதே வேகத்தில் குணமடைந்தால், பத்தாவது நாள் வீட்டுக்குக் கூடப் போய் விடலாம் என்றார்.

மனோகரியைக் குறிப்பு காட்டி வெளியே அழைத்துப் போய், "கண் விஷயம்தான் அவ்வளவாக நம்பிக்கை இல்லை, அம்மா. அது விஷயமாக அவருக்கு அனாவசியமாய்த் தவறான ஆசைகளை வளர்த்து விடாதீர்கள். பிறகு, உண்மை அறியும்போது பாதிப்பு அதிகமாக இருக்கும். இல்லை என்று ஆனது கிடைத்தால் மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கிடைக்காமல் போனால்? பார்க்கலாம் ஆனால் அவர் மனம் அமைதியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறிச் சென்றார்.

மனோகரி மீண்டும் அருகில் வந்ததுமே, "டாக்டர் என்ன சொன்னார்?" என்று தினகரன் வினவினான்.

டாக்டரின் பேச்சை வடிகட்டி, "நீங்கள் அமைதியாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்" என்றாள் மனோகரி.

"அதாவது... அமைதி குலையக் கூடிய விஷயம் இருக்கிறது. கண் பற்றி..." என்று தொடங்கியவன், தானாகவே பேச்சை நிறுத்தி, கையை நீட்டினான்.

மனோகரியின் கையை இறுகப் பற்றியபடி சற்று நேரம் பேசாதிருந்தான்.

பிறகு, "நீ என் அருகிலேயே இரு, மோனி. சூழ இருக்கும் இருளில், உன்னுடைய இந்தக்கை மட்டும் தான் வாழ்வுக்கு ஒரே ஆதாரமாகத் தோன்றுகிறது" என்று கரகரத்தக் குரலில் அவன் கூறவும், சற்று முன் எண்ணியது அடியோடு மறந்து, "உங்களை விட்டு நான் ஒரு போதும் விலகிப் போக மாட்டேன்" என்று உறுதி கொடுத்தாள் மனோகரி.

அதன்படியே, அவன் அருகிலேயே இருக்கவும் செய்தாள். அவளது கையும் எப்போதும், தினகரனின் பிடியிலேயே இருந்தது. மொத்தமாய் அவளது கையைத் தன் கையில் அடக்கியபடியோ, வருடியபடியோ தினகரன் பொழுதைக் கழித்தான்.

அப்படி வருடிக் கொண்டு இருந்தபோது திடுமென, ''மோனி, உன் கையில் ஏதோ வித்தியாசமாகத் தெரிகிறதே'' என்று தினகரன் கேட்கவும், அன்று மனோகரிக்கு நாலாவது முறையாகத் தூக்கி வாரிப் போட்டது.

## 7

அவளது கையில் வேறுபாடு தெரிவதாகத் தினகரன் கூறவும் சற்று நேரம் மனோகரியால் மூச்சு விடக்கூட முடியவில்லை.

நிமிடத்துக்கு நிமிடம் தினகரன் நல்ல ஆரோக்கியம் பெறுவதாகக் கல்பனா கூறியது சரிதான்.

உடல்நலம் பெருகப் பெருக, புலன்களும் வலுப் பெற்று விட்டன. தொடு உணர்ச்சி மூலமாகவே அவளை அவளது ஆள்மாறாட்டத்தைக் கண்டுபிடித்து விட்டான்.

இனி இங்கிருந்து விரட்டி அடிக்கப் போகிறான்!

வெறுமனே விரட்டுவானா? அல்லது சிறைக்கே அனுப்புவானா? எப்படியோ, இனி தினகரனைப் பார்க்க முடியாது!

மனோகரி திகைப்புற்று அசையத் துணிவின்றி அமர்ந்திருக்க, தினகரன் இலகுவான குரலில் தொடர்ந்து

பேசினான். ''முன்பெல்லாம் சிங்கம், புலி மாதிரி, நீள மாய் நகம் வளர்த்திருப்பாயே, இப்போது ஒன்றையும் காணோமே'' என்று லேசாய்ப் புன்னகை செய்தான்.

அவனது புன்னகை உள்ளூர நம்பிக்கையூட்ட, ''உ... உங்களுக்குப் பிடிக்கவில்லையோ என்று வெ... வெட்டிவிட்டேன்'' என்று சமாளிக்க முனைந்தாள் மனோகரி.

மென்மையாக அவளது விரல் நுனிகளை வருடிக் கொடுத்தபடி, ''பாதாம் எண்ணை, லோஷன் எல்லாம் தடவி வளர்த்தது என்று பெருமையாகச் சொல்லுவாயே! அப்படி ஆசையாக வளர்த்த நகங்களை எனக்கு பிடிக் காதோ என்று சந்தேகத்தில் வெட்டி விட்டாயாம்மா! என் மீது எவ்வளவு அன்பு உனக்கு!''. என்று உருகினான் அவன்.

உலகமகா ஏமாற்றுக்காரியாகத் தன்னை உணர்ந்து மனோகரி தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.

''ஆனால் இது மட்டுமாடா, நீ எனக்காகச் செய் தாய்? ரொம்பவும் குரல் கீச்சிடுகிறது. கொஞ்சம் அமர்ந்த குரலில் பேசு என்று ஒரு தரம் ஒரே தரம்தானே சொன்னேன்? இப்போது பேச்சு, சிரிப்பு எல்லாம் அடி யோடு மாறிவிட்டதே! 'வாய்ஸ் மாடுலேஷன்' பயின்று குரலைப் பதப்படுத்தி இருக்கிறாய்! எனக்காக என்ன வெல்லாம் செய்திருக்கிறாய்... ஆனால்... நான்... மோனி, என் பிழைக்காக நீ என்னை மன்னிப்பாயா, கண்மணி?'' என்று கெஞ்சுதலாகக் கேட்டான்.

''மன்னிப்பா? எதற்கு...?''

''என் விருப்பத்துக்காக, எனக்காக இன்று நீ இந்தப் பாடு பட்டிருக்கிறாய்? நீ இங்கே, என்னைப் பார்க்க வரவே மாட்டாயோ என்று சந்தேகப்பட்டேன் பார் அதற்காகத்தான்! நோயாளியின் பலவீனம் என்று அதை நீ மன்னித்து விட வேண்டும், கண்ணம்மா!'' என்று அவன் கேட்டபோது, மனோகரிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

எப்படியோ, அவன் மீனாட்சியைச் சரியாகத்தான் எடை போட்டு இருக்கிறான் என்று ஒரு மூலையில் பாராட்டக் கூடத் தோன்றியது.

அது முடியாததால் தலை குனிந்து பேசாமல் அமர்ந் திருந்தாள் அவள். அவனுக்குப் புரிகிற சேதியாக, அவனது விரல்களை மட்டும் ஒருதரம் லேசாக அழுத்தி விட்டாள்!

சற்றுநேரம் இப்படியே அமைதியாகக் கழிந்தது.

இரவு தொடங்குகிறது. இப்படியே தினகரன் உறங்கி விடக் கூடும் என்று மனோகரி எதிர்பார்த்தாள். முன் தினம் இரவு தூங்காததும், அன்றைய அதிர்ச்சிகளும் மன உளைச்சல்களுமாக அவளுக்கும் கண் சொக்கியது.

திடுமென அவளது இரு மோதிர விரல்களையும் தினகரனின் கை தடவிப் பார்த்துப் பரிசோதித்தது.

''மோனி, உன் வீட்டில் திருமண உறுதி செய்த போது நான் உனக்கு அணிவித்த மோதிரம் எங்கே? உயிருள்ளவரை கழற்ற மாட்டேன் என்று என்னிடம் சத்தியம் செய்தாயே! இப்போது... இப்போது... ஏன் மோனி? இதற்கு என்ன அர்த்தம்?''

என்ன மோதிரம்? இதற்காக இவன் இப்படிப் பதறுகிறானே என்று சற்றுத் திணறிய மனோகரிக்குத் தன் மாமன் மகள் கட்டிய நிச்சயதார்த்த மோதிரமும், அதன் செட் பற்றிய பேச்சும் சமயத்தில் நினைவு வந்து கை கொடுத்தது.

''என்ன அர்த்தம் என்றால்... உங்கள் பரிசைப் பத்திரமாகப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண் டுமே என்பதுதான். நீங்கள் பாட்டில் வைர மோதிரம் வேறு அணிவித்து விட்டீர்கள்! தொலைந்து போனால் என்ன ஆகும்? என் விரலுக்குக் கொஞ்சம் பெரிதாகவே இருந்ததா? எங்கேனும் நழுவி விழுந்து விடக் கூடாதே என்று கழற்றி பீரோவில் பத்திரமாய் வைத்திருக்கிறேன். போதுமா?'' என்று இலகுக் குரலில் கேலி போலப் பேசி முடித்தாள் அவள்.

ஆறுதலாக முறுவலித்து ''போதும்.. போதும்..! ஆனால் மோதிரம் எப்படியம்மா பெரிதாக ஆயிற்று? இறுக்கமாக இருந்தாலும் அமைப்பு மிகவும் பிடித்திருப்ப தால் இதையே எடுத்துக் கொள்கிறேன்'' என்று வாங்கி னாயே நினைவில்லையா?...'' என்றவன் அவளது கை பிடித்து விரல்களை ஆராய மனோகரி மீண்டும் வியர்த்து விறுவிறுத்தாள்.

''உன் கை விரல்கள் எல்லாமே கொஞ்சம் மெல்லிய தாகி விட்ட மாதிரிதான் இருக்கிறது. என்னைப் பிரிந்தால் சாப்பாடு இறங்காமல் மெலிந்து விடுவாய் என்றாயே! மெய்யாகவே மெலிந்து விட்டாய் போல் தெரிகிறதே, கண்மணி! அப்படியா பட்டினி கிடப்பார்கள்? உன் உடம்பைப் பேணத் தெரிய வேண்டாமா?'' என்று

அவன் உருகி உருகிப் பேசப் பேச மனோகரி திணறித் திண்டாடிப் போனாள்.

பாவி, பாதகி, மீனாட்சி! என்னவெல்லாம் புளுகி, ஏமாற்றி வைத்திருக்கிறாள்! இப்படியெல்லாம் குழைந்து குழையடித்து விட்டு, வைர மோதிரம் மிச்சம் என்று சொல்ல அவளுக்கு எப்படி மனம் வந்தது?

நாக்கு ருசிக்காகக் கண்டபடி முழுங்கிவிட்டு, பிறகு அதை சமன்படுத்துவதற்காக அவ்வப்போது அரைப் பட்டினி, முழுப் பட்டினி கிடப்பதும், அது தாளாமல் மீண்டும் முழுங்குவதுமாக இருக்கும் மீனாட்சியின் சற்றே பூசினாற் போலான உடலமைப்பை மனோகரி நினைவுக்குக் கொணர்ந்தாள். ''உ... உடம்பும் கொஞ்சம் குண்டாகத்தானே இருந்தது? அதையும் குறைத்தாக வேண்டும் என்றுதான்...''

இவ்வளவு பொய் பேசுகிறோமே என்று மனோகரி தன்னையே வெறுத்தபடி சமாளிக்க முயன்றபோது, நல்ல வேளையாக, ''மிஸ்டர் தினகரன், இன்னமும் வாழ்நாள் நெடுக முழுவதும் பேசப்போகிறீர்கள் இன்றே பேசி முடித்துவிட வேண்டுமா?'' என்று நர்ஸ் கல்பனா குறுக்கிட்டாள்.

''நெடுகப் பேசத் தேவையான நீண்ட வாழ்நாள் இல்லை என்றால்?'' என்று தினகரன் ஒரு மாதிரிக் குரலில் கேட்கவும், மனோகரிக்குத் திக்கென்றது.

''தினகரன், ப்ளீஸ்...'' என்றாள் வேதனையோடு.

''இல்லாமல் போவானேன்?'' என்றாள் நர்சுக்குரிய அழுத்தத்துடன் கல்பனா. ''இன்று காலை வரைகூட

அப்படிப் பட்டென்று போய்விட ஒரு சிறு வாய்ப்பு இருந்தது.. மோனிதான் வரும்போதே கையோடு உங்களுக்குச் சாகா வரத்தையும் வாங்கி வந்திருக்கிறார்களே! இப்போது போய் இப்படிப் பேசுவானேன்?''

''உண்மையைத் தெரிந்து கொள்ளத்தான். சும்மா கேட்டால் இப்படிச் சொல்லுவீர்களா?'' என்று அவன் முறுவலிக்கவும், இரு பெண்களுக்கும் சிரிப்பு வந்தது.

''பொல்லாதவர், மோனி உன் ஆள்! எச்சரிக்கையோடு இரு. இல்லாவிட்டால் உருப்படியாக ஒன்றும் கிடைக்காது. வாய் வார்த்தையாலேயே சமாளித்து விடுவார்!'' என்று கல்பனா சொல்லிக் கொண்டு இருந்த போதே, ஒரு சிறு தட்டலோடு அறைக் கதவு திறந்தது.

''யூனிஃபார்மி'ல் உள்ளே வந்த இன்னொரு பெண் மணி, ''சாரி கலா. பெரிய பையன் கையை உடைத்துக் கொண்டு வந்து விட்டான். கிரிக்கெட் மோகம்! இருட்டிய பின்னும் விளையாடியிருக்கிறார்கள். பந்தைப் பிடிக்க ஓடிய வேகத்தில் ஏதோ விழுந்து அடிபட்டு விட்டது. அவனை அங்கே பக்கத்திலேயே ஓர் 'ஆர்த்தோ'விடம் கூட்டிப்போய் மாவுக்கட்டுப் போட்டு அவரோடு வீட்டுக்கு அனுப்பிவிட்டு வர நேரமாகி விட்டது. ரொம்ப சாரிம்மா!'' என்று வேகமாகப் பேசியபடி, தினகரன் பற்றிய 'சார்ட்'டை எடுத்துப் பார்த்தாள்.

''மெள்ள, மெள்ள மாலு'' என்றாள் கல்பனா. ''ஓர் ஆத்திரம், அவசரம் எல்லோருக்கும் நேர்வதுதான். அதற்குப் போய் ஏன் இந்தப் பதட்டம்?'' என்று தோழியை அமைதிப்படுத்தி விட்டு, மனோகரியை அறிமுகம் செய்து வைத்து, அன்றைய இரவு வேலையாக தினகர

னுக்கு மேலே என்னென்ன செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு, ''நாளைக்கு நான் வரும்போது நீங்கள் எழுந்து உட்கார்ந்திருக்க வேண்டும், மிஸ்டர் தினகரன்'' என்றுரைத்து, இவர்கள் இருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

''இதோ வந்துவிடுகிறேன்'' என்று அந்த மாலுவிடமும், தினகரனிடமும் பொதுவாகக் கூறிவிட்டு, கல்பனாவைப் பின் தொடர்ந்தாள் மனோகரி.

''என்ன?'' என்று வினவியவளிடம், ''எனக்குத் தங்குவதற்கு ஓர் இடம் வேண்டுமே சிஸ்டர்! அதிக வாடகை இல்லாமல், கொஞ்சம் மலிவாய் ஓர் இடம்...'' என்று விசாரித்த மனோகரி, கல்பனாவின் வியந்த பார்வையில் திகைத்துப் பேச்சை நிறுத்தினாள்.

''ஏதேனும் தப்பாகக் கேட்டு விட்டேனா?'' என்று தன் வழக்கம்போல நேரடியாகக் கேட்டாள்.

''இல்லை. . உங்கள் வீட்டில் நல்ல வசதி என்றாரே தினகரன். நீங்களானால் தங்குமிடம் மலிவாகத் தேடுகிறீர்களே, என்றுதான்!'' என்று மேலும் தொடர்ந்து கல்பனா ஆச்சரியம் காட்டினாள்.

பொய் தவிர வேறு ஏதும் சொல்ல முடியாத நிலைமையில் மாட்டிக் கொண்டு, பொய் சொல்கிறோமே என்று வருத்தப்பட்டு என்ன பயன்? ''என் பெற்றோர்... அவர்கள் பற்றிச் சொன்னேனே, சிஸ்டர்?'' என்று சமாளித்தாள் அவள்.

''என்ன பெற்றோர்களா?'' என்று கல்பனா ஒரு மாதிரியாக தோளைக் குலுக்கிவிட்டு, ''தினகரன் இருப்

பது 'ஸ்பெஷல் வார்டு' தனியறை. இப்போது தனக்கு வேண்டியவர்கள் யாரேனும் ஒருவரை அவர் கூட வைத்துக் கொள்ளலாம். இங்கேயே உணவுக்கும் சொல்லி விடலாம். நேரத்துக்குக் கொண்டு வந்து தரு வார்கள். எல்லாம் பில்லில் சேர்ந்து விடும். அட்டாச்டு பாத்ரூம், குளித்துக் கொள்ள எல்லாவற்றுக்கும் பயன்ப டுத்திக் கொள்ளலாம்! இன்று அப்படித்தானே நடந்தது?'' என்றாள் கல்பனா.

''இன்று... இன்று எனக்கு வேறு பார்க்க நேரம் இல்லை... தோன்றவும் இல்லை! ஆனால், தொடர்ந்து அவர் செலவில் ஒட்டுண்ணியாக வாழ்வது நன்றாயில் லையே! அதனால்தான்...''

''ஒட்டுண்ணியா? இதை நீங்கள் உங்கள் தினகரனி டம் சொல்லிப் பாருங்கள். அவருக்காகச் சொந்தப் பெற்றோரின் எதிர்ப்பை மீறி வந்திருக்கிறீர்கள்! வருங் கால மனைவி நீங்கள் இப்படிப் பிரித்துப் பேசுவது அவருக்கு எப்படியிருக்கும்? சும்மாவே, நீங்கள் விலகிப் போய்விடக் கூடும் என்று அவர் பயந்து கொண்டே இருந்தார். நீங்கள் வந்த பிறகுதான் மனிதருக்குக் கொஞ் சம் தெம்பு வந்ததே! இருந்திருந்து இப்போது போய் அவர் மனதைக் கலக்கி விடாதீர்கள் ப்ளீஸ்!''

வருங்கால மனைவி நான் அல்ல என்று சொல்லி விட எண்ணி வாயைத் திறந்தவள் பேசாமலேயே வாயை மூடிக் கொண்டாள்.

ஆனால், அவள் முகத்தில் சிறு கலக்கத்தைக் கண்டு கொண்ட கல்பனா, மனோகரிக்கு வேறு ஒரு வழி சொல்லிக் கொடுத்தாள்.

தினகரன் இருந்த அறை வாடகை எப்படியும் அதேதான். மனோகரி அவனோடு கூட இருப்பதால் மாறுபடப் போவதில்லை. உணவு வேண்டுமானால், மனோகரி கீழே கான்டீனுக்குப் போய் காசு கொடுத்துச் சாப்பிட்டு விட்டு வரலாம். அறையில் சப்ளை செய்யப் படுவதைவிட அது மிகவும் விலை குறைவாகவும் இருக்கும்.

மனோகரிக்கும் இது பெருமளவு சமாதானம் தந்தது.

ஒரு கல்லில் இரு மாங்காய் போல, அவள் தினகர னுக்குச் செலவு வைக்கவும் இல்லை; அதே சமயம், அவளது பணம் அதிகம் செலவும் ஆகாது!

அவள் தலையாட்டவும், ''ஓ.கே.! நீங்கள் உள்ளே போய் மிஸ்டர் தினகரனுக்குத் துணையிருந்து கொண்டு மாலுவைக் கொஞ்சம் அனுப்பி வையுங்கள். உங்கள் இருவரையும் பற்றி அவளிடம் விவரம் சொல்லி வைக்கி றேன்'' என்றாள் கல்பனா பரிவுடன்.

இரவு 'ட்யூட்டி' நர்ஸ் மாலினியிடம் கல்பனா என்ன சொன்னாளோ, தன் வேலை தொடர்பான கடமைகளைச் செய்தது தவிர மற்றபடி, மாலினி சற்று ஒதுங்கி இருந்தே தன் நோயாளியைக் கண்காணித்தாள்.

தன் 'மோனி'யின் கையைப் பிடித்தபடியேதான் உறங்குவேன் என்று தினகரன் சொன்னபோது, அவள் மறுப்பேதும் கூறவில்லை.

தினகரன் தூங்கிய பிறகு, எழுந்து வந்து திவானில் படுத்து உறங்கும்படி அவள் யோசனை தெரிவித்த போது, தலையசைத்து, தனக்குத் தூக்கம் வரும்

போலவே இல்லை என்று மனோகரி கூறியபோதும், அவள் தடை சொல்லவில்லை.

மருந்துகளின் விளைவாகத் தினகரன் உறங்கிவிட, கட்டிலின் அருகில் கிடந்த நாற்காலியில், அவனது கையைப் பற்றியவாறு மனோகரி அமர்ந்திருக்க, அந்தக் காட்சியைப் பார்த்து முறுவலித்தபடி, மாலினி கையோடு கொண்டு வந்திருந்த புத்தகத்தை மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு பிரித்தாள்.

அந்தப் பெரிய நாற்காலியில் உடம்புக்கு வாகாகச் சாய்ந்திருந்த மனோகரியின் கண்ணிமைகள் மெல்ல மூடிவிட, அவள் உட்கார்ந்த நிலையிலேயே துயிலத் தொடங்கி விட்டதைக் கண்டபோது அவளுக்கு மேலும் முறுவல் விரிந்தது.

வெகுநேரம் கழித்துப் பார்த்தபோது, மனோகரி நாற்காலியில் அமர்ந்திருந்த நிலை மாறி, முன்புறமாய்ச் சரிந்து தினகரனின் கட்டிலில் தலை பதித்து கிடப்பதைக் கண்டு மெல்ல எழுந்தாள்.

மனோகரியை எழுப்பி, திவானில் ஒழுங்காகப் படுக்கச் சொல்லும் நோக்கத்தோடு கட்டிலின் அருகே சென்ற நர்ஸ், தினகரனின் ஒரு கை உயர்ந்து, 'வேண டாம்' என்பதுபோல அசையவும் நின்று நோக்கினாள்.

தன்னை ஒட்டினாற்போலக் கிடந்த தன் இனியாளின் தலையை, அவள் புறமாய் இருந்த கரம் பரிவும் பிரியமுமாய் வருட, இளம் புன்னகையுடன், தினகரனின் முகத்தில் எல்லையற்ற சாந்தி நிலவியது.

அவன் புறமாய் உயர்ந்திருந்த தினகரனின் கையைப் பற்றி, படுக்கையில் அவன் உடம்போடு ஒட்டி

வைத்து, லேசாகத் தட்டிக் கொடுத்து விட்டுத் தன் இடத்துக்கு மீண்டாள் அந்த நர்ஸ்.

## 8

அடுத்த சில தினங்கள், தினகரனின் உடல்நிலையில் பெரும் அபிவிருத்தியைக் காட்டின.

காயங்கள் வேகமாக ஆறி, கட்டுகள் அகற்றப்பட்டு அங்கங்கே சிறு பிளாஸ்திரிகள் மட்டும் ஒட்டப்பட்டன. மனோகரியின் கையைப் பிடித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான். தானாக எழுந்து உட்கார்ந்த அன்றே தாயாருடன் பேசினான்.

''இல்லையம்மா. இங்கே என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்கள். மோனிகா கூடவே...'' என்று அவன் கூறுவதைக் கேட்டபடியே அறையை விட்டு வெளியேறிக் கதவைச் சாத்தினாள் மனோகரி.

மனம் அலைபாய்ந்தது. அவளும் அவளுடைய அன்னையோடு பேசித்தான் ஆகவேண்டும். ஆனால் பெற்றவளிடம் என்ன சொல்வது?

தாயறியாத சூல் இல்லை. மகள் மனதில் புகுந்து விட்ட கள்ளத்தை அன்னை அறிந்து கொண்டு விடக் கூடுமோ?

பொதுவாகக் கற்பகம் மகளிடம் ஒரு சினேகிதியைப் போலத்தான் பேசிப் பழகுவாள். அவளிடம் மனோகரி எதையும் மறைத்ததில்லை. மறைக்கத் தோன்றியதும் இல்லை.

இப்போதும், தினகரனைப் பற்றிக் கற்பகத்துக்கு அடியோடு தெரியாது என்றில்லை. அன்றைய தன் மடத்தனத்தை மனோகரி விலாவாரியாகத் தன் தாயிடம் விளக்கியே கூறிவிட்டிருந்தாள். அன்னையின் அனுமதியோடுதான் தினகரனுக்கு கொடுக்க வேண்டும் என்று அந்த ஆயிரம் ரூபாய் மனோகரியின் கைப்பையில் குடியேறியிருந்தது.

ஆனால், அன்று எதையும் ஒளியாது அன்னையிடம் ஒப்பித்த மகள் இப்போது தாயாருடன் பேசவே தயங்கினாள். காரணம்... மனோகரிக்குப் பொய் பிடிக்காது. தினகரனின் நலத்துக்காக ஒரு பொய்யான வேடத்தை ஏற்று, அது தொடர்பாக அவள் சொல்ல நேர்ந்த பொய்களே அவள் மனதைப் பெரிதும் உறுத்திக் கொண்டு இருந்தன.

மற்றவர்களிடம் பொய்யுரைக்கவே பிடிக்காதவள், தனக்குத் தானே பொய் புகலுவாளா?

இந்த மூன்று தினங்களில், மனோகரிக்கு அவளது மனம் தெளிவாகப் புரிந்துபோய் விட்டிருந்தது.

முதல் பார்வையிலிருந்தே அவளுக்குத் தினகரன் மீது ஈடுபாடு ஏற்பட்டிருந்திருக்க வேண்டும்.

அவனுக்குத் தவறிழைத்து விட்டோமே என்ற உறுத்தலால் அவனைப் பற்றி அடிக்கடி நினைவு வந்ததாக எண்ணினாளே! அது அடியோடு தப்பு.

அவனது நிமிர்வும், பேச்சும், தோற்றமும் அப்போதே அவள் மனதைப் பாதித்திருக்க வேண்டும். அவளது குற்றமனம் அறியாமல் அவள் அவனுக்குச்

செய்து விட்ட அநியாயத்தைத் திருப்பித் திருப்பி அசை போட்டு அவன் மீது பற்றை வளர்த்து விட்டிருக்க வேண்டும். அதனால்தான், மீனாட்சி அவனை உதறிய தும், கண்ணும் இல்லாமல் கல்யாணப் பெண்ணும் இல்லா மல் தினகரனுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும் என்று மனோகரியின் மனம் அனல் மேலிட்ட மெழுகாய் அப்படி உருகியிருக்க வேண்டும்!

அதனால்தான், அவனுக்கு ஆபத்து என்றதும், விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்து, இப்படி உண்மை சொல்லவும் முடியாமல், விலகிப் போகவும் இயலாமல் ஆப்பு அசைத்த குரங்கு போல மாட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்.

ஆனால், மற்றது எப்படியோ, தாயிடம் விரைவி லேயே விவரம் தெரிவித்து விட வேண்டும் என்று முடிவு செய்தாள் மனோகரி.

தினகரன் தன்னுடைய தாயுடன் பேசும்போது, அங் கேயே இருந்து கேட்டுக் கொண்டிருப்பது நாகரீகம் அல்ல என்றுதான், மனோகரி அவன் இருந்த அறையை விட்டு வெளியே சென்றதே.

ஆனால் பாராட்டுக்குப் பதிலாகத் தினகரனிடமி ருந்து அவளுக்கு ஒரு குட்டுதான் கிடைத்தது. மனோகரி அறியக் கூடாத ரகசியம் என்று தினகரனிடம் ஒன்றுமே கிடையாதாம். அப்படியிருக்க, அவன் யாரோடும் அது பெற்ற தாயாரோடு என்றாலும் தான் தனித்துப் பேசட்டும் என்று அவள் விலகிப் போக வேண்டிய அவசியம் எங்கே வந்தது?

மாறாக, அவள் அங்கேயே இருந்திருந்தால், அவனுடைய தாயாரோடு அவளும் இரண்டு வார்த்தை பேசியிருக்கலாம் அல்லவா?

இனி, அவன் யாரோடும் டெலிஃபோனில் பேசினாலும், அந்தச் சமயங்களில் கூட அவனைப் பிரிந்து வெளியே எங்கும் செல்வதில்லை என்று மனோகரி வாக்குக் கொடுத்த பிறகுதான் தினகரன் ஒருவாறு சமாதானம் அடைந்தான்.

ஆனால், மனோகரிக்குத்தான் அமைதி, அடியோடு போயிற்று. ஒரே உறுத்தல்; இரண்டு வகை உறுத்தல்கள்: 'நீ அறியக் கூடாத ரகசியம்' எதுவும் இல்லை என்பவனிடம் நடத்தும் இமாலய ஏமாற்று வேலை ஒருபுறம் அவள் உள்மனத்தைக் குடைந்தெடுத்தது.

அடுத்து அவளுடைய அன்னை!

தினகரன் தேவகி அம்மாளிடம் பேசப் பேச, இவளுக்குத் தாயை எண்ணி மனம் வெகுவாகத் தவிக்கத் தொடங்கியது.

குறைந்தபட்சமாய் இந்த ஒரு தவிப்பிலிருந்தேனும் மீளலாமே என்று மனோகரி ஒருநாள் தினகரன் உறங்கிக் கொண்டு இருந்தபோது, வெளியே சென்று கற்பகத்தோடு தொடர்பு கொண்டாள். எதற்காக, எங்கே சென்றாள், எப்படி இருக்கிறாள் என்பதை மகள் கடகடவென்று ஒப்பித்து முடித்த பிறகு, சற்று நேரம் கற்பகம் எதுவுமே சொல்லவில்லை.

''என்னம்மா, ஒன்றுமே சொல்லாமல் இருக்கிறீர்களே?'' என்று மகள் ஒரு முறைக்கு இருமுறையாகக் கேட்ட பிறகுதான் அவள் பேச வாய் திறந்ததே.

"உன்னைப் புரிந்து வைத்திருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்! ஆனால்..."

"ஆனால் என்னம்மா? நான் எப்போதும் மாறமாட்டேன் அம்மா! இப்போது... இவர்... வந்து தினகரன் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிற நேரம் என்பதால்... அம்மா, ப்ளீஸ், உங்களுக்குப் புரிகிறதில்லையா?"

"புரிகிறது!" என்றாள் தாயார் ஒரு நெடுமூச்சுடன். "பார், கண்ணம்மா. இதயவழி சென்று அவசர முடிவு எடுப்பது என்பது பல நேரங்களில் சரியாக முடிவது இல்லை. மூளையைப் பயன்படுத்தி, சற்று அமைதியாக யோசித்துதான் எதையும் தீர்மானிக்க வேண்டும். இதைக் கொஞ்சம் எப்போதும் நினைவு வைத்துக் கொள். மற்றபடி, நீ என்ன சின்னப்பிள்ளையா, 'இப்படி நில்லு', 'அப்படி உட்காரு' என்று நான் சொல்லிச் சொல்லி நீ செய்வதற்கு?"

மூளையைப் பயன்படுத்துவது என்றால் என்ன அர்த்தம்? அத்தை மீனாட்சிக்குச் சொன்ன புத்திமதியை, மனோகரியுடைய அன்னை இன்னொரு விதமாகச் சொல்லுகிறாளா? சேச்சே... அவளுடைய தாயார் கற்பகம் அப்படிப்பட்டவள் அல்ல./ அவள் அந்தக் கற்பகத் தரு போன்றவள்.

மகளின் எண்ணப் போக்கை மெய்ப்பிப்பது போல, "உனக்குப் பணம் எப்படி, என்ன பெயருக்கு அனுப்புவது, மனோ? உன் கையில் கொஞ்சம்தானே இருக்கும்?" என்று கற்பகம் கேட்கவும் மனோகரிக்குக் கண்களில் நீர் மலகியது.

இந்த மாதிரி ஓர் அம்மாவைப் போய் ஒரு கணமே னும் தப்பாக நினைத்தாளே!

''இங்கே எனக்குச் செலவே இல்லை, அம்மா. முதலில் சாப்பாட்டுக்குக் கொஞ்சம் செலவு செய்தேன். ஆனால், இப்போதெல்லாம், தினகரனே எனக்கும் சேர்த்து ரூம் கணக்கில் உணவுக்கு 'ஆர்டர்' கொடுத்து விடுகிறார். இப்போது டெலிஃபோன் வெளியே வந்து பேசுகிறேன்... அவ்வளவுதான் செலவு... அம்மா பார்வை இல்லாமல் தினகரன், எதைச் செய்யவும் முடியா மல் சிரமப்படுவதைப் பார்க்கும்போது மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது, அம்மா!'' என்று குரல் தழுதழுத் தாள் மகள்.

''பாவம்தான்'' என்றாள் கற்பகம் யோசனையோடு. ஒரு வினாடி அமைதியின் பின், ''ஆனால் கண்ணம்மா, இன்னொன்றையும் நீ எப்போதும் நினைவில் வைத்தி ருக்க வேண்டும். இரக்கம் வேறு; வாழ்க்கை வேறு... சரி. நேரம் ஆகிறது. எஸ்.டி.டி. கட்டணம் ஏகமாக ஏறிக் கொண்டு இருக்கும். மறந்து விட்டேனே! பணம் அவசி யப்படாவிட்டாலும் உனக்குத் துணிமணியேனும் வேண் டுமில்லையா? மூன்று செட்... அந்த நர்ஸ் பெயருக்கு அனுப்பட்டுமா?'' என்று வினவினாள்.

அவ்வாறே அன்னை அனுப்ப, துவைத்துத் துவைத்து இரண்டே சுடிதார்களை மாற்றி மாற்றி அணிந்து கொண்டிருந்த மனோகரிக்கு உடுமாற்றுக்கு மேலும் சில உடைகள் கிடைத்தன.

அன்று காலையிலிருந்தே தினகரனிடம் ஓர் இறுக் கம் இருப்பதை மனோகரி உணர்ந்தாள். தன் அருகாமை

யைவிட்டு, மனோகரி எங்கு செல்லவும் அவன் விடவே இல்லை. ''குளித்து விட்டு வரட்டும் சார்'' என்ற கல்பனா விடம், ''நாளை சேர்த்துக் குளித்துக் கொள்ளட்டும்'' என்று முடித்து விட்டான்.

அன்று, அவனுக்குக் கண்கட்டு அவிழ்க்கிற நாள் என்பதை அறிந்திருந்த மனோகரிக்கும் உள்ளூர வருந்து வது தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது போயிற்று.

ஏனெனில், அநேகமாக அவனது கண்பார்வை திரும்புவதற்கில்லை என்று நர்ஸ் கல்பனா ஏற்கனவே அவளிடம் சொல்லி விட்டிருந்தாள்.

அதை எண்ணி மனோகரி உள்ளூரத் தவித்துக் கொண்டிருந்த போது, தினகரனே அது பற்றிப் பேசி னான். ''பார்வை கிடைக்கும் என்கிற நம்பிக்கை இல்லை தான். ஆனாலும் ஒரு சிறு நப்பாசை! பார்க்கலாம்! ஆனால், நீ என் பக்கத்திலேயே இரு மோனி... இருப்பா யல்லவா?''

''நிச்சயமாய்!'' என்றாள் அவள் தொண்டைய டைக்க. அவர்களது அச்சத்தைத்தான் கண்மருத்துவரும் உறுதி செய்தார். ''அவ்வளவு ஆழ, அத்தனை கண்ணா டிச் சில்லுகள் பாய்ந்த பிறகு... வேறு என்ன நடக்கும்? ஆனால் மிஸ்டர் தினகரன், உங்கள் கண் பற்றிய ஃபை லின் நகல் ஒன்று என்னிடம் இருக்கட்டும். ஏதாவது வாய்ப்பு நேர்ந்தால்... திரும்பவும் சொல்கிறேன். அப்படி எந்த வாய்ப்பும் நேர்வதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை தான். ஆனால் நம்ப முடியாத அற்புதங்களும் நடக்கத் தானே செய்கின்றன? நடக்கும். நடக்கிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றார் அவர்.

இப்படித்தான் சொல்லக்கூடும் என்று எதிர்பார்த்து வந்ததுதான். ஆனால் வைத்தியர் வாயால் அதைக் கேட்டதும் இதயத்தின் மேல் ஏதோ பெரும் சுமை ஏறிவிட்டதுபோல மனோகரி உணர்ந்தாள்.

ஆனால் நேரடிப் பாதிப்புக்கு ஆளான தினகரன் அமைதியாகவே, ''சரி டாக்டர் நீங்கள் சொன்னது போல ஃபைல் ஒரு காப்பி எடுத்து உங்கள் செகரட்டரியிடம் கொடுக்கச் செய்கிறேன். இது வரையான உங்கள் முயற்சி களுக்கு என் நன்றி டாக்டர்'' நன்றி கூறி விடை பெற்றான்.

லிஃப்ட்டில் ஏறி, நாலுதளம் தாண்டி, ஸ்பெஷல் வார்டில் அவனது அறைக்கு வந்து சேர்ந்த பிறகும்கூட, முதலில் அவன் ஏதும் சொல்லவில்லை.

மனோகரியை அருகில் இருத்தி, தானும் அமர்ந்த வன் சற்று நேரம் வாளாவிருந்தான். பிறகு ''நாம் செய்யாத ஒரு பிழைக்காக நமக்கு இப்படி ஓர் இழப்பு நேர்வது என்றால் ரொம்பவும் அநியாயமாய் இருக்கி றதே மோனி'' என்றான் வருத்தத்துடன்.

உள்ளம் உடைந்து நொந்து கொண்டிருக்கும் இவ னுக்கு என்னவென்று ஆறுதல் சொல்வது? அதுவும் அவள் மனதிலும், அவ்வளவு வேதனை நிறைந்திருக்கை யில்! தினகரனை அப்படியே இறுக அணைத்து எந்தவித மான துன்பமும் அவனை அணுகாமல் பாதுகாக்க வேண்டும் போல ஒரு வேகம் ஒரு பேரலை போல அவளுள் எழுந்தது.

அதை அடக்கிக் கொண்டு மனோகரி மெல்ல அவனது முதுகைத் தடவிக் கொடுத்தாள். முதுகை

நீவியவாறே மெல்லிய குரலில், ''கடவுள் ரொம்பவும் கண்டிப்பானவர் என்று அம்மா சொல்லுவார்கள். எந்தெந்தப் பிறவியில் நாம் என்னென்ன பிழைகள் செய்தோமோ, நமக்குத் தெரியாது. ஆனால் அத்தனைக்கும் உரிய தண்டனையைக் கொடுக்காமல் அவன் விடுவதே இல்லை என்பார்கள். என் அப்பாவின் இழப்பை, இப்படி எண்ணித்தான் சமாளிக்க முடிந்தது என்று ஒருதரம் சொன்னார்கள்...''

அவளது மெல்லிய குரல் தேய்ந்து மறைந்தது. அவனது தலையே அவனுக்குப் பாரமாகிவிட்டது போல, மனோகரியின் தலைமீது, சென்னி சாய்த்து, தினகரன் அசையாமல் அமர்ந்திருந்தான்.

முறுக்கேறிய கம்பிபோல விறைப்புற்றிருந்தவனின் உடல் மெதுவே தளர்வுறுவதை உணர்ந்தபடி மனோகரியும் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

வெகுநேரம் சென்றபின் ஒரு பெருமூச்சுடன் தினகரன் நிமிர்ந்து, விலகி அமர்ந்தான். எப்போதும் பற்றியிருக்கும் கையைக் கூடத் தொடாது தள்ளி இருந்தபடி அவன் பேசத் தொடங்கினான்.

''மோனிகா, 'ஹோப்பிங் எகெய்ன்ஸ் ஹோப்' என்பார்கள். அதுபோல நம்பிக்கைக்கு இடம் இல்லாத போதும், மயிரிழையை விட மெல்லிய நூலில் என் நம்பிக்கையைக் கட்டித் தொங்க விட்டிருந்தேன். இப்போது நூல் அறுந்து விட்டது. இனி மேல் கண் வராது என்பது நிச்சயமாகிவிட்ட உண்மை. இனி இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வேண்டும்...'' என்று சொல்லிக் கொண்டே

போனவனை ''ப்ளீஸ், தினகர்!'' என்று மனோகரி இடையிட்டுத் தடுக்க முயன்றாள்.

''எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வேண்டியதுதான். ஆனால் அதை இப்போதே, இந்த வினாடியே செய்தாக வேண்டுமா? சற்றுப் பொறுத்து... இந்த... இந்த அதிர்ச்சி...''

''அதிர்ச்சியின் பாதிப்பு அடங்கிய பிறகு நிதானமாக யோசிக்கலாம் என்கிறாயா? கூடாது, மோனி! அதிர்ச்சி அடங்குவதற்காகக் காத்திருக்கும் அவகாசத்தில் தன்னிரக்கமும் சோகமும் சூழ்ந்து நம்மை அடியோடு மூழ்கடித்து விடக்கூடும். அதற்கு முன்னதாகவே நாம் நிமிர்ந்தாக வேண்டும்! குறைந்தபட்சம் அதற்கான முயற்சியில் ஈடுபடத் தொடங்கிவிட வேண்டும். என்ன முயற்சி செய்தாலும் முன்போல உயரமுடியாதுதான். ஆனால் இந்தக் குறையை வைத்துக் கொண்டே வளரக் கூடிய வழிமுறைகளைத் தேடி அதில் ஈடுபட வேண்டும்... முதலில் 'பிரெய்ல்' கற்க வேண்டும்... ஆனால் இது என் விஷயம் மோனிகா. இப்போது உன் விஷயத்துக்கு வருவோம். இனி என்னால் முன்போலப் பொருள் ஈட்ட இயலாது. எனவே நீ ஆசைப்பட்டபடி பல நாடுகள் சுற்றுவது, அங்கங்கே விருப்பப்பட்டதை வாங்குவது எல்லாம் முடியாத காரியம். நான் உனக்கு வாக்களித்த வைர நகை செட் கூட சாத்தியப்படாதுதான். கூடவே...கூடவே இந்தப் பார்வையில்லாக் குறை வேறு! இது உனக்குப் பல சமயங்களில் பெரும் சுமையாக ஆகக் கூடும். இந்த நிலையில் என்னோடு உன் வாழ்வைப் பிணைத்துக் கொள்ள உன்னால்... உனக்கு...'' என்று

தடுமாறியவன், அவள் ஏதோ பேச முயன்றபோது. தடுத்து நிமிர்ந்து, ''பொறு! நான் சொல்லி முடித்து விடுகிறேன். உனக்கு விருப்பம் இல்லை என்றால் என்னால் புரிந்து கொள்ள முடியும் மோனிகா. ஆனால் வேறு மாதிரியான பதில் என்றால் அதை நீ அவசரப்பட்டுத் தராதே. மறுத்தால் வருந்துவேனோ என்றோ என் மேல் பரிதாபப்பட்டோ முடிவெடுக்காதே. இரக்கம் வேறு, வாழ்க்கை வேறு. அதனால் நிதானமாக யோசித்து முடிவு சொல்'' என்று முடித்தான்.

இதைச் சொல்லி முடிக்குமுன், மீண்டும் இறுகி விட்டிருந்த தினகரனின் தோற்றம், மனோகரியின் மனதைக் கசக்கிப் பிழிந்தது.

## 9

மனோகரியின் மூளைக்குச் சற்று நேரம் யோசிக்கும் திறன் இல்லாது போயிற்று.

கண் இல்லை என்று ஆகிவிட்டது; மனம் கவர்ந்த பெண்ணும் இல்லாது போய்விடுவாளோ என்று தினகரன் உள்ளூரக் கலங்கித் தவிப்பதை அவளால் உணர முடிந்தது.

அவனது தவிப்பைப் போக்கியாக வேண்டும் என்ற ஒன்று தவிர வேறு எதையும் அவளால் எண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லை. எனவே ''இது என்ன கேள்வி தினகர்? உங்கள் பார்வை பற்றிய உண்மை நிலை, சென்னையைவிட்டுக் கிளம்புமுன்பே எனக்குத் தெரியும் தினகரன். அதன் விளைவாக உங்கள் தொழில்

எவ்வளவு தூரம் பாதிக்கப்படக்கூடும் என்பதையும் அறிந்த பிறகு தான் நான் இங்கே வந்ததே... உங்களுக்குப் பதில் கிடைத்து விட்டதா?'' என்றாள்.

''அன்றைக்கு திடுமென நேர்ந்த அதிர்ச்சியில் நல்லது கெட்டது யோசியாமல் ஓடி வந்திருக்கலாம்... பிறகு மாறியிருக்கலாம்'' என்றான் தினகரன் தயக்கத்துடன்.

''மாறியிருப்பது நான் அல்ல!''

''நான் மாறிவிட்டதாகச் சொல்கிறாயா? ஒருநாளும் இல்லை!''

''என்ன இல்லை?'' என்றாள் மனோகரி சிறு ஆத்திரத்துடன். ''முதலில் நான் வந்த போது எவ்வளவு ஆர்வமாய்க் கை நீட்டி வரவேற்றீர்கள்? இப்போதானால் போ போ என்பது போலப் பேசுகிறீர்களே!''

''உன்னைப் போகச் சொல்லுவதா? நானா? அந்த வகையில் நான் ராமன் தெரியுமா? மோனி, நீ இரக்கத்தைக் காதலாக எண்ணி உன் வாழ்வைப் பாழடித்துக் கொண்டு விடக்கூடாதே என்கிற கவலை எனக்கு! அதனால்தான் நன்றாக யோசிக்கச் சொல்லுகிறேன். புரியவில்லையா?''

வாழ்வில் அதிகச் சிரமம் ஏற்றுவிடக் கூடாதே என்கிற கவலைதான். ஆனால் இவன்? அவள் பிரிந்து செல்வதால் அவனுக்கு ஏற்படக் கூடிய சொந்த நஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் அவளது நலனில் அக்கறை காட்டுகிறானே! இத்தகைய நேசத்துக்கு மேலாக உலகில் என்ன இருக்கக் கூடும்?

மனோகரி திகைத்தாள். இதையேதானே அவளுடைய அன்னை கற்பகமும் கூறினாள்! அப்படியானால்

அவளுடைய தாயின் பாசத்துக்கு இணையான பிரியம் தினகரனுக்கும் அவள் மீது இருக்கிறது என்பது தானே அர்த்தம்!

அன்னையின் அன்பை விட இது அதிகம் என்று கூடக் கூறலாம்.

''நானும் மாறவில்லை, தினகர்...'' என்று மனோகரி தானாகவே அவன் கைகளைப் பற்றினாள்.

''நிச்சயமாக''

''சர்வ நிச்சயமாக''

அவளது இரு கைகளிலுமாக முகத்தைப் புதைத்துக் கொண்டான் தினகரன்.

கைகளில் ஈரத்தை உணர்ந்த மனோகரிக்கு மயிர் கூச்செறிந்தது. உரிய திறனற்ற அவனது விழிகளில் இருந்து வெளியான நீர் அவளை என்னவோ செய்தது. அவனது இரத்தம் அங்கிருந்து வடிவது போல் ஓர் உருவகம் தோன்றிவிட, ''தினகர், ப்ளீஸ்... வேண்டாம், நான் தான் பக்கத்திலேயே இருக்கிறேனே!'' என்று கனிவுடன் கூறி, கைகளை உருவி, அவனது கண்ணீரைத் துடைத்தாள்.

ஆண்பிள்ளை, இப்படி அழுது விட்டேனே என்பது போலச் சிறு வெட்கச் சிரிப்பு ஒன்றைச் சிந்தி விட்டு தினகரன் சொன்னான். ''சூழ இருக்கும் இருளில் நீ மட்டும் தான் எனக்கு ஒரே ஒளி, கண்மணி. சொல்லு, நம் திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்? உன் பெற்றோர் இலகுவில் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்று தான் எனக்குத் தோன்றுகிறது. ஏன் மோனி,

எதற்கும் அவர்களிடம் நானே நேரில் பேசிப் பார்க்கட்டுமா? என்ன இருந்தாலும் உன் பெற்றோர் அல்லவா? அவர்களது ஆசியும் இருந்தால் நல்லது தானே?''

பொட்டில் அறை வாங்கியவள் போல நிலை குலைந்து போனாள் மனோகரி.

பெற்றோர்! மோனி - மீனாட்சி.

மோனிகாவாக நடித்து சேவை செய்யலாம்! ஆனால் அவளது பெயரில் திருமணம் புரிவது எப்படி?

அருகில் இருப்பவளைத் தன் மோனிகாவாகக் கருதி, தன்னை ராமன் என்கிறவன், அவனுடைய அந்த சீதை அவனை எட்டிப் பார்க்கக் கூட வரவில்லை என்று அறிய நேரும் போது அதை எப்படி ஏற்கப் போகிறான்?

இருட்டாகி விட்ட உலகில் ஒரே ஒரு வெளிச்சமாக அவளைக் கருதுகிறவனிடம் இதை - இந்த உண்மையை எப்படிச் சொல்வது?

சொன்னால், அந்த அதிர்ச்சி தினகரனின் ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடுமா? பாதித்தால்?

இதை யாரிடம், எதைச் சொல்லி, எப்படிக் கேட்டு அறிந்து கொள்வது?

மனோகரி யோசித்துக் கொண்டு இருந்த போதே, தினகரனின் கரங்கள் நீண்டு தேடி அலைந்து அவளைக் கண்டுபிடித்தன.

அவளோடு நெருங்கி அமர்ந்து, ''என்ன மோனி, பேச்சையே காணோம்! திருமணம் என்றதும் வெட்கமா? நீ கூட வெட்கப்படுவாய் என்று நான் நினைத்ததே

இல்லை!'' என்று குரலில் சிரிப்பு இழையோடக் கூறி னான் அவன்.

வெட்கமா? ஏன்? என்று சில கணங்கள் மனோக ரிக்கு எதுவுமே புரியவில்லை. மோனியின் பெயரி லேயே அரண்டு போய் விட்ட அவளுக்கு, திருமணம் பற்றியோ, அதற்குப் பிறகான வாழ்க்கை பற்றியோ எண்ணிப் பார்க்கக் கூடத் தோன்றவில்லை என்பது இவனுக்கு எங்கே தெரியப் போகிறது.

மனோகரியின் கன்னத்தை மென்மையாக வருடி ''என்ன மோனி, இன்னும் நீ பதில் தர வில்லையே? உன் பெற்றோரின் சம்மதத்தைக் கேட்போமா, வேண் டாமா? அவர்கள் உன் பெற்றோர்! நீ தான் சொல்ல வேண்டும்!'' என்றான் தினகரன், சரசமான குரலில்.

சற்றுத் திகைத்து, ''இதில் கூட விளையாட்டா? பெற்று வளர்த்த பெற்றோரின் ஆசியில்லாமல் என்ன திருமணம்? என்ன வாழ்க்கை?'' என்று அவள் கண்ட னக் குரலில் கூறவும், வியப்புடன் அவள் புறம் திரும்பி னான் அவன்.

''ஆச்சரியமாய் இருக்கிறதே! திருமணம் என்பது உங்களுக்கும் எனக்கும் இடையே உள்ள சொந்த விவகா ரம். இதில் தலையிட யாருக்கும், பெற்றவர்கள் உட்பட யாருக்கும் உரிமை கிடையாது என்று அடித்துப் பேசு வாயே! இப்போது என்ன புது ஞானோதயம்?''

அவன் சாதாரணமாகத் தான் கேட்டான். ஆனால் அவளுக்கு முகமெல்லாம் வியர்த்து விட்டது. மீனாட்சி! ராட்சசீ! இப்படியெல்லாமா பேசுவது? பத்து மாதம் சுமந்து பெற்று, படாதபாடு பட்டு வளர்த்து... கடைசியில்

அந்தப் பெற்றோரை இவ்வளவு உதாசீனமாகவா பேசி னாள்! பாவி! பாதகி!

மனதுக்குள் மீனாட்சியைத் திட்டித் தீர்த்தாள் மனோ கரி. வெளியே, ''ஞானோதயம் என்று இல்லை. ஆனால், பெற்றவர்கள் பிள்ளைகளுக்காகப் படும் பாடு பற்றி ஒரு தரம் நிதானமாக யோசித்துப் பார்த்தேன்... அவ்வளவு தான்!'' என்று ஏதோ உளறிக் கொட்டிச் சமாளித்தாள்.

உடனேயே, ''சரி நானே சம்மதம் கேட்கிறேன்!'' என்று தினகரன் கிளம்பி விடக் கூடாதே என்று அஞ்சி, ''திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள். அதை இப்படி அவசர வெட்டில் தீர்மானம் செய்யக் கூடாது தினகர். சற்று நிதானமாக யோசிக்க வேண்டும்'' என்றாள் அவள்.

''எதை யோசிக்க வேண்டும், மோனிகா? இந்தக் கண்ணற்றவனோடு வாழ்வதா வேண்டாமா என்றா?'' என்று கேட்டான் தினகரன் சட்டென மாறி விட்ட குரலில், ''இன்றே வேண்டுமானாலும் ரகசியமாய் ஒரு திருமணத்தைச் செய்து கொண்டு, பெரிய ஐந்து நட்சத்திர ஓட்டலில் பிரமாண்டமாக ஒரு வரவேற்பு கொடுத்து விடலாம் என்றாயே! அவ்வளவும் மாறி விட்டதா? இந்தக் கண்... சே'' என்றான் தவிப்புடன்.

அவளுக்கும் தவிப்புதான். உண்மை சொல்ல அஞ்சி, பொய்யைத் தொடரப் பயந்து, கூடவே அவனது துன்பம் கண்டு வருத்தம் வேறு.

''... ப்ளீஸ் தினகர். ஏன் இப்படி எல்லாம் மனதை வருத்திக் கொள்கிறீர்கள். நான்..''

''தினகர்!'' என்றான் அவன் கசப்புடன். ''தின், தினு' என்று முன்பு என்னவெல்லாமோ செல்லப் பெயர் சொல்லி அழைப்பாய்! இப்போது மற்றவர்களுக்குப் போல வெறும் 'தினகர்' ஆகிவிட்டேனே! இதிலிருந்தே நீ எவ்வளவு விலகிக் கொண்டு இருக்கிறாய் என்று தெரிகிறதே!''

மீனாட்சியின் 'தினு' காலம் கடந்து நினைவு வந்தது.

இந்த நேரத்தில் குறுக்கிட்டுப் பேச்சைத் திசை திருப்ப யாராவது வரமாட்டார்களா என்று வேண்டிய படி, ''அவசரப்படாமல் நிதானமாக யோசித்து முடிவு செய்யும்படி எனக்கு அறிவுரை கூறியதும் நீங்கள்தான்! இந்த வினாடியே பதில் சொல்லு என்று குதிப்பதும் நீங்களேதான்... அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு மேலே பேசலாம் என்றால் என்னென்னவோ கற்பனை செய்து கொள்ளுகிறீர்களே!'' என்று குறை யோடு அவள் உரைத்தபோது, அவளது வேண்டுதலுக் குச் செவி சாய்த்தாற்போல, நர்ஸ் கல்பனா கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தாள்.

''என்ன சார், எப்படி இருக்கிறீர்கள்? பிரஷர், டெம்பரேச்சர் பார்த்து விடலாமா?'' என்று கேட்டபடியே அருகில் வந்து பார்க்கத் தொடங்கினாள் நர்ஸ்.

''ம்...ம்... சூடு எதுவும் இல்லை... ஆனால் பிரஷர்! என்ன மிஸ்டர் தினகரன், பயங்கரமாய் ஏற்றி வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்? ஓ.... இன்று கண் டாக்டரிடம் போய் வந்தீர்களா?... ஐயம் ஸாரி, தினகரன்'' என்று வருத்தம் தெரிவித்தாள்.

உச்சுக் கொட்டினான் தினகரன். ''ஏற்கனவே தெரிந்த விஷயம் தானே, சிஸ்டர். அதைப் பற்றிப் பெரிதாக ஒன்றும் இல்லை!'' என்று சிரத்தையற்றுப் பதிலளித்தான். ''ஆனால்...''

''ஆனால்?''

அந்த ஆந்திர தேசத்தில், தானும் ஒரு தமிழ்ப் பெண் என்பதால் இந்தத் தமிழர்களிடம் உரிமையோடு பழகிய பழக்கத்தில் இப்போதும் கல்பனா துருவினாள்.

ஆனால், ஒரு சோர்வான 'உச்'சுடன் தினகரனும், தலையில் பதித்த பார்வை தூக்காமல் மனோகரியும் இறுகிப் போய் அமர்ந்திருப்பதைக் கண்டவள், ''மோனிகா, கொஞ்சம் என்னோடு வரமுடியுமா? புதிதாக ஒரு கேஸ், தூக்க மாத்திரையை விழுங்கி விட்டு வந்து படுத்திருக்கிறது. இப்போது காப்பாற்றி விட்டோம். மனசு தேற, அவளிடம் கொஞ்சம் பேச வேண்டும். எங்கள் யாருக்கும் நேரமில்லை. எல்லாம் ஃபுல்... தினகரன் நீங்கள் கொஞ்சம் தனியே இருந்து கொள்வீர்கள் அல்லவா?'' என்று வினவினாள்.

''மோனிகாவிடம் தனியே பேச வேண்டுமென்றால், அதைச் சொல்லியே அழைத்துப் போங்களேன். எதற்கு அனாவசியமாய் ஒருத்தியைத் தூக்க மாத்திரை விழுங்க வைக்கிறீர்கள்?'' தினகரன் சற்று ஏளனமும், கேலியும் கலந்த குரலில் கேட்கவும் சிரித்து விட்டு, உங்கள் மோனிகாவிடம் தனியே பேச வேண்டும் தான். ஆனால் ஒரு பெண் தற்கொலைக்கு முயன்று, இங்கு வந்து சேர்ந்து பிழைத்திருப்பதும் உண்மை தான், தினகரன்'' என்றாள் அந்த நர்ஸ்.

கல்பனாவிடம் தன் ஐயத்தைக் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டாள் மனோகரி.

''தினகரன் இழந்திருப்பவை அதிகம். ஐம்புலன்க ளில் முக்கியமான ஒன்று. கூடவே வளமான எதிர்காலம். இன்னொருவனாக இருந்தால், இவற்றுள் ஒன்றின் இழப் பிலேயே ஓய்ந்து போய் விடுவான். எவ்வளவோ மனத் திடம் இருப்பதால் இந்த அளவு சமாளித்திருக்கிறார். ஆனால் இதற்கு மேல் தாங்க மாட்டார்'' என்றாள் அந்தப் பெண்மணி.

''நிதானமாக யோசித்துச் சொல்லு என்றவரும் அவர் தான் சிஸ்டர், இப்போது திருமணத்துக்கு இன்றே ஒத்துக் கொள் என்று விரட்டுவதும் அவர் தான்!'' என்றாள் மனோகரி சலிப்பும் தவிப்புமாக.

''ஆமாம். அன்பைப் பற்றி நிச்சயப்படுத்திக் கொண் டார். நேசம் நிச்சயம் என்ற பிறகு திருமணத்திற்குத் தயங்குவானேன்?''

''அது... அது...'' தன் ஆள்மாறாட்டத்தைப் பற்றி வாய் விட்டு எதுவும் சொல்ல முடியாமல் மனோகரி தடுமாறினாள்.

ஒரு கணம் அவளை நேரே பார்த்து விட்டு, ''இப்போது எனக்கும் தான் புரியவில்லை! அன்பு இருக்கிறது என்கிறாய்! அதுவும் பெற்றோரை மீறியே இங்கு வந்திருக்கிறாய். ஆனால் கல்யாணம் என்றால் மட்டும் என்ன தயக்கம்? உன் காரணம் என்னவோ, எனக்குத் தெரியாது, மோனிகா. ஆனால், தினகரனின் நிலைமை உனக்கு முழுசாக புரியவில்லை என்று நினைக் கிறேன். அவரது இழப்பு சொற்பமானதல்ல. இமயம்.

மன உறுதி பாதி, பிடிவாதம் பாதியாக எவ்வளவோ தைரியமாகக் காட்டி சமாளிக்க முயன்று கொண்டு இருக்கிறார். ஆனால் ஒட்டகத் துரும்பு போல ஒரு சிறு விஷயத்தில் உடைந்து போகிற நிலை தான் அவருக்கு. அவர் இழந்ததை நம்மால் திருப்பி தர முடியாது. மற்ற வகையில் கேட்பதெல்லாம் கொடுத்து மகிழ்ச்சியைத் தந்து அவரைத் தேற்ற வேண்டும். அதை மறந்து, அந்தப் பெண்ணைப் போலத் தூக்க மாத்திரையைத் தேடுகிற நிலைக்கு அவரை ஆளாக்கி விட வேண்டாம்'' என்று எச்சரித்தாள்.

தினகரனின் கண்ணீர் நினைவு வந்தது மனோக ரிக்கு, எவ்வளவோ வேதனைகளை ஒரு முனகல் கூட இல்லாமல் சமாளித்தவன்! இன்றைக்கு.. மறுப்பாய்த் தலையசைத்து விட்டு, ''நீங்கள் நினைப்பது போல இல்லை சிஸ்டர். ஆனால், நான் என் தாயாரிடம் பேச வேண்டும். இன்றும் இன்னும் கூட, எஸ்டிடி பூத்தில் போய் பேசிவிட்டு வருகிறேன். அதுவரை அவரைப் பார்த்துக் கொள்கிறீர்களா?.. அப்படிப் பாராதீர்கள். நல்ல சேதி சொல்லத்தான் இந்த டெஃலிபோன் பேச்செல் லாம்...'' என்று இலகுவாக பேச முயன்றாள்.

முகம் மலர, ''ஆல்ரைட். ஆல்ரைட். போய் வா. ஆனால், கவனம் இருக்கட்டும்; இன்னொரு ஏமாற்றம் தினகரன் தாங்க மாட்டார்!'' என்று கூறிப் பிரிந்தாள் கல்பனா.

யோசனையோடு எஸ்டிடி பூத்தை நோக்கி மனோ கரி நடந்தாள். அன்னை அவளைப் புரிந்து கொள்வாள்! பத்திசாலியான அவளுடைய தாயார் ஏற்கனவே

ஊகித்து வைத்திருப்பாள். அப்படி ஊகித்திரா விட்டாலும், இப்படித் தான் அம்மா என்றால், புரிந்து கொண்டு ஒப்புதல் தந்து விடுவாள்.

ஆனால் மீனாட்சி!

அவள் இதை எப்படி எடுத்துக் கொள்ளுவாள். எப்படியோ போய்த் தொலை என்று தோளையும் குலுக்கலாம்; வைக்கோல் போர் நாயாக, எல்லா வழிகளையும் அடைத்து விட வேண்டுமென்றே தொல்லையும் கொடுக்கலாம்! ஒரு பெரிய மூச்சை எடுத்து, மனதைத் திடப்படுத்திக் கொண்டு ரிசீவரைக் கையில் எடுத்தாள் மனோகரி

## 10

மனோகரி அனுமானித்தது போலவே கற்பகம் ஓரளவு மகளின் அழைப்பை எதிர்பார்த்துத் தயாராகத் தான் இருந்தாள்.

மகளின் குரலைக் கேட்டதும், ''பூத்தின் நம்பர் கேட்டுச் சொல்லம்மா இங்கிருந்து நான் 'கால்' போடுகிறேன். உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறதோ?'' என்று நீண்ட உரையாடலுக்குத் தான் தயாராக இருப்பதை உணர்த்தினாள்.

தாயிடம், பேச்சை மறுத்துப் பழக்கம் இல்லாததால் மனோகரி அப்படியே செய்து தன் முடிவைக் காரண காரியங்களோடு பெற்றவளுக்கு விளக்கினாள்.

மனோகரி சொல்லி முடிக்கும் வரை குறுக்கே பேசாமல் கேட்டிருந்து விட்டு, ''தினகரன் விஷயம்

சொன்னாய், உன் விஷயம் ஒன்றும் சொல்லவில்லையே அம்மா. நீ உன்னைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டுமில்லையா?'' என்று இதமாகவே கேட்டாள் கற்பகம்.

''என்னைப் பற்றி என்ன அம்மா?'' என்று உரைத்த மகளின் குரலில் அந்தத் தாயின் மனம் தவித்தது. தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு கற்பகம் பேசத் தொடங்குமுன், மனோகரியே தொடர்ந்தாள்.

''அம்மா, இது காதலா, அல்லவா என்று எனக்குத் தெரியாது. ஆனால் தினகரனுக்கு ஏதேனும்... ஏதேனும் ஆபத்து நேர்ந்தால், அப்புறம் என்னால் மூச்சு விடக் கூட முடியாதம்மா'' என்று ஒரு விசிப்புடன் முடித்தாள்.

சிறு அமைதியின் பின், ''நீ முதல் தடவை செகந்திராபாத்தில் இருந்து பேசியதிலிருந்தே நான் இதை எதிர் பார்க்கத் தான் செய்தேன்... ஆனால் வாழ்க்கை என்பது நீ உணர்ச்சிவசப்பட்டிருக்கும் இன்றுடனோ, இன்னும் சில மாதங்களிலோ முடிந்து விடப் போவதில்லை யோசித்துப் பார்த்தாயா மனோ, கடவுள் விதித்த எத்தனை எத்தனையோ ஆண்டுகளை ஒரு குறை உள்ளவரோடு கழிப்பது எந்த அளவு சாத்தியப்படும் என்பதை எல்லாம் ஒருதரமேனும் சிந்தித்துப் பார்த்தாயா? இதெல்லாம் அவசரப்பட்டு முடிவெடுக்கக் கூடிய விஷயம் அல்லடா, கண்ணு'' என்றாள் கற்பகம் தன் சாந்தமான குரலில் சிறு வருத்தம் தொனிக்க.

அந்தக் குரலே மகளையும் அமைதிப்படுத்தியது. நிதானமுற்று, ''நீங்கள் சொல்கிறமாதிரி பலப்பல ஆண்டுகளைப் பற்றி நான் யோசித்தது இல்லை, அம்மா.

ஆனால், எதிர்காலம் பற்றி எண்ணும் போது, தினகர் இல்லாத ஒரு வாழ்வை என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை அம்மா. வாழ்வு என்றால் அது இவர் ஒருவரோடு மட்டும் தான். வேறு யாரையும் நான் மணக்க மாட்டேன். அது மட்டும் எனக்கு சர்வ நிச்சயம்'' என்றாள் தெளிவாக.

''அந்த நிச்சயம் இருந்தால் வேறு ஒன்றும் பேசுவதற்கு இல்லை, கண்ணம்மா. ஆனால், நீ மனோகரியாக அவரை மணக்க வழியில்லை என்பது தான் கவலையாக இருக்கிறது. சட்டப்படி குற்றமாயிற்றே எனும் போது மனம் பதைக்கிறது.. ஆனால் ஒன்று, மீனாட்சியின் சம்மதம் இல்லாமல் எதுவும் செய்யாதே. முதலில் அவளிடம் பேசி விட்டு, அதன் பிறகு திருமணம் பற்றி முடிவு செய்... அவள் சரியென்றால் கூட என்னை அறிமுகப் படுத்த வழியிராது இல்லையா? அம்மா, ஒரு நன்கு பழகிய தூரத்து உறவுக்காரம்மாவாக உன் திருமணத்துக்கு நான் வந்து போகலாமில்லையா?'' என்று இலகுவாகப் பேச முயன்றாள் அன்னை.

''கட்டாயம்!'' என்றாள் மகள். ''நீங்கள் இல்லாமல் எனக்குக் கல்யாணமா? எப்படி நடக்கும்?'' என்ற போது, மனோகரியின் குரலிலும் சுமை அகன்றிருந்தது.

அடுத்து மீனாட்சிக்கு போன் செய்த போது பெருமளவு இறங்கியிருந்த அந்தச் சுமை மீண்டும் அவளது இதயத்தின் மீது வந்து அமர்ந்தும் கொண்டது.

இந்த மாதிரி விஷயம், தினகரனை மணந்து கொள்வது அவசியமாக இருக்கிறது, அதுவும் 'மோனிகா' என்ற பெயரில் என்று மனோகரி கூறவும் முதலில் மீனாட்சி நம்ப முடியாமல் நகைத்தாள்.

ஆனால், மனோகரி பேசுவது மெய்யென்று அறிந்ததும், ''அத்தை ஒரு முட்டாள்'' என்று அம்மா சொல்லும்போது நான் அதை அவ்வளவாக நம்பியதில்லை. நாத்தனார்க் காய்ச்சலின் விளைவு என்று கூட எண்ணியதுண்டு. நீ சொல்வதைப் பார்த்தால் அம்மா சொல்வதும் சரி தான்; கூடவே நூலைப் போலச் சேலை என்பது போல, அம்மாவுக்குப் பெண் அச்சசல் அப்படியே பிறந்திருக்கிறாயே! பெரிதாகப் பணம் இல்லாவிட்டாலும், நல்லதாய் வீடு இருக்கிறது; படிப்பு இருக்கிறது; அழகும் இருக்கிறது! இத்தனையும் இருக்க, இருந்திருந்து ஒரு குருட்டுப் பிச்...'' என்று சொல்லிக் கொண்டே போனவள் ''அப்படிச் சொல்லாதே!'' என்ற மனோகரியின் குறுக்கீடலில் சற்றுத் திகைத்து நிறுத்தினாள்.

உடனேயே குரல் உயர, ''ஏன்? கண் தெரியாதவனுக்கு புதிதாக அகராதியில் வேறு பெயர் போட்டிருக்கிறதா?'' என்றாள் ஆத்திரத்துடன்.

இவளுக்குக் கோபமூட்டுவது சரியல்ல என்பதால் மனோகரி பணிந்து போனாள். ''அப்படியல்ல மோனி. ஆனால், அவரைத் துச்சமாகப் பேசினால் எனக்கு மனதுக்கு கஷ்டமாக இருக்கிறது. அதனால் தான் குறுக்கிட்டு விட்டேன். சாரிம்மா'' என்று மன்னிப்பும் வேண்டினாள்.

சினம் தணிந்த போதும் ''காதலாக்கும்!'' என்றாள் மீனாட்சி கிண்டலாகவே! ''பார், மனோ! அந்த ஓட்டாண்டியை நீ மணப்பது பற்றி எனக்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. ஏதோ, நம் அத்தை மகள் கஷ்டப்படப் போகிறாளே என்று இலவசமாய் ஓர் ஆலோசனை

சொல்ல முயன்றேன். அவ்வளவு தான். மற்றபடி, உன் வாழ்க்கை; உன் விருப்பம். ஆனால் ஒன்று இன்னாருடைய மகள் என்று அப்பாவின் பெயர் போட்டு அழைப்பிதழ் அச்சடித்து விடாதே. 'வி' என்று அப்பாவின் முதல் எழுத்தையும் பயன்படுத்தாதே. யாரோ ஒரு மோனிகாவாக நீ தினகரனை மணப்பதைப் பற்றி எனக்கு எந்தவித அக்கறையும் கிடையாது!'' என்று அவள் முடிக்கவும் மனோகரிக்கு அப்பாடி என்று இருந்தது.

இந்த அளவு இறங்கி, இணங்கி வந்தாளே என்ற ஆறுதலோடு, இன்னொரு வேண்டுகோளையும் மாமன் மகள் முன் வைத்தாள். ''இந்த விவரம் வீட்டில்கூட யாரிடமும் சொல்ல வேண்டாம், மோனி ப்ளீஸ்!'' என்றாள் கெஞ்சலாக.

''அப்படித்தான் எங்கள் வீட்டில் ஒட்டி, உறவாடி, அன்றாட விவரங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு இருக்கிறோமாக்கும். இதைக் கட்டாயமாக மற்றவர்களிடம் பேச்சுவாக்கில் சொல்லி விடுவதற்கு? அப்படியே நானாகப் போய்ச் சொன்னால்கூட அதைக் கேட்க ஒரு நாதி கிடையாது! ஆமாம், சாப்பாட்டுக்கு என்னடி செய்யப் போகிறீர்கள்? நீ என் பெயரில் மணக்கப் போவதால் வீட்டோடு மாப்பிள்ளையாகத் தினகரனை உன் வீட்டுக்கு அழைத்துப் போவதுகூட முடியாதே!''

கொஞ்சம் சுயநலம் அதிகம் என்றாலும் மீனாட்சிக்குத் தன்னிடம் அக்கறையும் இருக்கிறது. அதனால்தான் கேட்கிறாள் என்று மனோகரி எண்ணமிடும் போதே, ''சிங்கிதானாடி? எத்தனை நாள் மற்றவர்கள் பிச்சை

போடுவார்கள் என்று நினைத்தாய்?'' என்று தன் சுய ரூபத்தைக் காட்டினாள் மீனாட்சி.

''என் வேலை இருக்குமே, மோனி. மாதம் பத்தாயி ரம் கட்டாயம் கிடைக்கும். அது போதும் எங்களுக்கு'' என்றாள் மனோகரி தன் எரிச்சலைக் காட்டிக் கொள்ளா மலே.

''உச்!'' என்றாள் மீனாட்சி. ''கணவன் சம்பாத்தியத் தில் குடும்பம் நடத்தி, உன் பத்தாயிரத்தைப் பாக்கெட் மணியாக வைத்து விருப்பப்பட்டதை வாங்கி ஜாலியாக இருக்கலாம். உன் தலையெழுத்து இப்படி என்றால் - தலையெழுத்து என்ன செய்யும்? யானை மாதிரி உன் தலையில் நீயே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டு தான் தீருவேன் என்று இருந்தால் பட வேண்டியதுதான். போ... என்ன பாடோ படு!'' என்றதோடு ரிசீவரை வைத்தாள்.

அப்பாடி என்று இருந்தது மனோகரிக்கு.

உடனேயே இன்னோர் ஐயம் எழுந்தது.

நிச்சயதார்த்த விழா வரை நடந்திருக்கிறது. யார் யார் வந்தார்களோ? போட்டோ, வீடியோ என்று எடுத்தி ருப்பார்களே! அதில் கலந்து கொண்டவர்கள் இன்று மீனாவின் இடத்தில் மனோகரியைப் பார்த்து என்ன சொல்லக் கூடும்! கொஞ்சம் சாயல் ஒற்றுமை இருந்தா லும் இரு பெண்களுக்கும் வேறுபாடு தெரியாமலா போகும்? அப்படிப்பட்ட யார் யாரிடம் மனோகரி கவனமாய் இருக்க வேண்டும்?

மீனாட்சியிடம் விவரம் கேட்க வேண்டும் என்று மீண்டும் எஸ்டிடி பண்ணும் போதே மனோகரியின் மனம் சோர்ந்தது.

நிச்சயதார்த்த விழாவுக்கு எத்தனை பேர் வந்தார்களோ? இவர்கள் அத்தனை பேரும் யாராவது ஒருவரே கூடப் போதும் தினகரனிடம் சென்று, நிச்சயதார்த்தப் பெண் வேறு ஆள் என்று சொல்லிவிடக் கூடுமே! தினகரனுக்குத் தான் பார்வை இல்லை. மற்றவர்கள்? இவர்களில் யார் யார் வந்து எப்போது உண்மை வெளியாகி விடுமோ என்று நாள் பூராவும் அஞ்சிக் கொண்டே இது என்ன வாழ்க்கை?

''எடுக்கிறார்கள். இந்தாருங்கள்'' என்று ரிசீவரை அவள் கையில் கொடுத்து விட்டுக் கண்ணாடிக் கதவை மூடிக் கொண்டு வெளியே சென்றான் எஸ்.டி.டி. பூத்காரன்.

பயனற்ற வேலை என்று உள்ளூர எண்ணியபடியே, நிச்சயதார்த்த விழா பற்றிய விவரங்களை, மாமன் மகளிடம் மனோகரி விசாரித்தாள்.

''என்னது? யார் யார் வந்தார்களா? யாருமே கிடையாது!'' என்று மீனாட்சி கூறவும் மனோகரிக்கு மயக்கம் போடாத குறை தான்! இப்படிக் கூட சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்குமா, என்ன? ஆனால் யாரும் வராமல் என்ன விழா? எப்படி நடந்தது?

''மெய் தான், மனோ... தினகரன், கீழ்த்திசை நாடுகளுக்கு ஒரு முழு மாதம் போவதாக இருந்தது. அப்போது தான் ஒரு வழியாகப் பட்சி சிக்கியிருக்கிறது. விட்டால் பறந்து விடும் என்று, மோதிரம் போட்டு வீட்டினிலாவது

உறுதி செய்ய வேண்டும் என்றேன். போய் மோதிரம் வாங்கி வந்து, நம் வீட்டில் வைத்து என் கையில் போட்டு விட்டார். இந்தக் 'கேஷி'டம் ஃபோட்டோ எடுக்கச் சொன்னேன். அது ஸ்டைலாக எடுப்பதாகச் சொல்லி ஒன்றும் உருப்பட வில்லை. ஒன்றில் கூட நான் அழகாக இல்லை! அதனால், 'பிரிண்ட்' போடக் கொடுத்த இடத்தில் தொலைந்து போயிற்று என்று தினகரனிடம் கதை விட்டு விட்டேன்'' என்று தன் வழக்கமான கீச்சு நகை புரிந்தாள் மீனாட்சி.

அவள் சிரித்து முடிக்கும் வரை, ரிசீவரை காதை விட்டுச் சற்றுத் தள்ளிப் பிடித்திருந்த மனோகரிக்கு அதிர்ஷ்டத்தின் மீது மெல்ல நம்பிக்கை பிறக்கலாயிற்று.

அதிர்ஷ்டம் எதுவரை செல்லும் என்று சோதிக்க விரும்பியவள் போன்று, ''உன்... போட்டோ? தினகரனுக்குக் கொடுத்திருப்பாயே; அவர் பர்சில் ஒன்றும் இல்லை...'' என்று துருவத் தொடங்கினாள்.

''இன்றைக்கு என் தலையாய வேதனை என் ஃபோட்டோதான்'' என்றாள். ''அதெப்படி, மனோ? தூரத்தில் பார்த்தால் ரொம்பவும் நாம் இருவரும் ஒரே மாதிரி தான் இருக்கிறோம். ஆனால் 'குளோஸ் அப்'பில் படம் எடுத்தால் நீ நன்றாய் இருக்கிறாய், நான்... சகிக்கவில்லை? மற்றபடி நம் வீட்டு ஜாடை என்றாலும், உனக்கு உன் அப்பாவின் மூக்கு வந்து விட்டது என்று நினைக்கிறேன். என் மூக்கைப் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்ளலாமா என்று ஒரு யோசனை. ஆனால் பயமாக இருக்கிறது! நீ என்ன சொல்கிறாய்?''

''செய்து கொள்... ஆனால் நீ போட்டோ பற்றிச் சொல்லிக் கொண்டு இருந்தாய்...'' என்றாள் மனோகரி.

''ஆ.... ஆமாமில்லே? அதனால் என் மூக்கை மறைக்கிற மாதிரி, ஒரு பெரிய பூவை வாசம் பார்க்கிற மாதிரி ஒரு போட்டோ மட்டும் தினாவிடம் கொடுத்திருந் தேன். அதில் என் கண் மட்டும் தான் சரியாகத் தெரியும். நம் வீட்டுக் கண். அதை அவருடைய அம்மாவுக்கு அனுப்பப் போவதாகச் சொல்லியிருந்தார். அங்கே அனுப்பி விட்டாரோ என்னவோ?''

''இருக்கும் பை! மோனி!'' என்று ரிசீவரை அதன் தாங்கியில் வைத்த போது மனோகரிக்குக் கை நடுங்கி யது.

நிறுத்த மாட்டாமல் கண்களிலிருந்து அருவியாய்க் கொட்டிய நீரைச் சமாளிக்க முயன்றபடி சற்று நேரம் அங்கேயே நின்றாள் அவள்! இந்த அளவுக்கா மனோகரி தினகரனை மணக்க விரும்பியிருந்தாள்! ஆள் மாறாட் டம் செய்து, அது வெளியாகி விடுமோ என்று அஞ்சி...

தடங்கல்களை எண்ணி அவள் மனம் எவ்வளவு கலங்கியிருந்திருந்தால், அந்தத் தடைகள் அகன்றதும், அந்த நிம்மதியிலேயே இப்படி அழுகை பொங்கும்!

விஷயம் அறிந்ததும் தினகரனும் அப்படித் தான் இருந்தான்.

'ட்ராங்குவலைசர்' ஒரு டோஸ் கொடுத்து விட்டு, ''இன்று உங்களுக்கு அதிர்ச்சிகள், துக்கம், மகிழ்ச்சி இரண்டுமே. மகிழ்ச்சி நாளையும் தொடரும். அதனால், இன்றைய தினத்தை முடிந்த அளவு மறந்து விட்டு, உங்கள் ஆளோடு நடத்தப் போகிற எதிர்காலத்தை மட்டும் எண்ணிப் பாருங்கள். ஒரு சகோதரியாய் என்னு டைய புத்திமதி இது. தினகரன் அதை மதிப்பீர்கள் என்று

நம்புகிறேன். இப்போது பேசாமல் கொஞ்ச நேரம் நன்றாக உறங்குங்கள்'' என்று கூறிச் சென்றாள் கல்பனா.

மருந்தின் வேகத்தினால் என்றாலும், ஆழ்ந்து உறங்கிய தினகரனின் முகத்தில் இருந்த அமைதியைப் பார்க்கையில் மனோகரியின் நெஞ்சு உருகிப் போயிற்று.

நர்ஸ் கல்பனா கூறியது போல, அன்று மட்டும் எவ்வளவு நடந்து விட்டது! டாக்டர் சொன்னதும், தினகரன் வேதனையும், அவளை மனோகரி தேற்ற முயன்றதும்...

விலுக்கென்று நிமிர்ந்து அமர்ந்தாள் மனோகரி. அவளால் தினகரனை ஓரளவு தேற்ற முடிந்தது உண்மை தான். ஆனால் தேற்றுவதற்காக அவள் என்ன சொன்னாள்? தந்தையின் மறைவு பற்றி பேசித் தன்னைத் தானே காட்டிக் கொண்டு விட்டாளே?

என்ன மடத்தனம்! என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள் மனோகரி. முன்னே பின்னே புழுகி ஒருவரை ஏமாற்றிப் பழகியிருந்தால் இந்த மாதிரி உளறியிருப்பாளா? களவும் கற்று மற என்று சொல்வது போல ஏமாற்றியும் பழகியிருக்க வேண்டுமோ? சே!சே!சே! என்ன முட்டாள்தனம்!

அவள் தான் உளறிக் கொட்டினாளே, தினகரன் ஏன் அதைக் கண்டுபிடிக்க வில்லை?

அந்த நேரத்து உணர்ச்சிக் கொந்தளிப்பில், இழப்பின் வேதனையில், அதைச் சமனப்படுத்த, கடவுளின் கறார்த்தனத்தை மட்டும் எடுத்துக் கொண்டவன் மற்றதை விட்டு விட்டானா?

ஒரு வேளை, இன்றைய அவளது நல்ல அதிருஷ்டத்தின் விளைவாக, அவளது பேச்சை அவன் கருத்தில் எடுத்துக் கொள்ளவே இல்லையோ!

அன்று, அடுத்தடுத்து நேர்ந்த நிகழ்ச்சிகளால், மனம் பெரிதும் கிளர்ச்சியுற்றிருந்ததில் இந்த விஷயம் தினகரன் மனதில் படாமல் இருந்திருக்கலாம். ஆனால், மருந்தும், தூக்கமுமாக மனம் அமைதி அடைந்து விட்டான். எழுந்து அமர்ந்து, ''என்ன இது...?'' என்று கேட்க மாட்டானா? இப்போது அவளுக்கே மனம் சற்று அமைதியுற்றதும் அந்த சறுக்கல் நினைவு வந்து விடவில்லையா?

அப்படி அவன் கேட்குமுன் அவளாகவே எல்லாவற்றையும் அவனிடம் ஒத்துக் கொண்டு விடலாமா?

ஆனால், அப்படிச் செய்தால், எந்தக் காரணத்துக்காக மனோகரி இந்த வேடம் போட்டாளோ அது அடியோடு அடிபட்டுப் போகுமே! அப்போதே மோனியின் நிராகரிப்பு அவனைப் பாதிக்குமோ என்று அஞ்சித் தான் மனோகரி மோனியாக நடிக்கத் தொடங்கியது.

இப்போது, திருமணம் என்கிற அளவு நெருங்கி வந்து விட்ட பிறகு, ஒன்றுமே இல்லை என்றால் அவன் என்ன ஆவான்?

## 11

மனோகரியின் முன் கடவுள் தோன்றி உனக்கு ஒரே ஒரு வரம் தருகிறேன். என்ன வேண்டும்? என்று கேட்டால் அவள் முன்தினம் பேசிய பேச்சு, நிகழாதது

போல அழிந்து விட வேண்டும் என்பதைத் தான் கேட்பாள். வேறு எதுவுமே தேவையில்லை என்கிற அளவுக்கு மனம் கலங்கிப் போயிருந்தாள் அவள்.

ஆனால், கடவுளையே முன்னே கொண்டு வந்து நிறுத்தும் சக்தி அவளுக்கு இல்லாததால், தன்னையே வெகுவாக நொந்து கொண்டு, இனி என்ன செய்வது என்று யோசிக்கலானாள்.

எப்படி எப்படி யோசித்தாலும், இதிலிருந்து மீளும் வழி என்று எதுவுமே சின்ன மூளைக்கு தோன்ற மறுத்தது.

''சொன்னவள் அவளே அல்லவா? துப்பாக்கியிலிருந்து கிளம்பிய குண்டும், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பும், வாயிலிருந்து வெளிவந்த வார்த்தையும் ஒன்று; எந்த விளைவும் இன்றித் திரும்பப் பெற முடியாதவை; அதனால் பேச்சில் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று அவளுடைய அன்னை சொல்வதுண்டு. ஒரே ஒரு தரம் உணர்ச்சி வசப்படுமுன், தன்வசமிழந்து போனாளே!

திருமணம் என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் ஒரு தொடக்கம்தான் என்கிறார்கள். அதற்குமேல் எத்தனை எத்தனை பிரச்சனைகளோ? முதல் சோதனையிலேயே தோற்று விட்டாளே! இதை எப்படியோ சமாளித்தாலும், இதைவிடப் பெரிதாக என்னென்ன வருமோ? எப்போதுமே நடித்துக் கொண்டே இருக்க முடியுமா?

அவர் மேல் உயிரையே வைத்து விட்டதாக நடித்தேன்; ஏமாந்து போனார் என்று மீனாட்சி சொன்னாளே! அந்த மாதிரி நடிப்பெல்லாம், தனக்கு முடியாது என்றே மனோகரி நினைத்தாள். இத்தனைக்கும், தன் மாமன்

மகளின் பெயரில், தினகரனை மணப்பதற்குக் கூடத் துணிந்திருந்தவள்! ஒரு சறுக்கலில் தன்னம்பிக்கை இழந்து, நிலைகுலைந்து போனாள். ஊகூம் முடியா தப்பா முடியவே முடியாது.

சொல்லிவிட வேண்டும். அவனாகக் கண்டுபிடித்து, ஏமாற்றுக்காரி என்று குற்றம் சாட்டு முன் சொல்லி விட வேண்டும்! சொல்லிவிடத் தான் வேண்டும்...

சொல்லி விட வேண்டும் என்று உருப்போடும் போதே மிகவும் துன்பமாகவும் இருந்தது. ஒன்று தினகரன் என்ன ஆவானோ என்கிற பயம். என்னவோ ஒட்டகப்பாரம், கடைசித்துரும்பு என்றெல்லாம் கல்பனா பயமுறுத்தி வைத்திருந்தாளே! எப்படியோ, அவன் சமாளித்துக் கொண்டாலும், மனோகரி அவனை நிரந்தரமாகப் பிரிய நேரிட்டு விடும்...

ஆனால், எப்படியும் அதுதானே நடக்கப் போகிறது? அவளாகச் சொல்லாவிட்டாலும், அவனாக நினைவு வந்து கேட்கத் தானே போகிறான்?

கண்டுபிடிக்கப்பட்டுவிட்ட குற்றவாளியாகக் குனிந்து நின்று விளக்கம் சொல்வதை விட, முதலிலேயே உண்மையை ஒப்புக் கொண்டு விடுவது மேல்!

வழக்கம் போல காலையில் 'டெம்பரேச்சர்', 'பிரஷர்' எல்லாம் பார்த்து விட்டு, நர்ஸ் திருப்தியோடு தலையாட்டி விட்டுச் சென்ற பிறகு, மனோகரி மெள்ளப் பேச்செடுத்தாள்.

''தினகர், நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்...'' என்று தொடங்கினாள்.

இலகுவாக அமர்ந்திருந்த தினகரன், திடுக்கிட்டு நிமிர்ந்தான். முகத்தில் அச்சம் பரவ, ''திருமணத்துக்குத் தடை என்று எதையும் சொல்லி விடாதே, மோனி அப்புறம் என்னால் எதிர்காலம் என்று ஒன்றை எண்ணிப் பார்க்கக் கூட முடியாது. மோனி... மோனிகா...!'' என்று தவிப்புடன் உரைத்தான்.

கூடவே, அவனது கைகள் பரபரப்புடன் அவளை நாடி அலையவும் மனோகரி சட்டென எழுந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

ஆறுதலோடு அவளது தோளில் முகம் சாய்த்தவனிடம் மெல்லிய குரலில், ''தினகர், நான் என்ன செய்தாலும் அது நூறு சதவீதமாய், உங்கள் நன்மைக்காக, உங்கள் நிம்மதிக்காகச் செய்ததாகவே இருக்கும். நான் சொல்வது சத்திய வார்த்தை, தினகர். எந்த நிலையிலும், எப்போதும் நீங்கள் இதை மறக்கவே கூடாது! மறக்க மாட்டேன் என்று எனக்கு வாக்குக் கொடுங்கள்'' என்று கேட்டாள்.

''உன் தலையில் அடித்து சத்தியம் பண்ண வேண்டுமா? என் தலையில் அடிக்கட்டுமா? அல்லது என் அம்மா மீது ஆணையிட்டுச் சொன்னால் வாக்குறுதி திருப்தியாக இருக்குமா?''

அவன் இலகுபோலச் சொன்னபோதும் குரலின் தீவிரம் புரிந்து, ''அதெல்லாம் வேண்டாம். நீங்கள் நினைவு வைத்துக் கொண்டால் அதுவே போதும்'' என்றாள் மனோகரி சற்றே அமைதியுற்று.

ஆனால் உள்ளூர கலக்கம் தான். இவன் எப்போது நினைவுபடுத்திக் கொள்ளப் போகிறான்?

நினைவு வரும் போது இப்போது அவன் இவளுக்குத் தந்த உறுதியும், இத்தனை நாள் அருகில் இருந்து அவள் காட்டி வரும் அன்பும் சேர்ந்து சமாளிக்குமா?

இதற்குரிய விடை, மோனிகா என்ற பெண்ணின் உருவத்திடம் அவன் வைத்த அன்பின் ஆழத்தைப் பொறுத்தது என்பதை நினைக்கும் போது மனோகரிக்குத் தன்னிடம் மிகுந்த பச்சாதாபம் உண்டாயிற்று.

''திருமணத்தை விரைவில் நடத்தி விட வேண்டும், மோனி. நீ கொஞ்சம் சீரியசான குரலில் எதைச் சொல்ல வந்தாலும் எனக்கு ஒரே தவிப்பாகி விடுகிறது. இப்போது பார், நீ உன் அன்பைப் பற்றிச் சொல்ல வந்தாய்! அதற்குள் என்னமாய்ப் பயந்து விட்டேன்! இப்படியே நடுங்கிக் கொண்டு இருப்பது என்னால் ஆகாது. மனைவி என்று ஆகி விட்டாய் என்றால் இந்தப் பயம் இருக்காது பார்''

அவன் தவறாக ஊகித்துப் பேசுவதை உணர்ந்தும் அவள் அதைச் சரிப்படுத்த முயற்சிக்க வில்லை. அப்போதைக்கு அவளுக்கு, அதற்குரிய திடமும் இருக்க வில்லை. எனவே அவளது விரல்களை வருடியபடி அவன் பேசுவதைக் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய்த் திருமணத்தை முடித்துக் கொண்டு விட வேண்டியது தான், மோனி. உன் பெற்றோருக்கு எப்போது முடியும் என்று கேட்டு....''

''அவர்கள் யாரும் வர மாட்டார்கள்'' என்றாள் மனோகரி சுருக்கமாக.

''ஓ!'' என்று ஒரு கணம் பேசாதிருந்தான் அவன். ''கண்ணிழந்த ஒருவனை மகள் மணப்பதில் அவர்களுக்கு விருப்பம் இல்லையாக்கும்! அவர்களை மீறித்தான் நேற்று நீ என்னிடம் சம்மதம் சொன்னாயா, கண்மணி!''

இல்லையே அவளுடைய தாயின் சம்மதம் பெற்று விட்டாளே. ஆனால் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்ல முடியாமல் முழுக்க முழுக்கப் பொய்யும் ஏமாற்றுமாக என்ன இது? எவ்வளவு தான் நன்மை கிடைக்கக் கூடும் என்றாலும் ஒரு தப்பில் தொடங்கும் எதுவும் சரிவராது என்று காந்தி சொல்லியிருக்கிறாரே! அப்படியானால் அவளது வாழ்வு என்ன ஆகும். ஒரு காற்றில் விழுந்து விடும் சீட்டுக் கட்டு மாளிகை போல, ஒரு சிக்கலில் அடியோடு அழிந்து விடுமா?

பார்க்கும் திறன் இருந்திருந்தால் மனோகரியின் முக மாறுதலில் இருந்தே தினகரன் எதையும் கண்டு பிடித்திருக்கக் கூடுமோ என்னவோ? இப்போது அவளது வருத்தம் மட்டுமே உணர்ந்தவனாய், ''ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறதம்மா? ஒன்று செய்யலாமா, மோனி? நாம் இருவரும் நேற்றையத் தினத்தைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது, சரிதானா?'' என்று கேட்டான்.

''முடியுமா, தினகர்? குரங்கை நினையாது மருந்து குடித்தவன் கதை என்று ஒன்று இருக்கிறதே!'' என்று மனம் ஆசையும் நிராசையுமாக அலைபாய அவள் சந்தேகத்துடன் கேட்டாள்.

''அது மன உறுதி இல்லாதவர்களுக்கு. அத்தோடு அந்த குரங்குக் கதை ராஜாவுக்கு வேறு வேலையும்

இருந்திராது. நமக்கு அப்படியில்லையே! வரப்போகும் நம் திருமணம், அதன்பின் நம் இல்லறம், வருமானத்துக் குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள்... பேச, திட்டமிட, முடிவெடுக்க, என்று எத்தனை இருக்கின்றன? அத் தோடு, ஒன்று தெரியுமா, மோனி! அந்த விபத்து நாளைப் பற்றிக் கூட நான் எண்ணிப் பார்ப்பதே இல்லை. என்ன லாபம், சொல்லு? அடடா, இப்படிச் செய்திருந்தால், அப்படிப் போயிருந்தால், ஒரு நிமிடம் தாமதித்திருந் தால்... என்று ஆயிரம் எண்ணி மனதை வதைத்துக் கொள்வதுதான் மிச்சமாகும். மற்றபடி நடந்தது எதுவும் மாறப் போவது இல்லை. அதேபோலத்தான் நேற்றைய நடப்புகளும். அநாவசியமாய் அதை நினைத்து மறுகு வதை விட, ஆக்கப்பூர்வமான எண்ணங்களில் மனதைச் செலுத்துவதுதானே நல்லது?'' என்று தினகரன் தெளிவும் உறுதியுமாகக் கூறவும், மனோகரியும் ஒருவாறு அப்போ தைக்கு அமைதி அடைந்தாள்.

அடுத்து, தினகரன் தன் அன்னையுடன் பேசினான்.

மகன் பேசி முடிக்கும் வரை குறுக்கிடாமல் பொறுத் திருந்தவர், ''அவ்வளவு அவசரப்படுவானேன், கண் ணப்பா?'' என்று வினவினார்.

மகனின் விருப்பம் அறிந்ததும், ''நீ செய்த எதையா வது நான் மறுத்துப் பேசியதுண்டா, கண்ணா! ஆனால்...'' என்றவர் சற்றே தயங்கினார்.

''ஆனால் என்னம்மா? நாங்கள் இருவருமே சிறு பிள்ளைகள் அல்ல. ஆய்ந்து யோசித்து முடிவு எடுக்கக் கூடியவர்கள்! அப்படி எடுத்த முடிவு தான், இதுவும்'' என்றான் மகன் சற்றுப் பிடிவாதமான குரலில்.

ஒரு வினாடி மவுனத்தின் பின், ''நீ படித்தவன் தினகரா, உன் முடிவுகள் தவறாகி இதுவரை நான் கண்டது இல்லை... திருமணத்தை எப்படி, எங்கே நடத்தலாம் என்று ஏதாவது முடிவு செய்தீர்களா?'' என்று விசாரித்தார் தேவகி.

குரல் லேசாகிவிட, ''ரொம்பவும் எளிமையாக, வேற்றாள் யாரும் இல்லாதபடி திருமணத்தை நடத்திக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன் அம்மா... அம்மா நீங்கள் என் திருமணம் பற்றி என்னென்னவோ கற்பனை செய்து வைத்திருப்பீர்கள்... செய்தது எனக்கும் தெரியும். இப்போது பார்த்தால் உங்களால் தாங்க முடியாது அம்மா. அதனால், இங்கேயே... நாங்கள் கணவன் மனைவியாகவே அங்கு வருகிறோம், அம்மா...'' என்று தினகரன் கூறவும், அருகிலிருந்த மனோகரி திகைத்தாள்.

மகன் தடுமாறித் தாலி கட்டுவதைக் காணத் தாய் மனம் தாங்காது என்பதை யோசித்து இந்த முடிவு செய்திருக்கிறான்! அன்னையிடம் இவனுக்கு எவ்வளவு அன்பு என்று வியந்து பாராட்டும் போதே அவளுக்கு உள்ளூரக் கொஞ்சம் அவமானமாகவும் இருந்தது.

அவளுடைய அன்னையும் இப்படித்தானே ஆயிரம் கனவுகள் கண்டு கொண்டு இருந்திருப்பாள்! அவளுக்கு இந்தத் திருமணம் எவ்வளவு துன்பமளிக்கக் கூடும் என்று அவள் எண்ணிப் பார்க்கவே இல்லையே! மற்றவர்களை விடத் தாயிடம் தனக்குப் பிரியம் அதிகம் என்று வேறு எண்ணிக் கொண்டிருந்தாள்!

''என்னது? தனியாகப் பேசப் போகிறீர்களா? என்ன பேசப் போகிறீர்கள்?... பெண்களுக்குள் ரகசி

யமா? இருக்கட்டும் நான் அவளிடம் அப்புறமாகக் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்... எல்லாம் நான் கேட்டால் சொல்லுவாள்! இப்போதே பேசுகிறீர்களா, திரும்பக் கூப்பிடச் சொல்லவா?'' என்று கேட்டவன், தாயிடமிருந்து வந்த பதிலைக் கேட்டு விட்டு, ரிசீவரின் வாயைப் பொத்திக் கொண்டு மனோகரியிடம் சொன்னான்.

''அம்மா உன்னிடம் தனியாகப் பேச வேண்டுமாம், மோனி, பேசும் போது நான் அருகில் இருக்கக் கூடாதாம். என்னை வெளியே கூட்டிப் போய் விட்டு விட்டு வந்து பேசுகிறாயா? நானாகச் செல்வது என்றால் கூடுதல் நேரம் பிடிக்கும். மீண்டும் தொடர்பு கிடைப்பது கஷ்டம் என்று அம்மா லைனிலேயே இருப்பதாகச் சொன்னார்கள்.''

தினகரனைக் கைப்பிடித்து அறைக்கு வெளியே கொண்டு விட்டு விட்டு, அவசரமாக உள்ளே வந்து டெலிஃபோன் ரிசீவரைக் கையில் எடுத்தாள் மனோகரி.

அறைக் கதவைச் சத்தமின்றி, ஆனால் அழுத்தமாகத் தினகரன் மூடுவது கண்ணில் படவும் தினகரனின் மீது மரியாதை அதிகமாயிற்று. தாயார் தனியே பேச வேண்டும் என்று சொன்னதற்கு மதிப்புக் கொடுத்து மெய்யான தனிமையைத் தருகிறான்!

ஆனால், அவனுடைய தாயார் தனியே அவளிடம் என்ன சொல்லப் போகிறார்!

உள்ளூர சிறு உதைப்புடனேயே, ''ஹலோ! நான்... மோனி பேசுகிறேன்...'' என்று தடுமாற்றத்துடன் தொடங்கி விட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள். தொடக்கமே இடறுகிறதே!

ஒருசிறு வினாடித் தயக்கத்தின் பின், "தினகரன் விஷயத்தைச் சொன்னான்." என்று தேவகியம்மாள் நேரடியாக விஷயத்துக்கு வந்தார். "பாரம்மா, என் மகனின் பொருளாதார நிலைமை பற்றி உனக்கு நன்றாகத் தெரியுமல்லவா? நான் சொல்வது இப்போதைய நிதிநிலைமை. இதுவரை சம்பாதித்ததில் கோடிக் கணக்கில் சேர்த்து வைத்திருப்பதாக எதுவும் நினைத்துக் கொண்டிருக்கிறாயா?"

இதென்ன திருமணத்தைப் பற்றிப் பேசாமல் பணத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று மனோகரிக்கு ஒரு மாதிரி இருந்தது. அதுவும் பேசுகிற தொனியே சரியாகத் தெரியவில்லை...

உள்ளூர எழுந்த லேசான எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல், "இல்லை" என்றாள் சுருக்கமாக.

"எனக்கென்று அவன் கொடுத்திருப்பது, நல்லபடியாக நானும் கொஞ்சம் சாதாரணமாக என்னோடு, என் மகன் குடும்பமும் சேர்ந்து வாழப் போதுமானது. அவ்வளவுதான். ஆனால், அந்தப் பணத்தின் அதிகாரம், நான் செத்த பிறகுதான் என் மகன் கைக்கு கிடைக்கும். அப்படித்தான் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறான். புரிகிறதா?"

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, "புரிகிறது" என்று மீண்டும் ஒற்றை வார்த்தையால் மனோகரி பதில் சொன்னாள்.

"அதாவது, என்னிடம் இருப்பதில்தான் வண்டி ஓடியாக வேண்டும்! நன்றாகத் தெரிந்து கொண்டாயா?"

''ம்.''

''பின்னே, ஏன் தினகரனை மணக்கிறாய்?''

தூக்கி வாரிப் போட்டது மனோகரிக்கு.

ஏதோ தினகரனைப் பெற்றவள். பெரியவளாயிருந்து ஆசி கூறுவாள் என்று எண்ணிப் பேச வந்தால், இந்த அம்மாள் என்ன இப்படிச் பேசுகிறாள்?

சில தாய்மாரைப் போல, மருமகள் வந்தால் மகன் கையை விட்டுப் போய் விடுவானோ என்று அஞ்சுகிறாரா?

தினகரனின் தாய்ப்பாசம் அறிந்திருந்ததால், இவர் மனம் நோகாமல் எப்படி பதில் சொல்வது என்று மனோகரி யோசிக்கும்போதே அடுத்த கேள்வி முற்றிலும் கூர்மையோடு வந்தது.

''என்ன? ஓடி விடலாம்போல இருக்கிறதா?''

## 12

**மீ**ண்டும் திகைப்புற்ற போதும், மனோகரியின் பொறுமையும் மறைந்து போயிற்று. பதிலாக சினம் பொங்கியது.

இந்த அம்மாள் என்ன, தினகரனுக்கு எப்படியோ, ஏதாவது ஒரு வழியில் வரக்கூடிய பணத்துக்காக மட்டுமாகவே அவனை மனோகரி மணக்கப் போவதாக எண்ணுகிறாளா?

''இந்தக் கேள்வி மூலம் தினகரனை நீங்கள் எவ்வளவு இழிவு படுத்துகிறீர்கள், தெரியுமா?''

''நான் என் மகனை இழிவுபடுத்துகிறேனா? எப்படி யம்மா சொல்லுகிறாய்?''

''பின்னே என்னவாம்? மணக்கப்போகிறோம் என் கிறோம். பெரியவர்களாக ஆசீர்வாதம் பண்ணாமல் பணம் பணம் என்று அதையே பேசுகிறீர்களே! வாழ்க் கைக்குப் பணம் அவசியம்தான்; ஆனால் பணமே எல்லாமும் ஆகிவிடாது! தெரிந்து கொள்ளுங்கள். யாரும் வெறும் பணத்துக்காக மட்டும் ஒருவரை மணப் பது இல்லை...''

''நான் என் மகனை எப்படி இழிவுபடுத்தினேன் என்று இன்னமும் நீ சொல்லவில்லை!''

''சொல்லுகிறேன். சொல்லுகிறேன். சொல்லாமல் நானும் சும்மா இருக்கப் போவது இல்லை. திருமணம் என்றதும் ஆசீர்வாதம் பண்ணாமல், வாழ்த்தாமல் இவ்வ ளவு நேரம் நீங்கள் என்ன சொன்னீர்கள்? தினகரனிடம் பணம் இல்லை, பணம் வர வழியில்லை... இப்படித் தானே? கடைசியாக தினகரனிடம் பணம் இல்லாததால் விட்டு ஓடி விடலாம் போல இருக்கிறதா என்று கேட்டீர் களே! அப்படியானால் என்ன அர்த்தம்? பணம் இருந் தால் தவிர, ஒரு பெண் முன்வந்து மணப்பதற்கு தினகரன் தகுதியானவர் அல்ல என்பதுதானே?''

''வேறு தகுதிகள் - போதுமான தகுதிகள் இருக்கின் றனவா?''

''இல்லாமல்? தினகரன் எவ்வளவு உயர்ந்த மனிதர் தெரியுமா? அவர் அளவு அன்பு, பண்பு, மன உறுதி படைத்த ஒருவரை உலகில் எங்குமே பார்க்க முடியாது தெரியுமா? அவருக்கு நேர்ந்த இழப்புகள் வேறு யாருக்கு நேர்ந்திருந்தாலும் பைத்தியம் பிடித்துப் போயிருக்கும்.

தினகர் அவ்வளவையும் தாங்கிக் கொண்டு, அடுத்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு இருக்கி றார்... கண்... கண் வராது என்று டாக்டர் சொல்லி விட்டதும் என்ன செய்தார் தெரியுமா?''

''நீ சொன்னால்தான் தெரியும்!''

தேவகியின் குரலில் கேலி இழையோடியதோ என்ற சந்தேகத்தில், மனோகரிக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. ''தன் பணநிலைமையையும் என்னிடம் சொல்லி, பிரிந்து போக அனுமதி கொடுத்தார். இப்போதுகூட, நீங்கள் தனியே பேச வேண்டும் என்றீர்கள் என்று அறைக்கு வெளியே போய் நிற்கிறார். எஸ்.டி.டி.யில் இருக்கிறீர் களே என்று அவரை வெளியே விட்டு விட்டு அவசர மாக ஓடி வந்ததில் நான் கதவைச் சாத்தவில்லை. ஆனால் அவர் சாத்தி விட்டார் தெரியுமா? அவர் அறைக்குள் ளேயே இருந்தால்கூட உங்களுக்குத் தெரியப் போவ தில்லை என்றாலும் எவ்வளவு நேர்மையோடு நடந்து கொள்கிறார் பாருங்கள்...!''

''விட்டால் மணிக்கணக்கில் அவன் புராணம் பாடு வாய் போலிருக்கிறதே. உன் அன்பு பற்றித் தெரிந்து கொள்வதற்காகத்தான் அப்படிக் கேட்டேன். இது போதும். எஸ்.டி.டி. பில் பயங்கரமாக ஏறியிருக்கும். சீக்கிரமே திருமணத்தை முடித்துக் கொண்டு இங்கே வந்து சேருங்கள். அடுத்து என்ன செய்வது என்பது பற்றி இங்கே இருந்தபடி யோசித்து முடிவு பண்ணலாம். ஏதோ ஆசி என்று கேட்டாயில்லையா? இந்த அன்பு குறையாமல் நீங்கள் இரண்டு பேரும் பன்னெடுங்காலம் இணை பிரியாது வாழ வேண்டும் என்று கடவுளை

வேண்டிக் கொள்கிறேன். நல்லபடியாக வாருங்கள்'' என்று கூறி ரிசீவரை தேவகி வைத்தார்.

'அப்பாடி!' என்று தானும் ரிசீவரை தாங்கியில் வைக்கும் போதே மனோகரிக்குச் சிரிப்பும் வந்தது. வரப்போகிற மருமகள் எப்படிப்பட்டவள் என்று பரிசோதித்தாராக்கும்! சரியான தாயார்தான்!

தினகரனைப் பின்பற்றி, மனோகரியும் கற்பகத்தைக் கல்யாணத்துக்கு வரவேண்டாம் என்றாள்.

தினகரன் அவனுடைய அன்னையிடம் கூறியதைச் சொல்லி, ''நீங்களும் அப்படித்தானே அம்மா? ஒரே மகள் நான். எத்தனையோ கனவுகள், கற்பனைகள் உங்களுக்கும் இருந்திருக்கும்தானே? திருமணத்தின் போது அவர் தடுமாறுவதைக் கண்டால் உங்களுக்கும் வேதனைதானே? வேண்டாம்மா. அவசியமற்று கஷ்டப் படுவானேன்? நான், பிறகு ஃபோட்டோ அனுப்புகிறேன், அம்மா'' என்று கொஞ்சலும், குழைவுமாக உரைத்தாள்.

கற்பகம் பதிலே பேசவில்லை.

பெற்றவளின் வேதனை புரிந்தவளாய், மனோகரி வேறு பேச்சும் பேசினாள். தினகரனுடைய தாயார் பேசியது பற்றிக் கூறிச் சிரித்தாள். ''பிறகு பார்த்தால் சோதித்தேன் என்கிறார்கள். நீங்களும் ஓர் அம்மாவா என்று திட்டப்போனேன். நல்ல வேளையாக அடக்கிக் கொண்டேன்!'' என்று சிரித்தாள்.

கூடச் சிரிக்கவில்லை பெரியவள். ''இவர்களிடம் நீ ஒரு பொய்மையோடு போகிறாயே என்று கவலையாக

இருக்கிறது கண்ணும்மா. எதற்கும், எப்படியாவது விரை விலேயே உண்மையைச் சொல்லிவிடப் பாரம்மா... உண்மை வெளியாகி விட்டால், அப்புறம் நான் உன்னை வந்து பார்க்க முடியும்... இப்படியே, உன்னைப் பாரா மலே இருப்பது முடியாதில்லையாடா?''

சிரிப்பு மறைய ''சொல்லிவிட வேண்டும் என்று தான் நானும் இருக்கிறேன், அம்மா. தினகர் கொஞ்சம் நன்றான பிறகு... எப்படியும் ஒருநாள் சொல்லிவிடு வேன் அம்மா. வைக்கட்டுமா அம்மா? பிறகு திருமண நேரம் எல்லாம் முடிவு செய்த பிறகு திரும்பவும் டெலிஃ போன் செய்கிறேன்'' என்று மனமின்றியே பேச்சை முடித்தாள் மனோகரி.

என்னவோ, அன்னையுடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் போல, அவள் குரலைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது அவ ளுக்கு.

ஆனால் அதற்குள், தினகரன் விழித்துத் தேடுகி றானோ என்ற எண்ணம் தோன்றிவிட அன்னையை மறந்து, அறைக்கு ஓடினாள்.

ஆனால், அன்னையிடம் சொன்னதுபோல, விரை விலேயே தினகரிடம் உண்மை உரைத்துவிட வேண்டும் என்பதில் அவளும் உறுதியாகத்தான் இருந்தாள்.

ஆனால் இப்போதல்ல.

எந்த ஒரு வேலையைச் செய்வதற்கும் அதற்கு என்று ஒரு நேரம் உண்டு. நேரம் காலம் அறிந்து செய்யும் செயல் நோவற்ற வெற்றியைத் தரும்.

முதலில் தினகரனிடம் உடல்நலம் முழுவதுமாகத் தேற வேண்டும். அடுத்து, மனோகரியின் அன்பில் அவனுக்கு முழு நம்பிக்கை வரவேண்டும். அவள் மூச்சு விடுவதுகூட அவனுக்காக என்று அவன் உணர வேண்டும். அதுவரை...

''புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின் பொய்யும் சொல்லலாம்'' என்ற வள்ளுவரைத் துணை வைத்துக் கொண்டு மோனியாகவே இருக்க வேண்டியதுதான்!

கல்பனாவின் உதவியோடு, திருமணம் நல்லபடியாக நடந்தது.

இரண்டு நாட்களில் வீட்டுக்குப் போய் விடலாம் என்று மருத்துவமனையில் தெரிவித்தார்கள்.

அது அப்படியே, அதிகாரப் பூர்வமாக அவனுடைய தாயாருக்கும், அவன் கூட அறியாமல் அவளுடைய அன்னைக்கும் தெரிவிக்கப்பட்டது.

வெளியே சற்றுக் காலாற நடந்து வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்று, கற்பகத்திடம் இந்த நல்ல சேதியைச் சொன்னாள் மனோகரி.

அவர்களைப் போலவே அந்த மருத்துவமனையில் தங்கியிருந்து, சிகிச்சை பெற்று, குணமாகி ஒருநாள் முன்னதாக வீடு திரும்பும் ஒரு குடும்பத்தை வழியில் பார்த்துச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள்.

மனோகரிக்குச் சிறு வெட்கத்துடன் வாழ்த்துத் தெரிவித்தாள் அந்தக் குடும்பத்து இளம் மருமகள்.

நன்றி தெரிவித்துவிட்டு, இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம், எவ்வளவு ரகசியமாகச் செய்தாலும், பரவிப்

போய் விடுகின்றனவே என்று எண்ணியவாறே அறைக் குத் திரும்பிச் சென்றாள் அவள்.

அறைக்குள் சென்றபோது, தினகரன் எழுந்து உட் கார்ந்திருந்தான்.

''ஹலோ!'' என்று வழக்கம்போலவே மனோகரி வந்த திசைநோக்கி தினகரன் புன்னகை செய்தான்.

ஆனால் அவனது முறுவலில் வேறுபாடு உணர்ந்து, ''என்ன விஷயம்? எங்கேனும் வலிக்கிறதா?'' என்று கலவரத்துடன் மனோகரி விசாரித்தாள்.

''இல்லையே! ஏன் கேட்கிறாய்?'' என்று வேடிக்கை போலக் கையை விரித்தவன், உடனேயே, தலையசைத்து 'நான் நன்றாக நடிப்பேன் என்று கேள்வி. தொழிலில் அடுத்த எட்டு எப்படி எடுத்து வைக்கப் போகிறேன் என்று கண்டு கொள்ளவே முடியாது என்பார்கள். நீ ஒரு பார்வையில் உள்ளத்தைப் படித்து விடுகிறாயே!'' என்றான் பாராட்டும் வருத்தமுமாக.

''அவர்கள் வெளியே இருந்து பார்க்கிறவர்கள். நான் இங்கே இருப்பவள் ஆயிற்றே!'' என்று அவனது நெஞ்சைத் தொட்டுக் காட்டிவிட்டு, ''சொல்லுங்கள் என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

மருத்துவமனைக்குக் கட்டப் பணம் இல்லையோ என்ற சந்தேகம் அவளுக்கு. பெரிய மருத்துவமனை. ஏ.சி. ரூம், டெலிஃபோன் செலவு, பெரிய டாக்டர்களின் மருத்துவ ஆலோசனை... எல்லாம் பில் பெரிதாகத்தான் இருக்கும். அப்படியிருந்தால் 'எதற்கும் வைத்துக் கொள்' என்று தாயார் அனுப்பி வைத்திருந்த கணிசமான

தொகையைத் தன் சொந்தப் பணம் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று அவள் ஏற்கனவே எண்ணி யிருந்தாள்.

அந்த எண்ணத்தில்தான், அவன் மறைக்க முயன் றதை மனோகரி துருவிக் கேட்டது.

ஆனால் அவன் வேறு சொன்னான். 'அவனுடைய தொழில் பங்குதாரர் ஒருவர் மருத்துவமனைக்கு வந்து விசாரித்து விட்டுப் போயிருக்கிறார்' என்றான் மெது வாக.

''பரவாயில்லையே! நானே நினைத்துக் கொண்டி ருந்தேன். இவ்வளவு பெரிய விபத்தில் சிக்கிப் படுத்திருக் கிறீர்கள், உங்கள் தொழில் பங்குதாரர்கள் யாருமே வந்து பார்க்கவே இல்லையே, 'ஸ்லீப்பிங் பார்ட்னர்ஸ்' தூங்கிக் கொண்டே இருக்கிறார்கள் போல என்று ஒரோரு சமயம் யோசித்திருக்கிறேன். இப்போதுதான் அவர்களில் ஒரு வர் உறக்கம் கலைந்து எழுந்து வந்தார்போல. ஆனால் இதில் சஞ்சலத்துக்கு என்ன இருக்கிறது?''

அவள் பேசிய விதத்தில் மீண்டும் முறுவலித்து விட்டு, ''மருத்துவ மனைக்கு வந்து விசாரித்து விட்டுப் போனார் என்றேனே தவிர, என்னைப் பார்த்து விசாரித் தார் என்றேனா?'' என்று கேட்டான் அவன்.

கண்ணகல ''ஓ!'' என்றாள் அவள்.

அவள் கையைத் தட்டிக் கொடுத்து, ''அர்த்தம் புரிகிறது அல்லவா? தன் பங்கைப் பிரித்துத் தரும்படி கேட்கப் போகிறார். அடுத்தவரும் இதையே செய்வார். என்னுடையது என்று தொழிலில் முதலீட்டுப் பணம்

மிகவும் குறைவு. கணக்கில் எடுக்க முடியாத எத்தனையோ செலவுகளை என் கையிலிருந்துதான் செய்திருக்கிறேன். சில்லறைச் செலவு என்று முன்பு ஒத்துக் கொண்டு கையெழுத்துப் போட்டவர்கள் இப்போது ஏற்க மாட்டார்கள். அதுவே ஒரு லட்சத்துக்கு ஓடும்...

மொத்தத்தில் ஒன்றும் தராமல் என்னை வெளியேற்ற முயற்சிப்பார்கள். என் பார்வை இழப்பு நீதிமன்றத்தில் அவர்கள் சார்பாக வேலை செய்யும்... பார்க்கலாம்...'' என்றான் சற்று வறண்ட குரலில்.

''இவ்வளவு நாளில் அவர்கள் போட்ட முதலுக்கு எவ்வளவோ சம்பாதித்துக் கொடுத்திருப்பீர்களே! அந்த நன்றி, இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களே என்று ஒரு சாதாரண மனிதாபிமானம் கூடவா இராது?''

''தொழிலுக்கும் மனிதாபிமானத்துக்கும் சம்பந்தம் கிடையாது மோனி. அங்கே கொடுக்கல் வாங்கலுக்கு மட்டும்தான் இடம். உன்னால் எனக்கு லாபம் என்றால் இரு, இல்லாவிட்டால் வெளியேறுதான்... ஆனால் நல்ல வேளை! அம்மாவுக்குக் கொடுத்த வீடு, டெப்பாசிட் பணம் இதையெல்லாம் யாரும் தொட முடியாது...! ஆனால், நம் நிலைமை இப்போதைக்குக் கொஞ்சம் மோசம்தான். நிதானித்து யோசியாமல், உன்னை இந்த உழைக்குள் இழுத்து விட்டேனே என்று கொஞ்சம் கவலையாக இருக்கிறது கண்ணம்மா!'' என்றான் அவன்.

''நம் நிலைமை என்று அழகாகச் சொல்லிவிட்டு இப்போது 'உன்னை' என்று பிரித்துப் பேசுகிறீர்களே?'' என்று அவன் மார்பில் செல்லமாகக் குத்தினாள் மனோகரி. ''நம் நிலைமை அப்படி ஒன்றும் மோசமாகி விடாது.

இந்தப் பங்குதாரர்கள் பிரித்துக் கொண்டு போனாலும் நீங்கள் வேறு ஏதாவது வழி கண்டு பிடிப்பீர்கள். அத்தோடு நானும் வேலை பார்த்து சம்பாதிப்பேன். எனக்கு எப்படியும் பத்துப் பன்னிரண்டாயிரம் ரூபாய் சம்பளம் தாராளமாக வரும்'' என்றாள் மனோகரி அவனை உற்சாகப்படுத்தும் வேகத்துடன்.

''ஆனால் வெறும் சோஷியாலஜிக்கு கூட இவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்களா?'' என்று அவன் வியப்புடன் கேட்கவும், தன்னியல்பாய், ''அய்யோ, சோஷியாலஜி இல்லை. கம்ப்யூட்டர்!'' என்று பெருமையோடு அறிவித்து விட்டு உடனேயே திகைத்துப் பேந்த விழித்தாள்.

பிளஸ் டூவில் மீனாட்சி வாங்கிய மதிப்பெண்களுக்கு வேறு எதிலும் இடம் கிடைக்காமல், கல்லூரிப் பேராசிரியர் ஒருவரின் கையைக், காலைப் பிடித்து 'சோஷியாலஜி'யில் இடம் வாங்கிக் கொடுத்ததாக மாமா ஒருதரம் சொன்னது மனோகரிக்குக் காலம் தாழ்ந்து நினைவு வந்தது. அதிலும் ஓராண்டு தோற்று, நாலாம் ஆண்டு பாஸ் செய்திருந்தாள் அவள்! இப்போது என்ன செய்வது?''

அவசரமாக யோசித்து, ''ஆனால் உன் பட்டம்...'' என்று குழப்பத்துடன் தினகரன் கேட்கும் முன் விடை கண்டு, ''அது பட்டம். இது படிப்பு. சும்மா விளையாட்டாக ஒரு வேலைக்கு எழுதிப் போட்டேன். சம்பளம் பத்தாயிரம் அலவன்சுமாகப் பனிரெண்டாயிரம் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் சும்மா விட்டு விட்டேன்'' என்று சமாளித்தாள்.

அப்போதைய இக்கட்டு விலகிப் போயிற்று.

ஆனால் இனி?

படிக்கும் போது, ஆங்கிலத்தில் துணைப்பாடமாகத் 'தர்ட்டினைன் ஸ்டெப்ஸ்' என்று ஒரு உளவுக் கதை ஒன்றை மனோகரி படித்ததுண்டு. அதில் ஒற்றாடும் ஒருவன், யாரைப்போல வேஷம் போடுகிறானோ, அவ னைப் போலவே நினைக்க, நடக்க வேண்டும் என்று ஓர் இடத்தில் வரும். எப்போது மீனாட்சியாக நடிக்கத் தொடங்கினாளோ, அதிலிருந்து அவள் மீனாட்சி போலல்லவா எண்ணிச் செயலாற்ற வேண்டும்? மாறாக, மனோகரியாகவே இருந்தால் எப்படி?

ஆனால், மீனாட்சியின் சுயநலமும், அகம்பாவ மும், தயங்காமல் பொய் சொல்லும் திறனும்... ஊகூம்... சத்தியமாய்த் தெரியவில்லை மனோகரிக்கு.

இப்போது போலவே, சொல்வதற்கு உரிய நேரம் எப்போது வரும் என்று ஏங்குவதும், இடையிடையே இடறி நடுங்குவதும்தான் அவளது தலைவிதி!

சென்னையில் இருந்த 'லைன்'வீடுகளில் ஒன்றில், சில தினங்களாகவே ஒரே சண்டை. சண்டையிட்ட தம்பதியின் பெயர் மூர்த்தி, சுசீலா. ''கடைசியாக இங்கி ருந்து ரயில் சினேகிதம்! இதற்குப் போய் இவ்வளவா? ஒருநாள் நிம்மதியாக இருக்க வழியில்லை. மனோகரி யாம் மனோகரி! பெயரைப் பார்! விரைவிலேயே அவளை எப்படியாவது தேடிப்பிடித்து, என் வீட்டுக்கு வந்து 'என் பெண்டாட்டியின் கோபம் தணிய ஏற்பாடு செய் தாயே!' என்று அழைத்து வந்துவிடுகிறேன். இப் போது வேலை விஷயமாய் பெங்களூர் போய் வந்ததும்

முதல் வேலை அதுதான்! சரிதானா? சொல்கிறேனில் லையா, கொஞ்சம் சிரியேன்!'' மனைவியை சமாதானப் படுத்தினான் அந்த மூர்த்தி.

## 13

அன்று இரவு உணவின்போது, நட்டில் சப் பாத்தி, காய்கறி குருமா, பச்சடியை எடுத்து வைத்துக் கொடுத்து விட்டு தினகரனின் அருகிலேயே உட்கார்ந்தி ருந்தாள் மனோகரி.

''நீயும் சாப்பிடுவதுதானே?'' என்றவனிடம் ''இ தோ'' என்ற போதும் அவன் உண்டு முடிக்கும் வரை அவனுக்குத் தேவையானவற்றைக் கவனித்தபடி, பீன்ஸ் போலவே வெட்டிப் போட்டிருந்த பச்சை மிளகாய்த் துண்டுகளை அகற்றுவது, குழம்பு, பச்சடி குறைவது பார்த்து மீண்டும் வைப்பது என்று பார்த்துக் கொண்டு பக்கத்திலேயே இருந்தாள்.

அவன் உணவருந்தி முடித்ததும் அவசரமாகப் பாத் திரங்களை அகற்றி வைத்து விட்டுப் படுக்கையின் சுருக்கங்களைச் சீர் செய்தாள்.

குளியல் அறையில் அவன் கை கழுவி விட்டுத் திரும்பி வந்ததும், கை துடைக்க டவல் கொடுத்து, துடைத்தபின் அதை வாங்கி, அவனுக்கு வேண்டியவற் றைச் செய்து முடித்த பிறகே, அவள் உண்ணத் தொடங்கி னாள்.

பசியாறியவுடன் படுப்பது தினகரனின் வழக்க மில்லை. மனோகரி சாப்பிட்டு முடித்து வரும் வரை

ஏதாவது பேசியபடி சும்மா உட்கார்ந்திருப்பான். அவ ளும் உண்ட பிறகு, இருவருமாக, மருத்துவமனை காரிடாரில் சற்று நேரம் நடப்பார்கள்.

சில சமயங்களில் மருத்துவமனையின் பெரிய தோட்டத்தில் பேசிக் கொண்டே உலவுவார்கள்.

பெரும்பாலும் பேசுவது அவனாகத்தான் இருக்கும். சிறுவயதில் நடந்தது, கண்டது, கேட்டது, பயணங்கள் என்று சுவைபடச் சொல்லுவான்.

அவன் அறிந்த வரையில், உறவைத் துறந்து வந்தி ருக்கும் அவளுக்கு அவளது பழைய கதைகள் வேதனை யைத் தரக்கூடும் என்று எண்ணி, தானே பேசுகிறான் என்பது மனோகரியின் ஊகம்.

தன் சிறுவயது வளர்ந்த விதம் எதையும் அவளால் வெளிப்படையாகப் பேச இயலாது என்பதால், இதுவே நல்லது என்று அவளும் விட்டு விடுவாள்.

ஆனால், அவனது பேச்சிலிருந்து, ஓர் உன்னத நிலையை அடைவதற்கு அவன் தன்னைத்தானே எப்படி வளர்த்துக் கொண்டு இருக்கிறான் என்பதை மேலும் மேலும் அறிய நேர்ந்தது உள்ளூர அவளுக்கு வேதனை யையும் உண்டாக்கும். அதையும் உணர்ந்து கொண்டாற் போல, உடனேயே சினிமா, நாடகம் என்று பேச்சைத் திசை திருப்பி விடுவான் தினகரன்.

அதை இருவருமே கலந்து பேசுவார்கள்.

காலைவேளையில் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பதுதான் அவள் வாயை அதிகம் பயன்படுத்து வது. மற்றபடி தினகரன்தான்.

ஆனால், இன்று அவனிடம் பேச்சு குறைந்திருப் பதை உணர்ந்த மனோகரி காரணம் புரியாமல் உள்ளூர சற்று திகைத்தாள். யோசித்துப் பார்க்கும்போது மதியத்தி லிருந்தே அவன் அதிகம் பேசவில்லை என்றே அவளுக் குத் தோன்றியது.

அவனுடைய 'பார்ட்னர்' வந்தது பற்றிப் பேசியது தான் வழக்கம் போலான பேச்சு. அதன் பிறகு, பொது வான, அவசியப் பட்ட வார்த்தைகள்தான்.

தொழில் தொழில் என்று அதையே நினைத்து வளர்ந்தவன், ஓரளவு நிர்மானித்து விட்டோம் என்று மகிழ்ந்து கொண்டு இருந்தவன், விழ நேர்ந்ததே பெரிய அடிதான். அதிலும் அதை 'பார்ட்னர்' வந்து விசாரித்து விட்டு, இவனைப் பாராமலே போனது ரொம்பவும் பாதித்து விட்டது என்று மனோகரி ஊகித்தாள்.

இதுவரை ஓரளவு மிஞ்சும் என்று எண்ணியிருந்தி ருப்பான். இப்போது கூட்டாளிகள் ஒன்றுமே இல்லாமல் வெளியேற்றப் போகிறார்கள் என்று தவிக்கிறான்!

இந்த விஷயத்தில் அவனை எப்படித் தேற்றுவது என்று மனோகரிக்குப் புரியவில்லை. மாதம் பத்துப் பனிரண்டாயிரம் சம்பாதித்துத் தருகிறேன் என்று சொல் லியாயிற்று. வேறு என்ன அவளால் சாத்தியம்?

உண்டு முடித்து வந்தவள், தினகரனின் அருக மர்ந்து, ''எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த யோச னையோ?'' என்று சரசமாக வினவினாள்.

வழக்கம் போல அவள் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு ''பிடித்து விட்ட கோட்டையைப்

பற்றித் தான் யோசனை. புதிது புதிதாகக் கிளம்புகிறது!'' என்றான் தினகரன், குரலில் அவளைப் பின்பற்றி.

''என்ன! கிணறு வெட்டப் பூதம் கிளம்புகிறதாக்கும்!'' என்றாள் அவள் பரிகாசமாக.

''ஊகூம்... புதையல் புதையலாகக் கிடைக்கிறது!'' என்றான் அவன் புன்னகையோடு.

உடனே அமைதியாகி ''ஒருவரை அறிந்து விட்டதாக மட்டும் நினைக்கவே கூடாது போலத் தோன்றுகிறது, மோனி. உன்னை நன்றாக அறிந்து கொண்டு விட்டதாகத்தான் ஒரு காலத்தில் நான் நினைத்திருந்தேன். இப்போது நான் சொல்வதைக் கேட்டு நீ கோபமோ வருத்தமோ படக் கூடாது... இந்த விபத்தின் பின் நீ வரமாட்டாய் என்று நினைத்தேன் கண்ணம்மா. அதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். வந்து விட்டாய். என்னுடைய சோகம் அறிந்த பின்னும் நீ விலகிச் செல்லவில்லை...! நீ சற்று வேலை செய்யச் சுணங்குகிற ரகம், கொஞ்சம் செல்லச் சோம்பேறித்தனம் உண்டு என்று முன்பு எண்ணினேன். ஆனால் எனக்காக இரவு பகல் அயராமல் எப்படி உழைக்கிறாய், பார்! இவ்வளவுக்குமே, சாப்பாட்டுக்கு வேறு சம்பாதித்துப் போடுகிறேன் என்கிறாய், ஒன்றுமே நம்பும்படியாக இல்லையே, கண்மணி! வரவர எனக்கு என் மதிப்பீட்டின் மீதே நம்பிக்கை குறைந்து போகிறது, மோனி. ஒரு வேளை கண் இல்லாததால்... ஊகூம்... இல்லையே! கண் இருந்தபோது கணித்ததுதானே... அது...'' என்று யோசித்தவாறே பேசினான் அவன்.

''அன்பில் முழு நம்பிக்கை இல்லை என்கிறீர்கள்! சோம்பேறி என்றும் சொல்கிறீர்கள்! ஆனாலும் அப்படிப்

பட்ட ஒருத்தியை மணக்க ஏன் விரும்பினீர்கள் என்று எனக்குப் புரியவில்லையே!'' என்று கேட்கும் போதே மனோகரிக்கு மனம் நொந்தது.

மீனாட்சியைத் தினகரன் சரியாகத்தான் கணித்திருக் கிறான்! ஆனாலும் அவளை மணக்க முடிவு செய்தான் என்றால், அவள் மீது இவனுக்குக் காதல் - அதுவும் மீள முடியாத காதல் என்று தானே அர்த்தமாகிறது? அவள் இடத்தில் தான் வந்து உட்கார்ந்து அவள் மீதான அவனது அன்பைத்தான் ஏற்று வாழ்வது என்னவோ திருட்டுத்தனமாய் அபகரித்த பொருளை அனுபவிப்பது போல் மனோகரிக்கு வேதனையாக இருந்தது.

எழுந்து அகன்றுவிட முனைந்தவளைத் தடுத்து, அருகிழுத்து அணைத்துக் கொண்டான் தினகரன். ''என் னவோ, யாரையோ பற்றிப் பேசுவது போலச் சொல்கி றாயே? கோபமா? முதலிலேயே கோடப்படக்கூடாது என்றேனில்லையா? இதை நான் எதற்காகச் சொல்லத் தொடங்கினேன் என்று நினைத்தாய்? உன்னை வருத்தப் படுத்தவா? இல்லை கண்மணி. அப்போதே, அப்படி நினைத்தபோதே உன்னை மணந்து கொள்ளவும் தீர்மா னித்திருந்தேன். ஆனால் அப்படி நினைத்ததெல்லாம் தப்பு என்பது போல உன் நடவடிக்கைகள் அறிவுறுத்த அறிவுறுத்த, எப்பேர்ப்பட்ட புதையலைப் பெற்றிருக்கி றோம் என்று எனக்கு இவ்...வளவு சந்தோஷமாக இருக் கிறது, கண்ணம்மா!'' என்று அப்போதைக்கு அவனுக்கு இருந்த பலம் கொண்ட மட்டும் அவளை இறுக்கி அணைத்துக் காட்டினான் அவன்.

கண்ணம்மா, கண்மணி என்றெல்லாம் தினகரன் அழைத்தால் நெகிழ்ந்து விடுவது மனோகரியின் பழக்கம்.

அப்போதும் தன் நெகிழ்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் சிரித்தவாறே, அவன் கன்னத்தில் முத்தமிட்டுத் துடைத்துவிட்டு மனோகரி எழுந்தாள்.

''நன்றாகச் சாப்பிட்டு விட்டு, அப்படியே படுத்தால் ஒன்றுமே செரிக்காது. செரித்தால் தொப்பை வைக்கும்! வாருங்கள் நடந்து விட்டு வரலாம்!'' என்று அவன் கையைப் பற்றி எழுப்பி விட்டாள்

பற்றிய கையை விடாமல் கதவு நோக்கி நடந்தபடி, ''இந்த மாற்றத்துக்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும். இருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது. மோனி... ஏதோ நான் எளிதாக அறிந்திருக்க வேண்டிய ஒன்று... ஆனால் என்ன யோசித்தும் அதைக் கண்டு பிடிக்கவே முடியவில்லையே!'' என்றான் தினகரன்.

பந்தயக் குதிரையாய்த் தொண்டையில் வந்து துடித்ததைப் பிரயாசைப்பட்டு அடக்கிக் கொண்டு ''பிரமாதமான காரணம்தான்! மூன்றே மூன்று எழுத்துக் காரணம் தான்! அதுதான் அ... ன்... பு! நீங்கள் கட்டுகளோடு கிடப்பதைப் பார்கும் வரை உங்கள் மீது நான் எவ்வளவு அன்பு கொண்டிருந்தேன் என்பதை நானே அறியவில்லையே! அறிந்தபின்... எல்...லாம் மாறிவிட்டது!'' என்று முடித்தபோது மனோகரியின் குரல் கரகரத்தது.

அவள் சொன்னது உண்மையேதான்! நோகாமல் சொல்லிவிட்டுப் போக வந்தவள்தானே! அவனைப் பார்த்த பிறகு, விட்டுப்போவது முடியாத காரியமாகி

விட்டது மெய்யல்லவா? அவள் தோளை ஒருதரம் அணைத்து விடுவித்தவன் சொன்னான், ''என்னவோ, திருமணம் என்று ஆகிவிட்ட பிறகு நிம்மதியாக இருக்கி றது, மோனி. அதுவரை, எங்கே நீ இடையில் என்னை விட்டு விட்டுப் பிரிந்து போய் விடுவாயோ என்று அவ்வப்போது பயமாக இருக்கும்! இப்போதுதான், அந்தக் கவலையின்றி இருக்கிறேன்! என்றான் அவன்.

''ஒன்று தெரிந்து கொள்கிறீர்களா? நீங்களாக என் னைப் போ என்று சொல்கிறவரை நான் உங்களை விட்டுப் பிரிவதாக இல்லை'' என்று திரும்பவும் இலகு வாகவே மனோகரி பேச முயன்றாள்.

''அப்படியானால் வாழ்க்கை முழுமைக்கும் என் னோடுதான் இருக்கப் போகிறாய்!'' என்றான் தினகரன்.

''அதுதான் என் பிரார்த்தனையும்!'' என்று முடித் தாள் மனோகரி. மறுநாள் மருத்துவமனையை விட்டுக் கிளம்புமுன், இருவருமாக முடிவு செய்தபடி, மனோகரி கடைக்குச் சென்று அழகிய குங்குமச் சிமிழ் ஒன்று வாங்கி வந்தாள். அதைக் கல்பனாவுக்குப் பரிசளித்து விட்டு இருவருமாகக் கிளம்பினர்.

''நான் பொல்லாத நாத்தனார். தினகரனை நல்லபடி யாகப் பார்த்துக் கொள்ளவில்லை என்றால், வந்து உன் காதைப் பிடித்துத் திருகினாலும் திருகி விடுவேன். ஜாக்கிரதை!'' என்று போலி மிரட்டலும் சிரிப்பும், கண் ணில் நீருமாக விடை கொடுத்தாள் அந்த அன்பான பெண்மணி.

மருத்துவமனைக்குப் பணம் எப்படிக் கட்டப் போகி றான் என்று மனோகரிக்கு ஒரு சிறு குழப்பம் இருந்தது?

ஏனெனில் காசோலைகளில் அவனால் கையெழுத்திட முடியாது! நேரில் சென்று பணம் எடுத்துவர, அந்த ஊரில் அவனுக்குப் பாங்க் கணக்கு இருப்பது சாத்திய மாக அவளுக்குப் படவில்லை.

ஆனால் தினகரன் டெலிஃபோன் மூலமாகவே வேலையை முடித்துக் கொண்டான்.

''ஓ!'' என்ற மனோகரியின் ஆச்சரியத்தை உணர்ந்து, ''என் தொழிலுக்கு எந்த ஊரில், எப்போது பணம் தேவைப்படும் என்று சொல்ல முடியாது, மோனி. அதனால், டெலிஃபோனில் பேசிப் பணம் வாங்கும் ஏற்பாட்டை ஏற்கனவே செய்து கொண்டிருந்தேன்!'' என்றான் அவன்.

''அப்படியானால் இது கம்பெனிக் கணக்கு...'' என்றாள் மனோகரி.

''ஆமாம், பல்வகைச் செலவு என்கிற தலைப்பின் கீழ் வரும். ஆனால் இனி இதை ஓகே பண்ணமாட்டார் கள். தகராறு என்று வருமுன், பாங்கில் இருந்து எடுத்துக் கம்பெனி கணக்கில் கட்டி விட வேண்டும்.''

''வந்து என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது.''

முறுவலோடு, அவள் முகத்தைத் தொட்டுத் தடவி உதட்டின் மீது கையை வைத்து அவளது பேச்சை நிறுத்தினான்.

''இருக்கட்டும், மோனி. அது கொஞ்சநாள் பத்திர மாக இருக்கட்டும். தேவைப்படும் போது எடுத்துக் கொள்ளலாம்!'' என்றான் தினகரன்.

இவன் இந்த வயதிலேயே எப்படித் தொழிலில் வெற்றி பெற்றான் என்பது கொஞ்சம் விளங்குவது போல

இருந்தது மனோகரிக்கு. மறுக்கவில்லை. முகம் சுளிக்க வில்லை, கோபப்படவும் இல்லை. ஆனால் அவள் பணத்தை வாங்கிக் கொள்ளவும் இல்லை. இதமாகவே, முகம் கோணாமல் தட்டிக் கழித்து விட்டான்

**மா**மியாரோடான முதல் சந்திப்பு. மனோகரிக்கு மிகவும் வேதனையான ஓர் அனுபவமாக இருந்தது! வேதனை என்றால் தேவகி அவளை எந்த விதத்திலும் குறைவாக நடத்தி அதனால் வந்த வேதனை அல்ல!

மாறாக, அன்று டெலிஃபோனில் சொன்ன மாதி ரியே, வீட்டுப் படியேறுமுன் நிறைவாழ்வு வாழும் இரு பெண்களைக் கொண்டு மணமக்களுக்கு ஆலம் சுற்றி, பூஜை அறைக்கு அழைத்துச் சென்று, மனோகரியை விளக்கேற்ற வைத்து அதன் பின்னரே தன்னிடம் மணமக் களை அழைத்து வரச் செய்தார்.

''வாம்மா!'' என்று வாய்நிறைய அழைத்தாலும் ஒரு வினாடிக்கு குறைவாகத்தான் மாமியாரின் பார்வை மனோகரியிடம் தங்கியது. ஆனால் அதற்காக மனோகரி குறைப்படவில்லை. ஏனெனில், பரிவும் பச்சாதாபமும், ஏக்கமும் நிராசையுமாக, அந்த அன்னையின் கண்கள் தன் மகனை உச்சி முதல் பாதம் வரை வருடிக் கடைசி யாக மகனின் செயலிழந்த கண்களில் வந்து நிலைத்தது. தன் தவிப்பைப் பிறர் அறியாமல் முக்கியமாக மகன் அறியாமல் மறைக்கப் படாத பாடுபட்டுக் கொண்டிருந் தார் அவர்.

தாய்மனம், உணர்ந்தாற்போல, ''அம்மா!'' என்று அன்னை முன் தினகரன் மண்டியிட, ''என் கண்ணே!'' என்று மகனின் தலையை, அவன் பத்து மாதம் குடியி

ருந்த வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டார் தேவகி.

டில்லியின் மன்னன் என்றாலும் தாயின் முன் பிள்ளைதான், இல்லையா? தினகரனும் தாய் மீது முகம் புதைத்து அப்படியே நின்றான்!

உணர்ச்சியில் பொங்கிப் பெருகிய அந்த வேதனையை தாய்க்கும், மகனுக்கும் இடையே குறுக்கிட மனமின்றி, மனோகரி மெல்ல ஒதுங்கினாள்.

## 14

குகசரணத்தின் — தினகரன் அவனுடைய தாயாருக்கு என்று வாங்கிக் கொடுத்திருந்த இடத்திற்கு குகசரணம் என்று பெயரிட்டிருந்தார்கள். அதன் அன்றாட வாழ்வில் மனோகரி உடனேயே இயல்பாகப் பொருந்தி விட்டாள் என்று சொல்ல முடியாது. அதற்கு முன் ஒரு சில வேதனைகள், அதிர்ச்சி எல்லாம் நேரத்தான் செய்தன. ஆனால், அதன்பின் வாழ்க்கை இலகுவாக இன்பமாகக்கூடச் செல்லலாயிற்று.

பாற்கடலைக் கடைந்தபோது விஷத்தை அடுத்து அமுதம் வரவில்லையா? அதுபோல என்று கொள்ளலாம்.

சாதாரணமாக என்றால் வீட்டு இளவரசனின் திடீர் திருமணம் அவள்மீது எல்லோருக்குமே வெறுப்பைத்தான் ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் தினகரனுக்கு ஏற்பட்ட விபத்து, அதன் காரணமான இழப்பு

எதையும் பொருட்படுத்தாமல், அவனை அவள் மணந்தது அதிலும் அவளுடைய பெற்றோரின் மறுப்பையும் மீறி அவனை மணந்து கொண்டாள், என்பது, அந்த வீட்டில் இருந்த அனைவரின் நன்மதிப்பையும் அவளுக்கு ஈட்டித்தந்தது.

தினகரனுக்கு ஒரு குறை இருப்பது போலவே காட்டிக் கொள்ளாமல், அவனுடன் உற்சாகத்துடன் பேசிப் பழகியபோதும் அவனது சிறுசிறு தேவைகளைக் கூட அவனது முகக் குறியிலிருந்தே நிறைவேற்றிய விதம் தேவகியைக் கவர்ந்தது.

தேவகியே மெச்சிவிட்ட பிறகு, அவர்களிடம் கைநீட்டிச் சம்பளம் வாங்கும் மற்றவர்கள் மரியாதை கிடைக்கத் தடை ஏது?

தொழிலிலும் மனோகரி தினகரனுக்கு உதவி செய்தாள்..

வந்த களைப்பு தீர என்று சற்று நேரம் ஓய்வெடுத்த தினகரன், விரைவிலேயே மனைவியை அழைத்துக் கொண்டு கம்ப்யூட்டர் அறைக்குச் சென்றான்.

''எப்படியும் மாதா மாதம் இங்கு வந்து சில தினங்கள் தங்கி, அம்மாவின் கைச்சாப்பாடு சாப்பிட்டு விட்டுப் போவேன். அப்போதைய உபயோகத்துக்காக வாங்கி வைத்தேன்.. வா. அது எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்று பார்க்கலாம்'' என்று மனோகரியை அங்கே அழைத்துச் சென்றான் தினகரன்.

கம்ப்யூட்டரை 'லாக்' செய்து வைத்திருந்தான்.

'பாஸ்' வார்த்தையை மனைவிக்குக் கற்றுக் கொடுத்து இருவருமாக வேலையைத் தொடங்கி னார்கள்.

அவனாகப் பார்க்க முடியாது என்பதால் தினகரனுக் குத் தேவைப்பட்ட விவரங்களை ஒவ்வொரு முறையும் மனோகரி படித்துச் சொல்ல வேண்டியிருந்தது. எனவே வேலை மெதுவாகத்தான் நடந்தது.

ஆயினும் இரண்டு மணி நேரம் தீவிரமாக வேலை செய்து வாங்குகிற, விற்கிற இரு திறத்தாருக்கும் நடுத் தொடர்பாக அமைந்து தினகரன் சில வியாபாரங்களைச் செய்து முடித்தான்.

கடைசியாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கும், கூடவே அவனுடைய தொழில் பங்குதாரர்களுக்கும் ஃபேக்சில் செய்தி அனுப்பி விட்டு வேலையை முடிக்கச் சொன் னான்.

லேசாகச் சோம்பல் முறித்து விட்டு, ''அங்கே இங்கே என்று பார்வையில் படும்விதமாய் யாரேனும் இருக்கிறார்களா, மோனி?'' என்று தினகரன் வினவி னான்.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு, ''இல்லையே! ஏன்?'' என்று புரியாமல் கேட்டவளை, அருகே இழுத்து முகம் தொட்டு முத்தமிட்டான் அவன்.

மறுக்காமல் அருகிருந்தவளின் முகத்தை லேசாக வருடியபடி, ''இன்றைய வர்த்தகத்தின் லாபம், நமக்கு ரிய பங்கு எவ்வளவு தெரியுமா, மோனி?'' என்று கேட்டான்.

அவளது பதிலை எதிர்பாராமலே, ''மூன்று லட்சம்'' என்றான்.

அவனது ஃபேக்ஸ் செய்திகளின் மூலம் ஓரளவு இதைக் கணக்கிட்டிருந்த மனோகரி, ''அப்படியானால், இனி உங்கள் பங்காளிகள் தகராறு பண்ண மாட்டார்கள், இல்லையா?'' என்று விசாரித்தாள்.

''ம் ம்... அப்படி நிச்சயமாகச் சொல்வதற்கு இல்லை, மோனி. நாலு வாரங்களுக்குப் பிறகு அதாவது கிட்டத்தட்ட இந்த ஒரு மாதத்தில் அவர்களின் லாபம் ஆளுக்கு மூன்று லட்சம்தான். அவர்கள் இருவரும் முதலீடு செய்திருக்கும் பணத்தின் அளவுக்கு இது மிகவும் குறைவு! இதையே பணம் கொடுத்து வாங்கி விற்க முடிந்திருந்தால் இன்னமும் சிலது முடித்திருக்கலாம்.. ஆனால்...''

''ஆனால்?''

''அவர்கள் இருவரும் பணத்தை நான் கையாள முடியாமல் பாங்குகளில் முடக்கியிருப்பார்கள். நான் வாக்குக் கொடுத்து விட்டு, பாங்க் பணம் தர முடியாது என்று சொன்னால் கேவலம். பெயர் கெட்டு விடும். அதனால், வெறுமனே கை காட்டி விட்டேன். அதன் மதிப்பு இவ்வளவுதான்...''

''ஒரு சந்தேகம்..''

''என்ன?''

''இப்போது, இந்த வின்டோ 95, ஈமெயில், இன்டர்நெட் என்று கம்ப்யூட்டர் சாஃப்ட் வேர் நிறைய வந்து விட்டதால், எல்லோருக்குமே அதாவது பொருள் வைத்

திருப்போர், வாங்குவோர் இருவருக்குமே அவரவருக்கு வேண்டிய விவரம் தெரிந்து விடும். இதைக் கொண்டு, அவர்களே அவர்களுக்குள் வேலையை முடித்துக் கொள் ளலாமில்லையா? இடையே, அனாவசியமாய் உங்களுக் குக் 'கமிஷன்' கொடுப்பானேன்...?''

''நல்ல கேள்விதான்!'' என்று அவள் முதுகைத் தட்டி சிலாகித்தான் தினகரன். ''நீ சொல்வது போலப் பொருளும் தேவையும் தெரிந்து போய் விடும்தான். ஆனால், பொருள் முழுமையாக முழுவதும் நல்லதாகக் கிடைக்கும் என்று வாங்குகிறவனுக்கு என்ன நிச்சயம்? அதைப் போலவே, வாங்குகிறவன் முழுப்பணத்தையும் ஏமாற்றாமல் குறித்த காலத்தில் தருவான் என்பதும் பொருள் வைத்திருப்பவனுக்கு என்ன நிச்சயம்? அட் வான்சோடு நிறுத்திக் கொண்டு பணத்துக்கு இழுத்து அடிக்கலாம் அல்லவா?''

''ஓகோ!''

''இந்த இடத்தில்தான் நாம் வருகிறோம். வாங்கு வோர், விற்போரை இணைக்கும் பாலமாக நாம் செயல் படுவதோடு, இருவர் பணத்துக்கும் உத்திரவாதமாகவும் இருக்கிறோம். அந்த நம்பிக்கையின் பரிசுதான் நம் வருமானம்!''

''இருவருமே உங்களையும் ஏமாற்றலாமில்லை யா?''

''இதுவும் நல்ல கேள்விதான். கடவுள் கொடுத்த என் தனித்திறமை, தரம் நிர்ணயிப்பது, பொருளின் தரம் மட்டுமல்ல. வியாபாரத்தின் இருபக்கத்தவரின் தன்மை யையும் கூடச் சரியாகவே கணித்து வந்திருக்கிறேன்...

ஆனால் இனிமேல் அது கொஞ்சம் - கொஞ்சமென்ன, நிறையவே சிரமம்தான், பார்ப்போம்...'' என்றான் அவன் யோசனையோடு.

இருவருமாக அலுவல் அறையை விட்டு வெளியே வருகையில் பார்த்து விட்டு, ''என்னம்மா, இன்றே வேலையைத் தொடங்க வேண்டுமா? முகமெல்லாம் சோர்ந்து விட்டதே!'' என்றார் கவலையுடன்.

தோட்டத்தில் இருந்து பக்கவாட்டுக் கதவு வழியே உள்ளே வந்து கொண்டிருந்த அவர் முகத்திலும் வியர்வை அரும்பியிருந்தது. அதைக் கவனித்து விட்டு, ''இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருங்கள். நான் உங்களுக்கும் சேர்த்து ஏதாவது பழச்சாறு கொண்டு வருகிறேன், அத்தை!'' என்று உள்ளே சென்றாள் மனோ கரி.

மருமகளை வாஞ்சையுடன் பார்த்தபடி, ''ரொம்ப வும் நல்ல பெண்! இல்லையா கண்ணா? உண்மையைச் சொல்கிறேனே, நீ முதலில் எழுதியது, பேசியதை வைத்து யோசித்ததில் மோனிகாவை அவ்வளவு நன்றா கவே என்னால் நினைக்க முடியவில்லை. பார்த்தால் பழுது சொல்லவே முடியாத வைரமாகத் தோன்றுகி றாளே?'' என்று மகனிடம் நெஞ்சாரப் புகழ்ந்தார் தேவகி.

தினகரனின் முகத்தில் ஒருகணம் திகைப்பு தென்பட் டது. உடனேயே, ''உங்கள் மருமகள் நல்ல பெண் அம்மா. ஆனால் அந்த நல்ல தன்மையை முழுமையாக வெளிக் கொண்டு வர ஓர் அதிர்ச்சி வைத்தியமாய் இந்த விபத்து தேவைப்பட்டிருக்கிறதுபோல...'' என்றான் யோசனையோடு.

''ஆனால், இந்த அதிர்ச்சி வைத்தியம், இவ்வளவு கொடியதாய் இருந்திருக்க வேண்டாமே!'' என்றார் தேவகி வருத்தத்துடன்.

''வேண்டாம்மா'' என்று தாயின் கரத்தைப் பற்றி மெல்லத் தட்டிக் கொடுத்தான் மைந்தன்.

ஆரூடம் போலத் தினகரன் முன்கூட்டியே கூறிய படியே, அவனுடைய தொழிலின் பாகஸ்தர்கள், வக்கீல் மூலமாய் அவனுக்கு நோட்டீஸ் அனுப்பினார்கள். கண் ணிழந்த அவனது இன்றைய நிலையில் தொழிலை நடத்துவது சாத்தியமல்ல என்பதால், தொழிலை அவர்க ளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அதில் கேட்டிருந்த னர்.

கண்ணுக்கும், தொழிலுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், உடல் நலமடைந்து, வந்த உடனேயே தொழிலைக் கவனிக்கத் தொடங்கி, லாபமும் கண்டிருப்ப தாகவும், அதனால் தொழிலை நடத்துவதில் எந்தவித மாறுதலும் அவசியம் இல்லை என்றும் எடுத்துரைத்த தோடு, தன் கூற்றுக்குச் சான்றாக அன்றைய ஃபேக்ஸ் செய்திகளின் காப்பியையும் இணைத்து தினகரன் பதில் அனுப்பினான்.

அந்தப் பதில் ஓரளவு ஏற்றுக் கொள்ளப்பட்டு, இன்னமும் இரு மாதங்கள் அவகாசம் அளிப்பதாகவும், தொழில் பழைய மாதிரி நடக்கவில்லை என்றால், மேற் கொண்டு நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும் என்றும் பங்குதாரர்கள் தகவல் அனுப்பினார்கள்.

''பார்க்கலாம். இவர்களே இன்னமும் இருமாதத் தவணை தருகிறார்கள். அதற்குமேல் அவர்கள் கோர்ட்

டுக்குப் போனாலும்... எப்படியும் இன்னமும் பல மாத அவகாசம் நமக்கு இருக்கிறது. அதற்குள் எப்படியும் நிலைமையைச் சீர் செய்து கொள்ளலாம்'' என்றான் தினகரன், எந்த உணர்ச்சியையும் காட்டாத குரலில்.

அந்தக் குரலின் பின்னே, கணவன் மறைக்க முயன்ற வேதனையை உணர்ந்து மனோகரி மிகவும் வருந்தினாள். ''நாம் வருத்தப்படுவோம் என்று சாதாரணம் போலப் பேசுகிறார் அத்தை! மற்றபடி உள்ளூர அவருக்கு ரொம்பவும் வேதனைதான்'' என்று மாமியாரிடம் துயரத்துடன் கூறினாள்.

விபத்தின் பின் இன்னமும் முழுமையான ஆரோக்கியம் பெற்றிராத நிலையில் தினகரன் பகலிலும் அவ்வப்போது சோர்ந்து உறங்கி விடுவது உண்டு. அம்மாதிரி நேரங்களில், அவனிடம் பூரண அன்பு பூண்டிருந்த இரு பெண்களும், தங்கள் பேச்சு, அவனது தூக்கத்தைக் கெடுக்காத அளவு தூரத்தில் இருந்து பேசிக் கொண்டு இருப்பது உண்டு.

அன்றும், அப்படிப் பேசிக்கொண்டு இருந்தபோது தான், மனோகரி இப்படி வருத்தப்பட்டது.

கூடவே வருந்தியபோதும், ''அவனிடம் சொல்லம்மா. கோடி கோடியாய் சம்பாதித்துதான் ஆக வேண்டும் என்று என்ன இருக்கிறது? இதோ வாங்கித் தந்திருக்கிறானே, இந்த வீட்டைச் சார்ந்த நிலம் நம் எல்லோருக்கும் நல்லபடியாகவே சோறு போடும்'' என்றார் தேவகி.

வருத்தமாய் முறுவலித்து, ''அவருக்கு சாதிக்கும் வேகம்! அதை வெறி என்றுகூடச் சொல்லலாம், அத்தை'' என்றாள் மருமகள்.

"சின்ன வயதில் அவன் அப்பா அவனிடம் சொல்லிக் கொண்டே இருப்பார். அவர் பட்ட துன்பத்தைப் பார்த்து இவனாவது சாதித்துக் காட்டினால் அமைதியாவாரே என்று நானும் தூண்டி விட்டேன். அதையெல்லாம் ஏன்தான் செய்தோமோ என்று இப்போது வருத்தமாக இருக்கிறது!'' என்றாள் மாமியார்.

''முடிந்து போனதை நினைத்து வருத்தப்படுவது உங்கள் பிள்ளைக்குப் பிடிக்காது அத்தை!'' என்றாள் மருமகள்.

கண்கள் கனிவுற, ''என் பிள்ளையை அப்படியே படித்து வைத்திருக்கிறாயே! முதலில் இந்த தினுப்பையன் எழுதியதை வைத்து நான் உன்னைக் கொஞ்சம் ஒரு மாதிரிக்கூட நினைத்திருந்தேன் மோனி. அதை மன்னித்துக் கொள். ஆனால் மனிதர்களுக்காக இவ்வளவு பார்க்கிறவள், உன்னை ஆசீர்வதித்து நான் எழுதிய முதல் கடிதத்துக்கு ஏனம்மா பதிலே போடவில்லை?'' என்று விசாரித்தாள் அன்னை.

இந்த மீனாட்சி ஒரு மனுஷியா என்று உள்ளூர ஆத்திரப்பட்டு விட்டு, உடனே அமைதியை விடுவித்துக் கொண்டு, ''அது... அது.. வந்து பதில் போட்டேனே, அத்தை! போ... போஸ்டில் தவறிப்பிருக்கும்!'' என்று ஒருவாறு சமாளித்தாள்.

சிவப்பும், வெளுப்புமாக முகம் மாற, அவள் பேசியதைக் குறுக்கிடாமல் கேட்டிருந்த தேவகி, ''ஓகோ' என்பதுபோல ஒரு தலையாட்டல் தவிர, மேலே எதுவும் பேசவில்லை.

மகனிடம் செய்தது போல ஏதேனும் உளறி விட்டோமோ என்று மனோகரி சற்றுக் கலங்கினாள். ஆனால்

எவ்வளவோ யோசித்துப் பார்த்தும் தவறாக எதுவும் சொன்னதாக அவளுக்குத் தோன்றவே இல்லை.

கூடவே, யாரோ தன்னை உளவு பார்ப்பது போன்ற உணர்வையும் அவளால் அகற்ற முடியவில்லை. 'அரண் டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தெரிகி றது, வேறு ஒன்றுமில்லை' என்று தன்னைத்தானே சமாதா னப்படுத்திக் கொண்டு அன்றாட வாழ்வில் கவனத்துடன் ஈடுபட்டாள் மனோகரி.

எந்த விதத்திலும் கவனம் பிறழ்ந்ததாக மனோகரி எண்ணவில்லைதான்!

ஆனால், மறுதினமே தேவகி, மருமகளைத் தனியே அழைத்துச் சென்று நேராக நோக்கி, ''உண்மையைச் சொல்! யார் நீ?'' என்று அதட்டிக் கேட்கவும் மனோகரி அரண்டு, மிரண்டு நிலை குலைந்து நின்றாள்.

## 15

**த**ன் சம்பாத்தியத்தில், தினகரன் அவனுடைய அன்னைக்கு வாங்கிக் கொடுத்திருந்த இடத்தை ஒரு பண்ணை வீடு என்று கூறுவது சரியாக இருக்கும். வயல்களுக்குப் பதிலாக, அங்கே காய்கறி, பழப் பண்ணை இருந்தது.

காலை சுமார் பத்து மணியளவில் பண்ணைத் தோட்டத்தில் காய்கறிகள் பறிக்கப்பட்டு, விற்பனைக்குத் தயாராக இருக்கும். அதைக் கணக்கிட்டு 'டிரக்'கில் ஏற்றுவதைப் பார்வையிடுவது தேவகியின் வழக்கம்.

சற்று மன மாறுதலாகவும், கூடவே காற்றாட நடப்பது உடலுக்கு நல்ல பயிற்சியாகவும் இருக்கும் என்று மகனையும் உடன் அழைத்து செல்வார் தேவகி.

மனோகரியும் மற்ற இருவரோடு பெரும்பாலும் செல்வதுண்டு. தாயும் மகனும் தனித்துப் பேச இடம் கொடுத்து, வீட்டிலேயே உட்கார்ந்து விடுவதும் உண்டு. அந்த வேளைகளைத் தனக்கும் சாதகமாக்கி தாயாருக்குக் கடிதம் எழுதுவாள். பிறகு தினகரனின் தொழில் முறைக் கடிதங்களோடு வைத்துத் தபாலுக்கு அனுப்பி விடுவாள்.

அன்னையோடு பேச முடியவில்லை. அவளைப் பார்க்க முடியவில்லை என்று சில சமயங்களில் அவள் மனம் துடிக்கும். ஆனால் தினகரனின் அருகாமையில் மற்றதெல்லாம் தாயின் நினைவு உட்பட தூரப் போய்விடும்.

ஆனால் கற்பகத்துக்கு அப்படி இராது; மகளின் பிரிவும், அவள் எப்படி இருக்கிறாளோ என்ற தவிப்பும் மிகுதியாக இருக்கும் என்பதை உணர்ந்திருந்ததால், தன்னைப் பற்றி வீடு, வாழ்க்கை பற்றி அடிக்கடியும், நிறையவும் அன்னைக்கு எழுதுவாள்.

அன்று காய் பறிப்பவர்களுக்குக் கூலி போடும் நாள். வீட்டுக்காரிய;காரரோடு, தாய் மகன் இருவரும் சென்றிருந்தார்கள். மனோகரியும், கற்பகத்துக்கு விரிவான கடிதம் ஒன்று எழுதி முடித்துவிட்டு, ஹாலில் அமர்ந்து, கை போன போக்கில் 'ரிமோட்'டை இயக்கிக் கொண்டிருந்தாள்.

பல 'சாட்டிலைட்' சானல்களும் டி.வி.யில் வந்து வந்து, மாறிக் கொண்டிருந்தன.

பி.பி.சி.யில் 'கண்பார்வை அடியோடு போயிற்று' என்று ஒருவர் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டதும், அப்படியே அமர்ந்து அந்த நிகழ்ச்சியைக் கவனிக்கத் தொடங்கினாள்.

அது ஒரு நேர்முகப் பேட்டி. திரு 'ஹல்' என்று ஒருவர். சுமார் மூன்று ஆண்டுகளில், கொஞ்சம் கொஞ்ச மாக பழுதடைந்து கொண்டே வந்த அவரது பார்வைத் திறன், கடைசியாக முழுமையாக செயலிழந்து போயிற்று! முழு இருட்டு! வேதனைதான். ஆனாலும் தன்னிரக்கத்துக்கு இடம் கொடுத்து விடாமல் அவர் எப்படி முயன்று இன்று ஒரு பெரிய 'ஜியாலஜி' பேராசிரி யராகப் பணியாற்றுகிறார் என்பதைப் பேட்டி வெளிக் கொணர்ந்தது.

ஒரு பேரிழப்பை எப்படிச் சமாளித்து அவர் வாழ் வில் வெற்றி கண்டார் என்பதை நிகழ்ச்சி எடுத்துரைத்தது.

மனோகரியைப் பாதித்தது அதுவல்ல. அந்த வகை யில் தினகரனுக்கு ஈடாக யாரும் இருக்க முடியாது என்பது அவளது கருத்து.

ஆனால் அந்தப் பெரியவரை டி.வி. திரையில் பார்க்கும் போது, அறுபதை நெருங்குவதைப் போல அவரது தோற்றம் இருந்தது. அது அவரது மெய்யான வயதாகவும் இருக்கலாம். அவரது இழப்போடும், வாழ் வோடும் போராடியதின் விளைவாக முதிர்ச்சியாகவும் இருக்கலாம். அவரது பாவனைகளோ மனோகரியை மிகவும் தாக்கின.

இமைகளை அடிக்கடி அழுந்த மூடி மூடித்திறந்த படி, முகவாயை உயர்த்தி ஒரு மிகச்சிறு தடுமாற்றத்தை

மறைக்க முயன்றது போல வேகத்துடன் அவர் பேசிய தைப் பார்த்துக் கொண்டு இருந்தவளுக்குத் தன்னை அறியாமல் கண்களில் நீர் வடிந்தது.

அவர் செய்ததெல்லாம் அனிச்சை செயல்கள். கண்ணில் குறை ஏற்பட்டால் - உறுத்தலோ, வலியோ, பார்வை மங்கலோ ஏற்பட்டால் கண்ணிமைகள் தாமாகவே அழுந்த மூடித் திறந்து அந்தக் குறையை அகற்ற முயல்வது இயற்கை! அடியோடு திறம் இழந்து விட்ட போதும், அவரது இமைகள் தம் முயற்சியை நிறுத்தவே இல்லை போலும்.

அதே போலவே, ஒரு விஷயத்தை அழுத்திச் சொல்வதற்கு முகவாயை லேசாக முன் நீட்டிப் பேசுவதும் இயல்புதான். முன்னே இருப்பவர், தன் பேச்சை ஏற்கிறாரா இல்லையா என்பதைக் கண்டு அறிய முடியாததால், அவர் முகத்தை அப்படி வைத்துக் கொண்டே பேசியிருக்கிறார்.

ஒரு புலனின் இழப்பு ஒரு பெரிய மனிதரை என்ன நிலைக்கு ஆளாக்கி இருக்கிறது!

மேற்கொண்டு பார்க்க இயலாமல் டி.வி.யை நிறுத்தி விட்ட பிறகும் அவளால் கண்ணீரை நிறுத்த முடியவில்லை.

எழுந்து அறைக்குள் செல்லும்போது பார்த்து விட்ட பணியாள் ஒருவன், தோட்டத்துக்கு ஓடிச் சென்று முதலாளி, பெரிய அம்மாவிடம் இவள் அழுத விபரம் சொன்னது மனோகரிக்குத் தெரியாது.

கட்டிலில் குப்புற விழுந்து குலுங்கிக் கொண்டிருந்தவள், "மோனி என்னம்மா? என்ன?" என்று அருகே

வந்த கணவனை அப்படியே இறுக அணைத்துக் கொண்டு சற்று நேரம் அசையாது இருந்தாள்.

அவள் தலையை மென்மையாய் வருடிவிட்டபடி, மீண்டும் விவரம் கேட்டான் தினகரன்.

மெல்ல அவள் விவரம் உரைக்கவும், ''இது முன்பே வந்ததுதான்.. அவர் பெயர் 'ஜான்ஹல்' என்று நினைக்கிறேன். திரும்ப ஒளிபரப்பியிருக்கிறார்கள்'' என்றபடி அவள் அருகே அமர்ந்தான் அவன்.

''நீங்களும் உட்காருங்கள் அம்மா'' என்று கூடவே வந்த தாயிடம் கூறிவிட்டு, ''முன்பு இந்த நிகழ்ச்சியை நானும் பார்த்திருக்கிறேன் மோனி. என் மனம் உடையாமல் திடம் பெற அவரும் கூட ஒரு காரணம்'' என்றான்.

கணவனின் பேச்சோடு அவனது முகத்தையும் நோக்கியவளுக்கு அந்த வேறுபாடு உறைத்தது. பயின்று வைத்தவன் போன்று, தினகரனின் கண்ணிமைப்பு நாலைந்து வினாடிகளுக்கு ஒருமுறை என்று சீராக இருந்தது. அதைப் போலவே சராசரி மனிதர்களுள் சற்று உயரமான அவன் எப்போதும் போல லேசாக குனிந்த நிலையிலேயே தலையை வைத்தபடியே பேசினான்.

அந்தப் பேராசிரியர் போலத் தோன்றிவிடக் கூடாது என்று, இந்த நிலையைப் பயின்று வைத்திருக்கிறான்.

பேராசிரியரின் அனிச்சை செயல்போலவே, தினகரனின் இந்தப் பயிற்சியின் விளைவும் மனோகரியைத் தாக்கியது.

மருமகளின் கண்டுபிடிப்பைத் தானும் உணர்ந்தவர் போல, ''ஆண்டுதோறும் புலன் இழந்தோர் பள்ளிகளுக்

குப் பணம் அனுப்புகிறேன். அப்படியிருந்தும், என் பிள்ளைக்கு ஏன் இப்படி நேர்ந்தது?'' என்று வருத்தம் மிக முனகினார் தேவகி.

லேசாகத் தோளைக் குலுக்கினான் தினகரன். ''நடந்தது நடந்து முடிந்து விட்டது. ஏன், எப்படி என்று ஆராய்வதால் எது மாறிப் போய்விடுகிறது? விடுங்கள் அம்மா'' என்றான் சற்று அழுத்தமான குரலில்.

உடனேயே முகத்தில் ஒரு சிறு முறுவலுடன் ''எதற்கும் உங்கள் மருமகளிடம் இந்தக் கேள்வியைக் கேட்டுப் பாருங்கள், அம்மா! பிரமாதமாய் பதில் சொல்வாள்'' என்றான் இலகுவாய்.

''என்னது?'' என்று தேவகி மனோகரியை நோக்க, ''நானா?'' என்று கேட்டபடி அவள், கணவனை நோக்கினாள்

''ஆமாம்! அன்று சொல்லவில்லை? கடவுள் ரொம்பவும் கண்டிப்பானவர்! எந்த எந்தப் பிறவியில் என்னென்ன செய்தாலும், கணக்கு வைத்துக் கறாராகக் கறந்து விடுவார் என்றாயே!'' என்று வேடிக்கை போலத் தினகரன் கூற, முகத்தில் அறை வாங்கியவள் போல மனோகரி மிரண்டு விழித்தாள்.

அன்று அவள் வாய்விட்டதில் பாதியைச் சொல்கிறான். மீதி! அது இப்போது நினைவு வந்து விட்டால்?

உரிய நேரம் வரும்போது அவனிடம் உண்மையை முழுமையாகச் சொல்லிவிட வேண்டும் என்பதுதான் அவளது எண்ணமும்! ஆனால் அந்த உரிய நேரம் இன்னமும் வந்து விட்டதாக அவளுக்குத் தோன்றவில்லையே!

இப்போது அவனுக்கு எல்லாம் நினைவு வந்து விட்டால்? முடிவற்றது போலத் தோன்றிய சில விநாடிக ளின் பின்னர் தினகரனே மீண்டும் பேசினான். ''ஆனால், எந்தப் பிறவியில் யார் கண்ணைக் குத்தினோமோ, காலை உடைத்தோமோ என்று மண்டையைக் குடைந்து கொண்டு இராமல், இன்று நடப்பதைச் செவ்வனே செய்வதும், இனி நடக்க வேண்டியதைக் குறையின்றி திட்டமிட்டுச் செயலாற்றுவதும் மேல் என்பது என் கருத்து'' என்று அவன் முடிக்கவும் 'அப்பாடி' என்று ஆறுதல் அடைந்தாள் மனோகரி.

''ஆனால்..'' என்று மீண்டும் தினகரன் தொடங்கி, பேச்சை தொடராமல் நிறுத்தவும், ''என்ன?'' என்றாள் மீண்டும் ஏற்பட்டு விட்ட கவலையும் பயமுமாக.

லேசாக நெற்றியைத் தட்டிக் கொண்டு, ''என் னவோ, தொண்டையில் இருக்கிறது. வாயில் வரவில்லை என்பார்களே, அதுபோல, ஏதோ ஒன்று நினைவு வர வேண்டியது, வராமல் அவ்வப்போது கண்ணாமூச்சி காட்டுகிறது. அது கொஞ்சம் கூட முக்கியமில்லாத, ரொம்பவும் சின்ன விஷயமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி மறக்காது!'' என்று முறுவலித்த வன், ''என்னம்மா, மீதி வேலையைக் கணக்கர் பார்த்துக் கொள்வாரா, நாம் போக வேண்டுமா?'' என்று தாயிடம் வினவினான்.

''அவர் பார்த்துக் கொள்வார். ஆனால் லாரிக்காரனி டம் அடுத்தவாரம் பணம் கொண்டு வராவிட்டால் காய் தரமாட்டோம் என்று கொஞ்சம் கண்டிப்பாகச் சொல்லி அனுப்ப வேண்டும். நான் போய்'' என்றவர் மகனின்

முகம் இறுகுவதைக் காணவும், ''பசவப்பாவிடம் லாரிக் காரனை வந்து பார்த்து விட்டுப் போகுமாறு சொல்லி அனுப்பி விட்டு வருகிறேன்'' என்று கூறிச் சென்றார்.

வீட்டின் பின்பக்கமாய்த் தோட்டங்களினூடே குறைந்தது அரை கிலோ மீட்டர் சென்றால்தான் தோட்ட வேலையாட்களும் லாரியும் கண்ணில் படுகிற இடம் வரும். வாலிப வயது மகனாகிய தான் வீட்டில் உட்கார்ந் திருக்க, வயதான அன்னை அலையும்படி ஆயிற்றே என்று மகன் வருந்துவது புரிந்து, உடனே பேச்சை மாற்றிய மாமியாரின் மீது மனோகரிக்கு மதிப்பு கூடியது.

அது, அன்று மதியம் இன்னமும் அதிகமாயிற்று. வீட்டுக்கு வந்த பிறகு தினகரனின் உடல்நிலை எவ்வ ளவோ தேறியிருந்த போதும், உடல் வலுப்பெற்றிருந்த போதும் கூடச் சட்டென ஒரு தளர்ச்சி அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டேதான் இருந்தது. டாக்டரைக் கேட்ட தில் அது இயல்பே என்று கூறி ஓய்வு தான் மருந்து என்றார்.

எனவே அவனுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, இரு பெண்களுமாகச் சேர்ந்து மதியம் அவனைக் கட்டா யமாக உறங்க வைத்து விடுவார்கள்.

அன்று தினகரன் உறங்கியதும், தேவகி மருமக ளைத் தன்னோடு வருமாறு ஜாடை செய்து அழைத்தார்.

சற்றுத் தயங்கியவளிடம், வேலையாளைத் துணை வைத்திருப்பதைக் காட்ட அதற்குமேல் தடை சொல்லா மல் அவரைப் பின் தொடர்ந்தாள்.

பெரிதாக என்ன சொல்லப் போகிறார்? மகனுக்கு இது நல்லது; அப்படிச் செய்... என்று ஏதாவது கூறுவார்...

இப்படி எண்ணி மாமியாருடன் சென்றவள், தேவகி தன் அறைக்குள் அவளை அழைத்துச் சென்று கதவைத் தாழிடவும் சற்றே திகைத்தாள். ''என்ன அத்தை?'' என்று ஆச்சரியம் மிக வினவினாள் ''என்ன விஷயம்?''

''நீதான் விஷயம்!'' என்ற தேவகி, மனோகரியைக் கூர்மையுடன் நோக்கி, ''சொல்லு, நீ யார்?'' என்று வினவினார்..

தூக்கி வாரிப் போட்டதும் சமாளித்து, ''நா... நான் மோனிகா என்னத்தை தி... திடீரென்று?'' என்று சிரமப் பட்டு சிரிக்க முயன்றாள் மனோகரி.

கை உயர்த்தி, அவளது பேச்சையும் சிரிப்பையும் நிறுத்தினார் தேவகி தணிவாக ஆனால் உறுதியான குரலில், ''இதோ பார் நீ மோனிகா அல்ல என்பது எனக்குத் தெரியும்... எப்படித் தெரியும் என்கிறாயா? முதல் நாள் நீ போனில் பேசியதிலிருந்தே எனக்கு யோசனைதான். அன்றைக்கு கடிதம் தவறி விட்டது என்றாயே! அன்றே நீ வேறு ஆள் என்று எனக்குத் தோன்றத் தொடங்கி விட்டது. உனக்கு எப்படியோ! நம் தபால் இலாகாமீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது! இரண்டு நாள் தாமதம் ஆனாலும் கடிதம் எப்படியும் வந்து சேர்ந்து விடும். அத்தோடு இன்று தம்பியிடம் மாட்டிக் கொண்டு முழித்தாய் பார்! எனக்கு நிச்சயமாகி விட்டது அப்படி மிரண்டு பேந்த விழித்தாயே! அப் போது எல்லாம் உறுதிப்பட்டுப் போயிற்று. சொல்லு

நீயாகச் சொல்லப் போகிறாயா, அல்லது போலீசை வரவழைக்கட்டுமா? ஏனெனில் ஓர் ஏமாற்றுக்காரப் பெண்ணைப் பார்வையற்ற என் பையனோடு பழகவிடுவது அவனுக்கு ஆபத்து. என் குடும்பத்துக்கே ஆபத்துதான்! எனவே எனக்கு உண்மை தெரிந்தாக வேண்டும். சொல் சீக்கிரம்!'' என்று மனோகரியை அவளுடைய மாமியார் தேவகி சற்றும் இரக்கமின்றி மிரட்டினார்.

## 16

தன் மாமன் மகளின் வர்ணனை அடிமனதில் இருந்ததாலோ என்னவோ, மாமியாரை ரொம்பக் கெட்டிக்காரியாக மனோகரி நினைத்தது கிடையாது.

பண்ணை நிர்வாகத்தை மிகவும் நல்லவிதமாக நடத்தினார். உண்மைதான்! ஆனால், படிப்பறிவே இல்லாத எத்தனை கிராமப் பெண்கள் இதைச் செய்யவில்லை.

மகனிடம் தேவகி மிகுந்த அன்பு கொண்டிருந்தார்; அவனுக்காக உயிரை விடவும் தயாராக இருந்தார். கூடவே பிறர் மனம் நோகாமல் நடக்கும் பண்பாடும் இருந்தது.

இதையெல்லாம் வைத்து வீடு, தோட்டம், துரவை நன்கு நிர்வாகம் செய்யும் ஓர் அன்பான பெண்மணி என்று எண்ணினாளே தவிர, அதற்கு மேலாக தேவகி அம்மாள் சாமர்த்தியசாலி என்றோ, அவர் தன்னைக் கண்டு பிடித்து விடக்கூடும் என்றோ மனோகரி ஒரு தரம் கூட கற்பனை கூடச் செய்து பார்க்கவில்லை!

எனவே தேவகியின் இந்த மிரட்டலில் அவள் வெலவெலத்துப் போனாள்!

விழித்த கண் விழித்தபடி நின்றவளுக்குத் தொண்டையிலிருந்து சத்தமோ, வாயிலிருந்து வார்த்தையோ வர மறுத்தது. மூளைக்குச் செயல்படும் திறன் இருந்தால் அல்லவோ, அது கட்டளையிட, தொண்டை வழிச் சத்தமும், உரிய உதட்டசைவால் வார்த்தைகளும் வெளி வரக் கூடும்!

கால்கள் துணியாய்த் துவள, மனோகரி தள்ளாடுவதைக் கண்டு தேவகியே அவசரமாக ஓடிவந்து அவளைப் பிடித்து ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். ஒரு தம்ளர் குளிர் நீரையும் கொணர்ந்து மனோகரியின் கையில் கொடுத்துக் குடிக்கச் சொன்னார். தெய்வக் கட்டளை போல, ஒரு சொட்டு நீர் கூட மீதம் வையாமல் குடித்து முடித்தாள் மனோகரி. காய்ந்திருந்த உதடுகளை நாவினால் ஈரப்படுத்தி விட்டு, ''நீங்கள் என்ன கேட்டீர்கள்?'' என்று குரல் நடுங்க வினவினாள்.

சற்று நேரம் மருமகளை நோக்கி விட்டு, ''இதோ பார்! நான் பார்த்த அளவில் உனக்கு என் மகனிடம் அன்பு இருப்பதாகத்தான் தெரிகிறது. ஆனால் நீ யார், என்ன என்பதை நானும் கூட அறிந்து கொள்ளாமல், எப்படி உன்னை என் பிள்ளையோடு தொடர்ந்து பழக விடுவது? நீ உண்மை சொன்னாயென்றால். சொல்லித்தான் ஆக வேண்டும். உன்னைப் பற்றி எனக்குத் திருப்தி ஏற்பட்டால் ஒழிய, இனி நீ என் மகனோடு பழகுவதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்'' என்றார் தேவகி பிடிவாதமாக.

அவரது பேச்சைக் கூர்ந்து கவனித்த மனோகரிக்கு உள்ளூரக் கொஞ்சம் தெம்பு உண்டாயிற்று.

இந்த மாமியார் அவளை விரட்டிவிடப் போவது இல்லை. அந்த எண்ணம் இருந்திருந்தால் இப்படித் தனியே அழைத்து விசாரிக்க மாட்டார். தினகரனிடம் குறைந்த பட்சமாய், மற்றவர்கள் முன்னிலையிலும் போட்டு உடைத்திருப்பார்.

இந்த எண்ணம் தோன்றிய பிறகு கூட, மனோகரிக்கு முழு நம்பிக்கை உண்டாகவில்லை. எப்படியும் ஆள் மாறாட்டம் பெரிய குற்றம். ''வெளியே போடி'' என்றால் என்ன செய்வது என்று உள்ளூரக் கலங்கிய போதும், மனதைத் திடப்படுத்திக் கொண்டு முதல் தடவையாகத் தினகரனைச் சந்தித்ததை நடந்ததை எல்லாம் தினகரன் தாயிடம் சொல்லித் தீர்த்தாள். தினகரனிடமும் இப்படிக் கொட்டி விட முடிந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும். ஆனால்..

திகைத்துப் போய்ச் சற்று நேரம் பேசாமல் அமர்ந்திருந்தாள் அந்த அன்னை. பிறகு ''ஆக, அந்தப் பெண் மோனிகாவைப் பற்றி நான் கவலைப் பட்டதெல்லாம் சரிதான். என்னடா, நமக்குத்தான் மகனிடம் உரிமை உணர்ச்சி அதிகமாகி விட்டதா? அவன் அன்புக்கு உரிமை கொண்டாட இன்னொருத்தி வருவது பிடிக்காமல் இப்படியெல்லாம் நினைக்கிறேனோ என்று கலங்கிப் போயிருந்தேன் நல்ல வேளை அது இல்லை என்று ஆகியது'' என்று பெருமூச்சு விட்டார்.

''இப்போது என்ன செய்யப் போகிறீர்கள், அத்... அத்தை என்று இன்னமும் அழைக்கலாமா?''

''என் மகன் தாலி கட்டியது உன் கழுத்தில்தானே? என்னை வேறு எப்படிக் கூப்பிடுவாயாம்?'' என்று கேட்டவள் சற்று யோசித்து விட்டு, ''எதை என்ன செய்யப் போகிறேன் என்று கேட்கிறாய்?'' என்று விசாரித்தாள்.

''அதுதான் அத்தை என்னை, நான் மோனிகா இல்லை என்பதால் என்னை .. என்னை உங்கள் மகனிடம்ருந்து பிரிந்து போகச் சொல்லப் போகிறீர்களா?'' என்று தன்னை மீறிய பயத்துடன் வினவினாள்.

அந்தப் பயத்தைக் கவனித்து விட்டு, ''இல்லையம்மா! என்றாள் தேவகி பரிவுடன். ''நீ என் மகன் மணக்கப் போவதாகச் சொன்ன பெண் அல்ல; வேறு யாரோ என்ற சந்தேகம் உண்டானதும் உள்ளூரப் பயமாக இருந்தது. என் மகனுக்குக் கண் தெரியாது என்பதைப் பயன்படுத்திக் கொண்டு யாரோ ஒருத்தி இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறாள் போல இருக்கிறதே, எதற்காக வந்திருக்கிறாளோ என்று ஒரு கலக்கம். பார்த்தால் நல்லவளாகவும் தோன்றியது. சந்தேகப்பட்டது தீர்ந்து, நீ நிச்சயமாய் வேறு ஆள்தான் என்று உறுதியாகி விட்டதால், என்ன ஏது என்று தெரிந்து கொள்ளத்தான் கேட்டேனே தவிர, உன்னை இங்கிருந்து விரட்டுவதற்காக அல்ல'' என்றாள் அந்த மாமியார். ''அதிலும் இவ்வளவு அன்பு என் மகனிடம் வைத்திருப்பவளை நான் ஏன் விரட்டப் போகிறேன்!''

''அப்படியானால்?''

''எப்போதும் போல இரு. இந்த ரகசியம் நமக்குள்ளேயே இருக்கட்டும்''

''அப்பாடி!'' என்று நிம்மதிப் பெருமூச்சுடன் சற்று நேரம் கண்மூடி ஓய்ந்து கிடந்தாள் மனோகரி. கண்மூடிக் கிடந்த நேரத்திலேயே சற்று யோசித்து விட்டு ''உங்களுக்கு எப்படி சந்தேகம் வந்தது, அத்தை? நான் என்னவோ மிகுந்த சாமர்த்தியத்தோடு எல்லாம் நடத்தி, சமாளித்து வந்திருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேனே! நீங்களானால் முதலில் இருந்தே சந்தேகம் என்கிறீர்கள்!'' என்று சிறு வியப்புடன் வினவினாள்.

மனோகரி போலவே, தேவகிக்கும் உள்ளூர அடைத்து வைத்திருந்ததைக் கொட்டி விடும் ஆவல் போலும். தயக்கமின்றி விவரம் சொன்னார்.

''நீ முதல் நாள் தினகரின் கண் பற்றி என்னிடம் தெரிவித்தாயே, நினைவிருக்கிறதா? என் கண்ணைப் பையனுக்குக் கொடுக்கும் எண்ணம் வேண்டாம் என்றாய். அந்தப் பெண் மோனிகாவாக இருந்தால், கண்ணை மகனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்து விட்டு மறுநாளே செத்துத் தொலை என்றல்லவா சொல்லுவாள். ஒரே முரண்பாடாக இருக்கிறதே என்று நினைத்தேன்...''

''மீனாட்சி... அதுதான் மோனிகா பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் இருவரும் சந்தித்ததே இல்லை என்று என்னிடம் சொன்னாளே!'' என்று திகைப்புடன் மனோகரி வினவினாள்.

''பார்த்தது இல்லைதான். தினகரின் பேச்சில், அவன் எனக்கு எழுதியதில் இருந்து அறிந்து கொண்டது தான். நேரடியாக அவள் இப்படி என்று அவன் சொன்னதில்லை; ஆனால், மோனிகா இப்படிச் சொன்னாள்; அப்படிச் செய்தாள் என்று அவனாகக் கூறியதிலிருந்து

ஊகித்தேன்.... நான் அதிகம் படித்தவள் இல்லைதானம்மா. ஆனால், பிள்ளை என்று வரும்போது வடிகட்டிய முட்டாள் பெண்ணுக்குக்கூட என்னென்னவோ தெரிந்து விடும்! அப்படித்தான் இந்த ஊகமும்!''

''படித்தால்தான் ஒருவர் புத்திசாலியாக இருக்க முடியும் என்று இல்லை அத்தை. நீங்க்ள கணித்ததும் சரிதான். அப்புறம் அந்தப் போஸ்ட் விவரம் நான் கடிதம் எழுத மறந்து விட்டும் அப்படிப் புளுகி இருக்கலாமில்லையா?''

''எழுத மறந்தவளுக்குத் திகைப்பு ஏற்படுவானேன்? உடனே ஓர் உள்ளடக்கிய கோபம்! அடுத்து பரிதாபம். இத்தனையும் வரிசையாக உன் கண்ணிலேயே தெரிந்ததே! எழுதிய கடிதம் தொலைந்து போனால், வருத்தம் மட்டும் தான் இருக்கும். எழுதாமல் மாட்டிக் கொண்டாலும், அந்தப் பரிதாபம் தேவையில்லை! கூடவே டெலிஃபோன் பேச்சையும் இணைத்து யோசித்தேனா, எனக்கு ரொம்பவும் சந்தேகம் உண்டாகி விட்டது. அப்போதிருந்தே, உன்னை ரொம்பவும் கவனிக்கத் தொடங்கினேன்!''

யாரோ தன்னைப் பின் தொடருவது போலத் தோன்றியது நினைவு வர, அதைத் தேவகியிடம் கூறினாள்.

ஒத்துக் கொண்டு, ''நீ வேற்று ஆளாக இருந்தால், என்ன சதி வலைக்கோ என்று கவலையாக இருந்தது. அப்படிச் சந்தேகத்தோடு பார்த்ததும் நல்லதாகி விட்டது. தம்பியிடம் உனக்கு உண்மையான அன்பு இருப்பது புரிந்தது. நீ வேறு ஆள் என்பதும் உறுதிப்பட்டுப்

போயிற்று. ஆனால், இப்போது, நீயே பையனிடம் மாட்டிக் கொள்வாயோ என்றும் தோன்றத் தொடங்கி விட்டது. ஆமாம், அப்படி என்ன நடந்தது; நீ எப்படிப் பயந்து விழித்தாய்?'' என்று விசாரித்தார் பெரியவர்.

விவரம் அறிந்ததும், ''அடப் பாவமே! என்னதான் அவனைத் தேற்றும் வேகம் இருந்தாலும் இப்படியா முன்பின் யோசியாமல் பேசுவாய்? இப்போது என்ன செய்வது? அவனுக்கு ஒருவேளை அது நினைவு வந்து விட்டால் என்ன செய்வது?'' என்று அவளுக்கு மேலாக அவர் கலங்கத் தொடங்கி விட்டார்.

கடைசியாக, தேவகியை, மனோகரிதான் தேற்றும் படி ஆயிற்று. விபத்து நேர்ந்த நாளைப் பற்றித் தினகரன் நினையாது ஒதுக்குவதில் வெற்றி கண்டதைக் குறிப் பிட்டு விட்டு, ''அந்த தினத்தைப் போலவே, இந்த நாளையும் அவர் மறந்து விடத்தான் முயற்சி செய்கிறார், அத்தை. அவரால் அது முடியும். நாமாக எதையும் சொல்லி அந்த நாளைப் பற்றி அவர் எண்ணிப் பார்க்கு மாறு செய்துவிடக் கூடாது. அதில் கவனமாக இருந்தால் போதும்'' என்று உரைத்தாள்.

யோசனையோடு தலையாட்டினார் பெரியவர். ''அதாவது, இனிமேல் அவனது கண் பற்றி எதையும் பேசி வருத்தப்படக் கூடாது. எச்சரிக்கையோடு இருந்து கொள் கிறேன். நீயும் கவனமாய் இரு'' என்று எச்சரித்தார், மீண்டும் யோசித்து விட்டு.

''இதில் உன் அம்மா தான் ரொம்பவும் பாவம். மோனி.... மனோ... இப்போது உன்னை என்னவென்று அழைப்பது? மனோகரி என்று கூப்பிட முடியாது.

மோனி கூனி எனவும் பிடிக்கவில்லையே!'' என்று அங்கலாய்த்தார்.

''இருக்கட்டும் அத்தை இப்போதைக்கு மோனி என்று அழைப்பதே நல்லது... ஆனால், அம்மா பற்றி என்னவோ சொன்னீர்களே!'' என்று மனோகரி ஆவலுடன் ஊக்கினாள். ''ஆமாம் எனக்காவது உங்கள் இருவரையும் பார்த்துக் கொண்டேனும் இருக்க முடிகிறது. உன் அம்மா, பாவம் எழுதவாவது செய்கிறாயா? வேண்டுமானால் ஒருநாள் தம்பி தூங்கும் போது, எஸ்டிடி போட்டு அவர்களிடம் பேசுகிறாயா?'' என்று பரிந்தார் தேவகி.

''வேண்டாம் அத்தை பெருமாள்புரத்துக்கு என்ன 'கால்' என்று ஏதாவது குழப்பம் வந்து விடும். வெளியூர் டெலிஃபோன் கால் எல்லாம் வாசிக்கச் சொல்லுகிறார் தெரியுமா?''

''என் சினேகிதிக்கு.... எனக்குத் தெரிந்த யாருக்காவது என்று அவனிடம் சொல்லிக் கொள்ளலாம்.''

''இல்லை, அத்தை. நம் கெட்ட நேரம், நீங்கள் சொல்லும் நபரே இங்கு வந்து நின்றாலும் நின்று விடக்கூடும். இப்போதைக்குக் கடிதமே போதும். பிறகு எப்போதாவது வெளியே போகும் போது பார்த்துக் கொள்ளலாம்!'' என்று முடித்தாள் மருமகள்.

நடந்ததை எல்லாம் மனோகரி அவளுடைய தாயாருக்கு விவரமாக எழுதினாள். டெலிஃபோன் செய்து பேசும்படி மாமியார் சொன்னதை எழுதி, எப்போது தன்னால் டெலிஃபோனில் பேச இயலும் என்பதையும் குறிப்பிட்டாள்.

அவள் குறிப்பிட்டு எழுதியிருந்த நேரங்களில் தாயார் டெலிஃபோனை விட்டு நகராமல் ஆவலோடும் ஏக்கத்தோடும் காத்திருப்பாள் என்பது அவளுக்கு நிச்சயம். அந்த நாட்களில் பேச முடியாமல் தள்ளிப்போகும் ஒவ்வொரு நாளும் அன்னைக்குப் பெரும் தவிப்பாக இருக்கும் என்பதை உணர்ந்திருந்ததால், முடிந்த அளவு, அவள் குறிப்பிட்டிருந்த முதல் நாளிலேயே தாயோடு பேசி விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்

அதற்கு ஏதுவாகத் தனக்குச் சில உள்ளாடைகளும், பொட்டு, ஹேர்பான்ட் மற்றும் சில அலங்காரச் சாதனங்களும் வாங்க வேண்டியிருப்பதாகக் கணவனிடம் தெரிவித்தாள்.

சில வினாடி நேரம் பேசாதிருந்து விட்டு "இதெல்லாம் நீ கேளாமலேயே நானே வாங்கித் தந்திருக்க வேண்டியது! நேரடியாக வாங்க முடியாது என்பது சரியான சமாதானம் ஆகாது. பணம் தந்து, நீயாக வாங்கிக் கொள்ளவேனும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்! அதைப் பற்றிய நினைப்பே இல்லாது போயிற்று. தயவு செய்து மன்னித்துக் கொள்" என்று தினகரன் சிறு வருத்தத்துடன் பேசவும் அவளுக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

"என்ன நீங்கள்? இதுமாதிரி விஷயமெல்லாம் ஆண்களுக்கு எப்படி நினைவு இருக்கும். தேவைப்படுகிற பெண்களுக்கே பாதி மறந்து போய்விடும். கேட்டால் கூட வாங்கித்தர மறுக்கிறார்கள் என்று என்னுடைய தோழிகள் சிலர் அவரவர் கணவன்மாரைப் பற்றிக் குறைபேசக் கேட்டிருக்கிறேன் தெரியுமா?" என்று கணவனைச் சமாதானம் செய்ய முயன்றாள் மனோகரி.

அவளை அருகே இழுத்து ''அனாவசியத் தொல்லையாக அது வேறு எதற்கு என்று எண்ணியிருப்பார்களோ?'' என்று ரகசியக் குரலில் அவன் கேலி பேச, முகம் சிவந்து, ''போங்கள்!'' என்று அவள் சிணுங்க, நிலைமை ஒருவாறு சரியாகிப் போயிற்று.

ஆனால் மறவாமல் மனைவிக்குக் காரும், பணமும் ஏற்பாடு செய்யும்படி தினகரன் தாயிடம் கூறினான். இது போக இனி மாதா மாதம் கைச்செலவுக்கென ஒரு தொகையும், கொடுக்கும்படியும் சொன்னான்.

தனிமையில் மருமகளிடம், ''என்னிடம் கேட்டிருக்கக் கூடாதா மோனி! தானாகச் செய்திருக்க வேண்டியது! மறந்து விட்டோமே என்று பையன் வருத்தப்படுகிறான் பார்'' என்று உள்ளே அழைத்துச் சென்றவள், அலமாரியின் ஒரு சாவியைக் கையில் கொடுத்து, ''இது உன் வீடு, கண்ணு. பாங்கில் போட்டது போக, இந்த அலமாரியில் எப்போதும் கொஞ்சம் பணம் இருக்கும். நீ எப்போது வேண்டுமானாலும் வேண்டியது எடுத்துக் கொள்ளலாம். டிரைவரைக் கூப்பிட்டு நீ காரையும் எப்போது வேண்டுமானாலும் எடுத்துப் போகலாம்'' என்றார் தேவகி.

''அதற்கில்லை அத்தை, எனக்கு வேண்டியது எல்லாம் அம்மா நிறையவே, அங்கே ஆந்திராவில் இருந்த போதே அனுப்பி விட்டார்கள். இப்போது அம்மாவுக்கு டெலிஃபோன் செய்ய வெளியே போக வேண்டும் அல்லவா பக்கத்தில் எங்கேயும் டெலிஃபோன் செய்தாலும் 'இன்னார் இங்கே வந்து டெலிஃபோன் செய்வானேன்?' என்று ஏதாவது கிளம்பக் கூடும். அதனால் பெங்களூர் சிட்டிக்கே போய் விடலாம் என்று நினைத்

தேன் அதுதான்'' என்று விவரிக்கவும், ''ஆமாம், ஆமாம்! அதுதான் சரி!'' என்று அந்த அம்மாளும் ஒத்துக் கொண்டாள். இவ்வளவு எச்சரிக்கையுடன் செயல்பட்டும் சற்றும் நேர்மையற்று எத்திப் பணம் பறிக்கும் ஓர் அயோகியனிடம் மனோகரி நன்றாக மாட்டிக் கொண்டாள்.

அந்த அயோக்கியனின் பெயர் மூர்த்தி.

## 17

கற்பகத்துடன் மனோகரி டெலிஃபோனில் பேசுவதற்காக, வெளிச்சென்று வருதலை மாமியாரும், மருமகளுமாக வெகு கவனத்துடன் திட்டமிட்டனர்.

தினகரனைப் பொறுத்த வரையில் எப்போது தேவை என்று ஆகிவிட்டதோ, அதன்பின் மீன மேஷம் பார்த்து நாளைக் கடத்தாமல் உடனே சென்று வேண்டியதை வாங்கி வரச் சொல்லி விட்டான்.

ஆனால் தானும் உடன் வருவதாகத் தேவகி கூறவும் தினகரனுக்கும் ஆச்சரியம் தான். ''அம்மா பொதுவாக இந்த இடத்தை விட்டு வெளியே செல்வதே இல்லை மோனி. இப்போது மருமகளைத் தனியே அனுப்ப மனம் இல்லாமல் கூடவே வர நினைக்கிறார்கள் போல. அம்மா பங்களூர் ஒன்றும் புலி, சிங்கம் திரியும் காடு அல்ல; கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள் அலையும் ஊரும் அல்ல. உங்கள் மருமகள் தன்னந் தனியே சென்றால் கூட நல்ல படியாகத் திரும்பி வருவாள்!'' என்று கேலிக்குரலில் இயம்பினான் அவன்.

''என் மருமகளும் நானும் வெளியே போவோம்; வருவோம்! இதில் நீ என்ன சொல்வது?''என்று மகன் குரலிலேயே பேசினார் தேவகி.

அவர் அங்கிருந்து அகன்றதும், ''ஆயுள் தண்டனைக் கைதி மாதிரி, தோட்டம், துரவு, வீடு என்று இங்கேயே அடைந்து கிடக்கிறார்கள் என்று அவ்வப்போது எனக்கு வருத்தமாக இருக்கும். உன்னோடு கிளம்புகிறார்கள் என்றால் ஆச்சரியத்தோடு மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. ஆனால் கூட்டிப்போக உனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லையே?'' என்று மனைவியிடம் தினகரன் வினவினான்.

''இல்லை...'' என்று மனோகரி சற்றே தயங்கினாள்.

''என்ன? எதுவானாலும் சொல்லிவிடு, மோனி!''

''நீங்கள் தனியாக இருக்க வேண்டுமே...''

''மிஞ்சி மிஞ்சி ஓர் ஐந்து மணி நேரம் என்னை நானே பார்த்துக் கொள்ள முடியாதா? அவ்வளவு கையால் ஆகாதவனாகவா என்னை எண்ணி விட்டாய்? நான் கூப்பிட்டால் கேட்கும் இடத்தில் இருக்கும்படி மணியிடம் சொல்லி விட்டுப் போ. போதும்'' என்றான் தினகரன்.

தேவகியும் அதையே சொன்னார்.

''நீங்கள் உடன் வருவது எனக்கு மகிழ்ச்சிதான் அத்தை. ஆனால் ''மோனி சொன்னாள்... நீங்களே கூட மாமாவுக்குப் பிறகு இங்கிருந்து எங்கும் சென்றதில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள்... உங்கள் மகன் கூட ரொம்ப அதிசயப்பட்டார்!'' என்றாள் மனோகரி.

ஒரு கணம் தரையைப் பார்த்திருந்து விட்டு, தேவகி சொன்னார். ''உன் மாமா மறைந்த பிறகு, ஊரிலிருந்து, உறவுக்காரர்கள் வந்து... முகத்தில் கழுத்தில் அகற்றி விட்டார்கள், அம்மா. அந்த மாதிரி எங்கும் செல்ல மனம் இல்லாமல் போய்விட்டது. தம்பி என்னை எதற்கும் வற்புறுத்துவது இல்லை? நான் வேறு யாருக்காகப் பார்க்க வேண்டும்? இங்கே, என் இடத்திலேயே எனக்கு நானே தலைவியாக இருந்து விட்டேன். இப்போதும் கூட அப்படியே இருந்து விடுவேன் ஆனால்...''

''ஆனால்?''

''உன் அம்மாவிடம் நானும் ஒரு வார்த்தை நேரடியாகப் பேசினால் அவர்கள் மனம் மெய்யாகவே ஆறுதல் அடையும். நீ என் பிள்ளைக்கு இவ்வளவு செய்கிறாய்! உன் அம்மாவுக்காக நான் இது செய்ய வேண்டாமா?''

அது சரியே என்று மனோகரிக்கும் தோன்றியது. அத்தையிடம் நேரடியாகப் பேசினால்தான் அம்மாவுக்கு நிம்மதியாக இருக்கும்!

பார்வையாலும் பளிச்சென்ற புன்னகையாலும் அவரைப் பாராட்டி விட்டு, ''என்னவோ, 'படிக்கவில்லை' என்று சொல்லிக் கொள்கிறீர்கள். இது எனக்குத் தோன்றவில்லை! உங்களுக்குத்தானே தோன்றியிருக்கிறது!'' என்றாள் வாய் வார்த்தையாகவும்!

''இன்னொன்றும் கூடத் தோன்றியிருக்கிறது தெரியுமா? பெங்களூர் சென்று நீ எஸ்.டி.டி. பூத்துக்குள் போனால் டிரைவர் பார்த்துக் கொண்டுதானே இருப்பான்? திரும்பி வந்து இங்கே சொல்ல மாட்டானா? அதனால், நீ 'பூத்' பக்கம் போகிறபோது, டிரைவரை

அக்கம் பக்கம் எங்காவது அனுப்பி, எதையாவது பெரிதாக வாங்கச் சொல்லலாம் என்று ஓர் ஐடியா!'' என்றார் பெரியவர் நமுட்டுச் சிரிப்புடன், ''அதை நீ சொல்வதை விட, நான் சொன்னால் நன்றாயிருக்கும் அல்லவா?''

''அடி ஆத்தாடீ!'' என்று மூக்கில் விரல் வைத்துக் கண்களை விரித்து வியந்தாள் மனோகரி. ''கடவுளே! இவ்வளவு புத்திசாலியாக ஒரு மாமியாரை எனக்குத் தந்து விட்டாயே! இதற்கு நான் என்ன பாவம் பண்ணினேன்?'' என்று பாவனையோடு அவள் கேட்க, இருவரும் சேர்ந்து நகைத்தனர்.

ஒளிவு மறைவற்றுப் போகும் போது, எவ்வளவு இலகுவாகச் சிரிக்க முடிகிறது! தினகரனிடமும் இப்படி முழுக்கக் கொட்டிவிட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

இருக்கட்டும்.. மாமியாரிடம் சொல்வதற்கு ஒரு நேரம் கிடைத்தது போலக் கணவனிடம் கூறவும் ஒரு நேரம் வரும். அப்போது எல்லாவற்றையும் அவனிடமும் சொல்லிவிட்டு நிம்மதியாக இருக்கலாம் என்று மனோகரி தன் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

தேவகி வெளியே கிளம்புகிறார் என்றால், வேலையாட்களுக்கும் கூட அதிசயமாகத்தான் இருந்தது.

நகரம் நோக்கிச் செல்லும் போது கார் டிரைவரும் கூட அதுபற்றிக் குறிப்பிடவும், ''என்ன இது, நான் வீட்டை விட்டுக் கிளம்பினால் அது உலகச் செய்தியாகி விடும் போல இருக்கிறதே!'' என்று தேவகி நகைத்தார்.

''அதில்லீங்கம்மா, நம்ம அய்யா அடிபட்டுக் கிடந்தப்போ ஆஸ்பத்திரிக்குக் கூட போவலீங்களே! இப்ப

வெளியே போவறீங்களேன்னுதாம்மா...'' என்றான் காரோட்டி.

''மருத்துவமனைக்குப் போயிருந்திருப்பேன். ஆனால், மருத்துவமனை நடைமுறை பற்றி எனக்கு என்ன தெரியும்? நான் தங்க, குளிக்க கொள்ள இடம் வேண்டும்; என் சாப்பாடும் கொஞ்சம் பத்தியமாய் அது வேறு பார்க்க வேண்டும். எல்லாமாக நாம் போனால் தொல்லையாகிப் போகுமோ என்று இருந்தது. இங்கே தனியே இருந்து கொண்டு ரொம்பவும் வேதனைதான்! ஆனால், அங்கே சின்னம்மா பார்த்துக் கொள்கிறாள் என்கிற தைரியமும் இருந்ததால் போகாமலே இருந்து விட்டேன்'' என்றாள் தேவகி, மருமகளிடம் திரும்பினார். ''வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்று சட்டமோ, திட்டமோ எனக்குக் கிடையாது மோனி. வெளியே போக அவசியம் நேரவில்லை. அவ்வளவுதான். சும்மாவேணும் போகலாம் என்றால் யாருடன் போவது? தினகரனோடு சென்றால் அவன் பழகுகிற ஆட்களுடன் ஆங்கிலம், ஹிந்தி பேச எனக்குத் தெரியாது; பழக வேண்டிய விதம் தெரியாது! அவனுக்கும் சங்கடம்! அதனால்தான் அப்படி ஒதுங்கி விட்டேன். ஆனால், இப்போது அருமையான துணையாக நீ கிடைத்திருப்பதால், இனி அடிக்கடி உன்னோடு இந்தக் கடைத் தெருவெல்லாம் சுற்றலாம் என்றும் ஓர் ஐடியா வைத்திருக்கிறேன்!'' என்று சிரித்தார்.

முன்னிருந்த டிரைவருக்குத் தெரியாமல், பற்றிய கையின் அழுத்தம் வேறு கதை சொன்னது.

இனி அடிக்கடி மனோகரி, அவளுடைய தாயுடன் பேச தேவகி ஏற்பாடு செய்யப் போகிறார்!

முதலில் சொன்னது போலவே, பங்களூரை அடைந்ததும், தேவகி டிரைவரை அழைத்து, ''காரை இங்கே எங்கேயாவது நிறுத்தி விட்டு வா!'' என்று பணித்தார்.

டிரைவர் வந்ததும் அவனிடம் பணத்தைக் கொடுத்து, ''கோபி! வீட்டில், தோட்டக்காரர்கள் நாலு பேருக்கும், மற்ற சிறு வயதினருக்கும் மொத்த விலையில் மலிவாக விற்கிற இடம் தேடி எல்லோருக்கும் ஸ்வெட்டர் வாங்கிவா!'' என்றுரைத்து டிரைவரை அனுப்பினார். மீண்டும் அழைத்து ''உனக்கும் ஒன்று கொஞ்சம் நல்லதாக வாங்கிக் கொள். அவசரப்பட்டு எதையாவது வாங்கி விடாதே. நூல், எடை, தையல் எல்லாம் நன்றாய்ச் சரிபார்த்து வாங்கிவா. எங்களுக்கு ஒன்றும் அவசரம் இல்லை. எதற்கும் சாவியை மட்டும் கொடுத்து விட்டுப் போ. நாங்கள் சாமான் வாங்க வாங்கக் காரில் வைத்துக் கொள்ள வசதியாய் இருக்கும்'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

சந்து ஒன்றினுள் காரோட்டி சென்று மறைவதை ஓரக்கண்ணால் கவனித்தபடியே இருவரும் கடைவீதியில் நடந்தனர்.

''அவனுக்கு ஒன்று என்றால் நன்றாகப் பார்த்து நிதானித்து வாங்குவான் அல்லவா? அதனால்தான்! என்ன? மிஞ்சி மிஞ்சி நாலைந்து நிமிடம் பேசுவதற்கு இவ்வளவு முஸ்தீபா என்று தோன்றுகிறதா? சில சமயம் தொடர்பு கிடைக்கவே நேரமாகி விடும். அவன் வேறு இடையில் வந்து நின்றானென்றால் பிரச்சினை தானே?'' என்று விளக்கம் கூறிய தேவகி, தொடர்ந்து ஒரு பெரிய தவறைச் செய்தார்.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு, ''டிரைவர் வரும்வரை உன்னை 'மனோகரி' என்று அழைக்கப் போகிறேன். மோனி மோனி என்று அழைத்து வெறுத்து விட்டது. தெரிந்தவர்கள் யாரும் இல்லாத இந்த இடத்திலாவது நடிக்காமல், உண்மைப் பெயரை வாய் குளிரச் சொல்ல லாம் இல்லையா?'' என்று உரைத்தார்.

''அய்யோ! வேண்டாம் அத்தை. இன்னொருவராக நடிக்கும் போது அந்த ஆளாகவே மாறிவிட வேண்டும்; அப்போதுதான் யாராலும் கண்டுபிடிக்க முடியாது என்று படித்திருக்கிறேன். அந்த நடைமுறையை சரியாகப் பின்பற்ற முடியாமல் பலமுறை மாட்டிக் கொள்ள இருந் தேன். ஒரு தரம் மாட்டிக் கொண்டதும் உங்களுக்குத் தெரியும். இதற்குமேல் இந்தப் பரிசோதனை வேண்டாம். அத்தை! எனக்கென்று ஒரு நல்ல நேரம் இருக்கத்தான் செய்யும். அப்போது பார்த்துக் கொள்ளலாம். அதுவரை வேண்டாம்'' என்று தணிந்த குரலில் மாமியாரிடம் எச்சரித்தாள் மனோகரி.

''அதுவும் சரிதான். வா, பக்கத்தில் ஏதாவது 'எஸ்.டி.டி.' பூத் இருக்கிறதா, பார். அந்த வேலையை டிரைவர் வருமுன் முதலில் முடித்து விடலாம். பிறகு கடைகளுக்கும் போய் ஏதாவது வாங்க வேண்டும். இல்லாவிட்டால் தினகருக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடக் கூடும்.''

பேசியபடியே இருவரும் எஸ்.டி.டி. பூத் நோக்கி நகர்ந்தனர்.

டீக்கடையில் மலாய் டீ அருந்திக் கொண்டிருந்த ஒருவன் தேவகியின் 'மனோகரி'யைப் திரும்பிப் பார்த்

தான். பங்களூரின் மிதக் குளிர்கூடத் தாங்காமல், ஸ்வெட்டரும், கண், மூக்கு, வாய் தவிர எல்லாவற்றையும் மறைத்து கம்பளிக் குல்லாவும் அணிந்திருந்த அவனது விழிகள் பேசிக் கொண்டே சென்ற இரு பெண்களையும் முக்கியமாக அந்த இளம் பெண்ணைக் கண்டதும் அகன்றன. அவளைக் கூப்பிட வாய் திறந்தவன், சட்டென வாயை மூடிக் கொண்டு, அவர்களது பேச்சைக் கவனித்தான்.

இருவரில் பெரியவரின் பேச்சு அவனுக்குப் புதிராய் இருந்தது. சின்னவளின் பேச்சு மிகவும் தணிந்த குரலில் இருக்கவே, அதிலிருந்து எதையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே அவர்களைப் பின்தொடரத் தீர்மானித்து, பாதியே அருந்தியிருந்த மலாய் டீயை ஏக்கத்துடன் நோக்கி விட்டுத் தம்ளரைக் கீழே வைத்தான். அவசரமாகப் பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, அந்த இரு பெண்களையும் வேகமாகப் பின் தொடர்ந்தான்.

அவர்கள் இருவரும் ஓர் எஸ்.டி.டி. பூத்தினுள் செல்வதைக் கண்டு தானும் உள்ளே சென்றான்.

அங்கே, தனித்துப் பேசுவதற்கான அடைப்பின் வாயிலில் நின்றபடி, ''எல்லாம் அம்மாவிடம் சொல்லி விடு, மோனி நேரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் நிதானமாகப் பேசு. கடைசியில் வைக்குமுன் என்னைக் கூப்பிடு'' என்று கூறிக் கொண்டிருந்தார் பெரியவர்.

''நீங்களும் உள்ளே வாருங்கள், அத்தை. உங்களுக்கு மறைத்து எனக்கு ஒன்றும் இல்லை!'' என்று அவரையும் உள்ளே அழைத்துக் கொண்டாள் மனோகரி.

தானும் கூடவே உள்ள செல்ல முயன்றான் கம்பளிச் சட்டை, குல்லாக்காரன்.

''சார் சார். அவர்கள் பேசி முடித்து வரட்டும். இங்கே உட்காருங்கள்'' என்றான் 'பூத்'காரன்.

'ஓ! சாரி! என்றபடி திரும்பிய வேகத்தில் அவன் தடுமாறி விழப் போனான். மீண்டும் பல, 'சாரி'களுடன் வேகமாக எழுந்து, பையிலிருந்து விழுந்தவற்றை அவசர மாகப் பொறுக்கி எடுத்தான். மீண்டும் ஒரு 'சாரி'யுடன் தனி அடைப்பின் கதவை அவனே சாத்தினான்.

ஒரு பிளாஸ்டிக் நாற்காலியை கதவருகில் இழுத்துப் போட்டு அங்கேயே காத்திருப்பது போல உட்கார்ந்திருந் தான்.

மூர்த்திக்கு முழுசாக ஒரு பொன்முட்டையிடும் வாத்து கிடைத்தது, அப்போதுதான்!

# 18

**அ**டுத்து தன் முறைக்காக காத்திருப்பவன் போல இரு பெண்களும் பேசி முடித்து, வெளியே வரும்வரை, மூர்த்தி அப்படியே உட்கார்ந்திருந்தான்.

இருவரும் வெளிவந்து, 'எஸ்.டி.டி..' பேசியதற்கான பணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது, மூர்த்தி குனிந்து, அடைப்புக் கதவின் இடுக்கில் கிடந்த நாணயம் ஒன்றை யாரும் அறியாமல் எடுத்துப் பைக்குள் போட் டுக் கொண்டான்.

அந்த நாணயத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்ளத் தான் ஆசை அவனுக்கு. ஆனால் அது மற்றவர்களின்

கவனத்தை ஈர்த்து விடக் கூடும் என்பதாலேயே, நாண யத்தைச் சும்மா பைக்குள் போட்டான்.

இடறி விழுகிறவன் போல நடித்து, கதவு இடுக்கில் அவன் வைத்த அந்த நாணயம் அவனுக்குப் புதையலை அல்லவா எடுத்துத் தந்திருக்கிறது! கதவை முழுமையாக மூட முடியாமல் செய்து, உள்ளே பேசியதை எல்லாம் அவன் கேட்க வழி வகுத்த கடவுள் அல்லவா அந்த நாணயம்?

''சார், அடுத்தது நீங்கள்'' ... என்ற பூத் ஆளிடம், ''பிறகு வருகிறேன்!'' என்று கூறிவிட்டு, வெளியே சென்று விட் டிருந்த பெண்களை மீண்டும் பின் தொடர்ந் தான் அவன்.

பெண்கள் இருவரும், இரண்டு கடைகளை ஆராய்ந்து, ஒரு சிலது வாங்கி முடித்தபோது கோபி, கம்பளிச் சட்டைகளுடன் திரும்பி வந்து சேர்ந்தான்.

கையில் இருந்த சில பாக்கெட்டுகளையும், கார் சாவியையும் டிரைவரிடம் கொடுத்துவிட்டு, மாமியா ரும், மருமகளும் மீண்டும் கடைக்குள் புகுந்தனர்.

காரோட்டியைப் பின் தொடர்ந்து சென்று, சாதார ணப் பேச்சுவார்த்தை போல கோபியிடமிருந்து மேற் கொண்டு தனக்குத் தேவைப்பட்ட விவரங்களை, மூர்த்தி அறிந்து கொண்டான்.

மறுநாள், அவளுக்குப் பெயர் வைத்ததே அவனே போல 'மோனிகா, மோனிகா!' என்று வாய் நிறைய அழைத்தபடி, 'குகசரண'த்தினுள் காலடி எடுத்து வைத் தான் மூர்த்தி.

''யார்'' என்று வந்த மனோகரி, அவனைப் பார்த்ததும் அதிர்ந்து போய் நின்றாள். இவன் 'மோனிகா' என்று எப்படி அழைத்தான்.

''என்னம்மா, அப்படியே நின்று விட்டாய்? உன் உயிர்ச் சிநேகிதியுடைய கணவன். உனக்கு அக்காள் புருஷன் போல பாச உறவு. பெரிய இடத்தில் திருமணம் ஆனால், எங்களை எல்லாம் மறந்துவிட வேண்டுமா? இந்தா, உனக்குப் பிடிக்குமே என்று ஜாங்கிரி வாங்கி வந்தேன்!'' என்று எளிதாக உறவு கொண்டாடினான் அவன்.

கூட்டி வந்த வேலையாள் இன்னமும் வெளியே போகாத நிலையில், தினகரன் வரும் அரவமும் கேட்கவே, நினைத்தபடி, பேச முடியாதபடி மனோகரி 'வாருங்கள்' என்று அவனை வரவேற்கும்படி ஆயிற்று.

ஆனால் உள்ளூர ஒரே திகைப்பு. 'மோனிகா' என்கிறானே! அவன் அறிந்த வரையில், அவள் பெயர் மனோகரி தான். ஆனால் இவன் அவ்வளவு இலகுவாக 'மோனிகா' என்று அழைக்க வேண்டுமானால், அதில் வேண்டாத விஷயம் - விஷமம் ஏதோ இருக்கிறது என்று உணர்ந்து எச்சரிக்கை அடைந்தாள்.

அதற்குள் ஹாலுக்குள் வந்து விட்ட தினகரன், ''யார் மோனி? உனக்குத் தெரிந்தவர்களா?'' என்று வினவியபடி, ஒரு சோபாவில் அமர்ந்தான்.

''ஆ... ஆமாம்.. சுசீலா என்று என் தோழி ஒருத்தியுடைய கணவர், பெயர் மூர்த்தி'' என்றவள் மூர்த்தியிடம், ''என் கணவர் மிஸ்டர் மூர்த்தி, பெயர் தினகரன்'' என்று அறிமுகப்படுத்தினாள்.

''மிஸ்டர் மூர்த்தி உங்கள் வீடு எங்கே இருக் கிறது?'' என்று வேண்டுமென்றே வினவினாள்.

ஏதோ ஒரு காரணத்துக்காகவே அவனது குடும்பத் துக்கும் மனோகரிக்கும் நெருக்கம் அதிகம் என்று காட்ட மூர்த்தி முயற்சிக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது! அது நல்லதற்காக இராது என்பதும் அவளுக்கு நிச்சயம். அப்படி ஒன்றும் நெருக்கம் கிடையாது என்பதை வெளிப்படையாகக் கூறவும் முடியாமல், உள்ளூர இருந்த குழப்பமும், கலக்கமும் தடுக்கவே, குறிப்பால் அதை உணர்த்த முயன்றாள், அவனுக்கும்தான்.

ஆனால் அவன் தடுக்கில் புகுந்தவனாகி, ''ஆமாம், வீடு மாற்றிய பிறகு நீ வரவே இல்லையே! மாற்றுவதாக இருந்ததும் மட்டும்தானே உனக்குத் தெரியும்? பிறகு முகவரி தரலாம் என்றால், உன்னை, ஆளையே காண வில்லை. என்னவோ, கடவுள் செயலாக நேற்று பங்களூ ரில் உன்னைப் பார்த்ததால், கார் நம்பரை வைத்து உன்னைத் தேடிப்பிடித்து வந்தேன். உன்னைப் பார்த்த பிறகு, உன்னிடம் பேசாமல், உன் வீட்டுக்கு வராமல் திரும்பிப் போனேன் என்றால், உன் சுசீலாக்கா என்னை வீட்டுக்குள் விடுவாளா, நீயே சொல்லு?'' என்றான் ஒரு கோணல் பார்வையுடன்.

மனோகரி அயர்ந்து நின்றாள்!

மூர்த்தி எப்படி வந்தான் என்பது புரிந்து போயிற்று! 'மனோகரி' 'மோனிகா' ஆனதும் புரிந்து போயிற்று.

அறிந்தவர் தெரிந்தவர் யாரும் இல்லாத இடம் என்று முன்தினம் மாமியாரும் அவளும் எப்போதோ கவனமற்றுப் பேசிய எதுவோ இந்தப் பாவியின் காதுக

ளில் விழுந்திருக்கிறது! அதில் ஆதாயம் காணத்தான் நூல் பிடித்துப் பின்னோடேயே வந்திருக்கிறான். மற்ற படி, சும்மா தெரிந்தவனைப் பார்த்துப் போவதற்காக இந்தப் பாம்பு இவ்வளவு தூரம். இனிப்பு வேறு வாங்கிக் கொண்டு இவன் வருவதற்கில்லை!

''நீங்கள் என்ன செய்கிறீர்கள் சார், மிஸ்டர் மூர்த்தி?'' என்று தினகரன், ஒரு பேச்சுவார்த்தைக்காக வினவினான்.

என்னவென்று மூர்த்தி சொல்லுவான்?

ஒரு கிண்டல் பார்வையுடன் மனோகரி நோக்க, ''இதோ உங்கள் முன்னிலையில் உட்கார்ந்து கொண்டி ருக்கிறேன்!'' என்று ஒரு ஜோக் போலக் கூறிச் சிரித்து சமாளிக்க முயன்றான் அவன்.

அவனது செயற்கைச் சிரிப்பு அடங்கும் வரை பொறுத்திருந்து விட்டு, ''நீங்கள் என்ன தொழில் செய்கி றீர்கள் என்று அவர் கேட்கிறார்!'' என்று ஒரு குரூரத் திருப்தியுடன் மனோகரி விளக்கினாள்.

''ஆமாம், அதைத்தான் கேட்டேன்'' என்று தினகர னும் ஒத்துப் பேசவும், மனோகரியை ஆத்திரமாக முறைத்துவிட்டு, ''உங்களிடம் சொல்லிக் கொள்ளும் படிப் பெரிதாக ஒன்றும் இல்லை, மிஸ்டர் தினகரன். சும்மா ஒரு 'கமிஷன்' தான்! வாங்குகிறவர்கள், விற்கிறவர்க ளைக் கைகாட்டி விடுவேன், தரகாக இரண்டு பக்கமும் கொஞ்சம் கிடைக்கும்'' என்று பொதுவாகச் சொன்னான் மூர்த்தி.

குறிப்பாக ஏதேனும் ஒரு தொழில், அல்லது வேலை என்றால், அது என்ன, ஏது என்று தூண்டித்

துருவக் கூடும் என்று தான் பொதுப்படையாக இந்த மூர்த்தி சொன்னது. குண்டூசி முதல் கப்பல் வரை எதை வேண்டுமானாலும் வாங்க, விற்க முடியுமே!

ஆனால், தினகரன் உற்சாகத்துடன், "அப்போது, நம் தொழில் தான். நானும் அதைத்தான் செய்கிறேன், மிஸ்டர் மூர்த்தி. நீங்கள் எந்தெந்தப் பொருட்களைக் கையாளுகிறீர்கள்?" என்று விவரம் கேட்கவும் மூர்த்தி திணறிப் போனான்.

மனோகரியின் முகத்திலிருந்த ஏளனம் வேறு அவனுக்கு ஆத்திரமூட்டியது.

பெங்களூரின் மிதக் குளிரிலும் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, "ந... நம்மோடது எல்லாம் ரொம்ப சில்... சில்லறைச் சாமான்கள் சார். இங்கிருந்து சௌ சௌ, தக்காளி இப்படி சென்னைக்கு அனுப்புவேன். அங்கிருந்து கத்தரிக்காய் வாங்கி இங்கே கொடுப்பேன். ஏதோ, கொஞ்சம் கிடைக்கும், வண்டி ஓடுகிறது... " என்று சமாளித்தான்.

அடுத்து, இப்படி இசகு பிசகான கேள்விகள் எதையும் தினகரன் கேட்டு விடுமுன் அவசரமாக எழுந்தான். "ஒரு சின்ன வேண்டுகோள் மிஸ்டர் தினகரன். உங்கள் வீட்டை நான் சுற்றிப் பார்க்கலாமா? வெளியே இருந்து பார்ப்பதற்கு அழகான மாளிகை மாதிரி தெரிகிறது... சென்னைக்குத் திரும்பிப் போனால், மனோ..." என்று நிறுத்தி ஒரு கணம் மனோகரியைக் கலங்க அடித்து விட்டு, "மனோகரமான இந்த மாளிகையின் அமைப்பையெல்லாம் துருவித் துருவிக் கேட்பாள் மோனிகாவுடைய அக்கா! என் மனைவி, அதற்காகத்தான்..." என்று நயமாக விளக்கினான்.

''அதற்கென்ன? தாராளமாகச் சுற்றிப் பாருங்கள்..!'' என்ற தினகரன், வீட்டின் விவரம் சொன்னான். ''இது சுதந்திரத்துக்கெல்லாம் முன்னால், ஒரு வெள்ளைக்காரர் கட்டிய வீடு. வீடு, சுற்றிலும் தோட்டம், பின்புறம் பயிர் செய்யப் பரந்த இடம் என்று, அப்படியே கைமாறிக் கொண்டு இருந்தது... மோனி சொல்லியிருப்பாளே! எனக்குத் தொழில் முதலீட்டுக்காக என் பெற்றோர் ஊர் நிலம், நகை நட்டு எல்லாவற்றையும் விற்றுப் பணம் தந்தார்கள். அம்மாவுக்கு பயிர்த் தொழில் பிடிக்கும். இங்கே தட்பவெப்பமும் நன்றாயிருக்கும் என்று அவர்களுக்கு வாங்கியது... போய்ப் பாருங்கள். எல்லாம் கொஞ்சம் பழைய வெள்ளையர் பாணியில் இருக்கும்... மோனி...!'' என்று மனைவியை அழைத்தான்.

''இதோ!'' என்று எழுந்தாள் மனோகரி. ''வாருங்கள் சுற்றிக் காட்டுகிறேன்...'' என்று மூர்த்தியை அழைத்துப் போனாள்.

காது கேட்கும் தூரம் வரை யாரும் இல்லை என்பதை நன்றாக உறுதிப்படுத்திக் கொண்டு, ''எதற்காக இங்கே வந்தீர்கள்?'' என்று சற்றுக் கண்டிப்பான குரலில் மனோகரி வினவினாள்.

கீழ்க்கண்ணால் அவளை அலட்சியமாக நோக்கி விட்டு, ''அதை இந்த வீட்டைச் சுற்றிப் பார்த்து விட்டுச் சொல்லுகிறேன்'' என்றவன், ஒரே மாதிரி வேலைப்பாடுடன் கூடிய சட்டமிட்டு, அங்கங்கே தொங்க விடப்பட்டிருந்த படங்களில் ஒன்றைக் காட்டி, ''இந்த மாதிரி 'பெயிண்டிங்' எல்லாம் ரொம்ப விலை உயர்ந்தது என்பார்களே! இது என்ன விலையாகிறது?'' என்று விசாரித்தான்.

உள்ளூரச் சிலீரென்றது மனோகரிக்கு.

இவன் ஏதோ மதிப்புப் போடுகிறான்! காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது!

மூர்த்தி என்ன செய்யப் போகிறான் என்பதை ஓரளவு மனோகரியால் ஊகிக்க முடிந்தது. ஆனால் என்ன ஏது என்று கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை. சரக்கு மலிந்து தானே சந்தைக்கு வரட்டுமே! இப்போ தைக்கு விட்டேற்றியாகக் காட்டிக் கொள்வதுதான் நல்லது என்று நினைத்தாள்.

எனவே, வேலையாள் மணியை அழைத்து, மூர்த்தியோடு கூட இருந்து சுற்றிக் காட்டுமாறு பணித்து விட்டு, அவ்விடம் விட்டு அகன்று விட்டாள்

இன்னும் ஒன்று, அவளாக இருந்தால் மூர்த்தி கேட்டால் எல்லா அறைகளையும் திறந்து காட்ட வேண்டியிருக்கும்; மணி என்றால், இது அம்மா ரூம், இது அய்யா ரூம் என்று மூடிய கதவின் வெளியே நின்று காட்டுவதோடு நின்று விடும்!

கணவனிடமும் சென்று உட்கார முடியவில்லை. இவன், மூர்த்தியைப் பற்றிப் பேசத் தொடங்கினால் எளிதாகப் பேச்சு வராது!

யாரும் லேசில் வராத இடம் என்று, அதிகம் புழக்கத்தில் இராத தட்டுமுட்டுச் சாமான்கள் இருந்த அறைக்குள் சென்று அந்தச் சாமான்களை அவசியமற்று இடம் மாற்றி வைத்துக் கொண்டிருந்தாள்.

தோட்டத்திற்குப் போய் மாமியாரிடம் மூர்த்தி விஷயம் சொல்லலாமா என்று ஒரு தரம் யோசித்தாள்.

ஆனால் அவளோடு சேர்ந்து கவலைப்படுவது தவிர, தேவகியாலும் தான் என்ன செய்ய முடியும்?

போகட்டும்! அவராவது வேலையை நிம்மதியாகப் பார்க்கட்டும்!

''அய்யா கூப்பிடுகிறாங்க!''என்று வந்து உரைத்த மணி கையில் பழச்சாறுடன் செல்வதைக் காணவும், இவனுக்கு விருந்தோம்பல் வேறா என்று உள்ளூரப் பொறுமியபடி மனோகரி முன்னறைக்குச் சென்றாள்.

''... அந்தப் படங்கள் அசல் அல்ல. மிஸ்டர் மூர்த்தி. நகல்கள்தான். ஆனால் அந்த நகல்கள்கூட, ஒரு படம் பத்தாயிரம் வரை ஆயிற்று. 'ஒரிஜினல்' வாங்குவது என்றால் கால் கோடி, அரைக்கோடி என்று ஆகும்'' என்று தினகரன் சொல்லிக் கொண்டு இருந்தான்.

பா...வம்! தான் நினைத்த அளவு இங்கே பண மில்லை போல் இருக்கிறதே என்று மூர்த்திக்கு ஏமாற்ற மாய் இருக்கும் என்று எண்ணியபடி மனோகரி அறையி னுள் சென்றாள். ஏமாற்றத்துக்குப் பதிலாக, மூர்த்தியின் முகத்தில் இருந்த இளிப்பு, அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது.

தேவைப்பட்டதை அறிந்துகொண்டு விட்டாற் போல, அதற்கு மேல் மூர்த்தி தங்கவில்லை. இருந்து மதியம் உணவருந்திவிட்டுச் செல்லும்படி தினகரன் உபச ரித்தும், நில்லாமல் கிளம்பி விட்டான்.

கிளம்பும்போது 'உன்னிடம் தனியாக ஒரு சேதி சொல்லும்படி உன் சுசீலாக்கா சொல்லியனுப்பினாள், வருகிறாயா, சொல்கிறேன்'' என்று எழுந்தான் அவன்.

''இங்கே என்னைச் சந்திப்பீர்கள் என்று சுசீலாவுக்கு எப்படித் தெரியும்?'' என்று அப்பாவிபோலக் கேட்டாள் மனோகரி.

''இங்கே என்றில்லை. எங்கே பார்த்தாலும் உன்னிடம் சொல்லும்படிதான் எனக்கு உத்தரவு!'' என்று மூர்த்தி அப்போதும் சமாளித்தான்.

வேறு வழியின்றிக் கூட நடந்தவனிடம், கார்ப்பாதையில் பாதி சென்றதும், ''எதற்கு வரச் சொன்னேன் என்பது புரிபட்டிருக்கும். மொத்தமாகப் பத்து லட்சம் ரூபாய் தந்துவிடு. அதற்குமேல் என்னால் பிரச்சினை இராது'' என்றான் மூர்த்தி.

''பத்து லட்சம் பைசாகூட என்னிடம் கிடையாது. அப்படியே அவ்வளவு பணம் என்னிடம் இருந்தாலும் அதை உங்களுக்கு நான் தரவேண்டிய அவசியமில்லை'' என்றாள் மனோகரி கறாராக.

'மனோகரி மோனிகாவாக உருவெடுத்திருப்பதற்குக் கட்டணம் என்று வைத்துக் கொள்!'

'ஒரு பெயர் பிடிக்கவில்லை என்று வேறு பெயர் வைத்துக் கொள்வது எந்த வகையிலும் குற்றமாகாது!'' என்று அலட்சியம் போலக் காட்ட மனோகரி முயன்றாள்.

''ஒரு ஆள் இன்னோர் ஆள் பெயரில் வந்து ஏமாற்றுவது? அது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா? பொறு, முதலில் நான் சொல்வதைக் கேட்டுவிட்டு அப்புறம் பேசு. நேற்று நீ எஸ்.டி.டி. பேசி உன் அம்மாவிடம் கொஞ்சினாயே? முழுவதையும் கதவு அருகில் அழுத்த

மாக மூடாத கதவின் அருகில் இருந்து கேட்டுக் கொண்டு இருந்த கம்பளிக் குல்லாக்காரன் நான்தான். இனிமேல் வேறு எந்த அசட்டுப் பேச்சும் இல்லாமல் பணத்தைத் தயார் பண்ணுவாய் என்று நினைக்கிறேன். எங்கே? எப்போது? எப்படி! வந்து தரவேண்டும் என்பதை நான் டெலிஃபோனில் சொல்லுகிறேன். பை, பை!'' என்று கையாட்டி விட்டு மூர்த்தி வெகு ஸ்டைலாக நடந்து சென்று அங்கிருந்து வெளியேறினான்.

உடனே வீட்டினுள் செல்ல மனமின்றி சற்று நேரம் தோட்டத்தில் சுற்றி அலைந்து விட்டு, களைத்துப் போய் வீட்டினுள் சென்ற மனோகரியிடம், தினகரன் கேட்ட கேள்வி அவளைத் திகைக்க வைத்தது.

## 19

**ப**த்து லட்சம் ரூபாய்! என்ன அநியாயம்!

முன் தினம் எஸ்.டி.டி. பூத்துக்குள் போனதும், தனி அடைப்புக்குள் சென்று கதவைச் சாத்தும்போது முக்கால் முகம் மறைத்த கம்பளிக் குல்லாக்காரன் ஒருவன் கூடவே உள்ளே வர முயன்றதும் மனோகரிக்கு நன்றாகவே நினைவிருந்தது.

யாரோ பட்டிக்காடு போல என்று வெளியே செல்லு மாறு அவனிடம் சொல்ல அவள் நன்றாகத் திரும்புமுன் 'பூத்'காரன் குரலும், கம்பளிக்காரன் அவசரமாகத் திரும் பிய வேகத்தில் தடுமாறி விழுந்து எழுந்து, கீழே விழுந்த தன் சாமான்களை அவசரமாகத் திரட்டி எடுத்துக்

கொண்டு அவனே கதவை மூடியதும் கூட ஞாபகம் வந்தது.

கதவைச் சரியாக மூடி விட்டான் என்று நினைத்தாளே! அவன் வேண்டுமென்றே இந்த நாடகம் ஆடி, கதவை லேசாக, யாரும் சட்டெனக் கண்டுகொள்ள முடியாதபடி மிக லேசாகத் திறந்து வைத்தபடி சாத்தியிருக்கிறான்! அதை அவள் கவனிக்கவே இல்லையே. வெகு நாளைக்குப் பிறகு தாயுடன் பேசும் உற்சாகம் வேறு! தொலைபேசித் தொடர்பில் இருந்த சிறு இடையூறு, எல்லாமாக உரக்கப் பேசியது நினைவு வந்து மனோகரியின் மனம் நொந்தது.

இப்படி ஒருவன் ஒட்டுக் கேட்பான் என்று அவள் சற்றும் நினைக்கவில்லையே! எதைச் செய்வதானாலும், அதற்குரிய அந்த நேரம் வந்த பின் செய்ய வேண்டும். அந்த நேரம் வந்த பின் சொல்லலாம் என்று கணவனிடம் தொடர்ந்து உண்மையை மறைத்தது எண்ணி அதற்கும் வருந்தினாள் அவள்.

ஆனால் இந்த நோவு, வருத்தம் எதுவும் இப்போது எந்த வகையிலும் பயன்படப் போவது இல்லை.

மூர்த்தி என்கிற கொடிய நாகத்துக்கு, அவளை அறியாமல் தவறாக ஒருதரம் உதவிய பாவம், அவள் தலையிலேயே வந்து விடியப் போகிறது.

மூர்த்தியை முந்திக் கொண்டு, அவளை முதலில் தினகரனிடம் உண்மையைச் சொல்லி விட்டால் என்ன என்று ஒரு தரம் மனோகரி யோசித்துப் பார்த்தாள்.

ஆனால், அவசரப்பட்டு அதைச் செய்யவும் அவளுக்குத் தயக்கமாய் இருந்தது. ஒருவேளை, 'என்

மோனிகாவுக்குப் பதிலாக இன்னொருத்தியா?' என்று தினகரன் அவளை வெறுத்தால்? அவனைப் பிரிந்து இனி அவளால் வாழ முடியுமா?

ஒருவேளை, அவளது நிலைமையை உரியபடி எடுத்துரைத்தால் மூர்த்தியே மனமிளகி விடக் கூடுமே! அதை முயற்சிக்காமல், 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று தினகரனிடம் போய் நிற்பானேன்?

மூர்த்தியிடம் எப்படி எப்படிப் பேசுவது என்ற மனதில் கற்பனை செய்து பார்த்துவிட்டு, சற்றே மனம் அமைதி அடைந்த பிறகுதான் மனோகரி மீண்டும் வீட் டுக்குள் அடியெடுத்து வைத்ததே.

அவள் உள்ளே சென்றபோது, தோட்டப் பகுதியில் வேலையை முடித்துக் கொண்டு, தேவகியும் வந்து விட்டிருந்தார்!

மனைவி வந்த அரவம் உணர்ந்து, "மோனி ஒரு பத்தாயிரம் ரூபாயை நீ எங்கும் எடுத்து வைத்தாயா' சின்ன ரூம் மேஜை மேல், கைப்பையில் அம்மா வைத்த பணம்!" என்று தினகரன் வினவினான்.

பணம் தொலைவது அந்த வீட்டில் அன்றுவரை நடந்தது இல்லை. எனவே திகைப்புற்று; "நீங்கள் வேறே எங்கேயாவது வைத்தீர்களா அத்தை?" என்று விசாரி தாள்.

"இல்லையம்மா, காய் பறிக்கிறவர்களுக்குக் கூலி கொடுப்பதற்காக எடுத்து வைத்தேன். லாரிக் கூலியு கொஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது. கையில் பண தைப் பார்த்தால், காய் வாங்குகிற 'ஏஜெண்ட்' பண

காமல் நாள் தள்ளிவிடப் பார்ப்பான். அதனால் வீட்டி லேயே வைத்து விட்டுப் போனேன். ஆனால் இப்போது ஏஜண்ட், நாளன்று தருவதாகச் சொல்லி விட்டான். அதுதான், இந்தப் பணத்தைக் காரியக் காரனிடம் கொடுத்துப் பட்டுவாடா பண்ணச்சொல்லலாம் என்று வந்தேன். பார்த்தால் பணத்தைக் காணவில்லை!'' என் றார் தேவகி குழப்பத்துடன்.

''ஒரு வேளை மீண்டும் பீரோவிலேயே வைத்து விட்டீர்களோ, என்னவோ அத்தை, பீரோவில் தேடிப் பார்த்தீர்களா? அல்லது நமது வேலைக்காரர்கள் யாராவது'' என்று மனோகரியும் குழம்பினாள்.

ஏனெனில் தேவகி மறதிக்காரியும் அல்ல. காய்கறி விற்பனைக் கணக்கைக் கூட மனதிலேயே சரியாக வைத்திருப்பார். அந்த வகையில் மாமியாரிடம் மனோக ரிக்குப் பெரும் பிரமிப்பு கூட. ஒருதரம் அவள் வாய் விட்டே வியந்தபோது, ''பரம்பரையாகப் பண்ணைக் குடும்பம், அம்மா நெல் புடைக்க, குத்த வருவார்கள்; பால், தயிர், நெய் வாங்கிப் போவார்கள். எல்லாக் கணக்கும் பார்த்து வந்த பழக்கம்!'' என்றார் அவர்.

அவர் மறந்திருக்க வாய்ப்பில்லை.

''இல்லையம்மா. அந்த அறைக்குள் வேலையாட் கள் யாரும் போவதில்லை என்பதோடு, எல்லோரும் நம்பிக்கையானவர்களும் கூட என்று நான் வெளியே தான் - ஆனால் பைக்குள் போட்டு வைத்துவிட்டுப் போனேன். ஒருவேளை மறந்திருப்பேனோ என்று பீரோ வில் தேடவும் செய்தேன். அங்கே இல்லையே!'' என்றார் தேவகி.

''நம்பிக்கையானவர்கள் என்று யாரையும் சொல்ல முடியாது, அம்மா. அவரவர் தேவையின் அளவு, நம் கவனக் குறைவு இரண்டும் சேர்ந்து கொண்டால் எப் பேர்ப்பட்ட யோக்கியனுக்கும் கை நீண்டுவிடத்தான் செய்யும். முதலில், அந்த அறைக்குள் யாராவது போனார்களா என்று விசாரியுங்கள்'' என்றான் தினகரன்.

''இவர்கள் அத்தனை பேரையும் நம்பி, நான் இங்கே தனியாக இருந்திருக்கிறேன். ''நீ உள்ளே போனாயா, பணம் எடுத்தாயா என்று இவர்களில் யாரைக் கேட்க முடியும்? நேர்மையானவர்களின் மனம் நொந்து போகாதா! போகிறது. பத்தாயிரம் ரூபாய்! புத்தி கொள்முதல் என்று வைத்துக் கொள்கிறேன். இனி கவ னத்துடன் இருந்துவிட்டால் போகிறது'' என்றார் தேவகி சிறு வருத்தத்துடன்.

''தப்பு, அம்மா'' என்றான் தினகரன் குரலில் அழுத் தத்துடன். ''ஒருமுறை திருடி வெற்றி கண்டவனுக்கு அந்தத் தூண்டுதல் திருடத் தோன்றும். பணம் கிடைக்கா விட்டால் பொருள் என்று போய்க் கொண்டே இருக்கும். அத்தோடு, திருடியது யார் என்று தெரியாவிட்டால், உங்களுக்கு இவர்களில் யார் மீது நம்பிக்கை நிலைக் கும்? அன்று களவாடியது இவனா? இவனா? என்று எல்லோரையும் சந்தேகப்படத் தோன்றுமல்லவா? உங் கள் நிம்மதிக்காகவாவது, திருடியது யார் என்று தெரிந்து கொண்டே ஆக வேண்டும்!'' என்றான் பிடிவாதமாக.

தயக்கத்துடன், ''அதுவும் சரிதான்... '' என்று ஒத்துக் கொண்டார் தேவகி.

''ஆனால் கேள்வியைச் சற்று மாற்றிக் கேட்கிறேன். யாராவது அந்த அறைக்குள் போனதை மற்றவர்கள்

யாரேனும் பார்த்தார்களா என்று கேட்டால், 'நம்மைப் போய்ச் சந்தேகித்தார்களே' என்று எந்த நல்லவனுக்கும் தோன்றாதல்லவா?'' என்று ஒரு வழி கண்டு பிடித்து, அதைச் செயலாற்றினார்.

கையில் ஒரு தம்ளரோடு, மணி அந்த அறைக்குள் சென்றதாகத் தகவல் கிடைக்கவும், மாமியார் மருமகள் இருவருமே அதிர்ந்து போயினர்.

பதினோரு வயதுச் சிறுவன் அவன். ஐந்தாறு வயதிலிருந்து தேவகியுடனேயே இருப்பவன். வயிற்றுக் கில்லாமல் பிச்சையெடுத்துத் திரிவது கண்டு மனம் இரங்கி, நாதியற்ற அவனை வீட்டுக்கு அழைத்து வந்து வேலை கொடுத்து, சோறு போட்டு ஆதரித்தார். அத் தோடு நில்லாமல் அவனுக்குப் படிப்புக்கும் ஏற்பாடு செய்திருந்தார். தேவகிக்காக என்றால் உயிரை விடக் கூடிய பையன் அவன், அவன் எப்படி?

விஷயத்தைச் சொன்ன போது, தினகரனாலும் அதை நம்ப முடியவில்லைதான்.

ஆனால், வீடு கூட்டித் துடைக்கிற பெண்ணும், கையில் ஒரு தம்ளரோடு மணி அந்த அறைப்பக்கம் சென்றதைப் பார்த்ததாகச் சொல்லவும் அவனைக் குற்ற வாளியாக்குவது தவிர யாருக்கும் வேறு வழி இல்லாது போயிற்று.

''ஐந்து ஆண்டுகளாகக் கூடவே வைத்து வளர்க்கி றேன்'' அவனா... அவன் கூடவா இப்படி?'' என்று தேவகி வருந்துவது பொறுக்காமல், ''போலீசைக் கூப பிட்டுக் கழுதையை இழுத்துப் போகச் சொல்லுங்கள், அம்மா!'' என்றான் மகன் கோபத்துடன்.

''இல்லையில்லை! இதற்கு வேறு ஏதோ விளக்கம் இருக்க வேண்டும்''என்று கணவனை சாந்தப்படுத்த முனைந்த மனோகரிக்கு, மின்னலைப் போல அந்த விளக்கம் சட்டெனப் புலனாயிற்று. மூர்த்தி! மூர்த்திக் குக்கு வீட்டைச் சுற்றிக் காட்டும்படி அவள்தான் மணியை ஏவியிருந்தாள்!

வீடு சுற்றிப் பார்த்தவன் இந்த அறைக்குள்ளும் சென்றிருப்பான்! சற்றே புடைத்த கைப்பையைக் கண்ட தும் அவனுக்குக் கை ஊறியிருக்கிறது! ஏதோ ஒரு காரணம் சொல்லி மணியை அங்கிருந்து அகற்றிவிட்டுப் பணத்தைச் சுருட்டிக் கொண்டிருக்கிறான்! திருடியவன் மூர்த்திதான். மணி, கையில் ஒரு தம்ளரோடு சென்றான் என்பது அவளது ஊகத்தை உண்மைப்படுத்த, தன் கண்டுபிடிப்பை இருவருக்கும் வெளியிட மகிழ்ச்சி யோடு வாய் திறந்த மனோகரி சட்டெனத் திகைத்தாள்.

இதை எப்படிச் சொல்லுவது? மூர்த்தியின் மேல் குற்றம் சாட்டினால், அவனைப் போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று குதிக்கப் போகிறான் தினக ரன்.

இன்றைய நிலையில் சும்மாவே பத்து இலட்சம் கேட்டுத் தகராறு பண்ணிக் கொண்டிருக்கிறான். இவ னைப் போய் போலீசுக்கு கைகாட்டி விட்டால் சும்மா இருப்பானா? இருக்கும் விஷம் முழுவதையும் அவள் மீதே ஏற்றிவிடாதா அந்தப் பாழும் பாம்பு!

சும்மாவே, இந்த மூர்த்தியின் கூட்டாளிதான் மனோ கரி என்ற கருத்துடையவன் தினகரன். இப்போது அந்தக் கதைவேறு வெளியானால் கட்டாயமாக மூர்த்தி அதைத்

தினகரனுக்குத் தெரியப்படுத்துவான் என்பதும் உறு தியே! அவனுடைய கூட்டாளி என்று அன்று தினகரன் மனோகரியைக் குற்றம் சாட்டியபோது அதைக் கேட்டுக் கொண்டே வீதியில் கிடந்தவன் அவன்தானே! நிச்சய மாய்ச் சொல்லுவான் — அப்புறம் மனோகரிக்கு மீள வழியே இராதே!

இப்போதும், இருவருமாகச் சேர்ந்து திட்டமிட்டு தான் அவனை மனோகரி மணந்திருக்கிறாள் என்று முடிவே கட்டிவிடுவான் தினகரன்! இந்தப் பத்தாயிரம் பங்கு போடல் தகராறில் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்துக் கொண்டார்கள் என்று எண்ணுவது எளிது அல்லவா?

ஆனால் பழியிலிருந்து மூர்த்தியைக் காப்பாற்றுவ தும், காப்பதும் அவளுக்குப் பிரியமற்ற காரியம் என்றா லும், அவனைக் காக்க அவள் முயன்றாலும் அது முடியாது என்றும் மனோகரிக்குத் தோன்றியது.

வெளியே சென்றிருக்கும் மணி வந்ததும், அவனி டம் விசாரணை நடக்கும். மூர்த்திக்காக எதையோ எடுக்கச் சென்றான் என்பது தெரிந்ததுமே குற்றவாளி யார் என்பது எல்லோருக்கும் தெளிவாகிவிடும்!

இங்கு எல்லோருக்குமே மணியிடம் அவ்வளவு நம்பிக்கை! அவளுக்கும் கூடத்தான். மணியைக் குற்றவா ளியாக யாரும் கருதுவது அவளுக்கும் பிரியமில்லை தான். என்ன செய்வது என்று சற்று நேரம் தவித்துவிட்டு, போலீசுக்குப் போவதைத் தடுப்பது ஒன்றுதான் வர இருக்கும் புயலைத் தடுத்து நிறுத்தும் ஒரே வழி என்ற முடிவுக்கு மனோகரி வந்தாள்.

''எனக்கு மணியிடம் நம்பிக்கை இருக்கிறது'' என்றாள் தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு ஒரு பெரிய மூச்சை எடுத்து ''எனக்கு சுசீலாவுடைய கணவர் மூர்த்தி மேல் தான் சந்தேகம்!'' என்றுரைத்து, மூசசைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

தினகரன் திகைப்பு காட்ட, ''யார்? யார் மூர்த்தி!'' என்று தேவகி விசாரித்தார். ''மோனிகாவுடைய உறவுக் காரர், அம்மா. நீங்கள் தோட்டத்துக்குச் சென்றிருந்த போது வந்து விட்டுப் போனார்!'' என்றான் தினகரன் சிறு எரிச்சலுடன்.

''உறவு அல்ல, அவர் மனைவிதான் பழக்கம். இவர் அவ்வளவு நல்லவர் அல்ல என்று கேள்வி..''

''பின்னே ஏன் அவரை வீட்டுக்குள் விட்டாய்! வீடு சுற்றிப் பார்க்க வேறு... ஓகோ, அப்போதுதான் பணம் 'அபேஸ்' ஆகியிருக்க வேண்டும்! அந்த மாதிரி மனி தனை மணியோடு சுற்ற விட்டு விட்டு, அப்படி என்ன தலைபோகிற வேலையைச் செய்யப் போனாய்?'' என்று தினகரன் சிடுசிடுத்தான். ''எவ்வளவு நல்ல பையனைச் சந்தேகப்படும்படி ஆயிற்று பார்!''

தொண்டை அடைக்க ''அவர் வீட்டுக்குள்ளேயே இப்படிப் பண்ணக் கூடும் என்று நான் எதிர்பார்க்கவில் லை'' என்று திணறினாள் மனோகரி.

''சரி சரி.. அதற்காக நீ அழவேண்டாம்.. அவர் இங்கே எங்கே தங்கியிருக்கிறார் என்று ஏதாவது சொன் னாரா?''

''இ... இல்லை...''

''சரி... போலீசைக் கூப்பிடு. அவர்கள் கண்டு பிடிக்கட்டும்'' என்று தினகரன் முடிவெடுக்கவும் மனோ கரி அரண்டு விட்டாள்.

''ஏ.... ஏன்?''

''ஏனா? நம் பணத்தைத் திரும்பப் பெற வேண் டாமா? இன்னொரு தரம் நம்மிடம் தன் கைவரிசையைக் காட்டக் கூடாது என்று அந்த மூர்த்திக்குப் புரிய வைக்க வேண்டாமா?''

மனோகரியின் தவித்த பார்வை தேவகியை உத விக்கு அழைத்தது.''இ... இல்லை.. சுசி... சுசிலாவுக்கா கப் பார்க்கிறேன். அவள் ரொம்ப நல்லவள்... அவமான மாகி விடும்...'' என்று தவித்துத் தடுமாறினாள் அவள்.

தேவகி காரணம் புரியாமல் விழிக்க, ''புரிந்துதான் பேசுகிறாயா? அந்த ராஸ்கல் செய்த தப்புக்குத் தண்ட னையே தேவையில்லை என்றா சொல்கிறாய்?'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டான் தினகரன்.

''இந்த ஒ... ஒரு தடவை விட்டு விடலாமே! போ... போனால் போ... கிறார் என்று..''

''நம்ப முடியாத ஆச்சரியமாய் இருக்கிறது!'' என் றான் தினகரன் ஒரு மாதிரிக் குரலில். ''வெறும் நூறே ரூபாய் இருந்த உன் கைப்பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடிய அந்தச் சின்னப் பையனை எட்டு வயது கூட ஆகியிராத சின்னஞ்சிறுவனை 'என்னிடமா திருடினாய் அதுவும் நூறு ரூபாயை!' என்று கம்பு கொண்டு விளாசிய வளா, பத்தாயிரம் ரூபாய்த் திருட்டைச் சும்மா விட்டு விடலாமா என்கிறாய்?''

அடித்தவள் நானில்லை! மீனாட்சி. அவள்தான் பச்சைப் பிள்ளைகளைக் கூடக் கிள்ளிப் பார்த்து ரசிக்கிற வள். நான் அப்படி இல்லை என்று, வெளிப்படையாக ஒரு வார்த்தை பேச முடியாமல் உள்ளூரப் பரிதவித்தவ ளைத் தினகரனின் அடுத்த வாக்கியம் ஒரேயடியாகக் கலக்கிவிட்டது.

தன் பேச்சுக்கு முத்தாய்ப்பாக, ''நீ என் மோனிகா தானா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறதே!'' என்று தினகரன் முடிக்கவும், மனோகரி அடியோடு நிலை தடுமாறிப் போனாள்.

இந்த சந்தேகம் அவனுக்கு வரக் கூடாதே! வரவே கூடாதே! இந்தப் பேச்சு செயல் வேறுபாட்டில் தொடங்கி அவன் எல்லாவற்றையும் ஆராயத் தொடங்கி விடக் கூடாதே! இதைத் தடுக்க என்ன வழி என்று தீவிரமாக, வேகமாக யோசித்தவளுக்குச் சட்டென அவன் கூறியதே நினைவு வந்து கைகொடுத்தது.

''இதையும் அதையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நியா யம் இல்லை, தினகர். ஒருவர் எதற்காக, என்ன செய்கி றார் என்பது அவர் நிலையில் இருந்து பார்த்தால் தான் புரியும். எவ்வளவோ கொள்கை, கோட்பாடு என்று இருக்கிறவர்கள் கூடக் கொள்கைக்கு விரோதமாக ஏதேதோ செய்யத்தான் வேண்டியதாகி விடுகிறது. என்று.. என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்களே!'' என் றாள்.

சட்டென அங்கே நிசப்தம் நிலவியது. குண்டூசி விழுந்தால் கூட பேரோசையாகக் காட்டி விடக் கூடிய மயான அமைதி.

தினகரனின் உணர்ச்சி துடித்த முகம் மனோகரிக்கு நேராகத் திரும்பியது. ''இந்த வார்த்தை நான் உன்னிடம் சொன்னேனா?'' என்று கேட்டான்.

''ஆ...ஆமாம்..!''

''எப்போது?''

எப்போது என்பது அந்த வினாடியில் நினைவு வர, மனோகரியின் முகம் வெளுத்தது. திருநெல்வேலியில், மூர்த்தி ஓர் எத்துவாளி என்பதை அறியாமல், அவனுக் காக மனோகரி வாதாடியபோது, வேறு வழியின்றிப் பணத்தைக் கொடுத்து விட்டுத் தினகரன் இதைச் சொன் னான்! இந்த இடம், பொருள், ஏவல் பற்றி இவனிடம் அவளால் எப்படி விளக்க முடியும்? ஆனால் கேட்கி றானே!

## 20

மருமகளின் முகத்தைப் பார்த்துவிட்டு, மீண்டும் மனோகரி ஏதோ மாட்டிக் கொண்டாள் என்பதை உணர்ந்து தேவகி அவளது உதவிக்கு வந்தார். ''என் னடா இது கேள்வி? ஏதேதோ விஷயம், எப்போதெல் லாமோ, எவ்வளவோ சொல்லியிருப்பாய், அதெல்லாம் எப்போது, எதற்காக என்றா நினைவிருக்கும்? இப் போது நம் விஷயத்துக்கு வா, இப்போது என்ன செய் வது? ம்... மோனி சொல்கிற மாதிரி இந்த ஒரு தடவை போய்த் தொலைகிறான் என்று அந்த ஆளை விட்டு விடலாமா?'' என்று வினவினார்.

அதையே பற்றி, ''நான் கேட்டது சுசீலாவுக்காகத் தான். மூர்த்தி மோசம்தான் என்றாலும், அவள் நல்ல பெண்...'' என்று தொடங்கியவள், அவன் புருவம் சுளித்துத் தலையசைக்கவும் நிறுத்தினாள்.

விறைப்புற்ற உடலுடன் எழுந்து, ''நீங்கள் இருவரு மாக என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால், இன்னும் ஒரு தரம் இப்படி நடந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று முடித்துவிட்டு அவனது அறைப் பக்கமாகத் திரும்பி நடந்தான்.

சற்று நேரத்தில், அவனது அறைக்கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது.

வருத்தமுற்ற மருமகளின் முகத்தைப் பார்த்து விட்டு, ''கவலைப்படாதேம்மா, எல்லாம் சரியாகி விடும்!'' என்று தட்டிக் கொடுத்தார்.

''அவருக்குக் கோபம் போல இருக்கிறதே, அத்தை! ஆனால்..'' என்று அவள் மேலே பேசுமுன், ''அம்மா!'' என்று குரல் கொடுத்தபடி காரியக்காரர் வந்தார்.

''இதோ!''என்று உள்ளே சென்று பணம் எடுத்துக் கொடுத்துவிட்டு, யார் யார் அதிகப் பற்று வாங்கியிருக்கி றார்கள்; யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது பற்றி அவரிடம் கூறலானார் தேவகி.

மனோகரி கணவனை நாடிச் சென்றாள்.

சாத்தியிருந்த கதவைத் தட்டிவிட்டுத் திறந்து கொண்டு உள்ளே போனாள். தலைகீழ் கை கோர்த்து நேராகப் படுத்திருந்தான் அவன். பார்வை இருந்திருந் தால், விட்டத்தை வெறித்திருக்கும்.

அருகில் சென்று அமர்ந்து, அவன் தோளை லேசாக வருடி, "என் மேல் கோபமா?" என்று மனோகரி மெல்லிய குரலில் வினவினாள்.

"இல்லை!" என்றான் அவன் சுருக்கமாக, அசைவற்றுக் கிடந்தபடி.

"பாருங்கள், மூர்த்தி கெட்டவர்தான். திருடன்தான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் சுசீலாவுடைய கணவர் அவரைப் போலீசிடம் மாட்டி விட்டால், அது சுசீலாவுக்குத் துரோகம் செய்கிற மாதிரி ஆகாதா? அதனால்தான்..."

"அதுதான் உன்னிஷ்டம் என்று விட்டு விட்டேனே!"

"ஆனால் நீங்கள் கோபமாய் இருப்பது போல..."

"கோபம் இல்லை... ஆனால் என்னைக் கொஞ்சம் தனியே இருக்க விடுகிறாயா?"

முகத்தில் அறை வாங்கியவள் போலச் சட்டென எழுந்து விட்டாள் மனோகரி. திகைத்துக் கண்கள் கலங்கி விட்டன.

ஆனால், அவள் அருகிலேயே நிற்கிறாள் என்பதை அறிந்த பிறகும், அவளை வருத்தி விட்டதை உணர்ந்த பிறகும், அவன் முன்போலவே அசையாமலே கிடக்கவும், சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு மனோகரி வேதனையுடன் திரும்பிச் சென்றாள்.

வெளியே சென்று கதவைச் சாத்தும் வரை, அவளுள் அழைப்பானென்ற எதிர்பார்ப்புதான். ஆனால், அவன், ஒன்றும் சொல்லாமலே படுத்திருக்கவும், பேசாமல் கதவை முன் போலவே சாத்திக் கொண்டு சென்றாள்.

உள்ளே அவளது இதயம் இரும்பாய்க் கனத்தது. மூர்த்தி விஷயத்தில் அவன் சொன்னது போல நடக்க வில்லை என்று தினகரனுக்கு இவ்வளவு கோபமா? ஆனால், அவனை மாட்டி வைக்கும் தைரியம் அவளுக்கு இல்லை என்பது அவனுக்கு எங்கே புரியப் போகிறது?

அல்லது... அல்லது ஒருவேளை அவனது அந்த வார்த்தைகள்! அந்த வார்த்தைகளை அவன் எப்போது சொன்னான் என்பது அவனுக்கு நினைவு வந்து விட்டதா?

நினைக்கும் போதே நெஞ்சு நடுங்கி விட்டது அவளுக்கு. உடனேயே, அப்படி இராது என்று திடமும் கொண்டாள்.

அதுமட்டும் அவனுக்கு நினைவு வந்திருந்தால், அப்புறம் இந்த வீட்டில், அவளை அரை வினாடி இருக்க விடுவானா?

சற்று நேரம் மனோகரிக்குத் தன்னைப் பார்த்தே பரிதாபமாக இருந்தது. கணவன் என்பவன், தனக்கா கவே தன்னை விரும்பி வாழ வேண்டும் என்பது எல்லாம் பெண்களுக்கும் இருக்கக் கூடிய பொதுவான ஆசை! மிக முக்கியமான ஆசையாக இருக்கும் என்று கூட உறுதியாகவே சொல்லலாம்.

ஆனால், மனோகரியுடைய கணவனோ, அவளை இன்னொருத்தியாக எண்ணித்தான் மணந்ததே! அவ ளாக எண்ணியே அவன் பேசுவதையும் அணைப்பதை யும் அவள் பொறுத்துக் கொள்ள நேர்ந்தது. பிரிட்டிஷ் இளவரசி டயானா சொன்னது போல இவர்களின் திரும

ணத்திலும் இருவருக்குப் பதிலாக மூவர் இருந்தனர். அவன் மீது அவளுக்கு இருந்த அன்பினால் மனோ கரி அதைப் பொறுத்து, மகிழ்ச்சியோடு இருக்கவும் பழகிக் கொண்டாள்.

பெற்றவளைப் பார்க்கவே முடியாத நிலை! எந்த நேரம், எந்த வார்த்தை அவளைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்கிற கலக்கமே தாங்க முடியாமல் இருந்த வேளையில், தகுதியற்ற ஒருவன் வேறு வந்து மிரட்டு வது வேறு சகிக்க முடியாததாய் இருந்தது. அதற்கும் மேலாக, அந்த மிரட்டல்காரனுக்கு ஆதரவாகப் பேச நேர்ந்ததும், அதற்காகக் கணவன் கோபப்படுவதும்... உலகில் வேறு எந்தப் பெண்ணுக்கும் இப்படிப்பட்ட இக்கட்டுகள் நேரவே நேராது என்று அவளுக்குத் தோன் றியது.

இவை அனைத்திலும், தினகரனின் கோபமே தன்னை அதிகம் பாதிப்பதை உணர்ந்தவளுக்குக் கண் கலங்கியது. மூர்த்தி ஏதாவது செய்து, கணவனைப் பிரிய நேர்ந்தால் அவளால் எப்படி வாழ முடியும்?

தனிமை வாய்த்தபோது, தேவகியும் மனோகரியும் மூர்த்தி பற்றிப் பேசினர்.

''பத்து லட்சமா?'' அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?'' என்று தேவகி திகைத்தார். ''ஏதோ ஆயிரக்க ணக்கில் கேட்டால் கூட சமாளித்து விடலாம். ஒரு லட்சம் வரை தருவதாகக் கேட்டுப் பாரேம்மா? உனக்குக் கொஞ் சம் நகை செய்ய வேண்டும் என்று சேர்த்தேன்..''

''எனக்கு நகையெல்லாம் வேண்டாம் அத்தை!'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் மானோகரி.

''மூர்த்திக்கெல்லாம் கொடுக்கத் தொடங்கினால், அதற்கு முடிவே இராது!... அத்தோடு, பொய், ஆள் மாறாட்டம்... என்ற செய்திருக்கும் பிழைகள் போதும் அத்தை!'' என்றாள் அவள் கைத்த குரலில். ''பின்னே என்ன செய்வது? அவன் வேறு மிரட்டினான் என்கிறாயே?''

''சொல்லிப் பார்க்க வேண்டியதுதான். அதற்குமேல் விதி என்று விட்டு விட வேண்டியதுதான்'' என்றாள் மருமகள் வேதனையோடு. வீட்டில் தேவகி தவிப்புடன் காத்திருக்க, இந்த உறுதியோடு தான் மூர்த்தி சொன்ன இடத்துக்கு மனோகரி சென்றதும்.

தினகரன் வீட்டுப் பண்ணையின் எல்லை தாண்டி, ஓர் அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பாழடைந்த குடிசையில் சந்திப்பு நடந்தது. பக்கத்து நிலத்துடைய காவல் ஆளுடைய குடிசை அது. நிலத்தைப் பயன்படுத்தாததால் குடிசையை பாழடைய விட்டுப் போய்விட்டார்கள். வாக்கிங் செய்வது போல மனோகரியை அங்கே தான் மூர்த்தி வரச் சொல்லியிருந்தான். தனக்குள் ஒரு கணக்குடன் மூர்த்தி வந்திருந்தான். ''முழுப்பணத்தையும் நீ கொண்டு வந்திருக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். மாமியார் கிழவிக்கு அவ்வளவு பணத்தைத் தர மனம் வராதுதான். கொண்டு வந்ததை இப்போது கொடு. பிறகு, மீதிப் பணத்துக்கு ஒரு இரண்டு வட்டி போட்டுச் சேர்த்துக் கொடு'' என்றான் ரொம்பவும் தாராளமாக. ''இப்போது எவ்வளவு கொண்டு வந்திருக்கிறாய்?''

மனோகரி ஒன்றும் கொண்டுவரவில்லை என்டது தெரிந்ததும் முதலில் அவனால் நம்பக் கூட முடிய

வில்லை! கை பதற, ஒரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். வேகமாக இருமுறை இழுத்து விட்டு, ''இதோபார்! நான் சும்மா மிரட்டினேன் என்று நீ நினைத் தாயா? நிஜமாகவே உன் புருஷனிடம் போய்ச் சொல்லி விடுவேன். அவன் உன்னை வீட்டிலிருந்து விரட்டி விடுவான். அப்புறம் நீ அம்போ என்று நடுத்தெருவில் தான் நிற்க வேண்டும்!'' என்று பயமுறுத்தினான்.

''நீங்கள் நினைக்கிற மாதிரி என்னிடம் பணம் கிடையாது, மிஸ்டர் மூர்த்தி! அதோடு...''

''அப்படியானால் உன் புருஷன் அந்த தினகரன் முட்டாளின் சொர்க்கத்திலிருந்து விழித்து எழ வேண்டிய துதான்!'' என்றான் அவன் இரக்கமின்றி.

''அவர் ரொம்பவும் நொந்து போனார், மூர்த்தி. நான் எதற்காக இந்த ஆள் மாறாட்டம் செய்தேன் என்று தெரியுமா? எந்த வகையான சொந்த லாபத்திற்காகவும் அல்ல! என் மாமா மகள்தான் இவரை மணப்பதாக இருந்தது. ஆனால் இவருக்கு அடிபட்டு கண் போனதும் அவள் எட்டிப்பார்க்கக் கூட மறுத்துவிட்டாள். இவர் வருந்துவாரே என்றுதான் நான்...''

''உன் ஒப்பாரி எனக்குத் தேவையில்லை. பணம் தர முடியுமா? முடியாதா? அதை மட்டும் சொல்லு!''

''ஏதோ... புகைகிற மாதிரி நாற்றம் வருகிறதே!'' என்று சுற்று முற்றும் பார்த்தாள் மனோகரி.

''சும்... மா பேச்சை மாற்ற முயற்சி செய்யாதே!'' என்றான் அவன் கறார் குரலில்.

மனோகரி எவ்வளவோ, சொல்லிப் பார்த்தாள். தினகரனின் நிலைமையை எடுத்துச் சொல்லிப் பார்த்

நாள். அவனுடைய மனைவி மகளை நினைவுபடுத்தி, இன்னொரு குடும்பத்தைக் கலைப்பது பாவம் என்று அறிவுறுத்த முயன்றாள். பிளாக் மெயில் பண்ணுவது சட்டப்படி குற்றம்; மனோகரி போலீசுக்குப் போனால், மூர்த்தி சிறைப்பட வேண்டியிருக்கும் என்று மிரட்டவும் செய்தாள்.

ஆனால், மூர்த்தி எதற்கும் அசைவதாக இல்லை! ''ஆள் மாறாட்டம் மட்டும் சட்டத்துக்கு உட்பட்ட விஷயமா? என்னோடு சேர்ந்து நீயும் தானே கம்பி எண்ணுவாய்?'' என்றான் அவன் அலட்சியமாகவே. ''எனக்கு வேண்டியது பணம். தராவிட்டால், உன்னை நடுத்தெருவில் நிறுத்தி விடுவேன்'' என்று அவளை அச்சுறுத்துவதிலேயே முனைப்புடன் இருந்தான் அவன்.

''நான் ஒரு நாளும் நடுத் தெருவில் நிற்க மாட்டேன். என் பெற்றோர் தந்த கல்வி என்னை ஒரு நாளும் அந்த நிலையை அடைய விடாது! ஆனால்... தினகர், அதற்கும் தான் என்ன செய்வது? உன் விருப்பம். சொல்லிக் கொள். இவ்வளவு நாளில், என் அன்பு கொஞ்சமேனும் அவர் மனதைத் தொட்டிருந்தால்... பார்க்கலாம். இதுவரை காத்த கடவுள் இனியும் பார்த்துக் கொள்வார். நான் கிளம்புறேன்!'' என்று திரும்பி, குடிசையிலிருந்து வெளியேறி, வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள். அடிப்பது போல வேகமாக முகத்தில் மோதிய காற்று கூட அப்போது அவளுக்கு வேண்டியிருந்தது.

உணர்வு மரத்துப் போயிருந்தவளுக்குச் சற்றேனும் சுரணை என்ற உண்டாக்கியது அந்தப் பேய்க் காற்றுதான்.

ஆனால், உணர முடிந்ததும் துன்பமாய்த்தான் இருந்தது. 'இனி?' என்ற கேள்வி பூதாகரமாய் இருந்து அவளை மருட்டியது. உள்ளே தவித்தபடி நடந்தவளுக்கு, 'மனோகரி!' என்ற கூக்குரல் மெல்லத்தான் கேட்டது.

எதிர்க்காற்று பாதிக்குரலைக் கொண்டு போய்விட முதலில் அவளுக்குத் திரும்பிப் பார்க்க மனமில்லை! பணமே இல்லை என்று விட்டதால், 'பாதியாவது கொடு' என்று பேரம் பேச அழைக்கிறான்! இவனிடம் நின்று பேசும் நேரம் வீண்!

ஆனால், மீண்டும் அதே போலக் கதறல் போன்ற அழைப்பும், 'காப்பாற்று' என்பது போல ஒரு முனகலும் சேர்ந்து கேட்கத் தன்னையும் மீறி திரும்பிப் பார்த்தவள் திகைத்துப் போனாள்.

பாழடைந்த குடிசை கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருந்தது. முதலிலேயே புகைநாற்றம் வந்ததே என்று நினைத்தவளுக்கு, மூர்த்தி குடிசையை விட்டு வெளியே ஓடி வராதது ஆச்சரியமாக இருந்தது.

அழைப்போடு 'காப்பாற்று' என்பது போலக் கேட்டதே!

மின்னலாய்ப் பாய்ந்து ஓடி எட்டிப் பார்த்தவள் மீண்டும் திகைத்தாள். மூர்த்தி கீழே கிடந்தான்.

கூரையைத் தாங்கும் குறுக்கு உருட்டுக் கட்டையைத்தாங்கி நின்ற கட்டைகள் உளுத்துப் போயிருக்க வேண்டும். அவற்றுள் ஒன்றைத் தீ எரித்துவிட, அடுத்தது உடைந்து குறுக்குக் கட்டை அப்படியே மூர்த்தி மீது விழுந்திருக்கிறது. வெறும் குறுக்குக் கட்டை மட்டும்

என்றால் சற்று சிரமப்பட்டு அவனே அந்தக் கட்டையை விலக்கி அதன் அடியிலிருந்து விடுபட்டிருக்க முடியும். ஆனால் குறுக்குக் கட்டையை பக்கச் சுவரில் பதித்திருந்த இடம் வேறு இருந்ததால், அதுவும் இடிந்து அவன் மீது விழுந்து விடவே, அவனால் அசையக் கூட முடியவில்லை.

எதிர்க்காற்றில் சென்று கொண்டிருந்ததால் தீப்புகை மனோகரியை அடையவில்லை. உத்தரக் கட்டை விழுந்த சத்தத்தையும், அவளது மன உளைச்சல் வேறு, அவளை வேறு எதையும் கவனிக்கவிடவில்லை போலும்.

இப்போது கண் முன்னே கண்ட காட்சியும் திகைப்போடு அச்சத்தையும் ஊட்டுவதாகவே இருந்தது. குறுக்கு மரத்தோடு சேர்ந்து கீழே விழுந்து விட்டிருந்த தட்டிக் கூரையின் மறுபுறத்தில் பிடித்திருந்த தீ மெல்ல மெல்ல மூர்த்தியை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஓடிப்போய், அவளது வீட்டிலிருந்து உதவிக்கு ஆள் கூட்டிவருமுன் தீ மூர்த்தியை எட்டிவிடும்!

இந்த உத்தரக் கட்டையைத் தூக்கி, மூர்த்தியை விடுவிக்க அவளால் இயலுமா?

''மனோகரீ! காப்பாற்று..! என்று கை குவித்து இறைஞ்சும் போதே மூர்த்தியின் முகத்தில் நிராசை பரவியது. இவள் நம்மைக் காப்பாற்ற மாட்டாள் என்கிற நிச்சயம் தந்த நிராசை!

மனோகரி, உள்ளே வந்து உத்தரக் கட்டையைத் தூக்கிப் பார்த்தாள். அது அசைவேனா என்றது!

''மனோகரி! நான் செத்து விடுவேனா?'' என்றான் மூர்த்தி அழுகுரலில்.

''சேச்சே! அதெல்லாமில்லை!'' என்று உள்ளூர நம்பிக்கையற்றுச் சொல்லிக் கொண்டிருந்த மானேகரிக்கு ஓர் ஐடியா உதித்தது.

உத்திரக் கட்டையோடு சேர்ந்து, மூர்த்தியின் கீழே உடம்பை அழுத்திக் கொண்டு இருப்பது, பக்கச் சுவரின் ஒரு பாகமும்தான். அதுவும் சிதிலமானதுதானே. காவல் ஆளுக்காகத் தற்காலிகமாகக் கட்டியது. உரிய அளவு சிமிண்ட் கலந்து பக்காவாகக் கட்டியிருக்க மாட்டார்கள்!

சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, அருகே கிடந்த ஒரு பெரிய கல்லை எடுத்துக் கொண்டு மனோகரி ஓடிவந்தாள். ''அதிகமாகவே வலிக்கக் கூடும், மூர்த்தி, உங்களைக் காப்பாற்ற வேறு வழி இல்லை'' என்று தெரிவித்து விட்டு, கையிலிருந்த கல்லை சிதிலமான சுவர்ப்பகுதி மேல் ஓங்கி அடித்தாள்.

ஏற்கனவே காயம்பட்ட இடத்தில் இந்த அடியின் பாதிப்பினால் 'அம்மா' என்று முனகியபோதும், மூர்த்தி மனோகரியை நிறுத்தச் சொல்லவில்லை. அவளது முயற்சி அவனது உயிரைக் காப்பதற்காகச் செய்வது அல்லவா. ''சீக்கிரம், மனோகரி தீ நெருங்குகிறது!'' என்று அவளை அவசரப்படுத்தினான்.

வேகமான மூன்று முயற்சிகளின் பின், குறுக்குக் கட்டை சுவர்ப்பகுதியிலிருந்து விடுபட, அவசரமாக அதை, மூர்த்தி மேலிருந்து அகற்றிவிட்டு, சிமென்ட், செங்கல் சேர்ந்த கட்டிகளையும் எடுத்துத் தீ பரவிய பக்கம் போட்டாள்.

கனமான பொருட்களை விலக்கிய பிறகும் மூர்த்தி யால் எழ முடியவில்லை என்பதைக் கண்டு, அவன் தோளின் கீழ் கைகளைக் கொடுத்து, தம் பிடித்து அவனை குடிசைக்கு வெளியே இழுத்துப் போய் விட்டு விட்டு, தொப்பென உட்கார்ந்து தானும் மூச்சு வாங்கி னாள்.

சற்று முன், தான் சக்தியற்றுக் கிடந்த இடத்தைத் தீ கபளீகரம் செய்வதைப் பார்த்த மூர்த்தி, கண்களில் நீர் வழிய, மனோகரியை நோக்கி மீண்டும் கை கூப்பி னான்!

## 21

**ச**ற்று நேரம் மூச்சு வாங்கி சற்றுத் தெம்படைந்த தும் மனோகரி எழுந்தாள்!

''கொஞ்ச நேரம் இப்படியே உட்கார்ந்திருங்கள், மூர்த்தி. உங்களுக்கு காலில் அடிபட்டிருக்கிறது. நான் வீட்டுக்குப் போய் காரை எடுத்துக் கொண்டு, உதவிக்கும் யாரையாவது அழைத்து வருகிறேன்'' என்று கூறியவள், மூர்த்தி உதடு துடிக்கக் கண்ணீர் விடுவதைக் கண்டு, ''ரொம்ப வலிக்கிறதா! ஏதேனும் எலும்பு முறிந்திருக் குமோ என்னவோ தெரியவில்லையே! எனக்கு அதெல்லாம் சரியாகப் பார்க்கத் தெரியாதே! கொஞ்சம் வலி பொறுத் துக் கொள்ளுங்கள், மூர்த்தி நான் இதோ ஓடிப் போய்ச் சீக்கிரம் வந்து விடுகிறேன், என்று வீடு நோக்கி ஓடத் தொடங்கியபோது வீட்டு கேட்டிலிருந்து ஒரு கார் வெளி வருவது தெரிந்தது.

கையாட்டி விரைந்து வருமாறு சைகை காட்டினாள், மனோகரி. வருவது யாராக இருந்தாலும் முதலில் இவனைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு யாராவது டாக்டரிடம் காட்டியாக வேண்டும் என்பது அவளது எண்ணம்.

காரில் வந்தது தேவகியே. மூர்த்தியைச் சந்திக்க மனோகரி தனியே சென்றதிலிருந்து தவித்துக் கொண்டிருந்தவருக்கு மருமகள் வரத் தாமதம் ஆகவும் உள்ளூர மனம் பதறியது.

மனோகரி சந்திக்கச் சென்றிருப்பது ஒரு வில்லனை ஆயிற்றே. இவள் பணம் இல்லையென்றதும், பதிலாக இவளையே பிடித்துப் போய் விட முயன்றால், மனோகரி வேறு நல்ல அழகான பெண்!

மருமகளின் பின்னாலேயே ஓட வேண்டும் போலத் தவிப்பு இருந்தபோதும், தேவகிக்குத் தயக்கமும் இருந்தது.

வீடு, தோட்டம், பயிர் என்று அந்த வட்டத்தினுள்ளேயே இருந்தவர், சும்மா சும்மா மருமகளோடு சுற்றினால் மகன் என்ன நினைப்பான்? சும்மாவே அவனுக்குக் கொஞ்சம் புத்தி அதிகம்!

உள்ளூர உதைப்புடன் இருமுறை வாயில்புறம் சென்று வந்தார். மகனை எட்டிப் பார்த்தார்.

என்ன காரணமோ? முன் தினத்திலிருந்து அவனும் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தான்.

ஏன் என்று புரியாத கலக்கம் இருந்தபோதும், இப்போதைக்கு அதுவே வசதியாகிவிட, பூஜையறைக்குச் சென்று, சில வினாடி நேரம் கணவன் படத்தைப்

பார்த்து விட்டு வேகமாக வந்து காரை எடுக்கச் சொன்னார். எதற்கும் இருக்கட்டும் என்று இன்னொரு வேலையாளையும் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

வாயில் திரும்பும்போதே மூர்த்தி குறிப்பிட்டிருந்த அந்த குடிசை எரிவதும், மனோகரி கையாட்டுவதும் கண்ணில் பட்டு விட்டது.

வேகமாகச் சென்றால், காயம் பட்டுக் கிடந்தவன் மூர்த்தி! அவரும் தாய் மனம் கொண்டவர் ஆயிற்றே! 'பார்த்தாயா' என்பது போல கெக்களிப்பான ஒரு பார்வைகூட இல்லாமல் அவரும் உதவவும் மூர்த்தி கூசிக் குறுகினான்.

காரில் மூர்த்தியை ஏற்றிக் கொண்டு, வீடு சென்று, பெண்கள் இருவரும் இறங்கிக் கொண்டு, காரியக்காரரைப் பணத்துடன் மூர்த்தியின் சிகிச்சையைக் கவனிக்கும்படி அனுப்பி வைத்தனர்.

''நானே கூட வருவேன், மூர்த்தி. ஆனால் இங்கே என்னைவிட, ஜக்கையா அங்கிளுக்கு நல்ல பழக்கம். அத்தோடு அவர் தேடினால்.... அவர் என்னைத் தேடக் கூடும்...'' என்று கூறும்போதே ஏனோ முன் தினத்திலிருந்து தினகரன் அவனாக அவளை அருகே அழைக்கவே இல்லை என்பது நினைவு வந்து அவளுக்கு தொண்டை அடைத்தது.

''நீ இவ்வளவு செய்வதே மிக அதிகம், ம..மோனிகா! இதற்கே நான் ஒரு பிறவி நன்றிக் கடன் செலுத்த வேண்டும். உன்னைப் பார்க்கும் வரை நான் பிழைப்பேன் என்றே நினைக்கவில்லை! மெய்தான்! ஜக்கையா சார்! உத்திரத்தின் அடியில் கால் நன்றாக மாட்டிக் கொண்டு விட்டது! தீயானால் பரவிக் கொண்டே வருகி

றது; அத்தோடு முடிந்தேன்; எரிந்து கருகப் போகிறேன என்று நினைத்து சோர்ந்தே போனேன். அந்த நேரத்தில், உங்கள் சின்னம்மா அங்கே வந்தது தெய்வச் செயல் என்று தான் எனக்குத் தோன்றுகிறது. மற்றபடி, அந்த நேரத்தில் 'வாக்கிங்' போகவேண்டும்; அதுவும் அந்த வழியே போகவேண்டும் என்று உனக்கு எப்படித் தோன்ற முடியும், மோனிகா? அந்தச் சாமுண்டீஸ்வரி தான் உன் மனதில் புகுந்து அப்படிச் செய்ய வைத்திருக்க வேண்டும்! தாயே!'' என்று ...கரம் தூக்கிக் கண்மூடிக் கை குவித்து வணங்கி விட்டு கண் திறந்து மனோகரியை இரு வினாடி நேரம் நேராக நோக்கினான். ''ரொம்பவும் நன்றிம்மா! வருகிறேன்!'' என்று விடை பெற்றுச் சென் றான்.

மாமியாரும் மருமகளும் பார்த்துக் கொண்ட பார் வையில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. மகிழ்ச்சியும் இருந்தது.

''பெரிய காயம் ஒன்றும் இல்லை, அம்மா. ஆனால் எல்லாம் இசை கேடாக மொத்தமாகக் காலில் விழுந்த தோடு, தீயில் செத்து விடுவோமோ என்று தோன்றி விட்டிருந்த பயமும் தான் அப்படி அசைய மாட்டாமல் கிடந்திருக்கிறார் என்கிறார் டாக்டர்! காயத்துக்கு மருந்து போட்டு, உடனே அனுப்பி விட்டார்'' என்றார் காரியக் காரர் திரும்பி வந்து.

அதை மெய்ப்பிப்பவன் போல மறுநாளே மூர்த்தி திரும்பி வந்தான்.

வந்து, ஒன்பதாயிரம் ரூபாயைத் திருப்பிக் கொடுத் தான். ''மீதியை விரைவில் எப்படியாவது திருப்பி தந்து விடுவேன் மனோகரி, தயவு செய்து என்னை மன்னிக்க

வேண்டும், அம்மா... அந்தத் தீ! அது நான் வைத்தது தான்!'' என்றான் மனோகரியைத் தனிமையில் சந்தித்து.

மனோகரி புரியாமல் நோக்கவும், ''மெய்தான் மனோகரி. நான் விதைத்த வினை! ஆனால், தீ மெய்யாகவும் நான் வைத்ததுதான். சிகரட் பற்ற வைத்து விட்டு நெருப்புக் குச்சியை வெகு அலட்சியமாக அணைக்காமலே வீசினேன்! அதுதான்...மனோகரி, நீ நினைத்திருந்தால், என்னைக் காப்பாற்றாமல் விட்டுப் போயிருக்கலாம். அந்த இடத்தில், நான் என்ன கத்தினாலும் யாருக்கும் கேட்டிருக்காது. எரிந்து சாம்பலாகியிருப்பேன்! உன் ரகசியமும் என்னோடு சேர்ந்து கருகியிருக்கும்.... நானாக இருந்தால் அது மேல் என்று விட்டுப் போயிருப்பேன்! ஆனால் நீ அப்படிச் செய்யவில்லை. நான் பிழைத்தால் உனக்கு இன்னல். வாழ்வையே பாதிக்கக் கூடிய இன்னல்தான் என்று தெரிந்த போதும், என்னைக் காப்பாற்றினாய்! உன் மனித நேயம் அப்படி!'' என்றவன் சில வினாடி பேசாதிருந்தான்.

பிறகு அவனே ''நான் சம்பாதிக்கும் வழி பற்றி சுசீலாவுக்கு மிகுந்த வருத்தம் உண்டு. இனி அவள் பெருமைப்படும் விதமாக நடந்து கொள்வேன்.'' என்று தொடர்ந்து உறுதியோடு உரைத்தான். ''நான் வரட்டுமா?'' என்று எழுந்தான்.

மகிழ்ச்சியோடு புன்னகை செய்து விட்டு, ''கொஞ்சம் இருங்கள்'' என்று கூறி மனோகரி உள்ளே வந்தாள்.

அவள் திரும்பி வந்தபோது, தேவகியும் உடன் வந்தார். ''மருமகள் எல்லாம் சொன்னாளப்பா. ரொம்பவும் சந்தோஷம். இந்தா இதை வைத்துக் கொண்டு

ஏதாவது செய்.'' என்று பதினைந்து ஆயிரம் ரூபாயை மூர்த்தியிடம் கொடுத்தார்.

''வேண்டாம்மா. உங்கள் நல்லாசியே போதும்,'' என்று பணத்தை வாங்க மறுத்து விட்டு, மீண்டும் நன்றி தெரிவித்துவிட்டு மூர்த்தி கிளம்பினான்.

அவனை வழியனுப்பி விட்டு, தேவகி பெருமித மாய் மருமகளைப் பார்த்தார். ''இதுபோல எல்லாமே நன்றாகவே நடக்கும்.'' என்று நம்பிக்கையோடு ஆருடம் கூறினார்.

தேவகி உரைத்தது உண்மையேபோல, மறுநாளில் இருந்து, தினகரனும் பழைய மாதிரி - சரியாகச் சொல்லப் போனால், முன்பு இருந்ததைவிடவும் அதிகக் கலகலப் பாக நடந்து கொண்டான்.

கம்ப்யூட்டரில் சில பல விவரங்கள் மனைவியைக் கொண்டு அறிந்தான். சிலதை, இப்போது நம்மால் முடியாது என்று கழித்தவன், சிலவற்றுக்கு வேறு ஓர் இடத்தில் உதவி தேடி இந்த 'டீல்' முடிக்கலாம் என்றான். வழக்கம்போலக் கைப் பணம் போட வேண்டியிராத சில சிறு வியாபாரம் செய்தான். தலையசைத்து, ''இது இனி அதிக நாள் ஓடாது. அம்மாவிடம் பயிர்த் தொழில் கற்றுக் கொள், மோனி. இனி அதைத்தான் நம் பிழைப்புக்குரிய தொழிலாகக் கொள்ள வேண்டும் போலத் தோன்றுகிறது'' என்றான் சற்றே கனத்தக் குரலில்.

வயிற்றுக்கு உணவிடுகிற பொருட்களைப் பயிரிடு வதைவிடச் சிறந்த தொழில் என்ன இருக்க முடியும்? 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்

தெரியுமா?'' என்றாள் மனோகரி குரலில் பெருமிதம் காட்டி.

''அவர் இப்போது இருந்திருந்தால் 'டிராக்டர்' பின்னது உலகம் என்று பாடியிருப்பார்.'' என்று கிண்டலாகத் தினகரன் கூறினான். ''என்ன! மோனி?''

உள்ளூர இருந்த வேதனையை அலட்சியப்படுத்தி, அவன் கிண்டல் பேசிய விதத்தில் சற்று ஆறுதல் அடைந்து, ''நிச்சயமாய்! ஆனால், இப்போது என்றாலும், அப்போது என்றாலும், இனி எப்போது என்றாலும் உணவுக்குப் பிறகுதானே மற்றது?'' என்றாள் மனோகரி.

லேசாக முறுவலித்து, தினகரன் கையை நீட்டினான்.

அவனது விருப்பம் உணர்ந்து மனோகரி அவன் கையில் தன் கையை வைத்தாள்.

மனைவியை மெல்ல அருகிழுத்து, மெல்ல அவளது முகத்தைத் தினகரன் வருடினான். ''விரும்பியபடி சம்பாதிக்க முடியவில்லையே என்று நான் கவலைப்படக் கூடாது; வேறு வழியின்றி ஏற்றோமே என்று வருந்தாமல், அதைப் பற்றியும் நான் பெருமையும் மகிழ்ச்சியுமாகவே உணர வேண்டும் என்று முயற்சிக்கிறாய்! அது தானே?''

மறுக்க மாட்டாமல் சில வினாடி மவுனமாய் இருந்து விட்டு, ''வள்ளுவர் குறளில் அப்படிக் கூறியிருப்பது உண்மை!'' என்றாள் மனோகரி.

''ம்ம்... பெருமூச்சு ஒன்று தினகரனிடமிருந்து வெளியேறியது. ''மோனி...நான் ஒன்று கேட்டால் தப்பாக நினைக்கமாட்டாயே?''

கணவனின் தோள் மீது சாய்ந்திருந்து தலை மறுப்பாய் அசைந்தது.

மனோகரியின் விரல்களோடு விளையாடியபடியே, ''இந்த மோனி என்கிற பெயர்! அது உன்னுடையது போலவே இல்லை!'' என்றான் தினகரன்.

லேசாக திடுக்குற்றாள் அவள். ''ஏ... ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று தயக்கத்துடன் வினவினாள்.

சன்னமாய்ச் சிரித்து விட்டு,''மோனி என்றால் மவுனி என்பதுபோல இல்லையா? நீ அப்படி மவுனம் சாதிக்கிறவளா? அதுவும் என் நன்மைக்காக என்றால் கடைசி வார்த்தையை விடவே மாட்டாயே! உன்னை மோனி என்று கூப்பிடவே எனக்குப் பிடிக்கவில்லை. உனக்குப் பிடித்ததாக வேறு ஏதாவது பெயர் சொல்லேன்!'' என்று செல்லமாகக் கேட்டான்.

''என்...பழைய பெயர் மீனாட்சி...''

''நான் உனக்குப் பிடித்த பெயர் என்றேன். நீயே பிடிக்காமல் ஒதுக்கிய உன் பழைய பெயரைக் கேட்கவில்லை'' என்றான் தினகரன் குரல் லேசாகக் கடினமுற.

சிறுதிகைப்புடன் அவள் தலை உயர்த்தி கணவன் முகத்தைப் பார்க்கவும், ''உனக்குப் பிடித்தமான பெயரைச் சொல்லக்கூட இவ்வளவு தயக்கமா? உன் மனதில் என்னை எங்கேயோ தூரத்தில் தானே வைத்திருக்கிறாய்?'' என்றான் தினகரன் குறையோடு.

தன்னையறியாமல் மனோகரி வலையில் விழுந்தாள்.

தன் சொந்தப் பெயரை அடைந்துவிட ஒரு நல்ல வழியாக எண்ணி, ''மனோகரி!'' என்றாள். ''கொஞ்சம்

பழைய மாதிரிப் பெயர்தான் என்றாலும் எனக்கு மிகவும் பிடிக்கும்.''

''மனோகரி! எவ்வளவு அருமையான பெயர்! எல்லோராலும் விரும்பப்படுபவள் என்று அர்த்தம்! சரி தானே? ஆகா! உன்னை விரும்பாமல் யாரால் இருக்க முடியும்?'' என்று அவளை இறுக அணைத்து முத்தமிட்டான். ''இனி உன்னை மனோகரி என்று தான் அழைக்கப் போகிறேன்! மனோ! மனோ! எவ்வளவு அழகான செல்லச் சுருக்கங்கள்!'' என்று தானும் மகிழ்ந்து, அவளையும் மகிழ வைத்தவன், தொடர்ந்து கேட்ட கேள்வி, அவளைச் சற்றே அதிர வைத்தது. ''இவ்வளவு அழகான பெயர், அதுவும் உனக்குப் பிடித்தமானதாக இருக்கும் போது, ஏன் மனோ, 'மோனிகா' என்று பெயர் மாற்றம் செய்தாய்?''

என்னவென்று சொல்லுவாள்? சற்று மென்று விழுங்கிக் கொண்டு, ''அது...அது வந்து ரொம்ப ஸ்டைலாக இருக்க வேண்டும் என்று அம்மா மாற்றியது...'' என்று தடுமாறினாள்.

முகம் வருடி, மனைவியின் மூக்கைக் கண்டு பிடித்து, அதைப் பிடித்துச் செல்லமாக ஆட்டினான் கணவன். ''விசித்திரமான கலவை நீ! ஒவ்வொன்றில் ஒரே பிடியாக நிற்கிறாய்! முதுகெலும்பு இல்லாதமாதிரி இப்படி விட்டுவிடவும் செய்கிறாய்! போகட்டும். இனி எனக்கு நீ மனோகரிதான். 'கெஜட்டில் கூட பெயரை மாற்றி அறிவிப்பு கொடுத்து விடப் போகிறேன். அம்மா விடம் நீயே சொல்லிவிடு,'' என்று அவன் கூறவும் மனோகரிக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது.

மறுநாள் மனோகரியை அழைத்து! தொழில் விஷய மாகச் சில விவரங்களை அறிந்து கொள்வதற்கென,

பிரபல துப்புத் துலக்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து ஆள் அனுப்பும்படி அந்த நிறுவனத்துக்குத் தகவல் கொடுக்கச் சொன்னான். அவர்களின் பெயர், டெலிஃபோன் நம்பர், இதற்குமுன் அங்கிருந்து நமக்கு அனுப்பப்பட்ட ஆள் பெயர் எல்லாம் கம்ப்யூட்டர் மெமரியில் இருக்கும். பார்த்து வரச் சொல்லிவிடு, மனோகரி. நாளைக்கு நீயும் அம்மாவும் ஷாப்பிங் போக இருப்பதாக அம்மா சொன்னார்கள். அந்த நேரத்தில் அவரை வரச் சொன்னால் எனக்கும் போரடிக்காமல் இருக்கும்'' என்றான் தினகரன்.

மனோகரி மீண்டும் தன் தாயாருடன் பேசுவதற்காக தேவகி செய்த ஏற்பாடு. மனோகரிக்குக் கொஞ்சம் பயம் தான். ஆனாலும் அன்னையுடன் பேசும் ஆவலில், மிகுந்த கவனத்துடன் இருந்து கொள்ளலாம் என்ற மாமியாரின் கருத்தைத் தடையின்றி ஏற்றுக் கிளம்பியி ருந்தாள்.

துப்பறியும் நிறுவனத்திலிருந்து வந்தவருக்கு பிஸ்கட், குளிர்பானம் முதலியவை கொடுத்து விட்டு, தினகரனையும், அவனையும் தனியே பேச விட்டு விட்டு, இரு பெண்களும் கிளம்பி உபசரித்து சென்றனர்.

முதலில் சற்று நேரம் தினகரன் தன் தொழிலுக்குத் தேவையான விவரங்கள் பற்றித் தான் பேசினான்.

பிறகு, அந்தத் துப்பறிவாளரைக் கொண்டு, சுற்று முற்றும் யாரும் இல்லை; பெங்களூருக்குக் கிளம்பிச் சென்றவர்கள் ஏது காரணம் கொண்டும் திரும்பி வந்து விடவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு அவருடன் பேச் தொடங்கினான்.

"பாருங்கள் சகதேவ், நீங்கள் எனக்குப் பலமுறை உதவி இருக்கிறீர்கள். இது சொந்த விஷயம். மிகவும் ரகசியம். இந்தப் படம் வைத்துக் கொள்ளுங்கள். படத்திலிருக்கும் பெண் உங்களுக்கும் இப்போது தெரியும் தான். இவளது பின்புலம் முழுமையாக எனக்கு வேண்டும். சென்னையில் விநாயகம் என்று... இந்த முகவரி இருக்கிறது. அவர்களுக்கு உறவு அல்லது நட்பாக இருக்க வேண்டும். பேசும் விதம் பார்க்கும் போது, உறவு என்று தான் எனக்குத் தோன்றுகிறது. உண்மைப் பெயர் மனோகரி!" என்றான்.

## 22

அடுத்த இரு வாரங்கள் மனோகரியின் வாழ்வில் மிகவும் குதூகலமாகக் கழிந்தன.

பெற்றவளுடன் வாராவாரம் பேச முடிந்தது! பிரியமான மாமியாரின் உபயம்! அன்னையின் குரலைக் கூடக் கேட்க முடியாமல் இருந்தவளுக்கு, அவளுடன் பேசக் கொள்ள இருந்ததே பெரும் ஆறுதலாக - ஆனந்தமாக இருந்தது.

அடுத்து, வாராவாரம் துப்பறிவாளர் கொணர்ந்த தடயங்களின் உதவியால் சற்று ஏறுமுகம் காட்டிய, தினகரனின் தொழில்! அவனுடைய பாக்ஸ்தர்கள் இது போதாது என்று அதிருப்தி தான் காட்டுவார்கள் என்று தினகரன் கூறிய போதும், தொழிலில் நேர்ந்த இந்த முன்னேற்றம் மனோகரிக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது.

எல்லாவற்றையும் விட அவளுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது, தினகரனின் பேரன்பு. நாளுக்கு நாள் அதிகரித்த அந்த அன்பு அவளுக்கு அளவிடமுடியாத ஆனந்தத்தைத் தந்தது.

அதிலும், ஓர் அந்தரங்கமான தருணத்தில், அவன் 'இனி நாம் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று எனக்குத் தோன்றுகிறது, மனு!'' என்று கூறவும், அவளுக்கு அப்போதே அவர்களுடைய மகளைத் தாங்கி இருப்பது போல ஒரு பரவசம் உடலெங்கும் பரவுவதைப் போல உணர்ந்தாள்.

திருமணமான முதல் நாளே, 'குழந்தை மட்டும் இப்போதைக்கு வேண்டாம்! இந்த இருண்ட வாழ்வுக்கு முழுமையாகப் பழகிக் கொண்டு, பொருளாதாரத்திலும் ஒருநிலைக்கு வந்த பிறகு தான், பிள்ளை குட்டியெல்லாம்! எப்படியும் குடும்பம் பெருகுவதை இரண்டு மூன்று ஆண்டுகளேனும் தள்ளிப் போட வேண்டியிருக்கும்.' என்று சொன்னவன் இரண்டு மாதங்களுக்குள் மனம் மாறியது அவளுக்கு வியப்போடு உவகையையும் அளித்தது.

'என்னம்மா....? என்று கேட்கும் மாமியார்; 'இன்னமும் விசேஷம் ஒன்றும் இல்லையா, கண்ணு' என்று, என்னவோ மகளுக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகள் கடந்துவிட்டது போலக் கேட்கும் தாயார்... இருவருக்கும் இனிப் பதில் கூற முடியும்!

இருவரில், கற்பகத்தை எண்ணும் போதுதான் மனோகரிக்குக் கண்கள் கசியும். ஒரேமகள்! அவளோடு, விரும்பிய நேரம் பேசக் கூட முடியாததால், இரண்டு

மாதங்கள் இரண்டு ஆண்டுகளாகவே அந்தத் தாய்க்குத் தோன்றுகிறதோ, என்னவோ? பாவம்!

நாலுவீடு சென்று வம்பு பேசும் வழக்கம் கிடையாது. டெலிஃபோனுக்கு டெலிஃபோன்; வருமானத்துக்கும் உதவட்டும் என்று வீட்டில் வைத்திருந்த 'பி.சி.ஓ, எஸ்டிடி'க்காக கற்பகம் எப்போதும் வீட்டிலேயேதான் இருப்பது. சும்மா இருப்பாள் என்பது கிடையாது. ஏதாவது கைவேலை நடந்துகொண்டே இருக்கும்; மாதர் சங்கத்திலிருந்து வரும் 'ஒயர்' கொண்டு கூடை பின்னுவது, அக்கம் பக்கத்துச் சின்னப்பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுத்தருவது என்று பொழுதுபோவது கற்பகத்துக்கு என்றுமே பிரச்சினை அல்ல. பொழுதைப் பயன் படும் விதமாக செலவழிக்க அறிந்து வைத்திருப்பவள் அவள். ஆனால், மனம் விட்டுப் பேச..?

பெற்றவளை எண்ணுகையில், 'மனூ' 'மனூ' என்று கொஞ்சும் கணவனிடம் உண்மை சொல்லிவிட மனோகரியின் உள்ளம் துடிக்கும். ஆனால் சொல்ல அஞ்சினாள்

தினகரனைப் பொறுத்தவரையில், மோனிகா என்ற பெயர் பிடிக்காவிட்டாலும், அந்தப் பெயரை உடைய பெண்ணாகத் தானே, மனோகரியை அவன் எண்ணிக் கொண்டு இருக்கிறான்; என்னதான் அன்பு, காதல் என்றாலும் இப்போது மனைவியாக இங்கே இருப்பவள், அவன் காதலித்த அந்த மோனிகா இல்லை என்பதை அவனால் சலனமின்றி ஏற்க முடியுமா?

அந்த நம்பிக்கை மனோகரிக்கு வர மறுத்தது. எனவே கணவனிடம் உண்மை சொல்லும் நேரம் இன்னமும் வரவில்லை என்றே அவள் நிச்சயமாக நினைத்

தாள்!... அல்லது, தினகரனிடம் உண்மை சொல்ல அஞ்சி, சொல்வதைத் தள்ளிப் போட்டாளா?

அவளுக்கே சந்தேகம் தான். எப்படியும், இன்றைய இன்ப வாழ்வை இழக்க அவள் தயார் இல்லை என்பது மட்டும் நிச்சயம்!

''பேசாமல், சொல்லாமலே இருந்து விடு!'' என்றார் மாமியாரும். ''இப்போது, தம்பியும் தான் உன்னை மனோகரி என்று கூப்பிடத் தொடங்கி விட்டானே! அதனால், யாருக்கும் எதுவும் தெரியப்போவது இல்லை! இப்போது போய்க் குட்டை குழப்புவானேன்!'' என்பது அவரது வாதம்.

ஆனால், நிரந்தரமாக ஒரு பொய்யில் வாழ்வதை யும் மனோகரியால் ஒப்பமுடியவில்லை. அது பெரும் தவறு என்பதும் அவளுக்கு நிச்சயமாய் இருந்தது.

எனவே, இன்னும் கொஞ்சகாலம் - குறைந்தது, அடியோடு அவளது உதவியின்றி, தினகரன் வாழத் தொடங்கும் வரையேனும் இந்த அன்பின் சுகத்தை அனுபவித்து விடுவது! பிறகு... என்ன ஆனாலும் ஆகட் டும் என்று, பிறகு, கணவனிடம் உண்மை சொல்ல வேண்டும்... சொல்லித்தான் ஆகவேண்டும் என்பதிலும் மனோகரி நிச்சயமாகவே இருந்தாள்.

மனோகரியின் தோளைப் பிடித்துச் செல்லமாகத் தினகரன் உலுக்கினான். ''ஏய், என்ன? எங்கே போய் விட்டாய்? கைக்குள் இருந்து கொண்டே காணாமல் போகிற வித்தை உலகத்திலேயே உனக்கு மட்டும் தான் தெரியும் என்று நினைக்கிறேன். சொல்லு, எதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தாய்?'' என்று விளையாட்டுப்

போல வினவினான். ''சொல்லித்தான் ஆகவேண்டும்!'' என்று பிடிவாதமும் காட்டினான்.

என்னவென்று சொல்வது? சற்று யோசித்துவிட்டு, ''தினகர், நம் திருமணப்பேச்சு சமயத்தில் நான் உங்களிடம் ஒன்று சொன்னேன். நினைவிருக்கிறதா? நான் என்ன செய்தாலும் அது உங்கள் நன்மைக்காகவே இருக்கும் என்றேன். அதை நீங்கள் ஞாபகம் வைத்திருக்கிறீர்கள் அல்லவா?'' என்று மெல்லிய குரலில் மனோகரி கேட்டாள்.

''ம்! நன்றாக! உன்னை முதன் முதலாகப் பார்த்ததிலிருந்து நான் அறிந்த உன் விஷயம் அத்தனையும், இம்மிவிடாமல் நினைவு வைத்திருக்கிறேன். ஒப்பிக்கட்டுமா?''

''வேண்டாம்! வேண்டாம்!'' என்று பதறினாள் மனோகரி. மீனாட்சியைக் காதலித்தது பற்றி இவன் வாயால் கேட்பதை விடச் செவிப்பறையைக் கிழித்துக் கொண்டு விடலாம்! ''கடந்த காலம்! வேண்டாமே, தினகர்! பசித்தவன்தானே பழம் கணக்குப் பார்க்கவேண்டும்? நமக்கு என்ன அவசியம்?'' என்று, எம்பி கணவன் கன்னத்தை முத்தமிட்டாள்!

சிலவினாடி தினகரன் அசையாமல் இருந்தான். பிறகு, ''அதானே! இப்படி ஆசையாக 'இச்' கொடுக்கும் மனைவியை அருகில் வைத்துக் கொண்டு யாராவது பழைய கதையெல்லாம் புரட்டுவார்களா? அதைவிட முக்கியமான வேலையெல்லாம் இருக்கிறபோது, அது எதற்கு? அதெல்லாம் வேறு வேலை இல்லாதபோது பார்த்துக் கொள்ளலாம்..'' என்று சரசத்தில் ஈடுபட்டான்.

அன்றையத் தினத்தின் பின் மனோகரி மிகுந்த கவனத்துடன் இருக்கவே, இதுபோலச் சில்லறைச் சிக்கல் ஏதும் பிறகு நேராது, பொழுது இனிமையாகக் கழிந்தது.

அபூர்வமாகச் சில தருணங்களில், தினகரன் எதற்காகவோ காத்திருப்பதுபோல ஓர் எண்ணம் ஒரு பிரமை மனோகரிக்கு உண்டாகும். ஆனால், அவள் என்ன ஏது என்று கேட்குமுன் அவனது முகம் மாறிவிடும். சிரிப்பும் விளையாட்டுமாக ஏதாவது சொல்லத் தொடங்கி விடுவான்

எல்லாம் மனப்பிரமை என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொள்வாள் மனோகரி.

இப்படியே மேலும் விரைந்தோடின. தினகருடைய பங்குதாரர்கள், அவனுக்குக் கொடுத்திருந்த காலக் கெடு முடிவடையும் நாள் நெருங்கிக் கொண்டு வந்தது.

தொழிலில் ஏற்பட்டிருந்த ஓரளவு அபிவிருத்தியான நிலைமையை விளக்கி மேலும் சிறிது காலம் அவகாசம் கேட்டு அவனுடைய 'ஸ்லீப்பிங் பார்ட்னர்' களுக்குத் தினகரன் கடிதம் அனுப்பினான்.

வியத்தகு விதமாய், அவர்கள் இருவரும் தினகரனுக்கு மேலும் மூன்று மாத அவகாசம் கொடுத்ததைத் தினகரனாலேயே நம்ப முடியவில்லை.

பங்குதாரர்களின், மாறிய மனநிலை தினகரனுக்கு மிகுந்த உற்சாகம் அளித்தது. கணவனின் உற்சாகம் மனோகரியைத் தொற்றிக்கொண்டது. தொழிலைப் பற்றி தினகரன் மேலும் அதிக நம்பிக்கையுடன் திட்டமிடத் தொடங்கினான்.

இப்படி உல்லாசமும் உற்சாகமுமாக இருந்த சமயத்தில் தான், ஒரு டெலிஃபோன் கால் வந்து எல்லாவற்றையும் மாற்றிவிட்டது!

டெலிஃபோனில் பேசியவர், தினகரனுக்குக் கண் சிகிச்சை செய்த டாக்டர் சிவநாத்.

ரஷ்யாவிலிருந்து, கண்சிகிச்சையில் மிகவும் தேர்ந்த மருத்துவர் ஒருவர் இந்தியாவுக்கு வந்திருப்பதாகவும், தினகரனின் சிகிச்சை ஃபைலை அவரிடம் கொடுத்ததாகவும், கண் மீண்டும் கிடைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக அந்த டாக்டர் ஹிரான்ஸ்கி சொன்னதாகவும் அவர் தெரிவித்தார்! கண் மருத்துவம் சம்பந்தமான 'கான்பரன்ஸ்' க்காக டெல்லி வந்த திரு. ஹிரான்ஸ்கி, செகந்திராபாதில் இருக்கப்போவது இரண்டு தினங்கள் என்பதால், சிகிச்சை செய்ய விரும்பினால் உடனே கிளம்பி வருமாறு சிவநாத் கூறினார்.

டெலிஃபோனை எடுத்தவள் மனோகரி!

உயிரே அதில் இருப்பதுபோல ரிசீவரைக் கையால் பிடித்துக் கொண்டு மனோகரி சற்று நேரம் அசையாமல் நின்றாள்.

தினகரனுக்குப் பார்வை திரும்பிவிடக் கூடும்! தொழிலிலும், மற்றும் தனிப்படவும் அவன் அனுபவிக்கும் கஷ்டங்கள் அத்தனையும் விரைவில் நீங்கி விடக் கூடும்.

எவ்வளவு நல்ல செய்தி! - அவனுக்கு!

அவளுக்கும் தான். தினகரனின் துன்பங்களுக்கு விடிவு கிடைக்கிறது என்றால் அது மனோகரிக்கும் மகிழ்ச்சி தான்!

ஆனால், அவளது 'திருமண வாழ்வுதான்' முடிந்து விடப் போகிறது. மனைவி என்று வீட்டில் உட்கார்ந்திருப் பவள் வேற்று ஆளென்று கண்டு அவளை வெளியேற்றி விடுவானே!

தினகரனைப் பிரிந்து மனோகரியால் எப்படி வாழ முடியும்?

வேதனைதான்! ஆனால் தினகரனின் நலனுக்காக அவள், அதைத் தாங்கியே தீர வேண்டும்!

மனதை வெகுவாகத் திடப்படுத்திக் கொண்டு மனோகரி மீண்டும் டாக்டரோடு தொடர்பு கொண்டாள். மேலும் தேவைப்பட்ட விவரங்கள் கேட்டாள்.

ஆந்திர மாநிலக் கண் மருத்துவர் கழகத்தின் வேண் டுகோளுக்கு இணங்கிய அந்த ரஷ்ய டாக்டர் ஹிரான்ஸ்கி செகந்திராபாத்துக்கு வருகிறார். கழக நிகழ்ச் சிகள் போகக் கிடைக்கக் கூடிய மிச்ச நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள, சிவநாத்தைப் போலவே பல மருத்துவர்கள் முயற்சி செய்கிறார்கள். ஆனால், தினகர னின் கேஸ் ஒரு சவால் போல இருக்கவே, டாக்டர் ஹிரான்ஸ்கி அதை ஏற்றுக் கொள்ள சம்மதித்தார்...

''சவால் போல என்றால்! இதில் ஆபத்து அதிகம் என்று அர்த்தமா, டாக்டர்?'' என்று மனோகரி கவலையு டன் விசாரித்தாள்.

''ஆபத்து என்பதைவிட சிக்கலானது என்று சொல் லலாம். மிகவும் நுண்ணிய அறுவை சிகிச்சை இது.. மற்றவர்களால் - நான் உட்பட செய்ய அஞ்சும் - இயலாத ஒன்றுதான். ஆனால் சித்திரமும் கைப்பழக்கம் என்பதுபோல, அவர் செய்கிறார். எனவே தைரியமாக வாருங்கள்!'' என்றார் டாக்டர் சிவநாத்.

ரஷ்ய மருத்துவரைப் பார்க்க நேரம், அறுவை சிகிச்சைக்கு விழிகளை தயார் செய்வதற்காக இப்போதி ருந்தே போடப்பட வேண்டிய மருந்துகள், தேவைப்ப டும் தொகை என்று அவள் அறியவேண்டிய விவரங்கள் அத்தனையும் கொடுத்தார் அவர்.

இனி?... புன்னகையைப் பூசிக்கொண்டு கணவனிட மும் மாமியாரிடமும் சொல்ல வேண்டிய நேரம்..

பின்னடைப்பிலேயே மனம் உழன்றது. இந்த ரஷ்ய டாக்டர் இங்கே இருக்கப்போவது இன்னமும் இரண்டே நாட்கள்! பேசாமல் இருந்துவிடலாமா என்று ஒருதரம் - ஒரே ஒரு தரம்தான் எண்ணிவிட்டு, உடனே அதற்கா கத் தன்னை மிகவும் நொந்து கொண்டாள்.

அவளது சொந்த மகிழ்ச்சிக்காகக் கணவன் வாழ் நாள் முழுவதும் கஷ்டப்படட்டும் என்று நினைத்து விட்டாளே! எவ்வளவு பெரிய பாவம்!

இருக்க இருக்க இப்படி ஏதாவது தோன்றி வலுப் பெற்று விடக்கூடும் என்று தன்னிடமே அஞ்சியவளாய், உடனே மாமியாரையும் கணவனையும் நாடிச் சென்றாள்.

பின்புறப் பண்ணைக்குத்தான் இருவரும் சென்றிருந் தனர்.

இருவரையும் நாடிச் செல்லும்போதே, தன் நிதான நடையுடன் தினகரன் திரும்பி வருவது தெரிந்தது.

விழுந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் நிதான மாக அவன் நடந்தது. ஆனால்,அதையே கம்பீரமான நடையாகக் காட்டிக் கொண்டான்.

அடுத்தவர் முன் மதிப்பாகக் காட்டிக் கொள்ள என்ன பாடு படுகிறான்! இவனுக்குப் பார்வை கிடைப்ப

துதான் இப்போது மிகமுக்கியம்! அதற்கு முன் மற்ற எதற்கும் மதிப்பில்லை!

கணவனை எதிர்கொண்டு விவரம் சொன்னாள்.

தினகரன், மனோகரியின் கையைப் பிடித்த பிடியில் விரல்கள் நொறுங்கி விடும் போல அவள் உணர்ந்தாள்.

''உள்ளே வா, மனோகரி!'' என்று அவளை அழைத்துக் கொண்டு அறைக்குள் சென்றவன், மனைவியை இறுக அணைத்தபடி சற்று நேரம் நின்றான். தன் துன்பம் மறந்து ஆறுதலாக அவள் தடவிக் கொடுத்தாள்.

பிறகு என்ன, ஏது என்று தினகரன் முழுவிவரம் கேட்டறிந்தான். ஏதோ யோசித்து, மனோகரியின் முகத்தைக் கையிலேந்தி நெற்றியில் முத்தமிட்டான். ''எல்லாமே சொல்லிவிட்டாயல்லவா?''

''...ம்... டாக்டர் சிவநாத் இவ்வளவுதான் சொன்னார். கண்ணில் போட இரண்டு மருந்து சொன்னார். எழுதி வைத்திருக்கிறேன். வாங்கி வரச் சொல்லி, போட்டு விடுகிறேன்!'' என்றாள் மனைவி குரலில் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு.

ஏதோ உள்ளார்ந்த சிரிப்பில் தினகரனின் உடல் குலுங்கியது.

என்னவென்று கேட்ட மனோகரியிடம், ''கண் வரட்டும் சொல்லுகிறேன்!'' என்றான் அவன் நமட்டுச் சிரிப்புடன். உடனே குரல் கனிவுற்று, ''மனோ, இனி எல்லாம், எல்...லாமே சரியாகிவிடும்! என் பேச்சை நம்பி நீ எதற்கும் கவலைப்படாமல் அமைதியாக இருக்க வேண்டும். இருப்பதாக எனக்கு உறுதி கொடு'' என்று பிடிவாதமாக அவளிடம் வாக்குப் பெற்றுக் கொண்டான்.

கூடவே, ''நீ எனக்கு இன்னமும் கூட சில வாக்குறுதிகள் தந்திருக்கிறாய்; எதையும் மறந்துவிடக் கூடாது!'' என்றான் பூடகமாக.

பிறகு, ''அம்மாவை அழைத்துவரச் சொல்லி.. நீயே போய் அவர்களிடம் சொல்லி விடேன்!'' என்று அனுப்பி வைத்தான்.

தேவகிக்கும் அளவிடமுடியாத ஆனந்தமே. ''அந்த முருகன் நம்மைக் கைவிடவில்லை! என் அய்யா! என் பிள்ளைக்குப் பார்வை வந்ததும் குடும்பத்தோடு வந்து பால் அபிஷேகம் செய்யச் சொல்லுகிறேனப்பா!'' என்று வேண்டிக் கொண்டார்.

மருமகளின் புன்னகை கண்ணை எட்டாதிருப்பதைக் கண்டு, உடனே அவளது மனநிலை ஊகித்து, ''கவலைப்படாதேம்மா. அவனுக்குக் கண் வரட்டும். நானே அவனிடம் எல்லாம் நேர் செய்கிறேன். உன்னைப் போன்ற தூய்மையான அன்பு ஒரு நாளும் வீண் போகாது! தைரியமாக இரு. எல்லாம் சரியாகி விடும்!'' என்று மகனைப் போலவே ஆரூடம் கூறினார்.

மகன் அறியாமல் இன்னொன்றும் கூறினார். ''மனோம்மா, எவ்வளவு செலவானாலும் வெளிநாட்டு டாக்டர் என்கிறாயே... அதனால் லட்சக்கணக்கில் ஆனாலும் தயங்காமல் செய்... பணத்துக்காக, இந்தப் பண்ணையையே விற்க நேர்ந்தாலும் பரவாயில்லை. கண் வந்து விட்டால், என் பையன் கோடி கோடியாய்ச் சம்பாதிப்பான்!'' என்றார் நம்பிக்கையோடு.

இதே உறுதி மாமன் மகள் மீனாட்சிக்கும் இருந்தது தான் மனோகரிக்குப் பெரும் இடும்பையாகிப் போயிற்று!

''நானாக நடித்துதானே தினாவை மணந்தாய்? இனி நானே இருந்து கொள்கிறேன். என் தினா கட்டிய தாலியை எனக்கே தந்துவிட்டு வெளியேறு!'' என்று மருத்துவமனைக்கே வந்து நின்றாள்.

## 23

மனோகரி உள்ளூர நொறுங்கிப் போயிருந்தாள்.

உண்மை அறிந்தும் அறியாமலுமாக, அவளுடைய மாமியாரும் கணவனுமாக, என்னதான் அவளை அமைதியாகவும் தைரியமாகவும் இருக்கச் சொன்ன போதும், அவளால் அப்படி இருக்க முடியவில்லை.

தினகரனுக்கு அறுவை சிகிச்சை நடக்கும் வரையும் கூடக் கொஞ்சம் பராவாயில்லை. அந்த நுண்ணிய, சிக்கலான சிகிச்சையில் தவறேதும் நேர்ந்து விடக் கூடாதே; தினகரனுக்கு வேறு ஆபத்து ஏதும் நேர்ந்து விடக் கூடாதே என்று அதே பயமும், பிரார்த்தனையுமாக இருந்தவளுக்கு சொந்த விஷயம் நினைத்துப் பார்க்கக் கூடத் தோன்றவில்லை.

சிகிச்சையின்பின் வலி மிகுந்திருந்த தினகரனுக்குப் பணி செய்வதிலும், அவனது துன்பம் கண்டு வருந்துவதிலுமாக மேலும் சில நாட்கள் கழிந்தன.

அதன் பிறகு தான் அவளது துன்பம் பூதாகாரமாய் உருவெடுக்கத் தொடங்கியது.

அறுவை சிகிச்சை நடந்த, கண் மருத்தவத்துக் கென்றே அமைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய தனியார்

மருத்துவமனை என்பதால் முன்பு பழகிய முகங்கள் யாரையும் மனோகரி சந்திக்க நேரவில்லை.

ஆனால் அறிமுகமற்ற புதிய முகங்கள் நிறையப் பார்க்க நேர்ந்தது. தினகரனின் தொழில் தொடர்பான பலர் வந்து வந்து உதவினார்கள். முன்பு மருத்துவமனை வந்தும், தினகரனை எட்டிப் பாராமல் சென்று விட்ட 'பார்ட்னர்கள்' இப்போது இனிப்பும் 'பொக்கேயுமாக வந்து, தினகரனிடம் இளித்துப் பேசினார்கள்; எதிர்காலத் திட்டங்கள் தீட்டினார்கள்.

அதிகப்படியாக உணர்ந்து, ஒதுங்கிச் சென்றபோது தான் மனோகரி, மோனிகாவைச் சந்தித்தது.

எதிர்பாரா வண்ணம் மாமா மகளைக் காணவும் மனோகரி பிரமித்து நிற்க, உள்ளே எச்சரிக்கை மணி அடித்தது. ''மீ...மீனா...மோனி!'' என்று தடுமாறினாள்.

''என்னடி அப்படி விழிக்கிறாய்? நான் உன் மாமா மகள் மோனிகாவேதான். இதிலென்ன...ஓ! மூக்கைப் பார்த்து முழிக்கிறாயா? 'பிளாஸ்டிக் சர்ஜரி' செய்து கொண்டேன். இப்போது முகம் மிகவும் அழகாயில்லை? உன் மூக்கு மாதிரி வேண்டும் என்று கேட்டேன். என் குறுத்தெலும்பு அமைப்புக்கு இதுதான் வரும் என்று கூறி விட்டார்கள்!'' என்று தன்னைப் பற்றி உற்சாகத்துடன் விளம்பினாள் மீனாட்சி.

''அ..அதில்லை! மோனி! நீ.. நீ...இங்கே எப்படி வந்தாய்? அவருக்குத் தெரிந்தால்... ஆபத்தாயிற்றே என்று மனோகரி கவலைப்பட்டாள்.

''ப்ளீஸ் மனோகரி! நான் சொல்ல வேண்டியிருப் பதை மேலும் கடினமாக்காதே!'' என்றாள் மோனிகா வெடுக்கென.

''எ...என்ன மோனி?''

''ம்ம்..சொல்லுகிறேன். முன்பு நான் தினகரனை ஒதுக்கிய காரணம் தெரியும் அல்லவா?''

''ஆமாம். கண் பார்வை போயிற்று என்று...'' என்று பதிலளித்தவளுக்குக் காரணம் புரியாமல் நெஞ்சு கலங்கி யது.

''இல்லை. அதல்ல காரணம். பார்வை போனதால், பணம் சம்பாதிக்க முடியாது என்பதால் தான் இவனை விட்டு விட்டேன். அதன் பிறகு, நீ என்னைப் போல - நானாக நடித்து, தினகரனைத் திருமணம் செய்து கொண்டாய்! சரிதானே?''

''ச..சரிதான்...ஆனால்....''

''அன்று அவரை நான் ஒதுக்கியதற்கான காரணம் இப்போது மறைந்து விட்டது. அவருக்குக் கண் வந்து விடப் போகிறது! பழைய மாதிரி சம்பாதிக்கவும் போகி றார். அதனால், அவருடைய மனைவி பதவி எனக்கு வேண்டும். நான் என்று நினைத்து உனக்குத் தினகர் கட்டிய தாலியை, என்னிடம் தந்து விட்டு நீ வெளியேற வேண்டும்,'' என்றாள் மீனாட்சி சர்வசாதாரணமாக.

அனிச்சைச் செயலாய், மனோகரியின் கைகள், திருமாங்கல்யத்தை மறைத்து, மார்போடு அழுத்திக் கொண்டன.

ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள் மீனாட்சி! ''என்ன, தாலி செண்டிமெண்டா? போகிறது! அதை நீயே

வைத்துக் கொள். அதேபோல நான் வேறு ஒன்றை வாங்கி மாட்டிக் கொள்கிறேன்.''

வேதனையோடு 'ப்ளீஸ் மோனி; தயவு செய்து இப்படிப் பேசாதேயேன்!'' என்று கேட்டுக் கொண்டாள் மனோகரி. ''நான் அவருடைய மனைவி, மோனி!''
''இல்லை நீ என்னுடைய பினாமி. என் பெயரில் தான் அவரை மணந்து கொண்டாய்? நான் என்று எண்ணித் தான் அவர் உன் கழுத்தில் தாலி கட்டியது! இப்போது அசல், நான் வந்துவிட்டபிறகு, நகல், உனக்கு இங்கே என்ன வேலை?

மலைத்து நின்றவள் ஒருவாறு சுதாரித்து, ''நானும் தினகரும் கணவன், மனைவி மோனி! இரண்டு மாதங்க ளாகக் கணவன், மனைவியாக வாழ்ந்திருக்கிறோம். நீ...உ...உனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது, மோனி!'' என்றாள் முகம் சிவக்க.

''என்னையும் உன்னைப் போல ஒன்றும் தெரியாத மக்கு என்று நினைத்தாயா?'' என்று மீனாட்சி மிக எகத்தாளமாகக் கேட்டாள், ''அல்லது கன்னி என்று எண்ணினாயா? எனக்கு எல்லாம் தெரியும்! நான் சமா ளித்துக் கொள்வேன். என்ன பெரிதாக? முன்பு என்னி டம் மயங்கி நின்றவர் தானே தினு?'' என்றாள் அவள் அலட்சியமாகவே!

'கன்னியல்ல' என்ற வார்த்தை, மனோகரியைக் கூர் அம்பாய்த் தூக்கி விட்டது. அப்படியானால், இவள் யாரோடு..? தினகரோடா என்று எண்ணும்போதே உள்ளே வலித்தது.

''இராது இராது'' என்று அவள் உள்ளூர உருப்போ டும் போதே ஒரு வகையில் எல்லாம் இப்படி நடந்ததும்

நல்லதுதான். தினுவுக்கும், உன்போல ஒரு மக்கு மனைவிதான் முதல் நாள் தேவைப்பட்டிருந்திருப்பாள். இனி யானால் பரவாயில்லை'' என்று அவளையறியாமல் மீனாட்சியே அந்த வலியை போக்கினாள்.

ஆனால், அதனிலும் பெரிய வலியாய் தினகரனின் வாழ்வை விட்டு வந்த சுவடு தெரியாமல் நீங்கிவிடச் சொன்னாள்.

ஏற்கனவே மனோகரி உள்ளூர உடைந்து கிடந்தவள்தான். தினகரன் அவளை நேராக நோக்கி, 'நீ என் மோனியல்ல; போ வெளியே!' என்று சொல்லப்போகும் நேரத்தை எண்ணி எண்ணி கலங்கிக் கொண்டு இருந்தவள் தான். இதை விட அதிகமாக வேதனைப்பட யாராலும் முடியாது என்று கூட நினைத்தாள். இப்போது மீனாட்சி வந்து, அவள் எண்ணியதற்கும் முன்பாகவே வெளியேறச் சொல்லவும் அந்த வேதனை இரட்டிப்பாவதையும் உணர்ந்தாள். ஒரு காரணம் இரண்டு நாட்கள் முன்னதாகவே தினகரனை விட்டுப் பிரிய வேண்டும் என்பது அடுத்தது, மீனாட்சியின் குணம் முழுமையாக அறிந்திருந்தபடியால், அவளால் பிற்பாடு தினகரனின் வாழ்வு துன்பமயமாகி விடும் என்கிற கவலை எனவே முடிந்த அளவு மீனாட்சியிடம் மறுத்து வாதாடினாள்.

மோனி, ''தினகரனாக 'விலகு' என்று சொல்லும் வரை அவரை விட்டுப் பிரிவது இல்லை என்று அவருக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்'' என்று மனோகரி கூறியதை, மற்றவள் ஒரு பொருட்டாகவே மதித்தாளில்லை.

''நீ என்ன பெரிய மகாத்மா காந்தியா? அல்லது அரிச்சந்திரனியா? வாக்கு கொடுத்தாளாம் வாக்கு!

உன்னிடம் அந்த வாக்கை தினு பெற்றதே என்னைப் பிரிய முடியாமல் தானே?'' என்று அந்த வாதத்தை அலட்சியமாகத் தூக்கி எறிந்து விட்டாள்.

உண்மைதான்? மனோகரியாகக் கொடுத்ததோ, அன்றி தினகரனாகக் கேட்டுப் பெற்றதோ எந்த வாக்குறுதி என்றாலும் அவை அனைத்தையும் அவன் அவளை மீனாட்சியாக எண்ணித்தான் ஏற்றான்?

மீண்டும் அடிபட்டுப்போன மனோகரி, துரும்பையும் பற்றுகிறவளாகி, ''கல்யாண ...போட்டோவெல்லாம் இருக்கிறது, மோனி!'' என்றாள், தீனமாக.

''எல்லாம் கொடு. அழித்து விடுகிறேன். கண்ணில்லாத கஷ்டம் பார்க்கப் பிடிக்கவில்லை என்றால் போயிற்று!''

''அத்தை... அந்த வீட்டு ஆட்கள்..''

''கிழவியை என்னிடம் விடு'' என்றாள் மீனாட்சி அசிரத்தையாக. ''கண்ணிழந்து, எனக்கு பதிலாக இவளைப் பார்த்தால் உன் மகன் நெஞ்சு வெடித்துச் செத்துப் போவான் என்றால்..''

''அப்படிச் சொல்லாதே!'' என்று பதறிய மனோகரியை வியப்புடன் நோக்கி விட்டு, ''ஏன்? சொன்னால் உன் நெஞ்சு வெடித்து விடுமோ? காதலாக்கும்! நல்ல வேடிக்கைதான்!'' என்று எகத்தாளம் செய்தவள், தொடர்ந்து, ''மகன் செத்து விடுவான் என்றால் அந்த ஒரு வார்த்தையில் அந்தக் கிழவி வழிக்கு வந்து விடுவாள். வேலைக்கார நாய்களைப் பற்றி என்ன பெரிதாக? அந்த இடத்தையே விற்றுக் குடியைக் கிளப்பி வேறு

எங்காவது போகச் சொல்லிவிடலாம்....என்ன? உன் கிறுக்குத்தனமான காரணங்களை எல்லாம் சொல்லி முடித்து விட்டாயா?'' என்று ஏளனமாக வினவியவள் மேலே சொன்னாள். இப்போது நான் சொல்வதை நீ கொஞ்சம் காது கொடுத்துக் கேள். தினகர், உன்னை மணந்தது, என்னை மணப்பதாக எண்ணித்தான். உன்னிடம் அன்பு காட்டியதும் அப்படித்தான். உன்னோடு - என்னவோ சொன்னாயே, கணவன், மனைவி உறவு என்று, அந்த செக்ஸ் வைத்துக் கொண்டதும் கூட அவரோடு இருந்தவள் நான் என்று நினைத்து தான். இப்போது கண்கட்டை அவிழ்த்ததும், இவ்வளவு நாள் மனைவி என்று தொட்டு அணைத்தது தன் ஆசைக்குரிய மோனியை அல்ல; பார்வை இல்லாத குறையைப் பயன் படுத்திக் கொண்ட ஓர் ஏமாற்றுக் காரியை என்று அறியும்போது அவர் என்ன ஆவார் என்று நினைக்கிறாய்? 'அய்யோ! அய்யோ! ஏமாந்து போனோம் என்று பதறிப் போவார் அல்லவா? அந்தப் பதட்டத்திலும் அவமானத்திலுமாக முகத்தில் அறைந்து கொண்டு கூட அலறலாம். கண்! கண்ணுக்குள் அறுவை சிகிச்சை! இப்போதுதான் காயம் ஆறத் தொடங்கியிருக்கும். முகத்தில் அறைந்து கொண்டு கதறினால்...அது எந்த அளவுக்கு அவரைப் பாதிக்கக்கூடும் என்று கொஞ்சம் கற்பனை செய்து பார்!''

மீனாட்சியின் பேச்சு உள்ளூரச் சித்தரித்த காட்சியில் மனோகரி அடியோடு ஒய்ந்து போனாள். அவள் சொன்னது பொய்யில்லையே! மனோகரியே அவ்வப்போது எண்ணி மனம் உளைவது தானே! தினகரன் பொதுவாகத் தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டுகிறவன் இல்லை

என்றாலும் மீனாட்சி சொன்னது நடக்க முடியாதது அல்ல. நடந்து விட்டால்... 'கண்ணிழந்தான் பெற்றிழந் தான்' போல என்று கம்பர் கூறிய நிலை தினகரனுக்கு நேர அவள் காரணமாகி விடக் கூடாதே!

கண்ணீருடன் மீனாட்சியை நோக்கி, "கட்டுப் பிரித்து அவர் நன்றாக பார்ப்பதைப் பார்த்து விட்டுப் போய் விடுகிறேன் மோனி. ப்ளீஸ்!" என்று கெஞ்சலா னாள்.

விழி இடுங்க மற்றவள் நோக்கவும், "ப்ராமிஸ், மோனி. நான் யார் என்று காட்டிக் கொள்ள மாட்டேன்! அவர் நன்றாகப் பார்ப்பதை மறைந்து நின்று கண்டு விட்டு, ஓசையின்றி வெறியேறி விடுகிறேன்." என்று அவள் உறுதி கூறவும் மீனாட்சி ஒப்புதலாய் தலையசைத் தாள்.

ஆனால், அவள் ஒன்றில் கவனமாக இருந்தாள்...அ தற்கு மேல், தினகரனும், மனோகரியும் தனித்திருக்க விடாமல் பார்த்துக் கொண்டாள். 'கிடைக்கும் வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டு மனோகரி தினகரனிடம் போய் எல்லா உண்மைகளையும் சொல்லி விடுவாளோ என்ப தாக ஒன்றும் அவள் அஞ்சி விடவில்லை. தன் சுகத்துக் காக கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்க விடுகிற அளவு 'புத்திசாலித்தனம்' மனோகரிக்கு கிடையாது என்பது மீனாட்சிக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால் மனோகரி காதல் வயப்பட்டிருந்தாள்! தினகரனைப் பிரியப் போகும் துக்கத்தில், தன்னை மீறி உளறிக் கொட்டி விட்டால்?

அதற்கு வாய்ப்புக் கொடுக்கக் கூடாது என்றே கூடவே இருந்தாள்.

கண்ணீரை அடக்கி கொண்டு, தினகரனுக்குத் தேவையான பணிவிடைகளை மனோகரி செய்வதைக் காண நேர்ந்தபோது அவளுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. 'மயான காண்டம்' படிக்கிறாளாக்கும் என்று உள்ளூர ஆத்திரப்பட்டபோதும், சகித்துக் கொண்டு சும்மா இருந்தாள். போய்த் தொலைகிறாள்! இன்று ஒரு நாள் தானே!

அறைக்குள் இன்னொருவர் இருப்பதை உணர்ந்து, ''வேறு யார் இங்கே இருக்கிறார்கள் மனோகரி?'' என்று தினகரன் வினவ, என்ன சொல்வது என்று புரியாமல், அவள் மீனாட்சியைப் பார்த்தாள்.

கால்மேல் கால் போட்டுக் கொண்டு ''நான் உங்கள் நர்ஸ்'' என்றாள் மீனாட்சி.

சற்று யோசித்துவிட்டு, ''இத்தனை நாள் நர்ஸ் வைக்கவில்லையே. நாளைக்குக் கட்டுப் பிரிக்கப் போகிறார்கள்; இப்போது எதற்கு?'' என்று தினகரன் விசாரித்தான்.

மீண்டும் மனோகரி விழிக்க, ''நாளைக்குக் கட்டுப் பிரிக்க போவதுதான் காரணம்.'' என்றாள் மீனாட்சி இலகுவாக.

''புரியவில்லையே! கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்....நர்ஸ்!'' என்றான் அவன்.

அவள் குரல் தெரியவில்லையா, அன்று முதல் நாள் குரல் வேறுபாடு கண்டறிந்தவனுக்கு இப்போது மீனாட்சியின் குரல் புரியவில்லையா என்று மனோகரி உள்ளூரத் தவித்தாள். புரிந்துவிடுமோ என்று பயமாகவும் இருக்க, அதற்கும் தவித்தாள்.

அந்தக் கலக்கம் இல்லாமல், தன் உரத்த குரலில் மீனாட்சி அளந்தாள்.''நாளை கட்டுப் பிரிக்கும்போது பார்வை வருமோ, வராதோ என்று ...உணர்ச்சி வசப்பட்டுப் போயிருப்பீர்கள்; அந்த வேகத்தில் கண் கட்டைத் தட்டி கிட்டி விட்டு விடக் கூடாதே என்று தான், உங்களை அடக்கி வைக்கும் அங்குசமாக இங்கே நான் உட்கார்ந்திருக்கிறேன்! என்றாள் அவள்.

''கட்டை, தட்டி, கிட்டி, விட்டு''...ஆகா, எதுகை நயத்தோடு பிரமாதமாய்ப் பேசுகிறீர்களே... நீங்கள்தான், ஆப்பரேஷனுக்கு முன் என்னைத் தயார் செய்த நர்ஸ் என்று நினைக்கிறேன; சரிதானே? அப்போதும் இப்படித் தான் அழகாகப் பேசினீர்கள்; இந்த நர்சின் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்று அப்போதே நினைத்தேன்! நர்ஸ், கொஞ்சம் அருகில் வாங்களேன். வாங்குகிற சம்பளத்துக்கு இதெல்லாம் உங்கள் கடமை என்றாலும், என்னைப் பொறுத்தவரை, நீங்கள் செய்வது தெய்வப்பணி. உங்கள் கையைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போல, உங்கள் பேச்சைக் கேட்டதிலிருந்து மனம் துடிக்கிறது!'' என்று உருகிப் பேசினான் தினகரன்.

மனோகரியிடம் ஒரு வெற்றிப் பார்வையை மீனாட்சி வீசி விட்டு, நடந்து வந்து, தினகரனிடம் மிடுக்காக கைகளைக் கொடுத்தாள்.

அவளது கைகளைக் கண்ணில் ஒற்றிய பிறகும், விடாமல் பிடித்துக் கொண்ட தினகரன் பேசுவதைக் காண சகியாமல், ''இதோ வருகிறேன்!'' என்று தெளிவற்று முனகிவிட்டு, அறையை விட்டு வெளியேறினாள் மனோகரி.

மறுநாள் கட்டு அவிழ்க்கும்போது, டாக்டர் சிவ நாத், வேறு யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை.

''உன்னைப் போல மேக்கப் செய்து கொண்டால் யாருக்கும் கண்டு பிடிக்க முடியாது'' என்று பல ஷேடுக ளில் ஃபவுண்டேஷனைப் பயன்படுத்தி ஒப்பனை செய்து கொண்டு 'மனைவி' என்று வந்த மீனாட்சியும் வெளியில் தான் நிறுத்தப்பட்டாள்.

மனோகரியோ, அங்கேயே ஓர் ஓரமாகத் தலையில் முக்காடிட்டு, மீனாட்சியின் யோசனைப்படி பெரிய பிரே மிட்ட கண்ணாடியும் அணிந்து, அடையாளம் மறைத்து, பதைக்கும் நெஞ்சுடன் காத்திருந்தாள்.

உள்ளிருந்து வந்த பேச்சுக் குரல்களை இருவருமே ஆவலுடன் உன்னிப்பாகக் கவனித்தனர்.

''விளக்குகளை அணைத்து விடும்மா. திரைகளை எல்லாம் இழுத்து வெளி வெளிச்சம் வராமல் மூடுங் கள்... மிஸ்டர் தினகரன் இப்போது உங்களது கண் கட்டை நீக்கப்போகிறேன். உங்கள் எதிரில் ஒரு மெழுகு வர்த்தி ஏற்றி வைத்திருக்கிறேன. ம்ம்...கட்டை நீக்கியா யிற்று. நான் சொல்லும்போது மெல்லக் கண்களைத் திறந்து எதிரிலுள்ள மெழுகுவர்த்திச் சுடரைப் பாருங்கள். எங்கே, ஒன்று....இரண்டு....மூன்று! பாருங்கள்!''

ஒரு சிறு அமைதியின்பின், ''மெழுகுவர்த்தி எந்தப் பக்கம் இருக்கிறது, டாக்டர்?'' என்று தினகரனின் குரல் பதைப்புடன் வினவியது.

''ஓ மை காட்!'' என்றார் மருத்துவர். ''டாக் விரான்ஸ்க்கி அப்போதே எச்சரித்தார்...உங்களி சொன்னேனே, தினகரன்! ஒரு வேளை பார்வை திரும்ப

வராமல் போகவும் வாய்ப்பு உண்டு என்றா...ரே! கட வுளே! அவர் சொன்னது சரியாகிப் போயிற்றே! மிகவும் வருந்துகிறேன், தினகரன். இனி நீங்கள் உங்கள் வாழ் நாள் முழுவதையும் இருட்டில் தான் கழித்தாக வேண் டும். நர்ஸ் விளக்கைப் போடுங்கள்... என்ன நர்ஸ், உங்களுக்கு அறிவில்லையா? மொத்த விளக்குகளையும் போடாமல் எதற்காக இந்த மெதுவே வெளிச்சம் கூடும் ஸ்விட்சைப் போட்டீர்கள்? மிஸ்டர் தினகருக்குத்தான் சிகிச்சை பலனளிக்க வில்லையே!'' என்று கோபமும், வருத்தமுமாகச் சிடு சிடுத்தார் டாக்டர் சிவநாத்.

## 24

**ச**ற்றும் எதிர்பாராத இந்த செய்தி, வெளியே காத்திருந்த இரு பெண்களையும் அவரவர் இயல்புக்கு ஏற்றபடி பாதித்தது.

மனோகரிக்கு நெஞ்சில் ரத்தம் கசிந்தது. இந்த சிகிச்சை பற்றித் தெரிய வந்ததும் தினகரன் எப்படி உணர்ந்தான் என்பதை அறிந்திருந்தபடியால், இந்த ஏமாற்றம் அவனை எப்படித் தாக்கியிருக்கும் என்பதை யும் அவளால் தெளிவாகவே புரிந்து கொள்ள முடிந்தது. உடனே அவன் அருகில் சென்று, அவனை அணைத்து ஆறுதல் கூற வேண்டும் போல அவளது மனம் துடித்தது.

மீனாட்சியை நெருங்கி, ''ஆசை காட்டி ஏமாற்றிய மாதிரி என்ன அநியாயம் நேர்ந்துவிட்டது, இதற்குச் சும்மாவே இருந்திருக்கலாமே! ஐயோம்மா! அவர் என்ன மாதிரித் தவித்துக் கொண்டு இருக்கிறாரோ! அவரை வெளியே எப்போது அழைத்துக் கொண்டு வருவார்

களோ, தெரியவில்லையே! அல்லது நாமே உள்ளே போய்ப் பார்க்கலாமா மோனி?... இல்லை, நீ போய்ப் பார்க்கிறாயா?''

''நான் எதற்கு?'' என்றாள் மீனாட்சி. ''நீதான் இருக்கிறாயே, அருமை மனைவி! உள்ளேபோய், கட்டி அணைத்து ஆறுதல் சொல்லு. போ! என்னவோ பள்ளிச் சிறுவனுக்குச் சாக்கலைட்டைக் காட்டி ஏமாற்றி விட்டமா திரிப் பேசுகிறாயே! அவருக்கு மட்டும்தான் ஏமாற்றமா? எனக்கு இல்லையா? எப்படியாவது பெரிய பணக்காரி ஆகிவிடலாம் என்று பார்த்தால் ஒவ்வொரு தடவையும் கைக்குக் கிட்டே கிட்டே வந்து தட்டிப் போகிறதே எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? நீ என்னைப் பற்றி என்றைக்கு எண்ணிப் பார்த்தாய், இன்று நினைத் துப் பார்ப்பதற்கு? போ போ! போய், உன் காதல் நாயகனுக்கு ஊன்றுகோலாய் இருந்து உதவி பண்ணு போ!'' என்று எரிந்துவிழுந்து விட்டுத் திரும்பி விடுவிடு வென்று சென்று அங்கிருந்து வெளியேறினாள்.

இப்படியும் ஒரு பெண் இருப்பாளா என்று மனோ கரி எண்ணியது ஒரு கணமே! மறுகணமே, அவள் எண்ணமெல்லாம் கணவனிடம் சென்று விட்டது. இருக்க முடியாமல், சிகிச்சை அறையின் கதவைத் தட்டி ''தினகர னைப் பார்க்கலாமா!'' என்று கேட்டாள்.

'உங்கள் கணவர் அவரது அறைக்குப் போய் விட்டாரே!'' என்றார் அந்த நர்ஸ் புன்னகையோடு.

''என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கிறது' என்று ஆததி ரமாக நினைத்தபடி, அறையை நோக்கி மனோகரி ஓடினாள்.

லிஃப்ட்டுக்காகக் காத்திருக்க மனமற்று, இரண்டு மாடி ஏறி ஓடிச் சென்று அறைக் கதவைத் திறந்தாள் மனோகரி.

தினகரனைக் கட்டிலிலோ, நாற்காலியிலோ காணாமல் தேடியவளின் பார்வை, ஜன்னல் அருகே நின்று வெளியே வெறித்தவனைக் கண்டது...

அந்த ஜன்னல் மூலம் வெளியே பார்த்தால் தெரியும், ஏரியும் கரையோரம் பராமரிக்கப்படும் மரம், செடி கொடிகளும் அழகாகத் தெரியும்!

ஆனால் இவனால் எதைப் பார்க்க முடியும்?

மனம் பாகாய் உருகிவிட, ஓடிச்சென்று, பின்புறமிருந்து அவனைச் சுற்றிலும் கை செலுத்தி, மனோகரி அவனை இறுக அணைத்தாள்.

அவள் புறமாய்த் திரும்பிய தினகரன் அவளது முகத்தைக் கைகளில் ஏந்தினான்.

வழக்கம்போல, அவளது நெற்றியில், உத்தேசமாய் அவன் முத்தமிடுவான் என்று மனோகரி எதிர்பார்த்தாள்.

ஆனால், சிலவினாடி அப்படியே நின்று விட்டு, ''ஏண்டா, நெற்றி வியர்த்து, முகமெல்லாம் சிவந்து போயிருக்கிறது? வேகமாக ஓடி வந்தாயா?'' என்று அவன் பரிவுடன் வினவவும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது!

''எ...எ.. என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று அவள் தடுமாறவும், ''என்ன சொல்வது? ஓடி வந்த வேகத்தில் கூந்தல் அழகாக ஓர் ஒளிவட்டம் போலப் பறப்பதைச் சொல்வதா? அல்லது.. இந்தப் பொன்மேனிக்குப்

பொருத்தமாய், அணிந்திருக்கும் 'பேபி பிங்க்' சுரிதார் காட்டும் எழில் வளைவுகளை வர்ணிப்பதா...?'' என்று அவன் அடுக்கவும், மீண்டும் தூக்கிவாரிப்போட சற்று விலகி கணவரின் முகத்தை அவசரமாக ஆராய்ந்தாள், மனோகரி.

அங்கே கண்டது அவளது ஐயத்தை உறுதிப்படுத்த, ''ஹேய்!'' என்று ஒரு ஆனந்தக் கூச்சலுடன் பாய்ந்து தினகரனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு வெறிகொண் டாற்போல அவன் முகமெங்கும் முத்தமிடலானாள்!

''மெல்ல, மெல்ல!'' என்று அவன் சிரிக்கவும், அவன் மார்பில் செல்லமாகக் குத்தி, ''ஏமாற்று! எல்லாம் பொய்! ஏன், தினகர்?'' என்று மகிழ்ச்சியில் கண்கள் பளபளக்க வினவினாள்.

''மற்றபடி, ஒரு மாபெரும் ரகளையின்றி மோனிகா விடமிருந்து இவ்வளவு எளிதாக விடுதலை கிடைத்திருக் குமா?'' என்று தினகரன் ஒரு கேலிப் புன்னகையோடு கேட்கவும், மனோகரிக்கு இரண்டாம் முறையாகத் தூக்கி வாரிப்போட்டது!'

## 25

**உ**டனேயே தன் பயங்கரமான நிலைமை நினைவு வர, கண்ணில் கலவரத்துடன், ''தினகர்... நான்... நான்... வந்து... நான்...'' என்று சொல்வதறியா மல், எதையும் கோவையாகச் சொல்ல வராமல் தடுமாறி னாள்.

புன்னகை மாறாமல், ''நீ மனோகரி... உண்மைப் பெயரைச் சொன்னேன்! அம்மா பெயர் கற்பகம். அப்பா, மறைந்த உயர்திரு விஸ்வம் அவர்கள். ஒரே உத்தம புத்திரி. மோனிகாவுக்குச் சொந்த அத்தை மகள்! விவரம் போதுமா? இன்னமும் தேவையென்றால் கேள். சொல்கிறேன்.'' என்றான் அவன் இலகுவாக.

''எ... எப்படித் தெரியும்?'' என்று அவள் உதடு துடிக்க கேட்டபோது குரலுக்குப் பதிலாகக் காற்றுதான் வந்தது.

மனைவியின் முகத்தில் பதிந்திருந்த தினகரனின் பார்வை கனிந்தது. அவளது நெற்றிக் கூந்தலை பரிவுடன் ஒதுக்கி விட்டவன், ''மனு, ஏன் இந்த அச்சம்? அவசியமே கிடையாது! நீ என் மனைவி இந்த நிலை ஒருநாளும் மாறப்போவது இல்லை. வா. வசதியாய் உட்கார்ந்து பேசலாம்.'' என்று அவளை தோளோடு அணைத்து நடத்திச் சென்றான்.

கட்டிலில் அவளை இருத்தி தானும் அருகே அமர்ந்து கொண்டான்.

மனைவியின் முகம் தெளிவுராதது கண்டு, அவளைத் தன்மீது சாய்த்துக் கொண்டு, ''என்ன மனு, பேச்சையே காணோம்? என்ன கவலை? சொல்லு!'' என்று கேட்டான்.

ஒரு நெடுமூச்சை நடுக்கத்துடன் வெளியேற்றி விட்டு ''உ.உ.... உங்களுக்கு எப்படி... எப்போதிருந்து தெரியும்?'' என்று மனோகரி வினவினாள்.

''எல்...லாமே சொல்கிறேன். ஆனால் அதற்குமுன் எனக்கு ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லு நீ முதலில் விபத்தின் போது வந்ததைச் சொல்கிறேன். இங்கு எப்படி வந்தாய்? எதற்காக வந்தாய்? அதை முதலில் சொல்லு!'' என்று தினகரன் கேட்டான். ''பிறகு அவளாக ஏன் நடிக்கத் தொடங்கினாய்?''

மறைத்து மறைத்து மூச்சு முட்டிப்போயிருந்தவள், இந்தக் கேள்விக்காகவே காத்திருந்தது போல அவள் மோனிகாவின் கதையைக் கொட்டித் தீர்த்தாள்.

''ஓகோ! மோனிகாவின் இழப்பால் எனக்கு என்ன வாவது ஆகிவிடும் என்று பயந்து விட்டாய்!''

''பின்னே? நீங்கள்தான், அப்படிக் கிடந்த நேரத்தி லும், ''மோனிகா வந்து விட்டதால் குறையே இல்லை'' என்றீர்களே!'' என்றாள் மனோகரி தன் குறையை மறைக்க முயன்று, அதில் தோற்று.

தலையசைத்து, ''இதை நீ இரண்டு வகையாக எடுத்துக்கொள்ளலாம் மனோ. ஒன்று, மற்ற அனைத்தும் இல்லையென்று போகிற நிலையில், கிட்டத்தட்ட மூழ்கி விட்ட நிலையில், ஒரு கை கிடைத்த ஆறுதலில் சொன்ன தாக. அடுத்தது, 'மோனிகா எப்படிப்பட்டவள் என்பது மற்றவர்களை விடவும் உனக்கு நன்றாகத் தெரியும்! அவளது பணப் பைத்தியம் பற்றி நானும் ஓரளவு தெரிந்து வைத்திருந்தேன். ஆசைப்பட்ட போகவாழ்வு கிடைக்காது என்று ஆகிவிட்டால் அவள் வரமாட்டாள்! மாற்றிச் சொன்னால்... அவளே வந்தால் என்றால், மற்றதும் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தானே பொருள்?'' என்று கேட்டான் அவன்.

''இதையெல்லாம் யோசித்தா 'அன்று அப்படிச் சொன்னீர்கள்?'' என்று மனோகரி நம்பாத பாவனையுடன் கேட்டாள்.

''நட்மஸ்' டெஸ்ட் பற்றித் தெரியுமல்லவா? 'லாபரேட்டரியில் ஆசிடா, அல்கலைனா என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ளப் பயன்படுத்துவார்கள். சுற்றிலும் இருந்தவர்களின் பேச்சில் இருந்து அந்த அரைகுறை உணர்விலும் நிலைமையை என்னால், ஓரளவு ஊகிக்க முடிந்தது. 'மோனிகா வந்தாள் என்றால் எல்லா வகையிலும் நல்லபடியாக நிச்சயமாக மீண்டுவிட முடியும் என்று ஒருதரம் நினைத்தேன்! வாழ்வேனா, தாழ்வேனா என்பதற்கான டெஸ்ட்!''

தலையை நன்றாகத் திருப்பி கணவன் முகத்தைக் கூர்ந்து ஆராய்ந்தாள் மனோகரி.

அவன் முறுவலுடன் கேள்வியாய்ப் புருவம் உயர்த்தவும், ''மீனாட்சியை - அதாவது மோனிகாவைப் பற்றி இவ்வளவு மட்டமாக எடை போட்டிருந்த போதும், எப்படி அவளை மணந்து மனைவியாக்க முடிவு செய்தீர்கள்?'' என்று புரியாமல் வினவினாள் அவள்.

லேசாகத் தோளைக் குலுக்கினான் தினகரன். ''முழுச் சரணாகதி தவிர வேறு வழி இல்லை போல் தெரிகிறது! ஊ...ம். சொல்லுகிறேன். அந்த விபத்துக்குச் சுமார் ஆறு மாதங்களுக்கு முன் ஓர் ஏமாற்றுக்காரப் பெண்ணை நான் சந்திக்க நேர்ந்தது!..''

சற்றே விறைப்புற்று விலக முயன்றவளை, அருகில் முத்துக் கொண்டு அவன் மேலே தொடர்ந்தான். ''அந்தப் பெண்ணின் கோபவிழிகள் எங்கேயும் என்னைத்

தொடர்ந்து கொண்டே இருந்தன.... மெய், மனூ! எப்போதும் நினைத்துக் கொண்டே இருந்தேன் என்று சொல்லமுடியாது! ஆனால் எதிர்பாராத வேளையில் திடுமெனத் தோன்றிவிடும். அழகான எதையாவது பார்க்கும்போது, வெற்றியால் உள்ளே பூரிக்கும் போது, ஏதாவது முக்கியமான விஷயத்தை யோசிக்கும் போது... எப்போது தோன்றும் என்றே சொல்ல முடியாது. வாழ்வில் முதல் தடவையாக ஒரு கபடத்தில் பணத்தைத் தோற்ற ஆத்திரம் மறக்க முடியவில்லை! என்று முதலில் நினைத்தேன். ஆனால், அது உண்மை என்றால் அப்போதெல்லாம் கோபமல்லவா வரவேண்டும்! மனதிற்கு இதம்தான் தோன்றும். இது வேறு விஷயம் என்பது பிடிபட்டுப் போயிற்று...

''ஆனால் உன்னைத் தேடிவர மனமில்லை. கூட்டு சேர்ந்து கொள்ளை அடிக்கிற ஒருத்தியை என் அன்னைக்கு மருமகளாக்கக் கூடாது என்று நினைத்தேன்! அப்போதுதான் மோனிகாவை - உன் மாமா மகள் மீனாட்சியைச் சந்தித்தேன்! தூரத்தில் உன்னைப் போலவே இருந்தாள்! அருகில் வந்ததும் வேறு பெண் என்று புரிந்து கொண்டேன்; ஆனால், அதே கண்கள்...!''

''ஓகோ! அப்படியானால் அந்த மாதிரிக் கண் யாருக்கு இருந்தாலும், அவள் பின்னே போய் விடுவீர்களாக்கும்!'' என்று தன்னை மீறி மனோகரி கேட்டு விட்டாள்.

ஆனால், அவன், அவள் குறுக்கிடாதது போல பாவித்து, ''கோபம் கொப்பளித்த அந்தக் கண்கள் கனிந்து குழைந்தால் எப்படியிருக்கும் என்று நான்

கற்பனை செய்திருந்தது போலவே அவள் இழைந்தாள். 'சீக்கிரம் திருமணம் செய்து கொள்' என்று அம்மாவின் வற்புறுத்தல் ஒரு பக்கம்! மோனிகாவிடமும் சில குறை கள் இருக்கத்தான் செய்தன! ஆனால், இந்த முகம் தான் மனைவி முகம் என்பது மனதில் பட்டுவிட்டதால் பிற் பாடு எப்படியும் அவளைத் திருத்தி விடலாம் என்று நினைத்தேன்...''

மீனாட்சியா திருந்துவாள்? நடக்கவே நடக்காது என்று எண்ணமிட்ட மனோகரிக்கு, மூர்த்தியின் நினைவு வந்தது. அவன் மனைவி சுசீலா அவ்வளவு நம்பிக்கை யற்றுப் பேசினர்ளே! அவனே திருந்தவில்லையா?

எப்படியோ! அவள் எப்படி உள்ளூரத் தினகரனை அவ்வப்போது நினைத்தாளோ, அதேபோல அவனும் அவளை நினைத்திருக்கிறான்!

அச்சங்கள், பயங்கள் அகன்று உள்ளூர ஓர் அமைதி பரவ, சன்னமாய் முறுவலித்து, ''எனக்கு இன்னமும் பதில் சொல்லவில்லையே!'' என்றாள் மெதுவாக.

உச்சியில் உதடு ஒற்றி நிமிர்ந்து, ''சொல்லுகிறேன்!'' என்றான் தினகரன். ''அன்று மூர்த்தி பணம் திருடிச் சென்ற போது, திருநெல்வேலியில் சொன்னதைத் திருப் பிச் சொன்னாயே! அப்போதுதான்!'' அவன் கூறவும், ''ஆனால், அப்போது நீங்கள் இது தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவே இல்லையே!'' என்று வியந்தாள் மனோகரி.

''காட்டிக் கொண்டிருக்கலாம்! அப்புறம்? உன் ஏமாற்று வேலை வெளியாகிவிட்டதே என்று நீ வீட்டை விட்டுப் போய்விட்டால்? உன்னைப் பிரிந்து எப்படி வாழ்வது?''

''ஓ! ..ஓ!!'' என்று புன்னகையோடு வியந்தவளுக்குக் கண்ணீரும் முட்டிக் கொண்டு வந்தது.

''ஆமாம். போய் விடுவாயோ என்ற பயத்தில் தான் வாயை மூடிக் கொண்டு விட்டேன்.... ஆனால், அன்று எனக்குப் பெரிய 'ஷாக்' மனோகரி. இப்படி ஒருத்தி ஆள்மாறாட்டம் செய்து, மனைவியாக நெருக்கத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறாள், அதைக் கொஞ்சம் கூடக் கண்டுபிடிக்கவில்லையென்றால் நான் என்ன அவ்வளவு பெரிய முட்டாளா, என்று ஒரு மாதிரி ஆகிவிட்டது! பிறகு தனியே கிடந்து யோசித்தபோதுதான், நான் அப்படி ஒன்றும் முட்டாளாக இருக்கவில்லை; கண்டுபி டித்துக் கொண்டேதான் இருந்திருக்கிறேன் என்பது தெரிந்தது!

''நினைவிருக்கிறதா? உன் குரல், சிரிப்பு, கைநகம், படிப்பு, குணவேறுபாடு... எல்லாம் என் கவனத்தில் பட்டுக் கொண்டேதான் இருந்திருக்கிறது. ஆனால், அப் போதிருந்தே, உன்னை இழக்க விரும்பாத மனது, அதை உள்ளேபோட்டு மூடி மறைத்துக் கொண்டே இருந்திருக் கிறது. 'ஸ்லிப்பிங் அண்டர் த கார்ப்பெட்' என்பார்களே அதுபோல!

''விபத்து பற்றிய நினைவுகளை நான் முயன்று ஒதுக்கி வெற்றி கண்டது போல, நீ மோனியாக இல்லாது வேறு ஆளாக இருந்து விடுவாயோ என்ற சந்தேகத்தை யும், உன்னை இழக்க விரும்பாத என் மனம் ஒதுக்கித் தள்ளியிருக்க வேண்டும்! அந்த அளவுக்கு, உன்னைப் பிரிய முடியாத நிலைக்கு நான் அப்போதே தள்ளப்பட்டி ருக்கிறேன்!''

''அப்புறம்? இரண்டுநாள் ஒரு மாதிரி இருந்தீ॥ களே! பணத்திருட்டு விஷயமாகக் கோபம் என்று நான் எண்ணியது தப்பு என்று இப்போது தெரிகிறது...''

''ம்... இதே யோசனைதான். நீ யார் என்று அறிந்து உள்ளூர உற்சாகம், ஆனந்தம் தான். ஆனால், எதற்காக இப்படி ஆள்மாறாட்டம் செய்து வந்திருக்கிறாயோ என்று ஒரே குழப்பம். உன் அன்பிலோ, நேர்மையிலோ சந்தேகப்பட மனம் வரவில்லை. ஆனால், உன்னை நான் முதலில் சந்தித்த சந்தர்ப்பம்? பலமாதங்களுக்கு முன் என்னை ஏய்த்த பெண்...''

''நான் ஏய்க்கவில்லை, தினகர். நானும் அவன் - அந்த ஆள் மூர்த்திதான், அவன் நடிப்பில் ஏமாந்து போனேன்!'' என்று விளக்கினாள் மனோகரி.

''அப்படித்தான் இருக்கும் என்ற முடிவுக்குத் தான் நானும் வந்தேன். சரியாகத்தான் ஊகித்திருக்கிறேன். இல்லையா?'' என்று சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டான் தினகரன்.

''ஆகா! ரொம்ப முன்னாலேயே உங்களோடு பேசும் போது ஒரு பெரிய தப்பு விட்டேன்! நீங்கள் அதைக் கண்டு பிடிக்கவே இல்லையே!'' என்றாள் மனோகரி கேலிக் குரலில்.

''அன்று கண் வராது என்றபோது, உன் அப்பா மறைந்தது பற்றி உளறினாயே! அதுதானே? கண்டு கொள்ளப் பிடிக்காமல் மனது ஒதுக்கியதுதான் அதுவும்! அப்போதும், ஏதோ எளிதாகத் தெரிய வேண்டியது, நினைவு வரவில்லை என்றேனா, நினைவில்லை?''

மறுக்கமாட்டாமல், "காலம் போகிற போக்கு! உண்மை சொல்வது கூட 'உளறல்' ஆகிவிடுகிறது!" என்று மனோகரி கிண்டலில் இறங்கவும் தினகரன் சிரித்தான்.

அவன் சிரிப்பை ரசித்து விட்டு, "மோனிகாவை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? குரலிலா? ஆனால் கொஞ்சம் மாற்றிப் பேசுகிறாளே! என்று மனோகரி வினவினாள்.

"மாற்றிப் பேசுகிறாள் என்று தோன்றியதால் தான் கவனித்தேன்! உன் குரல் வேறு 'ஙஞன நமன' போட்டதா? சந்தேகம் தெளியத்தான், கண்ணில் ஒற்றிக் கொள்கிற மாதிரிக் கைகளை ஆராய்ந்தேன். அதே புலிநகங்கள்! சரிதான், இவள் என்னவோ சொல்லி உன்னை மிரட்டி வைத்திருக்கிறாள் என்று தெரிந்தது. வேறு என்ன மிரட்ட முடியும்! நானாக நடித்துத்தானே நீ இங்கு வந்தாய். இனி நானே இருந்து கொள்கிறேன். நீ போய் விடு என்றிருப்பாள். கண் வரும்; கூடவே பணம் வரும் என்கிற நம்பிக்கை! அதனால்தான் நாடகம் போட்டேன்!

"கெட்டிக்காரர் தான்!" என்று ஒருவாறு ஒத்துக் கொண்டு விட்டு, ஆனால் டாக்டர் கூட நடித்திருக்கிறாரே!" என்று வியந்தாள் மனைவி.

"அவர் ஒரு நாடகப் பைத்தியமாம். ஒரு 'ட்ரூப்பே' வைத்திருந்தாராம்! இப்போது நேரம் இல்லை என்று ஒரே வருத்தம். கிடைத்தது வாய்ப்பு என்று விளாசித் தள்ளிவிட்டார்!" என்று தினகரன் கூற, இருவரும் சேர்ந்து நகைத்தார்கள்!

''இப்படி நீ சிரிக்கும்போது பார்க்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவு ஆசையாக இருந்தது தெரியுமா?'' என்று குனிந்து அவளது செவ்விதழ்களில் தினகரன் முத்தமிட்டான்.

வெளியே ஏதோ பாத்திரம் விழுந்த சத்தம் கேட்டு இருவரும் திகைத்து நிமிர்ந்தார்கள்.

''நம்மைத் தவிர வேறு உலகம் இருப்பது மறந்து விட்டது!'' என்று தினகரன் சிரிக்க, சட்டென நினைவு வந்து, ''அத்தை! அத்தைக்குச் சொல்லவேண்டுமே! கவலையோடு காத்துக் கொண்டு இருப்பார்கள்!'' என்று எழுந்தாள் மனோகரி.

''எல்லாம் சொல்லியாகி விட்டது. உன் அத்தைக்கு மட்டுமில்லை; என் அத்தைக்கும்தான்!'' என்றவன் அவள் வியந்து விழிக்கவும் ''துப்பறியும் நிபுணர் சகதேவின் உபயம்! நீ யார், என்ன என்பதெல்லாம் வேறு எப்படி அறிந்தேன் என்று நினைத்தாயாம்?'' என்று முறுவலித்தவன், தொடர்ந்து ''அம்மாவுக்குத் தெரியும் போல் இருக்கிறது? அம்மாவிடம் சொன்னது என்னிடம் சொல்ல முடியவில்லையா? நீயாகச் சொல்லுவாய் என்று நான் ரொம்பவும் எதிர்பார்த்தேன்!'' என்றான்.

''அத்தையிடம் நானாகச் சொல்லவில்லை...'' என்று தேவகி தன்வேடம் கண்டுபிடித்த விவரத்தை மனோகரி கணவனிடம் கூறினாள்.

''வெளிப்பார்வைக்குத் தெரிவதை விட, அம்மா புத்திசாலி என்று அவ்வப்போது எனக்குத் தோன்றுவது உண்டு. அது மெய்யென்று தெரிகிறது!'' என்றான் தினகரன் பெருமிதமாய்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன். `அத்தையி '-ம் அதைச் சொன்னபோது, 'தாயென்று ஆகிவிட்டால் தானாகவே நிறைய விஷயங்கள் தெரிய வரும்' என்றார் கள். உங்கள் மேல் உள்ள அன்புதான் என்னைக் கண்டுபிடிக்கச் செய்ததாம்!'' என்று முறுவலித்தாள் மனோகரி.

கண்ணில் சிரிப்புடன் தினகரன் மனைவியை நோக் கினான்.

''என்ன?''

''நான் கெட்டிக்காரன் என்பதை வேறு வழியில்லா மல் நீயே ஒத்துக் கொண்டுவிட்டாய்! இனி எனக்குச் சரியாக உன்னையும் புத்திசாலியாக்கி விடலாமா?''

''எப்படி எப்படி?''

''அதுதான். அம்மா சொன்ன வழியில்! தாயென்று ஆகிவிட்டால் புத்தி வளர்ந்து விடுமாமே! உன்னையும் அம்மா ஆக்கிவிடலாமா என்றுதான்.... அப்படியாவது புத்தி வளர்ந்தால் சரி!'' சோகம் காட்டிச் சொல்லிவிட்டுச் சிரித்தான் தினகரன்.

முகம் சிவந்த போதும், அடக்கமாட்டாமல், கணவ னோடு கூடச் சேர்ந்து மென்னகை புரிந்தாள் மனோகரி.


அதற்கொரு
நேரமுண்டு
ரமணிசந்திரன்